வெளியீடு : 1-9-2008

Issued : 1-9-2008

1557
25-3-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 10, 2008—தொகுதி 46—எண் 3

Thursday, the 10th April, 2008—Volume 46—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 31' P08
P08. 46.3
228407

[Price Rs. 3.00

10-4-2008

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 625-664

2. **தகவல் கோரல்—**

(அ) தூத்துக்குடி, ஒட்டப்பிடாரத்தில் வயிற்றுப் போக்கினால் சிலர் பாதிக்கப்பட்டது 664-670

திரு. பெ. மோகன் 665-666,670

திரு. சி. ஞானசேகரன் 666-667

திரு. கி. ஆறுமுகம் 667-668

*மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 668-670

(ஆ) வால்பாறை, வில்லோனி அனலி எ ஸ்டேட் குடியிருப்புப் பகுதியில் சிறுத்தைப் புலியால் அடித்துக் கொல்லப்பட்ட குழந்தையின் குடும்பத்திற்கு நிவாரணம் 670-676

திரு. கோவை தங்கம் 670-672, 675,676

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் 672-675

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 675,676

3. **கவன ஈர்ப்பு—**

அரக்கோணம், ஜே.பி.எஸ். மழலையர் ஆசிரியர் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுவது 676-683

திரு. சி. ஞானசேகரன் 667,678-679 681-682

*மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 677-678, 679-681, 682-683

பக்கங்கள்

**4. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 683-684

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 684

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 684

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2008 684-685

(ஆ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 685-686

**6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) 686-832

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 686, 712, 741, 747,753, 764-765, 781,783 784-785,786 786,794-822 824,825-827, 828-829, 830-831

*திரு. செ. தாமோதரன் 697,717, 741-750

திரு. கூ.ந. சேகரன் 750-757

திரு. பா. வேல்துரை 706,735, 750-765





பக்கங்கள்

**6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) தொடர்ச்சி

திரு. வை. காவேரி 708,738, 765-771

*திரு. ஞா. ஜாண் ஜோசப் 704,733-734, 771-774

திரு. தி. இராமசாமி 702,732, 775-777

திரு. நா. இராமகிருஷ்ணன் 726-727, 778-780

திரு. து. ரவிக்குமார் 780-783

*திரு. இரா. இராம்பிரபு 783-787,789

திரு. ஆர்.டி. கணேசன் 696,721-722, 789-794

**7. உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் முன்னர் விதித்த இடைக்காலத் தடை செல்லாது என அத்தடையை நீக்கி உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு—** 757-758, 788

திரு. ஜி.கே. மணி 757-758

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 788

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 832-834

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 28

## 2008 ஏப்ரல் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும், தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**81—**

**கட்டடம்**

***29618—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, மணலூர் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நிதிநிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதாலும், இவ்வங்கிக்குக் கடன் பெற்று புதிய கட்டடம் கட்ட போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும், இவ்வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம், 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் ஆகும். அது தற்போது இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளது. அந்த வங்கியில் மணலூர், கஞ்சனூர், குமணந்துறை, திருமாந்துறை, கார்ப்பரங்குறிச்சி, சிற்றிடையாநல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,680 அங்கத்தினர்கள் உள்ளனர். அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எனது தொகுதியைச் சேர்ந்தவர்தான். அவர் எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்தான். என்னுடைய வீட்டுக்குப் பின்புறம் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்தான் அது இருக்கிறது. நிச்சயமாக எனக்குத் தெரியும். அது நியாயம்தான். ஆனாலும், நிதி வசதி இல்லாத காரணத்தால்தான் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுமான வரையிலே, பிற்பகுதியிலே ஏதாவது நிதி கிடைக்குமானாலும் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சிறிதளவு கொடுப்பாரானாலும், அதைச் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

228407
சென்னை-600 008



2008 ஏப்ரல் 10]

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வருகின்ற நிதியாண்டிலாவது அதை அவர்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**82—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***24146—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. சீர்காழி நகரம் அல்லது நகரை ஒட்டிய மெயின் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக இடம் வாங்க, தனியாருக்குச் சொந்தமான இடமோ அல்லது அரசுப் புறம்போக்கு நிலமோ தேர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் நிதி ஆண்டில் இப்பணி நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லை. அங்கே இடம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொல்கிறார்கள். 2008-2009-லே விரைவிலே பணியை முடித்துக் கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, சீர்காழி நகரத்திலே இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எல்லாமே ரியல் எஸ்டேட்களாக மாறிவிட்டன. இந்தத் தருணத்திலே விரைந்து அதைக் கையகப்படுத்தினால்தான், வேளாண் விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் அமைக்க இயலும். எனவே, இந்த ஆண்டு விரைந்து முடிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி. இதற்கான இடத்தை, அரசுப் புறம்போக்கு நிலத்தையோ அல்லது அரசாங்கம் கையகப்படுத்திய நிலத்தையோ தேர்வு செய்து, 2008-2009 ஆம் ஆண்டில் கட்டலாம் என்றுதான் சொல்லியிருக்கிறேன். இன்னொன்று, அரசு கையகப்படுத்துவது என்று சொன்னால், பல்வேறு விதிமுறைகளை, நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும்; காலதாமதம் ஆகும். அதற்காகத்தான் இதுபோன்ற முக்கியமான பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலே நிலச் சொந்தக்காரர்களை அழைத்து, இரண்டு தாப்பிலும் பேச்சுவார்த்தைமூலமே ஒரு விலையை நிர்ணயம் செய்து அரசுக்கு அனுப்பினால், அந்தத் தொகையை ஏற்று, அரசு செயல்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**83—**

### மாணவர் விடுதி

***24091—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பொன்மலூர் தொகுதி, மண்டகொளத்தூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், பொன்மலூர் தொகுதி, மண்டகொளத்தூர் கிராமத்திற்குப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற மண்டகொளத்தூர் என்ற கிராமத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த ஒரு அரசு மாணவர் விடுதியும் இல்லை. குறிப்பாக, சாணார்பாளையம், ராந்தம், கரிகாத்தூர், ஓகூர், வம்பலூர், அரும்பலூர், ஓடநகரம், மட்டப்பொறையூர், மாணிக்கவல்லி, அல்லியாலமங்கலம், செம்மியமங்கலம் என்று சொல்லக்கூடிய 11 கிராமங்களின் மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். கிட்டத்தட்ட 700 மாணவர்கள் படிக்கின்ற அந்தப் பள்ளியிலே, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மாத்திரம் 200 பேர் படிக்கிறார்கள். எனவே, அவர்கள் தங்கிப் பயில வசதியாக ஒரு விடுதி தேவை என்பதை நான் அமைச்சருக்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அது மட்டுமல்ல; சேத்துப்பட்டு ஒன்றியத்திலே இருக்கிற 5 மேல்நிலைப் பள்ளிகளிலே ஒரு பள்ளிக்குக்கூட இதுவரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கோ, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கோ, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கோ தங்கிப் பயில வசதியாக விடுதிகள் இல்லாதது மிகப் பெரும் குறையாக உள்ளது. எனவே, அந்த ஒன்றியத்திலிருக்கிற ஏதாவது ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு, இன்னும் சொல்லப் போனால், மண்டகொளத்தூர் மாத்திரமல்ல; வடமாதிமங்கலம் இருக்கிறது; மன்சுராபாத் இருக்கிறது; நம்பேடு இருக்கிறது; சவளபுதூர் இருக்கிறது; எந்தப் பள்ளிக்கும் விடுதி கிடையாது. எனவே, இந்தப் பள்ளிக்கு நீங்கள் அவசியம் விடுதியைத் தந்து உதவ வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

[2008 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சுற்றியிருக்கிற அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே இதுபோன்ற, இந்தத் துறையைச் சார்ந்த hostel இல்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். வரும் ஆண்டுகளில் முன்னுரிமை கொடுத்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதை இந்த ஆண்டிலேயே பரிசீலனை செய்து, உருவாக்கித் தருமாறு மாணவர்கள் சார்பாகவும், அந்தப் பகுதியினுடைய பெற்றோர்கள் சார்பாகவும் கேட்டு, அவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவிற்கு இந்த ஆண்டிலேயே சேர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கிறோம். இல்லையென்றால், நிதிநிலைமைக்கேற்றாற்போல--நிச்சயம் இந்தப் பகுதிக்கு வேண்டும் என்பதும் துறைக் குறிப்புகளிலே இருக்கிறது--தகுந்த நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்ற பின்பு, பட்டுக்கோட்டையிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியைக் கட்டுவதற்காக ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் கட்டுமானப் பொருட்களினுடைய விலை உயர்வின் காரணமாக யாரும் டெண்டர் எடுக்கவில்லையென்று அது நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல் இருக்கிறது. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு மதிப்பீடு



2008 ஏப்ரல் 10]

செய்து அந்தக் கட்டடத்தைக் கட்ட உடனடியாக ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் எல்லாத் துறைகளிலேயுமே இருக்கின்றன. பொதுப் பணித் துறை அமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு கலந்துகொண்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே விரைவாக அந்தப் பணிகளை முடித்துக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடைபெற்று வருகின்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கொளத்தூர், நங்கவல்லி, மேச்சேரி, தாரமங்கலம், எடப்பாடி ஆகிய ஒன்றியப் பகுதிகளிலே இருந்தும், பக்கத்திலே இருக்கிற ஈரோடு மாவட்டத்தின் அம்மாப்பேட்டை, அந்தியூர் ஆகிய ஒன்றியப் பகுதிகள், தருமபுரி மாவட்டத்தினுடைய பெண்ணாகரம், தருமபுரியினுடைய ஒரு பகுதி என இப்படி நீண்ட தூரம் இந்தப் பகுதிகளிலேயிருந்து மாணவ, மாணவிகள் வந்து படிக்கின்ற காரணத்தால், போக்குவாத்து வசதியும் சற்றுக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஏழை எளிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகள் படிப்பதற்கு நடப்பாண்டில் அரசு மாணவ, மாணவியர் விடுதி தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் கோ.க. மணி அவர்களுடைய கோரிக்கையை இந்த ஆண்டிலே, கலந்து, நிச்சயம் செய்து கொடுக்கிறேன்.

[2008 ஏப்ரல் 10

முற்பகல் 9-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் விடுதிகளிலே தங்குவதற்கு இட வசதிகள் இருந்தும், மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாகச் சேர்க்கப்படுவதற்கான விவரம் அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இட வசதி உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளிலே கூடுதலாக மாணவர்களைத் தங்கிப் பயிலச் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுமா; இந்த ஆண்டு புதிதாக மாணவர் விடுதிகள் தொடங்கப்படவிருக்கின்றனவா; கூடுதலாக விலை உயர்வு ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே, மாணவ, மாணவிகளுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தப்படுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சரிடத்திலே இதைச் சொல்லியிருக்கிறோம். 50 மாணவர்கள் இருக்கிற இடத்திலே, ஏற்கெனவே 60, 70 என்று அதிகமாக மாணவர்கள் தங்கிப் படிக்கிறார்கள். அதுபோக, வெளி மாவட்டங்களிலேயிருந்து வரும் பையன்கள் எங்கே சேராமல் இருக்கிறார்களோ, அங்கே அதை divert செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். முன்பிருந்த நிலைமையையெல்லாம் மாற்றி, இந்தத் தடவை ஓர் ஒழுங்கு செய்து, 50 பேர் இருக்கிற இடத்திலே 75 பேர் வரையிலும் தங்கக்கூடிய அந்தப் பணிகளையும் செய்திருக்கிறோம். ஏற்கெனவே, உணவிற்கு அதிகமாகப் பணம் கொடுக்க நமது முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த விடுதிகளைப் பொறுத்தவரையிலே, முதலிலே நாங்கள் என்ன செய்கிறோம் என்று சொன்னால், சுத்தமாகவும், தரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டிய பணிகளைத்தான் இந்த ஆண்டிலே எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, 50 பையன்கள் இருக்கிற இடத்திலே அல்லது பெண்கள் இருக்கிற இடத்திலே, அதிகப்படியான மாணவ, மாணவியர்களைச் சேர்ப்பதற்கு வேண்டிய முயற்சியும் இந்த ஆண்டு எடுக்கப்படும்.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு மாத்திரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. அதிலும் எல்லா விடுதிகளுக்கும் இல்லை. எந்தெந்த விடுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லையோ, அத்தனை விடுதிகளுக்கும் இந்த ஆண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுமா; அதுபோல, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பயிலும் விடுதிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒவ்வொரு மாணவர் விடுதிக்கும் ஆய்வுக்குப் போகிற நேரத்தில், இரவு 8 மணி, 8½ மணி வரை படிப்பு சொல்லித் தந்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று சொல்லி வார்டனுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். எல்லா இடங்களிலும் டி.வி. பெட்டியை வாங்கிக் கொடுத்தால், அந்த டி.வி.யைத்தான் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே, அது சம்பந்தமான குறிப்பு அரசினுடைய கருத்திலே இல்லை. எதிர்காலத்திலே வேண்டுமானால் அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சச்சார் குழுவினுடைய பரிந்துரையில், இஸ்லாமிய மாணவிகளுக்காகத் தனிக் கல்வி விடுதி அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. நமது தமிழகத்தில், எதிர்காலத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளோடு சேர்த்து, இஸ்லாமிய மாணவிகளுக்குத் தனி விடுதி அமைப்பதற்கு நமது துறை பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசினுடைய ஆய்விலே

[2008 ஏப்ரல் 10

இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய மானியக் கோரிக்கையிலே, எந்த ஊர்களிலே முஸ்லிம் மாணவர்கள் அதிகமாகப் படிக்கிறார்களோ, குறிப்பாகப் பெண்கள் படிக்கிறார்களோ, அந்த ஊர்களுக்குக் கொடுக்கலாம் என்று நினைத்திருக்கிறோம். என்னுடைய மானியக் கோரிக்கையிலே அது சம்பந்தமாக அறிவிப்பு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**84—**

### திருக்கோயிலைப் புதுப்பித்தல்

***33045—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், ஜம்பை, அருள்மிகு ஜம்புலிங்கேஸ்வரர் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், ஜம்பை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஜம்புலிங்கேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலினுடைய நிருவாகம், தற்போது கீழையூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயிலின் நிலை-4 செயல் அலுவலரால் தக்கார் முறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில், அரசின் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின்கீழ், தினமும் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது. மேற்காணும் திருக்கோயிலில் உபயதாரர்களைக்கொண்டும், அரசு நிதியுதவியைப் பெற்றும் திருப்பணி செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று, அரகண்டநல்லூர், அதுல்ய நாதேஸ்வரர் கோயில் மிகப் பெரிய திருக்கோயில். அங்கே, பௌர்ணமி அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கிரிவலம் வரத் தொடங்கியுள்ளனர். அதற்கும் குடமுழுக்கு செய்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுகிற வகையில், தரிசிக்கின்ற வகையிலே அந்தப் பாதையைச் செப்பனிட்டு, அதனை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சார்பிலே ஏராளமான திருக்கோயில்களினுடைய திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. அதை இவ்வரசு செவ்வனே செய்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், ஆங்காங்கு இருக்கக்கூடிய நிதி ஆதாரங்களுடைய நிலைமைக்கேற்பவும், வரக்கூடிய பக்தர்களுடைய விருப்பத்திற்கிணங்கவும் அவற்றிற்கு முக்கியத்துவம் தந்து, அந்தப் பணிகளையும் மேற்கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்கிறோம்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன அந்த முகையூர் ஒன்றியத்தில் அமைந்திருக்கின்ற ஜம்பை, ஜம்புலிங்கேஸ்வரர் ஆலயத்தினை நமது இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதற்கு உடனடியாகக் குடமுழுக்கு செய்து தரக் கோருகிறேன். அந்தத் திருக்கோயில் மிகப் பெரிய திருக்கோயில்; திருவரங்கம் அருகிலே இருக்கின்ற திருக்கோயில். "ஆதி திருவரங்கம், அனாதை ஸ்ரீரங்கம்" என்று சொல்வார்கள். அந்தத் தத்துவத்திற்கு ஏற்றவாறு, அந்தத் திருக்கோயிலில் மிகச் சிறப்பாகப் பணி செய்து

முடித்துத் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொண்டு, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** பதில் அப்பொழுதே சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. வினா எண் 85. (குறுக்கீடு) என்ன? திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலில் 6-3-2003 அன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது, தங்கத் தேர் செய்து, அதிலே உற்சவர் சிலை அமைக்கப்பட்டு, தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன், ஒரே நிமிடம். அந்தச் சிலையை மாற்றுவதற்காகச் சில பேர் முயற்சி செய்வதாக அறிகிறேன். அந்தச் சிலை சிறப்பான முறையிலே இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கருதுகிற காரணத்தால், அந்தச் சிலை மாற்றப்படாமல் இருக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். இதுபற்றிய முழு விவரத்தையும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால், தனியாக வினா எழுப்பினால், உரிய பதிலை அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், தனிக் கேள்வி போடுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடிக்கு அருகேயுள்ள குச்சனூரில் அருள்மிகு சனீஸ்வர பகவான் கோயில் உள்ளது. திருநள்ளாறுக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் குச்சனூருக்குத்தான் அதிகமான பக்தர்கள் வருகின்றனர். எனவே, அத்திருக்கோயிலைப் புதுப்பித்து, அங்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், அனைத்துத் திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்து, குடமுழுக்கு செய்ய வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அரசு பொறுப்பேற்ற இந்த 2 ஆண்டு காலத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தியபடி, அதைச் சிறப்பாகச் செய்துகொண்டு வருகிறோம். அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், பொதுவாகத் திருக்கோயில்களுடைய திருப்பணிகளைப் பொறுத்தவரையில், அரசினுடைய முழு நிதியின்கீழ் அந்தத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணி உரிய காலத்திற்கு முன்னதாகவோ, விரைவாகவோ நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அவர்களே அந்த முயற்சியில் ஈடுபட்டு, பொது மக்களிடமிருந்து, கொடையாளர்களிடமிருந்து நன்கொடையைப் பெறலாம். அரசின் சார்பிலும் உரிய நிதியை ஒதுக்கி, விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கு அது ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமெங்கும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் தனியார்வசம் உள்ளன. குறிப்பாக, மதுராந்தகம் தொகுதியிலுள்ள ஏரி காத்த இராமர் திருக்கோயிலுக்குச் சொந்தமான பல கோடி மதிப்புள்ள நிலங்கள் தனியாரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. இவற்றைத் தனியாரிடமிருந்து மீட்டு, மீண்டும் கோயிலுக்குத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமலே கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆலயங்களுக்குத் திருப்பணிகளை

[2008 ஏப்ரல் 10

உரிய நேரத்திலே செய்து குடமுழுக்கு நடத்தவேண்டும்; வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும்; அங்கேயிருக்கக்கூடிய திருத்தேர்கள் மற்றும் திருக்குளங்களை மராமத்துச் செய்து, உரிய முறையிலே பராமரிக்கவேண்டும்; இவை எல்லாவற்றையும்விட, அங்கு தமிழ் வளர்வதற்கான அந்தப் பணியையும் இந்தத் துறையின் சார்பிலே செய்யவேண்டுமென்று உத்தரவிட்டதோடு அல்லாமல், அந்தத் திருக்கோயில்களுக்குப் பாத்தியப்பட்ட நில புலன்கள், கட்டடங்கள் போன்றவற்றையும் உரிய முறையிலே கண்காணிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே, ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் இந்தத் துறையின் சார்பிலே இருக்கக்கூடிய பல்வேறு திருக்கோயில்களுக்கு உரிய சொத்துக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், நீண்ட நாட்களுக்கு முன்னர் அந்த நிலங்களைச் சாகுபடி செய்தவர்கள், கட்டடங்களிலே குடியிருப்பவர்கள், உரிய வாடகையினைச் செலுத்தாத காரணத்தினாலும், அதுபோன்று பிரச்சினைகள் ஏற்படக்கூடிய இடத்தில் பல வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அந்தப் பகுதியில் ஏறத்தாழ 76 ஏக்கர் நன்செய் நிலம், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்தில் 2001 ஆம் ஆண்டு இறுதியில், நீதிமன்றத்தினுடைய உத்தரவைப் பெற்றும்கூட அதைப் பயன்படுத்தி வந்தவர்கள், பிறகு ஆட்சி மாற்றத்தின்மூலமாக--அதில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்காமல்--துறைக்குச் சாதகமான உத்தரவு வந்தும்கூட, அவர்கள் அதனைக் கையகப்படுத்துகின்ற பணியைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். குறிப்பாக, இப்போது ** மதுராந்தகம் நகரத்தினுடைய நகரச் செயலாளராக இருக்கக்கூடிய ** என்பவர், 20 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை அவர் தன்னுடைய பொறுப்பிலே அபகரித்து வைத்திருப்பதை அறிந்து, கடந்த 10 தினங்களுக்கு முன்னர் (குறுக்கீடுகள்) அவற்றை மீட்டிருக்கிறோம். அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன. நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதற்கான ஆதாரம் எங்களிடம் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஆதாரம் இருக்கிறது, தருகிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறது, தருகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே விவாதம் கிடையாது. உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மதுராந்தகம் நகரச் செயலாளர். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்பது மரபுதான். அதை ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில், ஆதாரம் உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லிவிட்டார். இருந்தாலும், கேள்வி நேரத்திலே இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தாமல் இருப்பது நல்லது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கோயில் நிலங்கள், அது யார்வசம் இருந்தாலும், அதனைக் கையகப்படுத்துவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதைப்போல, தமிழகத்திலே இருக்கின்ற, தனியார்வசம் இருக்கின்ற கோயில் நிலங்கள் அத்தனையையும் பற்றி மாண்புமிகு அமைச்சர் பட்டியல் தந்து, அந்தப் பட்டியலின்படி அவர் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றாரா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன், அவர்தான் பேசிவிட்டாரே? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் இல்லாத ஒருவர்மீது கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டைக் கூறுவது சபை மரபுக்குச் சரியானதுதானா? அது சபைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

[2008 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டார்கள். அதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. சமீபத்திலே நடந்த துறையினுடைய நடவடிக்கைகள்பற்றிய விளக்கத்தை இங்கே குறிப்பிட்டேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அதனை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. 2001 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அதற்கான வழக்குத் தொடுக்கப்பட்டு, துறைக்குச் சாதகமான தீர்ப்பு வந்தது. ஆனால், அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள், பிறகு ஆட்சிக்கு வந்த ** தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காரணம், அந்த இடத்தை அபகரித்து வைத்திருப்பவர் அந்த இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதை நான் இங்கே மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்குத் தேவையான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் கொடுக்கிறேன் என்று அமைச்சர் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் proof தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதை ஆய்வு பண்ணிவிட்டு, அது உண்மைக்கு மாறாக இருந்தால், நான் அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறார் அல்லவா? மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கிறார் அல்லவா? அவர் பேசட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது அமைச்சர் தருகின்ற பதிலிலேகூட உறுப்பினர்மீது குற்றச்சாட்டு கூறப்படக் கூடாது என்பது சபையின் மரபு; விதி. அதையும் மீறி அமைச்சர் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ,எதிர்க்கட்சியைச் சார்ந்தவர், என்று சொன்ன அந்த வார்த்தையை மட்டும் எடுத்துவிட்டால் சரி. பெயரைச் சொல்வது என்பது, யாரைப்பற்றிச் சொன்னாலும், பிரச்சினை இருந்தால், பெயரைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆகவே, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் அல்லது அந்தக் கட்சியைச் சார்ந்தவர். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் என்றால் ** உட்காருங்கள். ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பிரச்சினையிலே சம்பந்தப்பட்டவருடைய பெயர்கள் இந்த அவையில் பேசப்படலாம். ஆனால், ஒரு கட்சியைச் சார்ந்தவர் என்ற வார்த்தையை, அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்; நீக்கப்பட்டும் இருக்கலாம். ஆகவே, அந்த வார்த்தையை மட்டும் எடுத்துவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம். நீங்கள் controversial-ஆக ஏதாவது கேட்காதீர்கள்.

முற்பகல் 9-55

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதைச் செய்தாகிவிட்டது. அதற்குப் பிறகும் என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றால், ** என்ற அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது என்று. (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) வேறு யாரும் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) அமைதியாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 10

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no; எல்லோரும் உட்காருங்கள். ** யாரோ, X or Y (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லை அது. அவர் அந்த நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்; அவர் பெயரை எடுக்க வேண்டும் என்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) அவரவர்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. செ.ம. வேலுசாமி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையினுடைய முன்னவர், "இங்கே மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கு, அமைச்சர் சொன்ன பதிலிலே கட்சியின் பெயரைக் குறிப்பிட வேண்டாம்" என்ற ஒரு வேண்டுகோளை விடுத்து, அதை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர்கள், வேலுசாமி போன்றவர்கள் அங்கிருந்து இங்கே முன்னால் வந்து சத்தம் போடுவது என்பது ஒரு மரபு அல்ல. (குறுக்கீடுகள்) இருங்கள். நான் 1962-லே இருந்து இந்தப் பேரவையிலே இருந்திருக்கிறேன். எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இருக்கிறார்; அவர் எழுந்து பேசுகிறபொழுதாவது நீங்கள் பேசாமல் இருக்க வேண்டும். அவர் பேசட்டும். உரிய விளக்கத்தை அவையினுடைய முன்னவரிடத்தில், பேரவைத் தலைவரிடம் வாங்கட்டும்; அமைச்சரிடத்திலே வாங்கட்டும்; அதுதான் ஒரு முறை. உடனே எல்லோரும் கை உயர்த்திக் காண்பிக்கின்றீர்கள். எல்லோரும் எழுந்திருக்க வேண்டுமென்று நினைக்கின்றீர்கள். Walk out பண்ண வேண்டுமென்று நினைத்தால், நம்முடைய கடமை உணர்வை சரியாக இந்த மன்றத்திலே நிறைவேற்றாத வகையிலேதான் அது அமையும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; அதைத்தான் சொல்லியாகிவிட்டதே? (குறுக்கீடுகள்) நானே விளக்கம் தருகிறபோதுகூட . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது திரும்பத் திரும்ப உறுப்பினர்கள் குறுக்கே பேசினால் என்ன அர்த்தம்? அவர் சொல்லி முடிக்கட்டுமே!

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நானே விளக்கம் தருகிறபோதுகூட, வினா நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்கள் அதை ஒரு குற்றச்சாட்டாக, ஒரு நபர்மீதோ அல்லது ஒரு கட்சிமீதோ சொல்லக்கூடாது. அதைத் தவிர்க்கலாம் என்றுதான் நானேகூட சொன்னேன். அதைத்தான் அவையினுடைய முன்னவரும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 10]

சொல்லியிருக்கின்றார். இதற்குப் பின்னாலும் அதை ஒரு பிரச்சினையாக எழுப்புவது மரபுக்கு நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு கூறப்பட்டால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். முழுவதுமாக அந்த வாசகங்கள் அனைத்தையும் நீக்குவதுதான் சரியான மரபு; முறை. அதை விட்டுவிட்டு ** நீக்குவதால், அந்தக் குற்றச்சாட்டை நீக்கியதாக அர்த்தமாகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தத் தனிப்பட்ட நபர்மீது உங்களுக்கு ஏதாவது அக்கறை இருக்கிறதா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இது என்ன வமபாக இருக்கிறது. தனிப்பட்டவர்மீது அக்கறையா என்று கேட்பது? இனிமேல்தான் அந்தப் பிரச்சினையே! (குறுக்கீடுகள்) விவாதிப்பதா? இது என்ன கோர்ட்டா? (குறுக்கீடுகள்) நிரபராதி . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, அவருடைய பெயரை எடுத்துவிடலாம். ஆனால், கடந்த ஆட்சியிலே நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னாலும் அதை நிறைவேற்றவில்லை என்று அதெல்லாம் பதிவிலே இருக்கும். ஆகவே, வேண்டுமானால் அந்தப் பெயரையும் எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிடப்பட்ட அந்தப் பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுராந்தகம் தொகுதியைச் சேர்ந்தவர். மதுராந்தகம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்டார். அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதற்கான விளக்கத்தைத்தான் நான் சொன்னேனே தவிர, சம்பந்தம் இல்லாத பதிலை நான் சொல்லவில்லை. அதை முதலில் நீங்கள் உணர்ந்தாக வேண்டும். அடுத்து, சமீபத்திலே பத்து தினங்களுக்கு முன்னர்தான் அதன்மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான் குறிப்பிட்டுச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொன்னது எல்லாம், நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சாதகமான தீர்ப்பு துறைக்கு வந்தது. ஆனால் தேர்தல் வந்து, ஆட்சி மாற்றத்தின் காரணமாகப் பின்னர் வந்தவர்கள், முறையாக அந்தப் பணியைச் செய்யவில்லை என்றுதான் நான் சொன்னேனே தவிர, அவருடைய கைவசத்திலே ஏறத்தாழ 20 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை வைத்திருப்பது உண்மை என்பதை நான் மீண்டும் தெளிவாகச் சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகத்தைச் சார்ந்தவர். அவர் அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வியை எழுப்பினார்; நானும் உரிய பதிலைச் சொல்ல வேண்டும். உரிய விளக்கத்தைச் சொல்வதே தவறு என்றால், பிறகு எதற்காகக் கேள்விகளைக் கேட்க வேண்டும் என்பதே ஐயப்பாடாக இருக்கிறது! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டுக்கொண்ட அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. இன்னும் வேறு என்ன வேண்டும் உங்களுக்கு? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்குக் கேள்வி கேட்க உரிமை இருக்கின்றது. பதில் சொல்ல மாண்புமிகு அமைச்சருக்கும் உரிமை இருக்கின்றது. அதை ஒரு இயக்கத்துடன் சம்பந்தப்படுத்தியும், உங்கள் நகர. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள். Please. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? நீங்களே, எழுந்திருந்து பேச வேண்டும் என்கிறீர்கள்; பின்னர் ஏன் உட்கார்ந்துகொண்டே பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை; இல்லை. ஒரு கட்சிக்கு இழுக்கு ஏற்படுகின்ற வகையில் திட்டமிட்டு, வேண்டுமென்றே சொல்கிறார் துறை அமைச்சர் அவர்கள். அந்த வார்த்தை, அதைத்தான் நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டுக்கொண்டபடி அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.





**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Complete-ஆக எடுத்துவிடுங்கள், பூராவையும்; அவைக் குறிப்பிலிருந்து எடுங்கள்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்தாகிவிட்டது.

வினா எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**85—**

## பயிற்சி மையங்கள்

***665—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் மேன்மையடையச் செய்ய தமிழகத்தில் தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்கள் உள்ளனவா?

(ஆ) இல்லையெனில், பயிற்சி மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடையைத் தங்களுடைய அனுமதியோடு இந்த அவைக்கு அளிக்கிறேன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்களைப் பொறுத்தவரை, இந்திய விளையாட்டுக் குழுமத்தால்--S.A.I.—பயிற்சி மையம்மூலமாகக் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

ஆண்களுக்காக, சென்னை, நேரு விளையாட்டரங்கத்திலும், சேலம், மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்திலும், பெண்களுக்காக, சென்னை, நேரு பூங்காவிலும் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

[2008 ஏப்ரல் 10

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hockey, Foot ball, Volley ball போன்ற விளையாட்டுகளில் தமிழகத்தின் வீரர்கள் தேசிய அளவிலும், உலக அளவிலும் பங்கேற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தனர். தற்போது அந்த நிலைமை சற்றுக் குறைந்து வருகிறது. நமது இளைஞர்களிடையே, குறிப்பாகக் கிராமப்புற இளைஞர்களிடையே போதிய திறமைகள் இருந்தும், தேவையான பயிற்சியும், பயிற்சி நுணுக்கங்களும் அவர்களுக்குக் கிடைக்காததால், விளையாட்டிலே அவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் இல்லாத நிலை உள்ளது. மேலும், பயிற்சி நுணுக்கங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பழமையானவையாக இருக்கின்றன. எனவே, அந்தப் பழமையான நுணுக்கங்களைக் களைந்து, புதிய நுணுக்கங்களைப் புகுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வியில், தமிழக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் மேன்மையடையச் செய்ய, தமிழகத்தில் தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்கள் உள்ளனவா என்றுதான் கேட்கப்பட்டிருந்தது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நல்ல பயிற்சி பெற, வெற்றி பெற விளையாட்டு நுணுக்கங்களை இந்த அரசு புகுத்துமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு, அதற்காக ஆர்வத்தோடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இறகுப் பந்து விளையாட்டிற்கென்று ஒரு பயிற்சியாளர்



2008 ஏப்ரல் 10]

உள்ளார். அவர் இராமநாதபுரத்திலேதான் பணியாற்றுகிறார். மற்ற மாவட்டங்களைவிட எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம், Shuttle cock விளையாட்டில் எல்லாவிதத்திலும் சிறப்பாக அமைந்துள்ளது. அடிப்படை வசதிகளும் அங்கே இருக்கின்றன. எனவே, இந்த விளையாட்டிற்கான Sports Academy ஒன்றை இராமநாதபுரத்தில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறகுப் பந்து விளையாட்டைப் பொறுத்த அளவில், இப்பொழுது அதி நவீன விளையாட்டாக மாறிக் கொண்டிருக்கிறது. உடற்பயிற்சியினுடைய மிக எளிதான விளையாட்டாக இந்த இறகுப் பந்து விளையாட்டு அமைந்திருக்கிறது. கிட்டத்தட்ட, தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும், எல்லா விளையாட்டு மைதானங்களிலும் இது இருக்கிறது. எல்லோரும் இதை உபயோகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். முகவை மாவட்டத்திலும் அதற்கான வாய்ப்புகள் இருந்தாலும்கூட, அதற்காகத் தனியாக அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அங்கே பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். இந்தப் பயிற்சியையும் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. கூடிய வரையில் வெளி விளையாட்டு அரங்கத்தில் விளையாடக்கூடிய இந்த விளையாட்டை, உள் விளையாட்டு அரங்கத்திலேயே விளையாடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே Inter-State விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அதுபோல, நமது மாநிலத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், பிற மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும் விளையாடுகின்ற வகையில், விளையாட்டை அறிமுகப்படுத்துகிற ஒரு உத்தியை, நமது துறை அறிமுகப்படுத்துமா; அதற்கு அமைச்சர் அவர்கள்

தலைமை ஏற்பார்களா; அந்த விளையாட்டை நாமக்கல்லில் நடத்துவதற்கு உதவி செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கிடையே நடக்கின்ற போட்டியில் தீர்ப்புச் சொல்வதும், தலைமை தாங்குவதும் அவைத் தலைவர்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏற்கெனவே இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அதே நேரத்தில் வேறு மாநிலங்களோடு போட்டி போட விரும்புகிற மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுவதோடு, முதலிலே இங்கே விளையாடி முடித்துவிட்டு, பின்னர் வேறு மாநிலங்களுக்குச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

**மலைப் பாதை**

***42801—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டத்தில், ஏலகிரி மலைப் பாதையானது, திருப்பத்தூர் வனக் கோட்டத்தைச் சார்ந்த பொன்னேரி, ஜோலார்பேட்டை காப்புக் காடுகள் வழியாக, அத்தனாவூர் என்ற கிராமத்திற்குச் செல்லுகிறது.



அந்தச் சாலையின் நீளம் 14 கிலோ மீட்டர் ஆகும். முதல் இரண்டு கிலோ மீட்டர் காப்புக் காட்டுக்கு வெளியேயும், இரண்டாவது கிலோ மீட்டரிலிருந்து 12.3 கிலோ மீட்டர் வரை, 10.3 கிலோ மீட்டர் தூரம் காப்புக் காட்டின் உள்ளும், அதன் பின்னால், 12.3-லிருந்து 14.0 கிலோ மீட்டர் வரை காப்புக் காட்டின் வெளியேயும் அந்தச் சாலை செல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது 8 மீட்டரிலிருந்து 12 மீட்டர் அகலம் வரை அந்தச் சாலை உள்ளது. இன்னும் அதை அகலப்படுத்த வேண்டுமேயானால், 1980 ஆம் ஆண்டு மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டப்படி, அதிலுள்ள வழிகாட்டு முறைகளைக் கண்டறிந்து, அதற்குத் தேவையான செயற்குறிப்புகளை மாநில நெடுஞ்சாலைத் துறையிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தோ கருத்துரு வந்தால், அதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே அவையில் பதில் அளிக்கிறபோது, 14 கிலோ மீட்டர் காட்டுப் பகுதி; அதேபோல, reserve forest போன்ற பகுதிகளில் அந்தச் சாலை சென்று கொண்டிருக்கிற காரணத்தாலே, 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு நிறைவேற்றிய வனச் சட்டத்தின்படி, Highways Minister-இடமிருந்தோ, அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தோ கருத்துருக்கள் வரவேண்டும் என்று கூறுகிறார். அது single road-ஆகத்தான் இருக்கிறது; double road இல்லாத காரணத்தினாலே, எதிர் வண்டி வருகிறபோது, குறிப்பாகக் கோடை விழாக்கள் அல்லது சனி, ஞாயிறு போன்ற வார விடுமுறை நாட்களில் சுற்றுலா மையமாக விளங்கிக் கொண்டிருக்கிற ஏலகிரி மலைக்குக் கூட்டம் அதிகமாக வருகிறபோது, சில நேரங்களில் அமைச்சர்களேகூட கோடை விழாவிற்கு வரும்போது, குறைந்தது இரண்டு மணி நேரம் traffic jam-லே மாட்டிக்கொண்டு, பிறகுதான் விழா நடந்த கதையெல்லாம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், அவையில் எழுப்பப்பட்ட இந்த வினாவையே அடிப்படையாகக் கொண்டு, Highways அமைச்சரிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்

[2008 ஏப்ரல் 10

தலைவரிடமிருந்தோ கருத்துருக்களைப் பெற்று, அதை double road-ஆக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை, மாநில நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்பட்டு, அவர்களாலே பராமரிக்கப்பட்டு வருகிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அது, 8 மீட்டரிலிருந்து 12 மீட்டர் அகலம் இருக்கிறது. இப்பொழுதும் அதிலே இரண்டு வழிச் சாலை அமைக்கலாம். அப்படி இடம் போதவில்லையென்று சொன்னால், 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மத்திய அரசுதான் அனுமதி தரவேண்டும் என்று சொன்னேன். நிலத்தை மாற்றுவதற்குச் சில வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு மடங்கு நிலம் வேண்டுமென்றால், ஒரு ஏக்கர் நிலம் வேண்டுமென்றால், இரண்டு ஏக்கர் நிலம், நாம் மரம் வளரக்கூடிய இடமாகப் பார்த்துத் தரவேண்டும். அதன் பின்னர், மரத்தை வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்குமான செலவுத் தொகையைக் கட்ட வேண்டும். சில பணிகளுக்கு மட்டும் நிலத்தினுடைய தொகை தர வேண்டியது இல்லை. அதாவது, மருத்துவமனைகளாகவோ, பள்ளிக்கூடங்களாகவோ இருந்தால், அந்த மாற்றப்படுகின்ற இடத்தினுடைய மதிப்புத் தொகையைத் தர வேண்டியது இல்லை. இல்லையென்று சொன்னால், வேறு எந்தப் பணிக்காக இருந்தாலும், வனப் பணிக்கு இல்லாத வேறு எந்தப் பணிக்கென்றாலும், அந்த நிலத்தினுடைய மதிப்பையும் தரவேண்டும். அதன் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு சான்றிதழ் தரவேண்டும். வன இடத்தைத் தவிர வேறு இடங்கள் இல்லையென்ற காரணத்தால், இந்த இடம்தான் வேண்டுமென்ற அந்தச் சான்றிதழைத் தரவேண்டும். அதன் பின்னர், அது சரணாலயப் பகுதியாக இருந்தால், இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்டுவதற்கு, உச்ச நீதிமன்றத்தை அணுகி அவர்களிடம் உத்தரவு பெற வேண்டும்; அல்லது சரணாலயப் பகுதிகளாக இருந்தால், தேசிய வன உயிரினக் குழுமத்திடம் சென்று, அதனிடமும் நாம் அனுமதி பெறவேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில், நாம் இந்த இடத்தை மாற்றலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் அதைப்பற்றி வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆர்வத்தோடு இந்தக் கேள்வியைக் கேட்டேன். நம்முடைய அமைச்சர் அதை சாதித்துக் கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு கேட்டேன். ஆனால், அவர் இங்கே சொல்வதையெல்லாம் பார்த்தால், போகிற ஊருக்கு வழி சொல்வதாகவே எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கே ஏற்கெனவே existing road இருக்கிறது. புதிதாக ரோடு அமைக்க வேண்டுமென்று சொன்னால்தான், மத்திய அரசிடமிருந்து அனுமதியோ, அதேபோல, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையோ தேவை. அதாவது, judgement பிரகாரம் போடமுடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய existing road-ஐக் கொஞ்சம் அகலப்படுத்துவதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆகவே, வனத் துறை அமைச்சர் அவர்கள் ஒருவேளை அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால், நம்முடைய Highways Minister-ஆவது இதை இன்னும் ஒரு மூன்று மீட்டர் அல்லது இரண்டு மீட்டர் எடுத்தாலே போதும்; இரண்டு வழிச் சாலையாகிவிடும். ஆகவே, நம்முடைய வனத் துறை அமைச்சர் இப்பொழுது எங்களுக்குச் சாதகமான பதிலைத் தராத காரணத்தினாலே, இங்கே Highways Minister அவர்கள் இதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு சாலை அமைத்துத் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவரிடம் வழிமுறைகளைத்தான் சொன்னேன்; மனம் இல்லையென்று சொல்லவில்லை. ஏற்கெனவே வேலூர் மாவட்டத்திலே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு 4.045 எக்டேர் நிலம் மாற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு 32 இனங்களுக்காக 67 எக்டேர் நிலம் மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, நிலத்தை மாற்ற முடியாது என்று சொல்லவில்லை. மாநில அரசைப் பொறுத்தவரையில், அதைப் பராமரிக்கின்ற பணியைத்தான் செய்துகொண்டிருக்கின்றோம். ஆனால், நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் மத்திய அரசு. எனவே, அனுமதியை

அவர்களிடம் பெறவேண்டும். அதைத்தான் நான் அவரிடம் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நமது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்து ஆய்வு செய்தபோது, அஞ்சனை பிரிவு to குன்றிக்கு பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் ஐந்தரைக் கோடி ரூபாயில் சாலை போடப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. இன்று வரை வனத் துறையால் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, அந்தக் குன்றிமக்களுக்கு—குன்றி என்பது ஒரு சாதாரண ஊர் அல்ல; அது ஓர் ஊராட்சி. சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து அந்த ஊருக்கு இன்று வரை சாலை வசதி அமைத்துக் கொடுக்கவில்லை. நான் மிகவும் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில்தான் அந்த பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை வனத் துறையால் அனுமதி வழங்கப்படாமல், அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பாதையை அமைப்பதற்குக் கடும் முயற்சி செய்து, அந்த மக்களுக்கு விடிவு ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், கருத்துரு வந்தால் அந்த இடத்தில் உள்ள சாலைக்கு அனுமதி கிடைத்துவிடாது. மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்கள் அதைப் பரிசீலித்து, அதன் பின்னர்தான் தர வேண்டும். அவர் சொல்லுகின்ற இடம் எல்லாம் சரணாலயப் பகுதியாகவே இருக்கின்ற காரணத்தினால், அதைப்பற்றி அவர்கள் ஆய்வு செய்துதான் அதற்கு அனுமதி தருவார்கள். எனவே, கிடப்பில் போடப்பட்டது என்று தவறான வார்த்தையை அவர் சொல்கிறார்; அப்படியல்ல. நடைமுறையிலே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். விரைவில் அதற்கான ஆணை



பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெறும். சாலைகள் எல்லாம் அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட ஆசனூர் to இக்கலூர் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து, நிறைவேற்றித் தரச் சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது எல்லாம் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியில் கோம்பை முதல் முத்தம்பட்டி வழியாகச் செல்லுகின்ற சாலை, வனத் துறையின் வழியாகச் செல்கின்றது. அந்தச் சாலைக்கு மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து சுமார் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. அந்தப் பணியை இதுவரை வனத் துறை அதிகாரிகள் போடவிடாமல் தடுத்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அதன் வழியாகச் செல்கின்றனர். ஆஞ்சனேயர் கோயில் ஒன்று அங்கே இருக்கிறது. வாரந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதன் வழியாகச் சென்று வருகிறார்கள். ஆகவே பக்தர்களுடைய நலன் கருதி, அந்தச் சாலையைப் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, இதுவரை 8.07 எக்டேர் நிலம் தருமபுரி மாவட்டத்திலே மட்டும் சாலைகள் போடுவதற்காக வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, நான் சொன்னதுபோல அந்த வரன்முறைகளை நடைமுறைப்படுத்துவதிலே சில நேரம் காலதாமதம் ஆகலாமேயொழிய, எல்லா இடங்களிலும் நாங்கள் சாலை அமைப்பதற்காக அனுமதியைத் தந்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டு காலத்தில்--அந்த ஆட்சியை நான் குறை சொல்லவில்லை; ஏனென்றால் பல சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால்--அவர்கள் கொடுத்தது எல்லாம், 14 எக்டேர் நிலம்தான் கொடுத்திருந்தார்கள். ஆனால், இப்போது 67 எக்டேர் நிலம் இந்த

இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேவைகளின் அடிப்படையில், கிராமங்களுக்கு அடிப்படை வசதியை அமைத்துத் தர வேண்டுமென்பதிலே மிகவும் அக்கறை கொண்டு கிராமப்புற சாலைத் திட்டத்தைத் தொடங்கியதே தலைவர் கலைஞர் அவர்கள்தான். எனவே, அந்த அடிப்படை வசதிகள் இல்லாத அனைத்து கிராமங்களுக்கும், பழங்குடியினர் வாழுகின்ற கிராமங்களுக்கும் அவை செல்ல வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதியிலே நத்தம் சாலையிலிருந்து சரந்தாங்கி வரை செல்லக்கூடிய சாலை மெட்டல் சாலையாக பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. பல கிராமங்களுக்கு பஸ் போக்குவரத்து செல்லக்கூடிய அந்தச் சாலையில் 600 மீட்டருக்கு, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தார்ச் சாலை அமைப்பதற்கோ அல்லது ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து தார்ச் சாலை அமைப்பதற்கோ வனத் துறை அனுமதி அளிக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரணாலயப் பகுதியாக இருந்தால் தார்ச் சாலை அமைக்கக் கூடாது என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. சரணாலயப் பகுதி இல்லை என்றால், உறுதியாக அதற்கு அனுமதி வழங்கலாம்.

**திரு. பி. மூர்த்தி:** ஏற்கெனவே சாலை இருக்கிறது, பஸ் போய்க்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி வழங்குவதிலே எந்தத் தடையும் இல்லை; விரைவிலே அனுமதி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி திருக்கோயிலைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே புதிய மலைப் பாதையைத் திறந்து வைத்து சிறப்புச் செய்தார்கள். அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிற இந்த நேரத்திலே, அந்தத் திருத்தணி திருக்கோயிலுக்கு இன்னொரு மலைப் பாதையை அமைக்கின்ற பணி நீண்ட ஆண்டுகளாக, பல்லாண்டுகளாக நடந்து வருகிறது. அதிலே என்ன தடங்கல் என்று சொன்னால், வனத் துறைக்குச் சொந்தமான குறுக்கீடுகள் இருப்பதனால், அந்தச் சாலையை முழுமை செய்ய முடியவில்லை என்று அறநிலையத் துறை சொல்கிறது. அதிலே அதிக அக்கறை காட்டி, அதைச் செய்ய வேண்டும் என்று நான் வனத் துறை அமைச்சரிடம் நேரடியாகவும் கேட்டிருக்கிறேன். ஆகவே, அந்தச் சாலையை அனுமதிப்பதற்கு வனத் துறை அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலைக்கு வனத் துறையால் தடங்கல் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கிருக்கிற அந்தச் சாலையை யார் அங்கே அமைக்க முற்படுகிறார்களோ, அந்தத் துறையின் சார்பாக அல்லது அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்தான் அந்தக் கருத்துருவை விரைவிலே அனுப்ப வேண்டும். எங்கள் துறையைப் பொறுத்தவரையில், தலைமை வனப் பாதுகாவலரிடம் நான் அறிவுறுத்தியிருக்கிறேன், கருத்துரு வந்தால், சாலைகள் வேண்டுமென்று எங்கிருந்து அந்தச் செயற்குறிப்பு வந்தாலும், உடனடியாக அதற்கு அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று. உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன நிதிநிலை அறிக்கையில், ராஜபாளையம் to தேனி, வருசநாடு மலைப் பாதை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தச் சாலை, வருசநாடு மலைப் பாதை அமைக்கும் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாதை, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயப் பகுதியாக அது இருக்கிறது. எனவே, தேசிய வன உயிரினக் குழுமத்திடம் நாங்கள் அனுமதி பெற வேண்டும். அதற்காக, அந்த அனுமதியைப் பெறுவதற்காக நாங்கள் எழுதியிருக்கிறோம். இந்த இடைக்காலத்திலே அந்தப் பகுதியை ஆய்வு செய்வதற்காகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் ஞானசேகரன் அவர்கள் எழுப்பிய கேள்வி என்னுடைய தொகுதியைச் சார்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் போடப்பட்ட சாலைதான் அந்த ஏலகிரி மலைச் சாலை என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சாலையை, நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் வன விதிகளைத் தளர்த்தி, போட வேண்டும். அதேபோல, இந்தியாவிலேயே சிறந்த சந்தனங்களை விளைவிக்கக்கூடிய ஜவ்வாது மலையிலே, பெருந்தலைவர் காமராஜர் போய்த் தங்கியிருந்த அந்த மலையிலே, 1935-ல் போடப்பட்ட சாலைகள் ஒரு வழிச் சாலையாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஜவ்வாது மலைக்கு ஏன் போகிறீர்கள்? உங்கள் கேள்வியை அவரே கேட்டுவிட்டார் என்று சொல்கிறீர்கள்; அதிலே உங்களுக்கு ஏதாவது கேள்வி இருக்கிறதா?

**திரு. தி.க. ராஜா:** இருக்கிறது. ஒரே நிமிடம். ஜவ்வாது மலைச் சாலை ஒரு வழிச் சாலையாக இருக்கிறது. ஒரு பேருந்து போனால், எதிரே வரும் வண்டி வர முடியவில்லை. எனவே, இரு வழிச் சாலையாக மாற்றுவதற்கும், 2004-லே PMGRY-ன்கீழ், வனத் துறையினுடைய பொறியாளர்களால் போடப்பட்ட திருச்சி சாலை, 2004-லே ஒப்பந்தம் கோரப்பட்டு, 2008 வரை போடப்படாமல் இருக்கிற அந்தச் சாலையை உடனடியாகப் போடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்லிய பதிலே இவருக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இன்னும் கேள்விக்கே பதில் வரவில்லை; அதற்குள் அந்தப் பக்கத்திலிருந்து எல்லோருமே கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

**87—**

**சாலை வசதி**

***30999—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி-தென்னிலை சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி-தென்னிலை சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசலூர்-கொடுமுடி சாலையிலே, கொடுமுடி-தென்னிலை

[2008 ஏப்ரல் 10

சாலை, சின்னதாராபுரம் வரை செல்கின்ற சாலையாகும். இது, கொடுமுடியிலே 0 கி.மீ.ல் தொடங்கி 4/6 கி.மீ. நொய்யல் ஆறு வரை, கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி சாலையாக இருந்து வருகின்றது. நொய்யல் ஆற்றுக்கு அந்தப் பகுதியில், கரூர் மாவட்டத்திலே சின்னதாராபுரம் வரை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலே அந்தச் சாலை தற்சமயம் அகலப்படுத்தப்பட்டும், தரம் மேம்படுத்தப்பட்டும் இருக்கிறது. அங்கே பாலம் ஏற்பட்டதற்குப் பிறகு, போக்குவரத்துக்கு மிகப் பெரிய அளவிலே உதவியாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கொடுமுடியிலேயிருந்து தென்னிலை, சின்னதாராபுரம், மூலனூர், தாராபுரம் வழியாகப் பழனி செல்லவும், அரவக்குறிச்சி மற்றும் திண்டுக்கல் வழியாக மதுரை செல்லவும், அதேபோல, ஈரோட்டிலிருந்து செல்லும்போதும் 20-லிருந்து 25 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வருவது குறைகிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால், நம்முடைய அமைச்சரின் தொகுதி வெள்ளக்கோயிலுக்குச் செல்வதற்குக்கூட 10 கி.மீ. தூரம் கொடுமுடியிலிருந்து குறைகிறது என்ற காரணத்தினாலே, இந்தச் சாலையை தயவுகூர்ந்து நெடுஞ்சாலைத் துறை வசம் எடுத்துக்கொண்டு மேம்படுத்தித் தரவேண்டும்; அகலப்படுத்தித் தரவேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்குப் போக்குவரத்து மிக அதிகமாக அந்தச் சாலையிலே இருக்கிற காரணத்தினாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் விவாதம் செய்துகொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். விவாதம் இல்லை. இதற்காக நாங்கள் ஒரு தீர்மானத்தையும் கொடுமுடி ஊராட்சியிலே நிறைவேற்றி, அதை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைப்பதற்கான ஆவணத்தையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இதை அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அந்தச் சாலையைப்பற்றிக் குறிப்பிடுகின்றபோது, அந்தச்



2008 ஏப்ரல் 10]

சாலை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருக்கிறது என்று அவரே சொல்லியிருக்கின்றார். அரசலூர்-கொடுமுடி சாலை, மாவட்ட முக்கியச் சாலையிலிருந்து ஒத்தக்கடை பகுதியிலே பிரிந்து, சின்னதாராபுரம் வரை செல்கின்றது. அதில் முதல் 4½ கிலோ மீட்டர் தூரம் ஊராட்சி ஒன்றியச் சாலையில் இருக்கின்றது; அதாவது, நொய்யல் பகுதி வரை. அதற்கு அடுத்த பகுதி, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில் அமைந்து, கரூர் மாவட்ட நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அந்தச் சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது. அந்தச் சாலை, இடைவழிச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அது சுமார் 4½ கி.மீ. தூரம் மட்டும்தான் ஒரு வழிச் சாலையாக இருக்கிறது. ஆனால், போக்குவரத்துக்கு உகந்த சாலையாக ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியச் சாலையைப் பராமரிப்பதற்குத் தற்போது நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் அது இல்லாத காரணத்தினால், அதை அனுமதிப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அந்தச் சாலையின் இரண்டு பக்கமும், மாநில நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் எடுத்துச் செய்ய, எதிர்காலத்தில் அந்தத் தீர்மானத்தைப் பெற்று, அரசு அதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய சாதகமான பதிலுக்கு நன்றியைக் கூறுவதோடு, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பூந்துறை-எழுமாத்தூர் சாலையில் சர்க்கரை ஆலை வந்திருக்கின்ற காரணத்தினாலே, அங்கே குரங்கன் பாலத்திலே இருக்கின்ற அந்தச் சாலையை அகலப்படுத்தி, பாலத்தையும் சரி செய்யவேண்டும். வேறு வழியில்லை. குரங்கன் பாலம் தரைவழிப் பாலமாக இருப்பதால், அதை உயர்மட்டப் பாலமாக உயர்த்தித் தரவேண்டும். அதேபோல, அந்தப் பாதையையும் அகலப்படுத்தித் தரவேண்டும். ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 4,500 டன் கரும்பு தினமும் அரைவை செய்யப்படுகின்ற காரணத்தினாலும், அந்த ஒரு சாலைதான் நெடுஞ்சாலைகளை இணைக்கின்றது என்ற காரணத்தினாலும், அதனை மேம்படுத்துவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலையைப் பற்றி நான் ஏற்கெனவே அறிவேன். எங்கள் பகுதிக்கு அருகில் இருக்கின்ற காரணத்தால் நான் பல முறை அந்த வழியே சென்றிருக்கின்றேன். அதிலும் குறிப்பாக, சமீபத்தில் ஒரு சர்க்கரை ஆலையும் அங்கே உருவாகியிருக்கிற காரணத்தினால், நமது சட்டமன்ற உறுப்பினரும் அதைக் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அமைச்சருமான திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார். நம்முடைய மாவட்ட அமைச்சர், கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்களும் அந்தச் சாலையில் பாலம் அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். எனவே, அது நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பாலம் நிச்சயமாகச் சீர்செய்யப்படும். சாலையை அகலப்படுத்துவதுபற்றி எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி ஒன்றியத்திலே நிதி இல்லாத காரணத்தால், R.R. என்கிற சாலைகளாக மாற்றப்பட்டு, அந்தச் சாலைகள் பராமரிக்கப்பட்டு, அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்வதா அல்லது ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் மீண்டும் அவை பராமரிக்கப்படுவதா என்ற நிலை பல ஆண்டுகளாக உருவாகியிருக்கின்ற காரணத்தினால், அதை நெடுஞ்சாலைத் துறையே ஏற்று, அந்தப் பணிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-25 .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாலைக்கு முக்கியத்துவம் தந்ததே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். நெடுஞ்சாலைத் துறையின் ஓர்





அலகை, கிராமச் சாலைகள் திட்டம் என்று அதற்கு ஒரு தலைமைப் பொறியாளரை நியமித்து, அதற்கொரு தனி wing, அலகையே ஏற்படுத்தி, அதற்குப் பிறகுதான் கிராமத்தினுடைய சாலைகள் புத்துயிர் பெற்றன. தலைவர் கலைஞர் அவர்கள்கூட நேற்றைக்கு நம்முடைய இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய நிகழ்ச்சியிலே மிகச் சிறப்பாக அதைக் குறிப்பிட்டார்கள்.

கடந்த காலங்களிலே முதல்வராக இருந்தபோது, முக்கியச் சாலைகளைக் கிராமச் சாலைகள் இணைக்க வேண்டும் என்றும், 1,500 மக்கள்தொகை கொண்ட சாலைகளையும், அதற்கு அடுத்த கட்டமாக 1,000 மக்கள் குடியிருக்கக்கூடிய முக்கியச் சாலைகளையும் இணைப்பதுபற்றியும், அதேபோல 500 மக்கள் குடியிருக்கக் கூடிய பகுதிகளில் உள்ள முக்கியச் சாலைகளை இணைத்து, கிராமப்புறத்தை மேம்படுத்த வேண்டுமென்றும் முடிவெடுத்து, அந்தக் கிராமச் சாலைத் திட்டத்தின்மூலம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது கடந்த காலத்திலே. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை நான்காவது முறையாக முதல்வராக இருந்தபோது, ஏறத்தாழ 5,200 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள்—மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு நபார்டு வங்கி போன்ற வங்கியினுடைய திட்டத்தின் அனுமதியைப் பெற்று, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த 5,200 கிலோ மீட்டர் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டன. ஆனால் அதற்குப் பிறகு, அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாமல் இருந்தன. பல நாட்கள் ஆகின்றபோது, அந்தச் சாலைகள் பராமரிப்பு இல்லாமல் கிடக்கின்றபொழுது பழுதுபட்டுவிடுகின்றன. எனவே, அவை போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பொழுது முதல்வராக வந்தவுடன், எங்களையெல்லாம் அழைத்துப் பேசி, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின்மூலம், நபார்டு வங்கியின்மூலம், மற்ற திட்டங்கள்மூலம் போடப்பட்ட சாலைகளை நீங்களே பராமரியுங்கள் என்று சொல்லி, 200 கோடி ரூபாயும், அதேபோல, உள்ளாட்சித் துறைக்குப் பேருந்துப் போக்குவரத்துள்ள முக்கியச் சாலைகளுக்கெல்லாம் ரூ.103 கோடியும், மொத்தம் 303 கோடி ரூபாய் கடந்த நிதியாண்டிலேயும், இப்பொழுது நடந்து முடிந்த 2007-2008 ஆம் நிதியாண்டிலேயும் 200 கோடி ரூபாய் நெடுஞ்சாலைத் துறைக்கும், அதேபோல ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு ரூபாய் 103 கோடியும், 303 கோடி ரூபாய் கொடுத்து, இந்த இரண்டாண்டு காலமாக அந்தச் சாலைகள் எல்லாம்

நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது சாலைகளைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், எழுதித் தருவாரேயானால், நிச்சயமாக அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கின்ற மண் சாலைகளை மேம்படுத்தி தார்ச் சாலைகளாக மாற்றுகின்ற அந்தத் திட்டத்தின்கீழ் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் Highways கட்டுப்பாட்டில் இருக்கின்ற கிராமச் சாலை வகைப்பாட்டில், அந்தப் பணியை மேற்கொள்வதற்கு இன்று வரை வருகின்ற அரசுகள் பூராவும் அந்தப் பணிகளை எடுத்துச் செய்கின்றன. ஆனால், அந்தப் பணி முடிந்தவுடன், அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா அல்லது உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா என்ற நிலை, இரண்டும்கெட்டான் நிலையாக, தொங்கு சாலையாக இதுவரை அது இருக்கின்றது. அந்தச் சாலை போட்டு முடிந்ததற்குப் பின்னால், நெடுஞ்சாலைத் துறையினுடைய பராமரிப்பிலும் இல்லாமல், உள்ளாட்சித் துறையினுடைய பராமரிப்பிலும் இல்லாமல், அந்தச் சாலை எந்தவிதப் பராமரிப்பிலும் இல்லாத சூழ்நிலை தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையைக் கருதித்தான், மாண்புமிகு அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், அந்தச் சாலையினுடைய பராமரிப்பிற்காகத் தனியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கி, சாலையைப் பராமரிப்புச் செய்தார்கள். ஆனால், ஒரு கொள்கை முடிவை நாம் உறுதியாக எடுத்தாக வேண்டும். அந்தச் சாலை, ஒன்று, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்; இல்லையென்றால் உள்ளாட்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதுபோன்ற சாலைகளைப் பராமரிப்பதிலே கடந்த காலங்களில் சிக்கல் இருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றபொழுதுதான் அதற்கொரு முடிவு காணப்பட்டு, அந்தச் சாலைகள் தற்பொழுது நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்பாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருந்தாலும் சரி, அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில், அவை ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலைகளாகவும் இல்லாமல், நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளாகவும் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார். அவை ஊராட்சி ஒன்றியத்தினுடைய சொத்துக்கள்தான். நெடுஞ்சாலைத் துறை பல்வேறு திட்டங்களை எடுத்துப் பராமரிக்கின்ற நேரத்தில், பொது மக்களும், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளும் உடனடியாக நெடுஞ்சாலைத் துறையை அணுகிவிடுங்கள் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் நெடுஞ்சாலைத் துறையிடம் வருகின்ற நேரத்தில், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பினுடைய சாலை; நாங்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ் பராமரித்தோம்; அதை மேம்படுத்தினோம்; எனவே, அவர்களிடமே போய் அதைப் பராமரித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இந்தச் சிக்கல் கடுமையாக இருந்தது. ஆனால், இரண்டாண்டுகளுக்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின்பேரில் அந்தச் சாலை சீர்செய்யப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அதற்கேற்ப எதிர்காலத்திலே முடிவு எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

## புதிய கட்டடம்

***538—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் நகராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2008 ஏப்ரல் 10

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராஜபாளையம் நகராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனை 1931 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மருத்துவமனையாகும். மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஆகவே, அதற்காக நபார்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விரைவில் கட்டித் தரும்படி இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, வினா எண் 90 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) தூத்துக்குடி, ஒட்டப்பிடாரத்தில் வயிற்றுப் போக்கினால் சிலர் பாதிக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தூத்துக்குடி அருகே 5 கிராமங்களில் சுத்தம் செய்யப்படாத தண்ணீரைப் பருகிய 150 பேர் வாந்தி, பேதியால் பாதிக்கப்பட்டுப் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டது



குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. பெ. மோகன், திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. போ. சின்னப்பன், காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், திரு. ஜி.கே. மணி ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வாலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டப்பிடாரம் தொகுதி, ஐந்து ஊராட்சிகளிலுள்ள புதியம்புத்தூர், ஜம்புலிங்கபுரம், நடுவக்குறிச்சி, சாமிநத்தம், சில்லாநத்தம், நைனார்புரம் மற்றும் மேலமடம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்ட பொது மக்கள் மாசு கலந்த குடிநீரைப் பயன்படுத்தியதால் வாந்தி, பேதியால் பாதிக்கப்பட்டு, கடந்த 29-3-2008 அன்று பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். மேற்சொன்ன ஐந்து ஊராட்சி கிராமங்களுக்கும் புதியம்புத்தூர் கிராமம் மலர்க் குளத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றின்மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது மலர்க் குளம் முழுவதும் மழை நீர் நிறைந்துள்ளதால், குளத்து நீரும், குடிநீரும் ஒன்றாகக் கலந்துவிட்டது. அதன் விளைவாக, சுகாதாரமற்ற குடிநீர்தான் மேற்சொன்ன ஐந்து ஊராட்சிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை குறித்து, தொகுதியின் மக்கள் பிரதிநிதி என்ற முறையில் நான் பல முறை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி காலராவினால் பாதிக்கப்பட்ட பலரும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி செய்யப்பட்டு, மேல் சிகிச்சைக்காகப் பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் இறந்துவிட்டனர். இக்காலரா நோயினால் பாதிக்கப்பட்டு, 30-3-2008 அன்று புதியம்புத்தூரைச் சேர்ந்த 24 வயதுடைய அழகர்சாமியும், 1-4-2008 அன்று நான்கு மாதக் குழந்தையும், இதே ஊரைச் சேர்ந்தவர்களான 55 வயதுடைய ஜெயராஜ் என்பவர் 2-4-2008 அன்றும், 65 வயதுடைய அனந்தம்மாள் 3-4-2008 அன்றும், ஆக நான்கு பேர்கள் இதுவரை இறந்துவிட்டனர் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பெ. மோகன்] [2008 ஏப்ரல் 10

இந்த இறப்புகளுக்கு, அதிகாரிகளின் மெத்தனப் போக்கே காரணம் ஆகும். காலரா போன்ற தொற்று வியாதிகள் மக்களைக் கூட்டம், கூட்டமாகச் சாகடித்துவிடும் என்று தெரிந்திருந்தும், மாவட்ட நிருவாகமும், சுகாதாரத் துறையும் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதை இங்கே தெரியப்படுத்திக்கொள்கிறேன். எனவே, எனது தொகுதியில் ஏற்பட்டுள்ள இந்த அபாயகரமான சூழ்நிலையை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடியாக சுகாதாரமான குடிநீர் வழங்கவும், காலரா தடுப்பு நடவடிக்கையைப் போர்க் கால அடிப்படையில் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், இறந்த பொது மக்களுக்கு நிவாரணத் தொகையாக நபர் ஒருவருக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். 'வருமுன் காப்போம் திட்டம்' கொண்டு வந்துள்ளதாகப் பெருமைப்படும் இவ்வாசு, வந்த பின்னும் காக்காமல் இருக்கிறது என்பதைத் துறை அமைச்சருக்கும், சபைக்கும் தங்கள்வாயிலாகக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-35*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியிலே இருக்கக்கூடிய அந்த மலர்க் குளம் என்கிற குளம் பொதுப் பணித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஒரு குளம்; கண்மாய். ஆனால், அங்கே அந்தக் குளத்திலிருந்து 5 ஊராட்சிகளிலுள்ள புதியம்புத்தூர், ஜம்புலிங்கபுரம், சில்லாநத்தம், சாமிநத்தம், நடுவக்குறிச்சி மற்றும் மேலமடம் ஆகிய கிராமங்களுக்கு ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தின்மூலமாக உள்ளாட்சித் துறை தண்ணீர் எடுத்துக்கொண்டு போய்க் கொடுக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனிப்பில், இப்போது பாதிக்கப்பட்ட மக்கள் 250 பேருக்கு மேல், வாந்தி, பேதி வந்து, அவர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வாந்தி, பேதி என்று பொது மக்கள் சொன்னாலும்கூட, அது காலராவாக இருக்கக்கூடும் என்கிற ஒரு அச்சமும் பொது மக்கள் மத்தியில் இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால், மலர்க் குளம் என்கிற இடத்திலிருந்துதான் ஆழ்குழாய்க் கிணறு போட்டு அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அடாது மழை பொழிந்து வெள்ளம் வந்து, அங்கே பாதுகாப்பற்ற



2008 ஏப்ரல் 10] [திரு. சி. ஞானசேகரன்]

குடிநீர் அந்தக் கண்மாயில் நிறைய சேர்ந்துவிட்டு, பிறகு அங்கிருந்து தண்ணீர் 5 ஊராட்சிகளிலுள்ள கிராமங்களுக்கும் கொண்டு போய்க் கொடுக்கப்படுகிற காரணத்தினாலே, அந்தப் பாதுகாப்பற்ற தண்ணீர்தான் இதற்கு வித்திட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பாதுகாப்பான குடிநீரை அங்கேயிருந்து எடுத்துச் சென்று மக்களுக்குக் கொடுப்பதற்கும், அதேபோல, மலர்க் குளம் P.W.D.-வின் control-இல் இருக்கிற காரணத்தினாலே, அங்கே பாதுகாப்பற்ற தண்ணீர் வந்து சேராமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதற்கும், இப்பொழுது மருத்துவமனையில் இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் போதிய கவனம் செலுத்தி, அவர்களைக் குணப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று கேட்டும், இறந்து போன அந்த 4 பேருடைய குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டுமென்று கேட்டும், அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் பகுதியிலே பல்வேறு கிராமங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படாததால், அந்தப் பகுதியிலே இருக்கிற நூற்றுக்கணக்கானவர்கள் வாந்தி, பேதியால் பாதிக்கப்பட்டு, அவர்கள் புதியம்புத்தூர் மற்றும் ஒட்டப்பிடாரம் மருத்துவமனைகளிலே சேர்க்கப்பட்டு, அவர்களிலே 4 பேர் இறந்திருக்கிறார்கள். அதற்கான காரணத்தை எங்களுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்கள் சமீபத்திலே ஏற்பட்ட மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபோது, அந்தப் பகுதியிலேயுள்ள ஏராளமான மக்கள் சொன்னார்கள்; அந்தப் பகுதியிலே நீரினால் பரவுகிற நோய் வருகிற அபாயம் இருக்கிறது; எனவே, ஒட்டுமொத்த மாவட்டத்திலும் தங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டுமென்றும், நீர்மூலம் பரவுகிற அந்த நோயைத் தடுப்பதற்கு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட வைத்தார்கள். அதை எங்களுடைய தலைவர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே 4 பேர் இறந்திருக்கிறார்கள். இனியாவது அந்தப் பகுதியிலே இதுபோன்ற தொற்று நோய் பரவாமல் இருப்பதற்கு நம்முடைய அமைச்சர் தகுந்த

நடவடிக்கை எடுப்பார்களா? அந்தப் பகுதியிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குமாறும், இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அதிகமான நிவாரண நிதி வழங்குமாறும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், புதியம்புத்தூர் ஆரம்ப சுகாதர நிலையத்திற்குட்பட்ட புதியம்புத்தூர் கிராமம், ராசாவின்கோயில், வள்ளிநாயகபுரம், நடுவக்குறிச்சி மற்றும் சாமிநத்தம் ஆகிய கிராமங்களில், 28-3-2008 முதல் 3-4-2008 வரை தீவிர வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என சுமார் 141 பேர் பாதிக்கப்பட்டு, அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களில் 10 நபர்கள் மட்டும் மேல் சிகிச்சைக்காகத் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. பாதிப்பு ஏற்பட்டதற்குக் காரணம், புதியம்புத்தூர் கிராம மக்களுக்குக் குடிநீர் மலர்க் குளத்திலிருந்து ஆழ்குழாய்க் கிணறுமூலம் வழங்கப்படுகிறது; அக்கிணற்றுக்கு அருகில், சமீபத்தில் எதிர்பாராமல் பெய்த மழையால் மழை நீர்த் தேக்கம் ஏற்பட்டு, மற்றும் பொது மக்கள் மலஜலம் கழிப்பதால் ஏற்பட்ட அசுத்தங்கள் ஆகியவையே வயிற்றுப் போக்கு ஏற்பட்டதற்குக் காரணம் ஆகும். தற்போது மேற்சொன்ன மலர்க் குளம் ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து குடிநீர் எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் வழங்கல் துறை மற்றும் பஞ்சாயத்து நிருவாகத்தினரால் மலர்க் குளம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

புதியம்புத்தூர் கிராமத்தில் ஏற்பட்ட இறப்புகள் காலரா நோயினால் அல்ல. 30-3-2008 ஆம் நாளன்று புதியம்புத்தூரைச் சேர்ந்த 28 வயதான சங்குபால் அவர்களின் மகன் எஸ். அழகர் என்பவர் மன நலம் பாதிக்கப்பட்டதால், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ்மூலம்





தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் மாலை 6-40 மணிக்கு இறந்துவிட்டார். இவருடைய இறப்பு, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கினால் ஏற்பட்டதல்ல. அதே ஊரில் வடக்கு காலனியைச் சார்ந்த காகன்பகதூர் என்பவரின் 3 மாதக் குழந்தை நுரையீரல் நோயினால் ஏற்பட்ட காய்ச்சலால், கிருஷ்ணா கிளினிக் மற்றும் சங்கீதா நர்சிங் ஹோம் ஆகிய தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு, பிறகு தூத்துக்குடி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காகச் செல்லும் வழியில் இறந்து விட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. இறந்த குழந்தைக்கோ மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கோ வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு இல்லை. புதியம்புத்தூர் வட்டத் தெருவைச் சேர்ந்த லட்சுமணன் மகன், 55 வயது ஜெயராஜ் என்பவர் வயிற்று வலி காரணமாக 29-3-2008 அன்று புதியம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, மூளையில் இரத்தக் கசிவு மற்றும் மூச்சுத் திணறலால் இறந்துவிட்டார். எனவே, மேற்கூறிய மூவரும் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கினால் இறக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு இது சம்பந்தமாகத் தடுப்பு நடவடிக்கையை எடுத்து வருகின்றது. பாதிக்கப்பட்ட கிராமங்களில் பொதுச் சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, குடிநீர் வழங்கல் துறை, பஞ்சாயத்து நிருவாகம் ஆகியவை இணைந்து கீழ்க்கண்ட பணிகளைப் போர்க் கால அடிப்படையில் தொடர்ந்து செய்து வருகின்றன. கோவில்பட்டி துணை சுகாதார இயக்குநரின் மேற்பார்வையில் 16 மருத்துவ அலுவலர்கள், 8 பகுதி சுகாதார செவிலியர்கள், 26 கிராம சுகாதார செவிலியர்கள், 8 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோர் அடங்கிய 9 குழுக்கள், நோய் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வீடு, வீடாகச் சென்று, நோய்த் தடுப்பு சிகிச்சை அளித்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு Glucose, Doxicycline, உப்பு, சர்க்கரைக் கரைசல் பாக்கெட்டுகள் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட கிராமங்களில், தொற்று நோய் நீங்குவதற்காக பினாயில், பிளீச்சிங் பவுடர் ஆகிய கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் சுத்தம் செய்யப்பட்டு, குடிநீரில் குளோரின் கலந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதியம்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரமும் மருத்துவ அலுவலர் தலைமையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதுடன், ஆம்புலன்ஸ் வசதியும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. போதுமான மருந்து, மாத்திரைகளும் கையிருப்பில் உள்ளன. உணவு விடுதிகள், தேநீர்க் கடைகள் ஆகியவை காய்ச்சிய குடிநீரை விநியோகிக்கவும், ஈ மொய்க்காமல் சுத்தமான

உணவுப் பண்டங்களை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. குடிநீர், ஆய்வுக்காக நுண்ணுயிர் மருத்துவத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பரிசோதனை செய்ததில், காலரா நோய்க்கான கிருமி இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையின் தீவிர நடவடிக்கையின் காரணமாக நோய்களின் தாக்கம் மேற்பட்ட கிராமங்களில் வெகுவாகக் குறைந்து வருகிறது. கடந்த 6-4-2008 அன்று ஒருவரும், 7-4-2008 அன்று ஒருவரும் பாதிக்கப்பட்டனர். 8-4-2008-க்குப் பிறகு யாரும் இதனால் பாதிக்கப்படவில்லை. இக்கிராமம் சுகாதாரத் துறையின் தீவிரக் கண்காணிப்பில் இருந்து வருகிறது; மேற்கொண்டு நோய் பாதிப்புகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வால்பாறை. . . (குறுக்கீடு) மோகன், சொல்லுங்கள்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான அறிக்கையைச் சொல்லி இருக்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

## (ஆ) வால்பாறை, வில்லோனி அனலி எஸ்டேட் குடியிருப்புப் பகுதியில் சிறுத்தைப் புலியால் அடித்துக் கொல்லப்பட்ட குழந்தையின் குடும்பத்திற்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வால்பாறை வில்லோனி அனலி எஸ்டேட் குடியிருப்புப் பகுதியில், 6-4-2008 ஆம் தேதி குழந்தையைச் சிறுத்தைப் புலி அடித்துக் கொன்றுவிட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

முற்பகல் 10-45

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆம் தேதி எனது வால்பாறை தொகுதியில் வில்லோனி அனலி எஸ்டேட் பகுதியில் 5 வயதுக் குழந்தையைச் சிறுத்தைப் புலி



அடித்துக் கொன்றுவிட்டது. இரவு முழுவதும் தேடி, குழந்தை கிடைக்காமல் அதிகாலையில் குழந்தையைத் தேடி எடுத்திருக்கின்றார்கள். உடனடியாக வால்பாறை பகுதியில் இருக்கிற அந்த மக்கள் எல்லாம், பிரேதத்தை வாங்கமாட்டோம் என்று சொல்லி மறியல் போராட்டத்தை நடத்தினார்கள். நான் அதிலே தலையிட்டு, மறியல் போராட்டத்தை வாபஸ் பெறும்படிக் கேட்டு, வாபஸ் பெற்றார்கள். அப்பொழுது அந்தக் குழந்தையினுடைய தந்தை வீரன் என்பவர், என்னிடத்திலே சொன்னார்: "ஐயா, எனக்கு 2 குழந்தைகள் இருக்கின்றன; இரு குழந்தைகளில் இப்போது 5 வயதுக் குழந்தையை நான் பலி கொடுத்துவிட்டேன்; இன்னும் ஒரு குழந்தை இருக்கிறது; இந்தக் குழந்தையையாவது காப்பாற்றுவதற்கு என்ன உத்தரவாதம் தாங்கள் தருகிறீர்கள்?" என்று கேட்டார். மிகவும் வேதனையாகவும், வருத்தமாகவும் இருந்தது. ஏற்கெனவே அதே இடத்திலே ரம்யா என்ற குழந்தையையும், கௌசல்யா என்ற குழந்தையையும் சென்ற 2 ஆண்டுகளில் சிறுத்தைப் புலிகள் அடித்துக் கொன்றிருக்கின்றன. அப்போது அந்த photo-வை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களிடம் நான் நேரடியாகக் கொண்டு வந்து கொடுத்து, அவர்களும் அதற்காக வேதனைப்பட்டு, அதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, நான் சொன்னேன்; அங்கு இருட்டாக இருக்கிறது; தெரு விளக்குகளும் இல்லை; அங்குள்ளவர்களுக்கு மண்ணெண்ணெயும் இல்லை என்பதால்தான் இது மாதிரி சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று நான் குறிப்பிட்டபோது, உடனே வால்பாறைப் பகுதிக்கு 5 லிட்டர் மண்ணெண்ணையைக் கூடுதலாக்கி, 10 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுத்து உதவினார். அதற்காக என்னுடைய நன்றியை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 500 தெரு விளக்குகளை வால்பாறைக்குத் தந்து உதவினார்கள். ஆனாலும், பற்றாக்குறையின் காரணமாக இப்போது வால்பாறையில் தொடர்ந்து இப்படித் துயரச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கடந்த 2 மாதங்களில் மட்டும் 2 சிறுத்தைப் புலிகளைப் பிடித்தார்கள். ஒன்று வில்லோனியில், இரண்டாவது நடுமலையில். கூண்டு வைத்துப் பிடித்தார்கள். அப்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்று, உடனடியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு, முயற்சிகள் எடுத்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், அந்தச் சிறுத்தைப் புலிகளைப் பிடித்துக் கொண்டு போய் டாப் ஸ்லிப்பில், அருகில் இருக்கிற 50 கி.மீ. தூரத்திலேயே விட்டுவிடுவதால்—மனித வாடை—மனித

இரத்தத்தைக் குடித்த அந்தச் சிறுத்தைப் புலிகள் மீண்டும் வால்பாறைக்கு வந்துவிடுகின்றன. ஆகவேதான், தொடர்ந்து உயிர்ச் சேதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு கூண்டு 25,000 ரூபாய்தான் ஆகும். அங்கே வால்பாறையில் இருப்பவை 2 அல்லது 3 கூண்டுகள்தான். 2 அல்லது 3 பகுதிகளில் அதை மாற்றி, மாற்றி வைக்கிறார்கள். வில்லோனி பக்கம் வைத்தவுடனே, சிலோன் காலனிக்குச் சென்று கீதா என்கின்ற ஒரு பெண்ணை அடித்துவிட்டது. அந்தப் பெண் இமையளவில் தப்பித்துவிட்டார். மருத்துவமனையிலே ஒரு மாதம் சிகிச்சை பெற்றார். ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், வால்பாறையிலே எல்லாம் எஸ்டேட் பகுதி; எல்லாம் காட்டுப் பகுதி; எல்லாம் சோலைப் பகுதி; ஆகவே, நிரந்தரமாக 20 கூண்டுகள்; ரூ.25,000/-தான் ஒரு கூண்டுக்கு ஆகும். 20 கூண்டுகளை நிரந்தரமாக அங்கே வைத்துவிட்டால், நிச்சயமாக அந்தச் சிறுத்தைப் புலிகளிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றமுடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிலிண்டர் இல்லாதவர்களுக்கு மேலும் 2 லிட்டர் சீமெண்ணெய் வழங்க நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். 2 லிட்டர் சீமெண்ணையும், கூடுதலாகத் தெரு விளக்குகளையும் கொடுத்து உதவினால், அந்தக் குழந்தைகளைச் சிறுத்தைப் புலிகளின் கொடுமையிலிருந்து காப்பாற்றமுடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சிறுத்தைப் புலிகளைப் பிடித்துக் கொண்டு போய் மிருகக் காட்சி சாலையில் விடுவாரா என்பதையும், மேலும், நிரந்தரமாகக் கூண்டுகள் அமைப்பதற்கு முன்வருவாரா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில்தான் இது கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுவதாக எனக்குச் சொன்னார்கள். இருந்தாலும் சொல்கிறேன். வால்பாறைத் தொகுதியில், வால்பாறை சரகம், மானாம்பள்ளி சரகத்தில், 50-க்கும் மேற்பட்ட தனியார் தேயிலைத்



தோட்டங்களும், தமிழ்நாடு அரசினுடைய தேயிலைத் தோட்டங்களும் அங்கே இருக்கின்றன. அதைச் சுற்றி, 33 ஆயிரத்து 500 எக்டேர் காப்புக் காடுகள் இருக்கின்றன. அவை அடர்ந்த காப்புக் காடுகள் என்கின்ற காரணத்தினால், புலிகளும், சிறுத்தைப் புலிகளும், யானைகளும் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. அண்மையிலேகூட, மத்திய அரசு அதைப் புலிகள் காப்பகமாக அறிவித்திருக்கிறது. அந்த அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து 12-12-2007-லேயே வெளியே வந்து, செல்வராஜ் என்பவருடைய மகளை, வில்லோனி எஸ்டேட்டில் வேலை பார்க்கின்ற அவருடைய மகளை, கௌசல்யா என்ற பெண்ணைக் கொன்றுவிட்டது உண்மைதான். ஆனால், உடனடியாக நாங்கள் அந்தப் பகுதியிலே கூண்டு வைத்து 20-12-2007-லேயே அதைப் பிடித்து, அதன் பின்னர் அவர் குறிப்பிட்டதைப்போல--மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல--அடர்ந்த காட்டுப் பகுதியிலே அதை விடவேண்டுமென்ற ஒரு விதி இருக்கின்ற காரணத்தினால், மீண்டும் அடர்ந்த காட்டுப் பகுதியிலே அது விடப்பட்டது. அந்தப் பெண் கௌசல்யாவின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு விட்டது.

முற்பகல் 10-50

அதன் பின்னர், 1-2-2008-லே கீதா என்ற பெண்ணை அது தாக்கிக் காயப்படுத்தியதும் உண்மைதான்; அவர் தப்பித்துவிட்டார். அதன் பின்னர், இப்போது அவர் குறிப்பிடுகின்ற அந்த அனலி எஸ்டேட்டிலே 5-4-2008 அன்று வீரன், அவருடைய மனைவி லட்சுமி இருவரும் கோயிலுக்கு இரண்டு குழந்தைகளோடு சென்றிருக்கிறார்கள். ஆனால், மாலை நேரத்திலே திரும்பி வருகின்ற நேரத்தில், கைக்குழந்தையை மட்டும் அவர்கள் எடுத்துக்கொண்டு, காயத்ரி என்ற அந்தப் பெண்ணைப் பின்னாலே வரச் சொல்லி விட்டுவிட்டார்கள். அவள் பின்னாலே நடந்து வருகின்ற நேரத்தில், அது ஒற்றையடிப் பாதையாக, 3 அடி அகலமுள்ள பாதையாக இருந்த காரணத்தால், இரண்டு பக்கமும் தேயிலைத் தோட்டங்கள் இருந்த காரணத்தினால், அதிலே பதுங்கியிருந்த சிறுத்தைப் புலி, அவர்கள் சென்றதற்குப் பின்னாலே, அந்தக் குழந்தை நடந்து வருகின்ற நேரத்திலே, அவளைத் தாவிப் பிடித்து எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறது. அவர்கள், நீண்ட நேரத்திற்குப் பிறகு, குழந்தை வரவில்லை என்பதை அறிந்ததற்குப் பிறகு, இரவு முழுவதும் தேடியிருக்கிறார்கள். விளக்குகளை வைத்துக் கொண்டு தேடியிருக்கிறார்கள். அவர்களுடைய மற்ற சக தொழிலாளர்களெல்லாம் அதற்கு உதவி செய்து, அங்கே தேடிப் பார்த்திருக்கிறார்கள்; கிடைக்கவில்லை. 6-4-2008 அன்று காலை

அங்குள்ள வழித்தடங்களைப் பார்த்து அவர்கள் செல்கின்ற நேரத்தில், 500 மீட்டர் தொலைவில் அந்தப் பெண்ணின் உடல் சிதைந்த நிலையிலே, உயிரற்ற நிலையிலே கிடந்திருக்கிறது. அதன் பின்னர் அவர்களெல்லாம், சிறுத்தைப் புலி தாக்கிவிட்டது என்று சொல்லி, அங்கே மறியல் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் தொலைபேசியிலே தொடர்புகொண்டு அவர்களோடு பேசி, அவர்களைச் சமாதானம் செய்தவுடன், 12 மணியளவில் மருத்துவரிடம் பரிசோதனைக்காக உடல் அனுப்பப்பட்டு, பரிசோதனை முடிக்கப்பட்டு, அன்றே அவர்களுக்கு முதல் தவணை இழப்பீடு--இதுபோன்ற உயிரிழப்புகள் ஏற்படுவதை யாரும் விரும்பவில்லை--ஆனால் ஏற்பட்டதற்கு உடனடியாக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்த நிதியிலிருந்து 25,000 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. அன்று மாலையே, 6-4-2008 அன்று மாலையே அங்கே ஒரு கூண்டு அமைக்கப்பட்டு, சிறுத்தைப் புலியின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம், ஆடு, கோழி, நாய். சிறுத்தைப் புலிக்கு நாய் என்றால் மிகவும் பிரியம். எனவே, அதைப்போன்ற பிராணிகளை அங்கு வளர்க்கின்ற காரணத்தால் அவற்றை நாடி, அந்தச் சிறுத்தைப் புலிகள் வெளியே வருகின்றன. அதையெல்லாம் தடுப்பதற்காக, அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியிலே அனலி எஸ்டேட் பகுதியிலே ஒரு கூண்டு உடனடியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற இடங்களுக்கும் தேவைப்படுகின்ற அந்தக் கூண்டுகளை அதிக அளவிலே வைத்து, அதன் பின்னர், இனி கூண்டுகளில் பிடித்தால், விதி எப்படியிருந்தாலும்கூட, பிடிபடுகின்ற அந்தச் சிறுத்தைப் புலிகளை இனி அடர்ந்த காட்டுப் பகுதியிலே விட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்று கேட்டால், 25-3-2008-லேயும் ஒரு புலியை நாங்கள் நல்லமலை எஸ்டேட் பக்கத்திலே பிடித்து, அதை ஆனைக்குத்தி என்ற அடர்ந்த காட்டுப் பகுதியிலே விட்டிருக்கிறோம். எனவே, இனி அதைப்போன்று செய்ய வேண்டாம்; வண்டலூரில் இருக்கின்ற அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு அதைக் கொண்டு செல்லுங்கள் என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இரவு நேரங்களில் சிறுத்தைப் புலிகள் அங்கே வராமல் இருப்பதற்காக, இரவு நேரங்களில் அவை வருவதைத் தடுப்பதற்காக, எங்களுடைய களப் பணியாளர்கள், வேட்டைத் தடுப்புக் காவல் பணியாளர்கள், தண்டோராமூலம் சத்தம் எழுப்பி, அவை





வருவதைத் தடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் இரவு நேரத்தில் வெளியே வராமல் இருக்க அறிவுரையும் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, ஆடு, கோழி, நாய்களை வளர்ப்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கப்பட்டு, அந்த மக்கள் பாதுகாப்பாக இருக்கின்ற நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அமைச்சர் அவர்கள் எல்லாத் தகவலையும் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) போதும்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, ஒரேயொரு தகவல் சொல்ல வேண்டும். ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் வைத்த கோரிக்கை, 20 நிரந்தரமான கூண்டுகளை வைக்க வேண்டுமென்பது. வால்பாறையைச் சுற்றி 20 கூண்டுகள் வைக்க வேண்டுமென்று கேட்டேன். விதியைத் தளர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து--ஏனென்றால் எனக்கு ஓட்டுப் போட்ட மக்கள், அந்த மக்களுடைய குடும்பம் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக--நான் வேண்டுமானால் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து i0 இலட்சம் ரூபாயைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அதை அரசு ஏற்றுக்கொண்டு, நிரந்தரமாக அங்கே கூண்டுகளை அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்வதோடு, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 3 சிறுத்தைப் புலிகள் கொன்று, 3 குழந்தைகள் இறந்திருக்கின்றன. யானைகள் மிதித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், ஏற்கெனவே நீங்கள் விவரமாகப் பேசிவீட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தங்கம் அவர்கள் தன்னுடைய நிதியாக 10 இலட்சம் ரூபாய் கொடுத்தால், நிச்சயமாகக் கூண்டுகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்குத் தங்கக் கூண்டுகள் என்றே பெயர் வைக்கப்படும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், என்ன?

*முற்பகல் 10-55*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, நான் கேட்டுக்கொண்ட இரண்டு லிட்டர் சீமெண்ணெயைத் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாநில அரசு ரூபாய் 25,000/- வழங்குகிறது; மத்திய அரசு ரூ.75,000/- வழங்குகிறது; மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.25,000/-ஐச் சேர்த்து, 50 ஆயிரம் ரூபாயாகவும், மத்திய அரசிடம் கேட்டு ஒரு இலட்சம் ரூபாயாகவும் பெற்றுத் தாவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒரு குழந்தையினுடைய சாவு சிறுத்தைப் புலியினால் ஏற்பட்டிருப்பது உள்ளபடியே வேதனையானது. தாய் முன்னே நடந்து வர, பின்னே வந்த குழந்தை சிறுத்தைப் புலிக்கு இரையானது என்ற செய்தி உள்ளபடியே சிந்தையைக் கலக்கக்கூடியது. அதற்காக நாம் செலுத்துகின்ற அந்த அனுதாபத்தின் அடையாளமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் குடும்ப நிதியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### அரக்கோணம், ஜே.பி.எஸ். மழலையர் ஆசிரியர் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் விண்டர்பேட்டையில் ஜே.பி.எஸ். ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுவதால், அங்கு பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

"வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் ஜே.பி.எஸ். மழலையர் ஆசிரியர் பள்ளி (Pre-Primary Teacher Training Course) திரு. பாமானந்தம் என்பவரால், 2006 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இக்கல்வி நிறுவனத்தில் 172 மகளிர் மற்றும் 9 ஆண்கள், நிறுவனத்தால் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் கடந்த 10-3-2008 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் முன்னர் முற்றுகைப் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, இப்பள்ளி, வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வரால் 25-3-2008 மற்றும் 26-3-2008 ஆகிய இரண்டு நாட்கள் பார்வையிடப்பட்டது. விசாரணை மேற்கொண்டபோது, இப்பள்ளி சுமார் 700 சதுர அடி கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்ட ஒரு வீட்டில் செயல்பட்டு வந்தது என்றும், பார்வையிட்ட நாட்களில் இப்பள்ளி மூடப்பட்டிருந்ததாகவும், எண் 160, டி.வி.எஸ். காலனி, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை-600 101 என்ற முகவரியில் அலுவலகம் கொண்டுள்ள திரு. ஸ்ரீகுமார் என்பவரின் தலைமையில் ஒரு டிரஸ்ட் மூலம் தமிழகம் முழுவதும் 121 பள்ளிகளுக்கு நடத்தப்பட்ட முதலாமாண்டுத் தேர்வில் இப்பள்ளி மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. மாணவர்கள் மற்றும் பொது மக்களை மோசடி செய்தும், ஏமாற்றியும் இப்பள்ளி நடத்தப்பட்டு வந்ததாகவும், சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து ஆண்டுக்கு ரூ.15,000/-க்கும் அதிகமாகப் பணம் வசூலிக்கப்பட்டதையும் தொடர்ந்து, மாணவர்களால் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதனைத்

தொடர்ந்து, இப்பள்ளி நிருவாகிமீது இந்திய தண்டனைச் சட்டம் 420, 406 மற்றும் 506 (ii) பிரிவுகளின்கீழ் குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டு, நிருவாகியின் மகன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, ஜாமீன் பெற்றுள்ளதாகவும், பள்ளி நிருவாகி தலைமறைவாக உள்ளதால், அன்னார் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வர் தெரிவித்துள்ளார்.

திரு. ப்பி. பாமானந்தம் மற்றும் அவாது மகன் திரு. பாமன் அன்பாசு ஆகிய இரண்டு பேர்மீதும், அரக்கோணம் நகரக் காவல் நிலையத்தில், 6-3-2008 அன்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ், [இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 420, 406, 506 (ii)] முதல் தகவல் அறிக்கை (எண் 205/08) பதிவு செய்யப்பட்டுள்ளது.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7416, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதியில் வெள்ளப் பெருக்குக் காலங்களில் தாமிரபரணி ஆற்றிலிருந்து கடலுக்கு வீணாகச் செல்லும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில், ஆத்தூர் அருகில் தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7455, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7505, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் செல்கின்ற கொள்ளிடம் ஆறு மிகவும் மேடு தட்டிச் செடிகள் சூழ்ந்துள்ளதால், மழைக் காலங்களில் நீர்வரத்து அதிகமாகத் திறந்துவிடும்போது, கொள்ளிடக் கரை உடைந்து, வெள்ளம் ஏற்பட்டுச் சேதம் ஏற்படுகிறது. அதைத் தடுக்கும் வகையில், கொள்ளிடம் ஆறு தூர் வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7518, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7521, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், சுமார் 75 குளங்கள் தூர் வாராமல் பாசி படிந்து காணப்படுகின்றன; குளங்களைத் தூர் வாரிச் சுத்தப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7535, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7779, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் உள்ள சரபங்கா நதியைத் தூர் வாரி, கான்கிரீட் தளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7868, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதிக்குட்பட்ட வடவாறு தலைப்பில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால், கரைகளில் இரு பக்கமும் கான்கிரீட் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8069, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, கொப்பூர் ஊராட்சி, சின்னகனவாய் ஏரி, மானித அள்ளி ஊராட்சி, கெருகு ஏரி ஆகிய இரண்டு ஏரிகளைத் தூர் வாரிச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8128, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8167, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8368, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் மழை நீர் வடிகால்களைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8520, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, சர்க்கரை செட்டிப்பட்டி அருகில் குறுமச்சிகாடு, பன்றிக்காடுக்கிடையே சிறிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8702, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியிலுள்ள பல்வேறு பகுதிகளில் பெரியாறு பிரதானப் பாசனக் கால்வாய்கள் அமைந்துள்ளன. இவை பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவையாகும். கால்வாய்கள் செல்லும் கரையைப் பல கிராமங்களில் பாதையாகப் பயன்படுத்தி வருகின்றனர். பல கிராமங்களுக்குச் செல்லும் பிரதானப் பாதையாகவே கால்வாய்க் கரைகள் உள்ளன. எனவே, இந்தப் பாதைகளில் பொதுப் பணித் துறை அனுமதியோடு தார்ச் சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8777, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியிலுள்ள அசுவமா நதி அணைத் திட்டத்தை விரைவில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.950,54,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்கள், பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய, பெரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் விளக்கத்தை அளிக்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கென்று வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்ந்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன். நீங்கள் சுருக்கமாகப் பேசவேண்டும்.

***திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

**திரு. செ. தாமோதரன்:** பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்த, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசாம், ஒரு கோடித் தொண்டர்களின் தன்னிகரற்ற தலைவியாம், அறிவாற்றல், மன உறுதி, மனித நேயம் மிக்க தலைவியாகவும், இன்றைக்கு இந்தியாவிற்கே கலங்கரை விளக்காகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்ற தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 835 முதல் 937 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நீராதாரங்களை உருவாக்கி, விவசாயத்தைச் செழிப்படையச் செய்கின்ற துறை, பொதுப் பணித் துறை. அந்த நீரைத்தான் வேளாண்மையின் மிக முக்கிய உயிர்நாடியாக நாம் கருதுகிறோம். ஆனால், இன்றைய நிலையில் தமிழகத்திலே தண்ணீரினால் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை, எந்தக் காலத்திலும் இந்த அளவு இருந்ததில்லை என்பதே எனது கருத்தாகும். காவிரிப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. முல்லைப் பெரியாறு பிரச்சினை முடிந்தபாடில்லை. பாம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் புதுப்பிக்காமல் நிற்கிறது. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் நிறைவேற்றப்பட முடியவில்லை. எங்கள் பகுதியான ஆனைமலை ஆறு, நல்லாறு திட்டங்கள் கனவுத் திட்டமாகிவிடுமோ எனக் கவலை அளிப்பதாக உள்ளது. அவினாசி-அத்திக்கடவுத் திட்டம் என்ன ஆனதென்றே தெரியவில்லை. பாலாற்றிலே பிரச்சினை. இன்றைக்கு ஒகேனக்கல்லிலே பிரச்சினை. இதுபோல, தமிழகத்திலே இன்னும் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பிரச்சினைகளை எல்லாம் நாம் தீர்க்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இதையெல்லாம் நாம் எப்போது, எப்படித் தீர்ப்போம் என்று மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கண்ட பிரச்சினைகளையெல்லாம் முடித்தால், தமிழகத்தில் விவசாயத்திற்கு மட்டுமல்ல; குடிநீருக்கும் போதுமான தண்ணீர் நமக்குக் கிடைக்கும். அத்துடன் இப்போது மின்சாரத் தடையினால் நாம் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையை முடிக்கும்போது தமிழ்நாட்டுக்குத் தேவையான மின் உற்பத்தியும் செய்ய முடியும் என்பதை இந்த நோத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்றால், பேச்சுவார்த்தையாலும் முடியாது. நாம் பேசிப் பார்த்துவிட்டோம். மத்திய அரசை நம்பியும் எந்தவிதப் பிரயோஜனமும் கிடையாது. ஒரே வழி, நீதிமன்றம்தான். அதை அணுகி நம் உரிமையைப் பாதுகாக்கின்ற வகையிலே நடவடிக்கைகள் எடுத்து, அடுத்த தலைமுறையாவது நிம்மதியாக வாழ்கின்ற அளவிற்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிலத்தடி நீர் குறைந்து வருவது கவலையளிக்கின்ற விஷயமாகும். நிலத்தடி நீர் உயர வேண்டுமென்ற எண்ணத்திலே அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தில் வீடுகளுக்கு மட்டுமல்லாது, ஆங்காங்கே உள்ள குளம் குட்டைகள், நீர் நிலைகளெல்லாம் மாநில நிதி, நபார்டு வங்கியினுடைய நிதி, உலக வங்கி நிதியுதவியுடன் தூர் வாரப்பட்டு பாதுகாக்கப்பட்டன.



அதனால் நிலத்தடி நீர் சற்று உயர்ந்தது. அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து, இந்த அரசும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள விவசாயிகள் வறட்சியாலும் பாதிக்கப்படுகின்றார்கள்; பெருமழை வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்றார்கள். இதற்காக அரசு அவ்வப்போது நிறைய நிதியை வழங்கி, பல கோடிக்கணக்கான நிதியைச் செலவு செய்கிறது. மத்திய அரசை நாம் அவ்வப்போது கையேந்துகின்ற சூழ்நிலையில் இருக்கின்றோம். பெருவெள்ளம் ஏற்படும்போதும், சேதம் ஏற்படும்போதும், வெள்ள நீர் பக்கத்து மாநிலத்திற்குச் செல்வதுடன், கடலிலேகூட பல கன அடி நீர் கலந்து வீணாகிறது. இந்தச் சிரமத்தைப் போக்குகின்ற வகையில், அரசு தனியாக ஒரு திட்டத்தைப் போட்டு, தமிழகத்திலுள்ள சிற்றோடைகள் முதல் பெரிய ஆறுகள் வரை முக்கியப் பகுதிகளில் ஆங்காங்கே நிறைய தடுப்பணைகளைக் கட்ட வேண்டும். அப்படிச் செய்தால் வெள்ளச் சேதம் குறைவதுடன் நிலத்தடி நீரும் உயரும்; வறட்சி நிலையையும் போக்க முடியும் என்பதை இந்த நோத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், இங்கே நமது ஆறுகளில் மணல், கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். முன்பு அம்மா அவர்கள் ஆட்சியிலே குறைந்த விலையில் மணல் கிடைத்தது. இன்றைக்கு மணல் விலை அதிகமாகி இருக்கிறது. அந்த விலையைக் குறைப்பதுடன், சில இடங்களிலே ஆற்றிலே அதிகமான ஆழத்திலே மணலை அள்ளுகிறார்கள். அப்படி அதிகமான ஆழத்திலே மணல் எடுக்கும்போது நிலத்தடி நீர் பாதிக்கின்ற அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால், அரசு நிர்ணயிக்கின்ற அந்த அளவிற்கு மணலை எடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

தோல் கழிவு மற்றும் சாயக் கழிவுகளினால் நொய்யல் மற்றும் பவானி ஆறுகள் மாசுபடுகின்றன. அதைத் தடுக்கின்ற வகையிலே விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு நோய் ஏற்படுவதுடன்; அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொடர்ந்து அங்கு குடியிருக்க முடியுமா என்ற கேள்விக்குறியும் எழுந்திருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று இந்த நோத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியினுடைய விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கின்ற பெரும் வரப்பிரசாதம் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம். இந்தத் திட்டத்திலே இதயமாக விளங்குகின்ற காண்டூர் கால்வாய்ப் பகுதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டு, 40 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கால்வாய்மூலமாக வருகின்ற நீரைக் கொண்டு, சர்கார்பதி என்ற இடத்தில் உள்ள power house-இல் 30 மெகா வாட் மின்சாரம் எடுக்கப்பட்டு, அதற்குப் பின்பு 1,150 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு, அப்படி வெளியேறுகின்ற தண்ணீர், காண்டூர் கால்வாய் வழியாக சுமார் 49 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருமூர்த்தி அணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்தக் கால்வாயில் ஆங்காங்கே இயற்கையாகவும், செயற்கையாகவும் ஏற்பட்டுள்ள உடைப்பினால் நீர்க் கசிவு ஏற்படுகிறது. அங்கே power house-லிருந்து வெளியேறும்போது, 1,150 கன அடி தண்ணீராக வெளியேறுகிறது. ஆனால், 49 கிலோ மீட்டர் தள்ளி அணையில் சேரும்போது, 800 கன அடி தண்ணீர்தான் அணைக்குச் சேருகிறது. 350 கன அடி தண்ணீர் நீர்க் கசிவினால் சேதம் அடைகிறது. இதை வருடந்தோறும் கணக்கிட்டால் கிட்டத்தட்ட 4 டி.எம்.சி. நீர் சேதமடைவதாகத் தெரிய வருகிறது. இதனால் திருமூர்த்திப் பாசனத்தில் உள்ள பாசன விவசாயிகள் பாதிக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும், இந்த நீர்க் கசிவைச் சரி செய்கிறோம் என்று பல இலட்சக்கணக்கான ரூபாய் கால்வாய்ப் பராமரிப்புக்காக எடுக்கப்படுகிறது. ஆனால் நீர்க் கசிவு சரி செய்யப்படுவதில்லை. இந்த நீர்க் கசிவைத் தடுக்க நிரந்தரமாகத் தீர்வு காண வேண்டுமென்றால், 49 கிலோ மீட்டர் தூரத்திற்கும் கம்பி கட்டி கான்கிரீட் போட வேண்டும். அரசு செலவு செய்ய சிரமம் என்றால், நாம் B.O.T. திட்டத்திலே மற்ற பொதுப் பணித் துறை வேலைகளை எல்லாம் செய்து வருகிறோமே, அதேபோல இந்தத் திட்டத்தையும் தனியார் கம்பெனிக்குக் கொடுத்தால் குறைந்த செலவிலே, சேதம் இல்லாமல் அணைக்கு நீரைக் கொண்டு வந்து சேர்க்க முடியும். இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் நீர் கிடைப்பது அரிது. அதைச் சேதம் இல்லாமல் விவசாயத்திற்குக் கொடுப்பது அரசின் கடமையாகும். ஆனால் திருமூர்த்தி அணையிலிருந்து ஒரு சில நேரங்களில், ஒரு சிலரின் சுய நலத்திற்காகக் குடிநீர் என்ற போர்வையில், ஆற்றிலே நீரைத் திறந்து விடுகிறார்கள். இதனால், ஆற்றின் குறுக்கே வசதி படைத்த சில விவசாயிகள், அவர்களது பூமிக்கு அருகே பெரிய, பெரிய



தடுப்பணைகளைக் கட்டி வைத்துள்ளார்கள். அதை நிரப்பி அவர்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும். அப்படி மாற்ற வேண்டுமென்றால் இதற்கு நிரந்தரத் தீர்வாக அணையின் முழுக் கட்டுப்பாட்டையும் பாசன சபைகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம், நீர்த்தேக்கம்மூலம் பாசனம், ஆழ்குழாய்க் கிணற்றுப் பாசனம் மற்றும் திறந்தவெளி கிணற்றுப் பாசனம் போன்றவற்றினால் தமிழகத்திலுள்ள பாசனப் பரப்பு, கிட்டத்தட்ட 36 சதவீதம் என்று தெரிய வருகிறது. 64 சதவீத நிலம், இன்னும் வானம் பார்த்த பூமியாகத்தான் உள்ளது. பாசனப் பரப்பை விரிவுபடுத்த வேண்டியது, வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அரசினுடைய முக்கியக் கடமையாகும். அதன்படி, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலே, அணையிலிருந்து பல 100 கிலோ மீட்டர் தூரம் சென்று, பூமி ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு, தண்ணீர் பாய்ந்து வருகிறது. ஆனால், அணைக்கு 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எனது கிணத்துக்கடவு தொகுதியின் ஒரு பகுதியில் இந்தப் பாசனத் திட்டம் விடுபட்டுள்ளது. அந்தப் பகுதியைப் பாசனப் விரிவாக்கத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், இந்த P.A.P. திட்டத்தில் 3 இலட்சத்து 78 ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் தற்போது பாசனம் பெறுகின்ற விவசாயிகளும், அரசும் இதுபற்றி நீதிமன்றத்தில் ஒரு முடிவு எடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றால், ஆனைமலை ஆறு, நல்லாறு திட்டங்கள் முடிய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது இப்போது முடியாது. ஏன், நடக்காத காரியமும்கூட ஆகும். எனவே, எங்களுடைய பகுதியின் விவசாயிகளுடைய கோரிக்கை எல்லாம், தற்போது P.A.P. திட்டத்தில் பாசனம் பெற்று வருகின்ற பகுதிகளில் சில இடங்களில் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது; சில இடங்கள் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன; சில இடங்கள் பெரிய தொழிற்சாலைகளாக உருவாகி உள்ளன; சில இடங்கள் மேட்டுப்பாங்கான பகுதிகளாக உள்ளதால், அந்த நீரையும் மற்றவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள்;

இதற்கெல்லாம் ஒரு குழுவை அமைத்து, அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டுக் கணக்கெடுத்தால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை இந்தப் பாசனத் திட்டத்திலிருந்து விடுவிக்கலாம். மேற்கண்ட பூமிகளைப் பாசனத் திட்டத்திலிருந்து விடுவிக்க விவசாயிகளும்

தயாராக உள்ளனர். ஆனால், அப்படி விடுவித்தால், அவர்கள் பூமிக்கு, வெட்டிய கால்வாய்களுக்கு அரசு நஷ்ட ஈடு கேட்குமென்று நினைக்கின்றனர். ஆகவே, அரசு இதுபற்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு எந்தவிதமான இழப்பீடும் ஏற்படாமல், மேற்கண்ட பூமிகளைப் பாசனத் திட்டத்திலிருந்து நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படி எவ்வளவு ஏக்கர் பூமி இந்தப் பாசனத் திட்டத்திலிருந்து நீக்கப்படுகிறதோ, அவ்வளவையும், எனது தொகுதியில் வானம் பார்த்த பூமியாகவும், நல்ல விளை நிலமாகவும் உள்ள வடசித்தூரிலிருந்து வீரப்பகவுண்டனூருக்கு இடைப்பட்ட பூமிகளையும், கோவில் பாளையத்திலிருந்து நாகூர் வரையிலுள்ள இடைப்பட்ட பூமிகளையும் பாசன விரிவாக்கத் திட்டத்தில் சேர்த்து, அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதிக மழை உள்ள காலங்களில், ஆழியாறு அணையிலிருந்து அதிகமான மழை நீர், ஆறு வழியாக கேரள மாநிலத்திற்குச் சென்றுவிடுகிறது. இந்த நீரை அவர்கள், நாம் அவர்களுக்குக் கொடுக்கின்ற நீரின் கணக்கில் வைத்துக்கொள்வது கிடையாது. எனவே, அந்த ஆற்றின் குறுக்கே இரண்டு பெரிய அணைகளைக் கட்டி, நீரைத் தேக்கினால், மழைக் காலங்களில் வருகின்ற நீரை நாம் தேக்கி வைக்க முடியும். அதோடுமட்டுமல்லாமல், கேரள மாநிலத்தில் செய்வதுபோல், lift irrigationமூலம், நாம் கட்டுகின்ற அணையிலிருந்து பாசனத்திற்கு நீரைக் கொடுத்தால், நிறையப் பகுதிகள் பாசன வசதியைப் பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதையும் இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த ஆற்றுப் பகுதியின் அருகில் மின் மோட்டார்களை வைத்து நீண்ட காலமாக சில விவசாயிகள் இறைவைப் பாசனம் செய்து வருகிறார்கள். அதில் அவர்களுக்கு நிறையப் பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படுகின்றன. எனவே, ஒரு சட்டம் இயற்றி அதை வரைமுறைப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றிய கருத்துருக்களை அரசுக்கு விவசாயிகளும், அதிகாரிகளும் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது கிணத்துக்கடவு தொகுதியில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இரண்டு குளங்கள் உள்ளன. ஒன்று, கோதவாடிக் குளம்.



மற்றொன்று, தேவம்பாடிவலசுக் குளம். இரண்டு குளங்களும் பெரிய குளங்களாகும். மேற்கண்ட இரண்டு குளங்களையும் தூர் வாரிக் கொடுக்க வேண்டும். அத்துடன், அவற்றிற்கு அருகில் செல்கின்ற P.A.P. கால்வாயிலிருந்து, அந்த இரண்டு குளங்களுக்கும் தனிக் கால்வாய் ஒன்றை அமைத்துக் கொடுத்து, திருமூர்த்தி அணையில் தண்ணீர் அதிகமாக உள்ள நேரங்களில், இரண்டு குளங்களுக்கும் அவ்வப்போது தண்ணீரை நிரப்பித் தந்தால், குளங்கள் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்வதுடன், அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்ச் சாகுபடிக்கும் உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர்களின் ஒவ்வொரு தொகுதிக்கும் இரண்டு குளங்கள் என்று அறிவித்தீர்கள். என்னுடைய தொகுதிக்கு அது கிடைக்கவில்லை. அதனால் அதையும் கவனத்தில் கொண்டு, இந்த ஆண்டு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தற்போது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடக் கூடாது என்று இருந்தேன். யார், யார் எழுதிக் கொடுத்தார்களோ, அவர்களுக்கெல்லாம் குளங்களைத் தந்திருக்கிறோம். நான் இரண்டு முறை கடிதங்கூட போட்டேன்; தங்களிடமிருந்து பதிலேதும் வரவில்லையென்று போட்டேன். அதற்குப் பின்னர், சில பேர் கொடுத்திருக்கிறார்கள். சில பேர் கொடுக்கவில்லை. கொடுக்காதவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்பதல்ல. கொடுத்தால் இப்பொழுதும் கொடுக்கத் தயார்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையே என்னுடைய கோரிக்கையாக வைத்து, தாங்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தற்போது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடேங்கப்பா! இதை எழுதிக் கொடுத்தால்தான் என்ன போய்விடும்? (சிரிப்பு)

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது P.A.P. திட்டத்தில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம், 1,000 ஏக்கர் என்றிருப்பதை 400 ஏக்கர் என்று மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆழியாறு அணையிலிருந்து தண்ணீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையில், 4½ மாதங்கள் என்றிருக்கிறது. 4½ மாதங்களுக்கான தண்ணீரையே 9 மாதங்களுக்குப் பிரித்துப் பாய்ச்சிக்கொள்கிறோம்; அது எங்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். விவசாயிகள் அதை அமைச்சர் அவர்களிடமும் நேரடியாகக் கூறியிருக்கிறார்கள். அரசுக்கும் கோப்புகள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் தண்ணீர்த் தீர்வையைப் பயிர்வாரியாக விதித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை ஏக்கர்வாரித் தீர்வையாக விதிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், கால்வாய்ப் பராமரிப்பிற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ.100 வழங்கப்பட்டது. அதைத் தற்போது வழங்குவதாக இல்லை. அதை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

Additional Water Cess என V.A.O. அவர்களால் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கின்ற தொகையை விகிதாச்சாரப்படி பாசனச் சங்கங்களுக்குப் பிரித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன சபையின் தேர்தல்கள், அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2004-ல் நடத்தப்பட்டன. ஆனால், இந்த அரசு மேல்மட்டத் தேர்தலை இன்னும் நடத்தாமல் இருக்கிறது. அதை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்கள் தற்போது நிலவள, நீர்வளத் திட்டத்தில் புதுப்பிக்கப்பட்டு, சில பகுதிகளில் வேலை நடைபெற்று வருகிறது. அந்த வேலைகள் தரமாக இல்லையென்று சொல்கிறார்கள். அதனால், அந்தந்தப் பகுதியில் உள்ள பாசன சபைகள் அந்த வேலையின் தரத்தை நிர்ணயம் செய்தபின், அவர்களுக்கு bill தொகையை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



அணையைப் பாதுகாப்பதற்கும், வெள்ளப் பெருக்கின்போது அணையில் இருக்கும்பொருட்டும், இளம் பொறியாளர்கள், Work Inspector-கள், லஸ்கர் போன்றவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நீர்நிலைகள் மற்றும் பாசனக் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றும், பாசன விவசாயிகளுக்கும், பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க, மாதம் ஒரு முறையாவது பாசன விவசாயிகளின் குறையைத் தீர்க்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நீர்நிலைகள், குட்டைகள், குளங்களைத் தூர் வாரும்போது நீர்வாத்துக் கால்வாய்களையும் தூர் வாரவேண்டும். அதற்கு அரசு நிதி ஒதுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தாவது அதைச் செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கடந்த அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அம்பராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாகக் குடிநீர் வினியோகம் சீராகச் செய்யப்பட்டு வந்தது. ஆனால், அந்தத் திட்டத்தில் தற்பொழுது தண்ணீர் வருவது கிடையாது. 15 நாட்கள் அல்லது 30 நாட்களுக்கு மேல்தான் குடிநீர் கிடைக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. Time ஆகிவிட்டது. 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) பிரச்சினை இல்லாமல் பேசினீர்கள். நிரம்ப நன்றாக இருந்தது. (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன். (குறுக்கீடு)

**திரு. செ. தாமோதரன்:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பிரச்சினையில்லாமல் பேசுகிறீர்கள்; அப்படியே பேசி முடியுங்கள்.

**திரு. செ. தாமோதரன்:** இதனால், எனது தொகுதியில் பொதுமக்கள் ஆங்காங்கே உள்ள பஞ்சாயத்து அலுவலகங்கள் முன்பும், பேரூராட்சி அலுவலகங்களுக்கு முன்பும் குடத்துடன் படையெடுக்கிறார்கள். நாங்கள் பல முறை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளிடம்

பேசிவிட்டோம். இதுபற்றி எல்லா ஊராட்சிகளுக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். மின்சாரம் அடிக்கடித் தடைப்படுவதால்தான், குடிநீர் சீராக வழங்க முடியவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அதனால், இதைக் கவனத்தில் கொண்டு எனது தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே, நீருந்து நிலையத்திலே ஜெனரேட்டர் பொருத்தி, உடனடியாகக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடங்களைப் பொறுத்தவரை, நிறைய பள்ளிக் கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றன. அதற்கு முன்னுரிமை கொடுத்து பராமரிப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெரிய நெகமம் என்ற கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. அது பழமையான கட்டடமாகும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துறைக்குச் சம்பந்தமில்லாததைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. செ. தாமோதரன்:** ஒரே ஒரு கோரிக்கை. ஒன்றுதான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அந்தக் கட்டடம் இடிந்து பழுதடைந்து கிடக்கிறது. அந்தக் கட்டடம் இடிந்த பிறகு, பள்ளியையே காலி செய்துவிட்டு அருகில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பாடம் நடத்துகின்றனர். அதில் காலையில் ஒரு பள்ளியும், மாலையில் ஒரு பள்ளியுமாக இரண்டு பள்ளிக்கூடங்களும் ஒரே கட்டடத்தில் நடைபெற்று வருகின்றன. எனவே, அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். இந்த ஆண்டே ஒரு சிறப்பு நிதியை ஒதுக்கி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண, நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும், ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாகவும் பணியாற்றுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கிட்ட, தமிழுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்கின்ற, ஒய்வற்ற சூரியனாக உழைத்துக்கொண்டிருக்கின்ற நமது ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத்



தட்டும் ஒலி) இன உணர்வை ஊட்டி, இந்த இயக்கத்தைக் காக்கின்ற பணியிலே அயராது பணியாற்றிக்கொண்டிருக்கின்ற இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற, உள்ளாட்சியிலே ஒரு நல்லாட்சி நடத்தி, பாளையங்கோட்டையிலே 4 இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர்களைக் கூட்டி, மிகப் பெரிய ஒரு மாநாட்டினை நடத்தி, வரலாற்றுச் சிறப்புப் பெற்ற தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அருளாளர் ஆற்காட்டார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற நல்ல வாய்ப்பினை வழங்கியதற்கு தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம்; அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. தாமோதரன் எந்த interruption-ம் இல்லாமல், அமைதியாக, அழகாகப் பேசினார். நீங்களும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சேகரன், பேசுங்கள்.

**திரு. கூ.ந. சேகரன்:** கலைஞர் அறிவாலயம் அமைத்து, ஒரு சாதனை படைத்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த 150-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற மிகத் தொன்மையான இந்தப் பொதுப் பணித் துறையிலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கியதற்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் பொதுப் பணித் துறைக்குப் பொறுப்பேற்று, பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்தத் துறையிலே புகுத்தி, சாதனை படைத்தார்கள். எங்களுக்கெல்லாம் ஓர் ஆசை. தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, எப்படி இந்தத் தமிழ்நாட்டிலேயுள்ள ஏரி, குளங்கள் அனைத்தும் பராமரிக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையிலே இருந்தனவோ, அதேபோன்று, மீண்டும் அந்த ஏரிகள் எல்லாம், இப்போது ஐந்தாவது முறையாக டாக்டர்

கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்றபோதும், அதே நிலையிலே, அந்த ஏரிகளை எல்லாம் தூய்மையாகத் தூர் வாரி, அவற்றின் நீர்க் கொள்ளளவினை, முழுக் கொள்ளளவினை எட்டுவதற்கான நடவடிக்கையினை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள், காவிரியிலும் பிரச்சினை, முல்லைப் பெரியாறிலும் பிரச்சினை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் பிரச்சினை என்று பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், இது செயல்படுகின்ற அரசு; நல்ல அரசு. அதாவது, காய்க்கின்ற மாம்தான் கல்லடிபடும் என்பார்கள். ஆகவே, இதுவரை எத்தனையோ அரசுகள் இருந்தாலும்கூட, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் வழங்குகின்ற அந்தத் திட்டத்தை எந்த அரசும் செயல்படுத்த முன்வரவில்லை. ஆனால், உள்ளாட்சித் துறை அமைச்சராக அருமை அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இதிலே விரைந்து அந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் கருதி, ஜப்பான் சென்று நிதியுதவியினைப் பெற்று, அந்தத் திட்டத்தைத் தொடங்கினார்கள். எப்போதுமே ஒரு திட்டம் தொடங்குகின்றபோது பல்வேறு தடைகள் எல்லாம் வரத்தான் செய்யும். ஆனாலும் ஒன்று. இந்த அரசு, எத்துணை தடைகள் வந்தாலும், அந்தத் தடைகளையெல்லாம் அகற்றிவிட்டு, அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதிலே உறுதியாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகரன், நீங்கள் நேராகத் தொகுதிக்குப் போவது நல்லது. ஏனென்றால் நேரம் அந்த அளவிற்குத்தான் நாங்கள் வைத்திருக்கிறோம். அப்படியே திருவெறும்பூருக்குப் போய்விடுங்கள்.

**திரு. கூ.ந. சேகரன்**: மிகவும் நன்றி. உய்யக்கொண்டான் கால்வாய் என்பது, எனது திருச்சி தாலுகாவில் இருக்கின்ற மிக முக்கியமான பிரதானக் கால்வாய். அந்தக் கால்வாய், கட்டளைப் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு, தென்கரை வாய்க்காலாகவும், அதேபோன்று, பேட்டைவாய்த்தலையிலிருந்து வாழவந்தான்கோட்டை வரை 38 மைல்



நீளத்திற்கு உய்யக்கொண்டான் கால்வாய் என்கின்ற அந்தப் பெயரிலே அந்தக் கால்வாய் செல்கிறது. எனது தொகுதியிலே எல்லா நிலங்களுக்கும் சென்று, அதாவது 32,000 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களிலே பயிரிடப்பட்டிருக்கின்ற நெற்பயிர், வாழைபோன்ற அனைத்திற்குமே அந்தக் கால்வாய்தான் பாசனம் அளிக்கிறது. அந்தக் கால்வாயைப் பொறுத்தவரையிலே திருச்சி மாநகரத்திற்குள் வருகிறபோது அங்கே திருச்சி மாநகரத்தினுடைய கழிவுகள் எல்லாம் அந்தக் கால்வாயிலே கலக்கின்ற காரணத்தினாலும், இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், பிளாஸ்டிக் கழிவுகள் அந்தக் கால்வாயில் கலக்கின்றன; அது மட்டுமல்லாமல், அந்த மாநகராட்சியிலே இருக்கின்ற குப்பைகளும் அதிலே கொட்டப்படுகின்ற காரணத்தினாலும், பாசன நேரங்களிலே அந்த நீரை எடுத்துச் செல்கின்றபோது, தடையில்லாமல் நீர் செல்லும் வகையில் அதைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அதிலேயிருக்கின்ற அந்த மதகுகள் எல்லாம் தற்சமயம் ஷட்டர்கள் இல்லாமல் இருக்கின்றன. அந்த ஷட்டர்களையெல்லாம் அமைத்து, ஒவ்வோர் ஆண்டும் அதைத் தூர் வாரி, அந்தக் கடைமடைப் பகுதியிலே இருக்கின்ற வாழவந்தான்கோட்டை, இன்னும் சொல்லப் போனால், திருவையாறு தொகுதியிலே இருக்கின்ற சில பகுதிகளுக்கும், திருவையாறு தொகுதியிலே இருக்கின்ற பூதலூர் பகுதிக்கும் அந்தக் கால்வாய்மூலமாக நீர் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தூர் வாருகிற வேலையை நாங்கள் செய்கிறோம். ஆனால், அந்தக் கால்வாயில் குப்பையைக் கொட்டுவதைப் பொறுத்தவரையில் அதை நீங்கள் செய்யாமல் இருக்க வேண்டும். நாங்களே போய், கால்வாயிலே கொட்டாமல் பார்த்துக்கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் அவரவர்களின் தொகுதியிலே அப்படிச் செய்யாமல் நீங்கள்தான் முற்பட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். கொட்டுகிறார்கள் என்று இங்கே சொன்னால் என்ன செய்ய முடியும்? உங்களது மனக் குமுறல்களைக் கொட்டுகிறீர்கள்; அவ்வளவுதான். நாங்கள் தூர் வாரித் தருகிறோம்; அப்படித் தூர் வாரிக் கொடுத்தவுடன், மறுபடியும் கொட்டுகிறீர்கள்! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** நாங்கள் அப்படிக் கொட்டாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எல்லாம் அந்த மாநகராட்சிமூலம் எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நோத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தக் கால்வாய், இன்னும் சொல்லப் போனால், மழை குறைவாகப் பெய்கிறபோது நாற்றுவிடுகிற காலத்திலே, அந்தக் கடைமடைப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள், எங்களுக்கு அதிக நீர் திறந்துவிட வேண்டும் என்று சொல்லி, நாங்கள் எல்லாம் நமது பொதுப் பணித் துறை அதிகாரிகளிடத்திலே சொல்லி, நீரை அதிகமாகத் திறப்பதற்குரிய ஏற்பாடு செய்கிறபோது, இந்த நீர், அந்த மாநகராட்சிப் பகுதியிலே தேக்கப்படுவதால், தடை ஏற்படுகின்ற காரணத்தினால், அந்தப் பகுதிகளிலே, வடிகால் பகுதிகளிலே, சாக்கடைப் பகுதிகளிலே சென்று, அந்தக் குடியிருப்புப் பகுதிகளிலே செயற்கையாக வெள்ளம் உருவாகின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. அதிகமாகத் திறக்கப்படுகிறபோது, குடியிருப்புப் பகுதிகளிலே நீர் வருவதாகச் சொல்லி, நீரைக் குறைக்க வேண்டும்; அளவைக் குறைக்க வேண்டும் என்று அரியமங்கலம் போன்ற மாநகராட்சிப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் குரல் கொடுக்கிறார்கள். கடைமடைப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், எங்களுக்கு நீர் போதவில்லை; அதிகமாக நீரைத் திறந்துவிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு வசதியாக, உடனடியாக, ஒவ்வோர் ஆண்டும் அதில் இருக்கிற ஆகாயத் தாமரை உள்ளிட்ட நீர்த் தாவரங்கள், குப்பைகள், இவற்றையெல்லாம் அகற்றி, ஒவ்வோர் ஆண்டும் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று அந்த மதகுகளையெல்லாம் செப்பனிட்டு, எல்லா மதகுகளிலும் ஷட்டர்களை அமைத்து, கடைமடைப் பகுதிகளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

இதுவொரு தொன்மையான துறை; மிகப் பழமை வாய்ந்த துறை. என்னுடைய தொகுதியிலே பன்னெடுங்காலமாக வேங்கூர் போன்ற பகுதிகளிலே வெள்ளப் பெருக்கு ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் பகுதியிலே மழை பெய்கிறபோது, அந்த நீர் எல்லாம் உப்புவாரி வழியாக திருவெறும்பூர், வேங்கூர் பகுதிகளிலே செல்கின்ற குவளை வாய்க்கால் வழியாக, கல்லணை அணைக்குள் சென்று, அந்தக் குவளை வாய்க்கால் நீரானது வடிகிறது. இப்படி வடிகின்றபோது, காவிரியிலே நீர் அதிகமாக வருகின்றபோது, அந்தக் கல்லணை அணைக்குள் விடப்பட்ட இந்தக் குவளை வாய்க்காலினுடைய நீரை, அந்தக் காவிரி நீர் எதிர்த்து, அதில் தடை ஏற்படுத்தி, அதை உள்வாங்காத காரணத்தால், அந்த நீரானது எதிர்த்துச் சென்று, வேங்கூர், அரசங்குடி, திருவெறும்பூர் போன்ற பகுதிகளிலே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, அங்கே பயிர்ச் சேதங்களும், குடியிருப்புகளில் புகுந்து மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது; சேதத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்து, அரசங்குடி, நடராஜபுரம் போன்ற பகுதிகளில் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கு நீர், நேரடியாகக் கல்லணைக் கால்வாயிலும், ஒரு பகுதி நீர் கல்லணைக் கால்வாய்க்குக் கீழே syphon அமைத்து, பாதாள வடிகால் அமைத்து, அதை வெண்ணாற்றிலும், இன்னொரு பகுதி நீர் கல்லணை வாய்க்காலுக்குக் கீழும், வெண்ணாற்றுக்குக் கீழும் syphon அமைத்து, காவிரி நீர் வடிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அது போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால், அந்த நீர் வடியாத காரணத்தால், அந்தப் பகுதியிலும் வெள்ளத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினைகளை எல்லாம், கல்லணைக் கால்வாய் உருவாக்கப்படுவதற்கு முன்பாக, அமைக்கப்படுவதற்கு முன்பாக, இந்தக் குவளை வாய்க்கால் என்பது, நேரடியாக வெண்ணாற்றில், கல்லணைக்கு வெளியில் இந்தக் கால்வாய் சென்ற காரணத்தால், அப்போது அந்த நீர் வெண்ணாற்றிலே உள்வாங்கப்பட்ட காரணத்தால் எங்கள் பகுதிகளில் எல்லாம் அப்போது வெள்ளப் பெருக்கு ஏற்படாமலும், பயிர்ச் சேதம் ஏற்படாமலும் இருந்தது. அந்தக் கல்லணைக் கால்வாய் அமைக்கப்பட்டதற்குப் பிறகுதான் இதுபோன்ற பிரச்சினைகள் தொடர்ந்து இந்தப் பகுதியிலே ஏற்பட்டு, இந்தப் பகுதி மக்களுக்கு மிகப் பெரிய சேதத்தை, விவசாயப் பயிர்களுக்குச் சேதத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின்போது, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தப் பகுதிக்கு வந்து, வெள்ளச் சேதப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறி, இந்த ஆண்டு வெள்ளத் தடுப்புப் பணிகளை விரைவாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்கிற உறுதியை நமது

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்; அந்தப் பகுதி மக்கள் அதை எதிர்நோக்கி, இதற்குத் தீர்வு ஏற்படாதா என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்குமே கடந்த ஆண்டு இரண்டு ஏரிகளைத் தூர் வாருவதற்காகக் கொடுத்தார்கள். அந்தத் திட்டம் சிறப்பாக இருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், இன்னும் இதுபோன்று இரண்டு, இரண்டு ஏரிகளாகத் தூர் வாரிக்கொண்டிருந்தால், எங்கள் பகுதியிலே நிறைய ஏரிகள் இருக்கிற காரணத்தால், அவை அனைத்துமே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதே தூர் வாரப்பட வேண்டுமென்கிற நோக்கத்தோடு, ஒரு தொகுதிக்குக் குறைந்தபட்சம் 4 ஏரிகளையாவது (மேசையைத் தட்டும் ஒலி) தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே நீண்ட நாட்களாக ஒரு பிரச்சினை இருக்கிறது. B.H.E.L. தொழிலகம், மிகப் பெரிய தொழிலகம் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சும்மா எல்லோரும் மிரட்டாதீர்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சியினர் என்பதால் என்னை மிரட்ட முடியாது! (சிரிப்பு)

**திரு. கூ.ந. சேகரன்**: அண்மையிலேகூட அந்த B.H.E.L. தொழிலகத்தோடு மின்சாரத் துறை மின் உற்பத்திக்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக்கூட போட்டிருக்கிறார்கள். அந்த B.H.E.L.இலே 732 கோடி ரூபாயிலே விரிவாக்கப் பணிகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நீண்ட நாட்களாகப் பணி நியமனம் செய்யப்படாமல் இருந்தது. இத்தகைய மிகச் சிறப்பு வாய்ந்த அந்தத் தொழிலகத்திலே 1,400-க்கும் அதிகமான ஒப்பந்தப் பணியாளர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டு காலத்திற்கு மேலாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலகத்திலே நிரந்தரப் பணியாளர்கள், அதாவது, welder, fitter, turner போன்றவர்கள் செய்கின்ற எல்லாப் பணிகளையுமே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலுங்கூட, அந்தப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்படாத காரணத்தால், நிரந்தரப் பணியாளர்களுக்குரிய சலுகைகள், சம்பளங்கள் போன்றவையெல்லாம் வழங்கப்படவில்லை. நாங்களும், தொழிற்சங்கத் தோழர்கள் அனைவரும் அந்த நிருவாகத்தை நாடி, அவர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது,



அவர்கள், மத்திய அரசும், டெல்லியிலே இருக்கின்ற Corporation-ம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்ததால். . .

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், மத்திய அரசுக்கெல்லாம் நீங்கள் போய்விட்டு வரும்போது நேரமாகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு)

**திரு. கூ.ந. சேகரன்:** அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் அவர்களிடத்திலே வைத்திருக்கின்றோம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மின்சாரத் துறையிலே பணியாற்றுகின்ற 20 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

## 7. உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் முன்னர் விதித்த இடைக்காலத் தடை செல்லாது என, அத்தடையை நீக்கி உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை பேசுவதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டுக்கும், இந்திய நாட்டுக்கும் மகிழ்ச்சியான ஒரு செய்தி கிடைத்திருக்கின்றது. சமூக நீதியின் பிறப்பிடம் தமிழ்நாடு என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு சமீபத்திலே வெளிவந்தது ஒரு மகிழ்ச்சியான செய்தி. நடுவண் அரசினுடைய உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது கேள்விக் குறியாக இருந்தது. அந்தக் கேள்விக் குறிக்கு, திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அமைந்த ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அமர்வின்மூலம், இன்று சற்று நேரத்திற்கு முன்பு, நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. அதில், உடனடியாக, வரக்கூடிய கல்வியாண்டு முதலே அது நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியும் வெளியிடப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்திக்குக் காரணம், நம்முடைய

தமிழக அரசின் சார்பிலே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி (மேசையைத் தட்டும் ஒலி); தமிழக அரசு வழக்குத் தொடர்ந்து, அதில் வெற்றி கிடைத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், இந்திய நாட்டில் இருக்கின்ற ஓர் அரசியல் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி இதற்காகச் சிறப்பு வழக்கைத் தொடர்ந்தது. அந்த வழக்கிலேயும், தமிழக அரசு தொடுத்த வழக்கிலேயும் வெற்றி கிடைத்தது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் Judgement-ஐப் பற்றிச் சொல்லிவிட்டீர்களே?

**திரு. ஜி.கே. மணி:** நடுவண் அரசில் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில், எங்கள் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், இந்த ஆண்டே அறிவிக்கவேண்டுமென்றும், இதற்கு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பிரதமரையும், அன்னை சோனியா காந்தி அவர்களையும் வற்புறுத்தி, அதைச் செய்த பெருமை, பாட்டாளி மக்கள் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் உட்பட எல்லோருக்கும் இனிப்பு வழங்கி, மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**
**(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)** } தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வேல்துரை அவர்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு) உங்கள் கட்சிக்காரர்தான் பேசப் போகின்றார். அவர் பேசி முடிக்கட்டும். திரு. வேல்துரை, உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன. நீங்கள் நேராகத் தொகுதிப் பிரச்சினைக்குப் போய்விட வேண்டும்.



**திரு. பா. வேல்துரை:** 15 நிமிடங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியாது. நேரத்தைக் குறைத்துவிட்டோம். 10 நிமிடங்கள்தான்.

**திரு. பா. வேல்துரை:** இல்லை சார், 15 நிமிடங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை சார், 10 நிமிடங்கள்தான்.

**திரு. பா. வேல்துரை:** அப்படியென்றால் வேறு யாரையாவது பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தொகுதிபற்றிப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் என்று நேரத்தைக் குறைத்தாலும்கூட, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் ஒரு மணிக்குத்தான் பேச முடியும். இன்றைக்கு நிறையப் பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கின்றார்கள். தயவுசெய்து அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ம.தி.மு.க. உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களிடம்கூட 5 நிமிடங்கள் பேசும்படி கேட்டிருக்கின்றேன். நீங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர், எங்கள் நைனா ஆகியோருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுப் பணித் துறை என்பது எல்லா மக்களாலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு பெரிய துறை. இந்தத் துறை சுதந்திரத்திற்குப் பிறகு பெருந்தலைவர் காமராசர் அவர்களால் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டு, தமிழகத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளெல்லாம் சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழ்நாடு இப்போது சுபிட்சமான சூழ்நிலையில் விவசாயத்தில் இருக்கின்றது என்று சொன்னால், அது பெருந்தலைவர் காமராசர் அவர்களையேதான் சாரும். அவருக்குப் பிறகு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

பொதுப் பணித் துறைக்கு அமைச்சராக இருந்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகு இப்போது ஒரு திறமையான அமைச்சரைப் பொதுப் பணித் துறைக்குத் தந்திருக்கின்றார் என்று சொன்னால், உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகின்றோம்; சந்தோஷப்படுகின்றோம். நாங்கள் இன்னும் நிறைய உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

இப்பொழுது பெய்த மழை வெள்ளத்தால் தென் மாவட்டங்கள் எல்லாம் நிரம்பப் பாதிக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அதனால் விவசாயம் அழிந்துவிட்டது. விவசாயிகள் பெருமளவில் நஷ்டமடைந்திருக்கின்றார்கள். உடனடியாக நீங்கள் பழந்தொழிக்குத் தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

காவிரி டெல்டா பகுதி எப்படித் தமிழ்நாட்டினுடைய நெற்களஞ்சியமாக இருக்கிறதோ, அதேபோன்று தென் மாவட்டத்திலே தாமிரபரணி இருக்கிறது. ஆனால், தாமிரபாணிக்கு நாங்கள் எதிர்பார்த்த, நாங்கள் நினைத்த அளவிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. நிச்சயமாகக் கூடுதலாக நிதியை ஒதுக்கித் தரவேண்டும். மடைகள், மதகுகள், தூர் வாரப்படாத--நெடுங்காலமாகத் தூர் வாரப்படாத--வாத்துக் கால்வாய்கள் போன்ற கால்வாய்களெல்லாம் மராமத்து செய்யப்படவில்லை. அதற்கு நீங்கள் கூடுதலாக நிதியை ஒதுக்கி, சிறப்பான முறையிலே எங்களுக்குப் பணிகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஜம்பு நதித் திட்டம் என்று ஒன்று இதில் இருக்கிறது. ரூ. மூன்று கோடியே 61 இலட்சத்திற்குத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தெற்கு மடத்தூர், மடத்தூர், வெங்கடாம்பட்டி, ஏ.பி. நாடானூர், துப்பாக்குடி, குத்தப்பாஞ்சான் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட குளங்கள் சேர்க்கப்படவில்லை. இந்தத் திட்டம் வருவதால், தண்ணீரே பெறாத அந்தக் குளங்களுக்கு வந்து, அதுதான் எங்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற விஷயம். அந்தப் பகுதியில் இருக்கின்ற குளங்களுக்குத் தண்ணீரே கிடையாது; வெறும் மானாவாரிக் குளங்கள். இந்த வாய்ப்பை எங்களுக்குப் பயன்படுத்தித் தரவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேமாதிரி, எலுமிச்சையாறு திட்டம்; எலுமிச்சையாறு திட்டம் இதில் சொல்லப்படவேயில்லை. கடந்த 1996-இல் நான் எம்.எல்.ஏ.-வாக இருந்தபோது உங்களிடம் சொன்னேன், நீங்கள் ஆய்வு செய்தீர்கள். எல்லா ஏற்பாடும் செய்தீர்கள். அது 20 கோடி அல்லது 25 கோடி ரூபாய்தான் வரும். அது ஒன்றும் பெரிய திட்டம் இல்லை. நீங்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே வண்டல் ஓடைத் திட்டம் பண்ணியிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே வண்டல் ஓடைத் திட்டத்தைப் பெரிய அணையாகக் கட்டுவதற்குப் பதிலாக, குளமாகக் கட்டியிருக்கிறார்கள். ஒரு மழையிலேயே மறுகால் போகிறது. அந்தத் தண்ணீர் எங்களுக்குப் பிரயோஜனம் இல்லை. ஏனென்றால், அந்தத் தண்ணீரை மணிமுத்தாறு வாய்க்கால்களில் முழுமையாகவும் கொடுக்க முடியவில்லை. உங்களுக்கு எல்லா details-ம் தெரியும். அந்தத் தண்ணீரை முழுமையாகக் கொடுக்கின்ற அளவிற்கு--ஒரு 200 மீட்டர்தான் அந்த வாய்க்கால் இருக்கிறது; அந்த 200 மீட்டருக்கும் 400 கியூசெக்ஸ் தண்ணீர் அந்த வண்டல் ஓடையில் எடுக்கின்ற மாதிரி—அந்த வாய்க்காலைப் பெரிதுபடுத்தி, கூடுதலாக ஒரு மடையைக் கொடுத்து உதவவேண்டும்; மழை நேரங்களில் வீணாக ஆற்றில் போய் கடலில் கலக்கின்ற தண்ணீரை மணிமுத்தாறு வாய்க்காலில் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை மாதிரி, அந்த வாய்க்காலையும் கொஞ்சம் பெரிதுபடுத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எலுமிச்சையாறு திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தந்துவிட்டால் எங்களுக்கு மணிமுத்தாறு கால்வாய்களில் முதல் reach, 2-வது reach, 3-வது reach, 4-வது reach என்று சண்டையே இல்லாமல் போய்விடும். அந்த வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தாவேண்டும். நீங்கள்தான் செய்து தரவேண்டும். வேறு யாரும் செய்யமாட்டார்கள். உண்மையிலேயே பெருமையாகச் சொல்கின்றேன். நீங்கள் நினைத்தால் அதைச் செய்து கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, காங்கேயன் Canal பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை. அதாவது கடனா நதி திட்டத்தில் காங்கேயன் Canal-க்கு 10 கோடி ரூபாயில் cement lining போடுவதற்கு நபார்டுக்கு recommend செய்து போயிருக்கிறது. இது கிட்டத்தட்ட 4, 5 வருடங்களாக இருக்கிறது. நாம் 1996-லே இருக்கும்போதே நீங்களெல்லாம் செய்தீர்கள். இன்று வரை அதற்கு அனுமதி தரவில்லை.

நபார்டில் நிறைய பணம் வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கென்னடியன் கால்வாயில் cement lining போடுவதற்கு இன்னும் இரண்டு மற்றும் மூன்றாவது reach-களில் யாருமே டெண்டர் எடுக்கவே வரமாட்டேன் என்கிறார்கள். டெண்டர் எடுப்பதற்கே யாருமே தயாராக இல்லை. எதற்காக என்று தெரியவில்லை. ஏனென்றால் மணல் விலை கூடுதல், சிமெண்ட் விலை கூடுதல், கம்பி விலை கூடுதல் என யாருமே அந்த வேலைக்கே வாமாட்டேன் என்கிறார்கள். அதை என்ன செய்யலாம் என்று பார்த்து, ஏதாவது rate-களைக் கூட்டிக் கொடுத்தாவது அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றித் தருவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, இந்தப் படித் துறைகள்; P.W.D.-வில் இருக்கக்கூடிய படித் துறைகள் எல்லாம் போய்விட்டன. இந்தப் படித் துறைகளை நீங்கள் சீரமைக்க வேண்டும். குறிப்பாக, சபாநாயகர் அவர்களுடைய ஊர் சேரன்மகாதேவி. இப்போது ஆவுடையம்மன் கோயிலில் திருப்பணி பண்ணினோம். அந்தத் திருப்பணி பண்ணிய கோயில் பக்கத்தில் இருக்கின்ற படித் துறை முழுமையாகச் சேதமடைந்து இருக்கிறது. அந்தப் படித் துறையை நீங்கள் உடனடியாகச் சீரமைத்துத் தாவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, குளங்களில் சில குளங்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. தூர் வாரப்படாத குளங்களில்--நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் வீடுகளோ, வேறு வயல் காடுகளோ இல்லை என்று சொன்னால் அந்தக் குளங்களிலே--மறுகாலை நீங்கள் உயர்த்திக் கட்டலாம்; கரையை உயர்த்தலாம். அதாவது உள்பகுதி foreshore-இல் எந்தப் பாதிப்பும் இல்லாத குளங்களைக் கணக்கெடுத்து, மறுகாலை உயர்த்திப் பண்ணித் தரலாம். அந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, மணிமுத்தாறு பிரதானக் கால்வாய் முதல் reach-இல், cement lining பண்ணிக் கொடுத்திருக்கிறீர்கள். கசிவு நீரால் கிட்டத்தட்ட 2,000 ஏக்கர் நிலம் இதுவரை பயனடைந்திருக்கிறது. இதனை உங்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். அந்த 2,000 ஏக்கருக்குத் தண்ணீர் இல்லை. இப்போது அப்படியே தரிசாகக் கிடக்கிறது. அந்த



வயல் காட்டிற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று சொன்னால்--அந்த 2,000 ஏக்கருக்கு ஏற்கெனவே நாங்கள் 50 வருடங்களாகப் பெற்றுக்கொண்டிருந்த தண்ணீர், கிட்டத்தட்ட 50 cusecs--இதை நீங்கள் மடை வழியாக regular-ஆகத் தந்தீர்கள் என்றால், எங்கள் பகுதியில் இருக்கின்ற அந்த விவசாயத்தைக் காப்பாற்றலாம். குடிநீர்ப் பிரச்சினை, நிலத்தடி நீர்ப் பிரச்சினையெல்லாம் தீரும் என்பதை உங்களிடம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி, M & R grant என்று ஒன்றைக் கொடுக்கிறீர்கள். ஆனால் என்ன வருகிறது? நாங்கள் ஒரு மடையை repair பண்ண வேண்டுமென்று கொடுத்தால், P.W.D.-வில் grant வருவது இல்லை என்று அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். அந்த M & R grant -ஐ என்ன பண்ணியிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. நான்கூட தகவல் அறியும் உரிமை சட்டத்தில், சித்தாறில் நான் ஒரு விவரம் கேட்டேன். கேட்டபோது, ஐந்தைந்து இலட்சம் ரூபாயாகப் போட்டு, ஒரே ஆளுக்கு 50 இலட்சம் ரூபாய்க்கு டெண்டர் கொடுத்திருக்கிறார்கள். M & R grant என்பது சின்னச் சின்ன மடைகள்; இவற்றைப் பழுது பார்ப்பதற்காகக் கொடுக்கப்பட்ட நிதி. இதில் மிகப் பெரிய தவறு நடந்துகொண்டிருக்கிறது. குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல; இனி வருங்காலத்திலாவது அதுபோன்ற பிரச்சினைகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

நண்பகல் 12-00

இன்னொன்று, விவசாய நிலங்கள்; மூன்று போகம் விளைகிற வயல் காடு முழுவதும் கட்டடம் கட்டுகிறார்கள். தொழிற்சாலை கட்டுவது, வீடு கட்டுவது, மற்றபடி factories கட்டுவது, இவைபோன்ற வேலைகளைச் செய்கிறார்கள். அதாவது, மூன்று போகம் விளைகிற வயல் காட்டிலே, நிலங்களிலே கட்டுகிறார்கள். இது முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளாகப் பருவத்தில் பயிர் செய்யாமல் போட்டுவிட்டால், நில மாற்றம் செய்து கொடுக்கப்படுகிறது. அப்படி நில மாற்றம் செய்யப்படுவதால்--இன்றைக்குப் பாருங்கள்; ஒரு factory வந்தால்--அதைச் சுற்றி இருக்கிற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், அவையும் விவசாயம் பண்ணமுடியாமல் போய்விடுகின்றன. அதனால், இந்த மூன்று போக சாகுபடி, இரண்டு போக சாகுபடி நிலங்களில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கக்கூடாது. அதை முழுமையாகத் தடை செய்ய வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, சடையனேரிக் கால்வாய்த் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. சடையனேரிக் கால்வாய்த் திட்டம் 369 கோடி ரூபாயிலே இன்றைக்கு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அந்த வெள்ளக் கால்வாய், அதாவது ஆறுகள் இணைப்பு--தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்பு--அந்தத் திட்டத்திற்கு நீங்கள் 369 கோடி ரூபாயை அறிவித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே மணிமுத்தாறு கால்வாயிலே கருமேனியாறு இணைப்பு இருக்கிறது. அங்கேயிருந்து புத்தன் தருவை, ஆயங்குளம், ஆனைகுடி படுகைக்கெல்லாம் தண்ணீர் போகிறது. அதனால் புதிதாக ஒரு கால்வாய் தேவையேயில்லை. அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இப்போது 369 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள்; ஆனால் பாபநாசத்திலிருந்து மணிமுத்தாறுக்கு tunnel போட 500 கோடி ரூபாய்தான் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த tunnel-ஐப் போட்டால் நிரந்தரத் தீர்வு ஏற்படும். ஏனென்றால், சேர்வலாறு, பாபநாசம், மணிமுத்தாறு திட்டங்களை இணைக்கிற ஒரு வாய்ப்பு; அதை நீங்கள் செய்து கொடுக்கலாம். நீங்களே வந்து பார்த்தீர்கள். "வேல்துரை, நீங்கள் இந்த line தானே கேட்டீர்கள்?" என்றுகூட கேட்டீர்கள். நீங்களும் அதைச் செய்து தருவீர்கள் என்று நான் நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால். . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பாதிப் பேர் இந்தப் பக்கம் காங்கிரசிலே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காரணம், அவர்கள் தொகுதிக்குத் தண்ணீர் போகிறது. வேல்துரையினுடைய கோரிக்கை என்னவென்றால், கென்னடியன் கால்வாயிலிருந்து எம்.எல். தேரி வரையிலே இந்தத் தண்ணீரைக் கொண்டு போவதற்குப் பதில், தாமிரபரணியிலிருந்து எடுத்துக்கொண்டு போவதற்குப் பதில், சேர்வலாறிலிருந்து அங்கே இருந்து நேராக அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்தால், பாபநாசத்திலிருந்து கொண்டு வந்தால்--tunnel அமைத்துக் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறீர்கள்--அதை அமைத்துக் கொண்டு வரலாம்; அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால், இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்பு, கேள்வி நேரத்திலே பார்த்தீர்களா? ரோடு போடுவதற்கே Forest Department-கிட்டே அனுமதி வாங்க முடியாத ஒரு நிலைமை. அதுவும் புலிகள் சரணாலயம், உங்கள் ஏரியா. அங்கே போய் நான் tunnel அமைக்கப் போகிறேன்; வெடி வைக்கப் போகிறேன் என்று சொன்னால் இந்தக் காலத்திலே கொடுக்கமாட்டார்கள். ஆகையினால் ஒன்று; நான் அன்றைக்குச் சொன்ன உறுதியை இன்றைக்கும் சொல்கிறேன்.



வேல்துரையினுடைய தொகுதி பாதிக்காத அளவுக்கு இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைச் சொன்னீர்கள்.. இருந்தாலும் நான் ஒன்றைச் சொல்கிறேன். மேலேயும் நம்ம ஆட்சிதான். இங்கேயும் நம்ம ஆட்சிதான். இந்த நேரத்திலே அனுமதி வாங்குவதில் ஒன்றும் கஷ்டமிருக்காது. நிச்சயமாக அனுமதி வாங்கிவிடலாம். திட்டத்தை நிறைவேற்றலாம். அதுவும் நீங்கள் நினைத்தால்தான் அது நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். வேறு யாருக்கும் இந்த விவசாயத்திலே interest கிடையாது. அதனால் நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும். அப்படித் தருகிறபொழுது, வீணாக ஒரு வாய்க்காலை வெட்டுகிற செலவும் குறையும். அதாவது, மணிமுத்தாறு கால்வாயினுடைய capacity-ஐ அதிகமாக்கி, அந்தத் தண்ணீரை நீங்கள் கொண்டு போகலாம். எனவே, அந்த வாய்க்காலை நீங்கள் முழுவதுமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, இந்தத் தொகுதியிலே நிறைய, ஒரு ஐந்தாறு இடங்களிலே மணலை அள்ளுகிறார்கள். மணல் அள்ளுவதைப்பற்றி நான் ஒன்றும் குறை சொல்லமாட்டேன். மணல் அள்ளுங்கள்; அதனால் ஒன்றும் பிரச்சினை கிடையாது. ஆனால் அதை முறைப்படுத்த வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், department வேலைக்கே இன்று ஆற்று மணல் கிடைக்கவில்லை. Department வேலைக்கு ஆற்று மணல் கிடைக்கவில்லை என்று சொன்னால், crusher பொடி--கல் பொடியை வைத்து concrete போடுகிறார்கள். அதனால் quality-க்கு ஒன்றும் உத்தரவாதம் கிடையாது. மணல் விலை வேறு ஏறிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. பா. வேல்துரை:** துணைத் தலைவர் அவர்களே, நான் முக்கியமான விஷயத்திற்கு வருகிறபோது நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதனால்தான் நிறுத்தினேன்.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பேச

வாய்ப்பளித்த தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கும் . . . (குறுக்கீடு)

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. வேல்துரை. You please try to understand. நாங்கள் அவையை நடத்த வேண்டும்.

**திரு. வை. காவேரி:** அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஆறுகளை இணைப்பதற்குத் திட்டம் தீட்டி, நிதி ஒதுக்கியதற்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

அதேவேளையில், காவிரியினுடைய உபரி நீரை சேலம், நாமக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் இதில் இடம் பெறாதது வருத்தம் அளிக்கிறது. எனவே, இதற்காக மக்கள் காவலர், தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையில் சேலம், நாமக்கல் மாவட்டங்களின் மக்கள் நலன் கருதி, 50 ஆயிரம் பேருடன் சேலத்தில் பேரணி நடத்தி, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாகக் கோரிக்கையை முன்வைத்து, பா.ம.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்காக மருத்துவர் அய்யா அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் அணை நிரம்பி, உபரி நீர் 16 கணவாய் வழியாக வெளியேற்றப்படும்போது, தாரமங்கலம், கூனாண்டியூர் மூலைரோடு பகுதியில் தேங்கும் நீர்த்தேக்கத்திலிருந்து pumping system மூலம் தண்ணீரை எடுத்து மேச்சேரிக்குக் கொண்டு வந்தால், அதன்பின் இயற்கையான வாய்க்கால்மூலம் ஓமலூர், தாரமங்கலம், எடப்பாடி தொகுதிகள் மற்றும் சேலம், நாமக்கல் மாவட்டங்கள் முழுவதும் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம் எனக் கோரிக்கையை வைத்தோம். ஆனால், முதல்வர் அவர்கள் ஆய்வு செய்ததில், வாய்க்கால் அமைத்துத்



தண்ணீர் எடுப்பது சாத்தியமில்லை எனக் கூறியுள்ளார்கள். இவ்வேளையில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். குஜராத் மாநிலம், நர்மதா ஆற்றிலிருந்து கிர்லோஸ்கர் நிறுவனத்தின் உதவியுடன் இராட்சத மோட்டார்மூலம் பம்ப் செய்து தண்ணீரை எடுத்து தனது பாசனப் பாப்பை இலட்சக்கணக்கான ஏக்கர் விரிவுபடுத்தியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கிறேன். 360 அடி உயரம் உள்ளது எனக் கூறுகிறீர்கள். அவ்வளவு உயரம் தண்ணீரைக் கொண்டு சென்றுவிட்டால், அதே தண்ணீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம். இதிலிருந்து 50 சதவிகிதம் செலவினத்தை ஈடுசெய்யலாம். இதற்கு உலக வங்கியிடம் நிதி கேட்டால், உலக வங்கி நீர்ப்பாசனத்திற்காக நிதி தரத் தயாராக உள்ளது. சேலம், நாமக்கல் மாவட்டங்களின் மக்களுக்காக இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்திற்கு நிதியை ஒதுக்கி. பணி தொடங்க அனுமதித்து, முதல்வர் அவர்களே தொடக்க விழாவில் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்கள். அதற்கும் மேலாக, சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, முதல்வர் அவர்கள், 'எனது எலும்புகளை முறித்தாலும், திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்' என்று அவருக்கே உரித்தான பாணியில் நெஞ்சுறுதியோடு உறுதியளித்துள்ளார்கள்; அதை வரவேற்கிறோம். அதேவேளையில், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருதியும், இரு மாநிலங்களின் மக்களின் நலன் கருதியும் இந்தத் திட்டத்தைச் சற்றுத் தள்ளி வைத்துள்ளார்கள்.

கடந்த 1991 டிசம்பர் 11-ல் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டதனால், கன்னடர்கள் பெங்களூருவில் ஆர்ப்பாட்டம் நடத்தியதில், டிசம்பர் 13 ஆம் நாள் நூற்றுக்கணக்கான தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழர்களைக் காயப்படுத்தினார்கள். தமிழர்களினுடைய சொத்துச் சேதம் சுமார் 300 கோடி ரூபாய் இருக்கும். அன்றைய காலக்கட்டத்தில், கர்நாடத்தில் வாழும் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக, கர்நாடத்தை நோக்கிச் சென்ற தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களையும், பாட்டாளி மக்கள் கட்சியினரையும் தமிழகக் காவல் துறை கைது செய்து, சேலம் மத்திய சிறையில் அடைத்தது. அன்று கர்நாடகத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த ஒரே தலைவர் மருத்துவர் அய்யாதான் என்பதை இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக

அரசு, பெங்களூரு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டபோது, 1998-ல் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்திற்கு இரு மாநிலங்களையும் கலந்து ஆலோசித்து, கர்நாடக அரசு ஒப்புக்கொண்ட பிறகு, மத்திய அரசு தடையில்லாச் சான்று வழங்கி உள்ளது. கர்நாடக அரசு, பெங்களூரு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிவிட்டது. இப்போது எதற்காக கர்நாடக மக்கள் எதிர்க்கிறார்கள் என்பது கேள்வியாக உள்ளது. இதை அன்றைய கர்நாடக வேளாண்மைத் துறை அமைச்சர் நஞ்ச கவுடே தனது அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளார். கர்நாடகத்தில் தேர்தல் முடிந்த பின்பு அமையவுள்ள புதிய அரசு தமிழகத்திற்கு இணக்கமாக இருக்கும் என்பதற்கு என்ன உறுதிப்பாடு?

1970-ல் கர்நாடகத்தில், பெங்களூரு நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றபோது, காவிரி உரிமைக்காக நடுவர் மன்றம் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற்றதன் வாயிலாக, காவிரி நீர்ப் பங்கீட்டில் தமிழகத்திற்குப் பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது. எனவே, ஒருபோதும் காலம் தாழ்த்தாமல், தமிழக முதல்வர் அவர்கள் திட்டமிட்டபடி இந்தத் திட்டத்தைத் தொடங்கி, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குக் காவிரிக் குடிநீர் வழங்கி, தாகத்தைத் தீர்க்க வேண்டுமாய் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கவர்னராக இருந்த காலத்தில், காவிரிப் பாசனப் பகுதியில் குறுவைப் பயிர் தண்ணீர் இல்லாமல் காயும் நிலை வந்தபோது, மைசூர் திவானாக இருந்த அனுமந்தப்பாவைப் பார்த்து, "தண்ணீரைத் திறந்துவிடுகிறீர்களா? இல்லை, என் அதிகாரத்தைப் பயன்படுத்தி இராணுவத்தைக் கொண்டு திறக்கட்டுமா?" என்று எச்சரித்ததால், அனுமந்தப்பா அவர்கள் மறுப்பில்லாமல், உடனே கிருஷ்ணராஜ சாகர் அணையைத் திறந்து விட்டார் என்பது வரலாறு. 1901-லிருந்து 1971 வரை கர்நாடக வேளாண்மை பாசனப் பரப்பு 1.11 இலட்சம் ஏக்கரிலிருந்து 4.42 இலட்சம் ஏக்கர்தான் இருந்தது. ஆனால் இன்றைய காலக்கட்டத்தில், கர்நாடக அரசு 25 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாகத் தனது பாசனப் பரப்பை விரிவாக்கம் செய்துள்ளது. ஆனால், தமிழகத்தில் காவிரிப் பாசனப் பரப்பு அதிகப்படுத்தப்படவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.



136 அடியாகக் குறைக்கப்பட்ட முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு 2006 ஆம் ஆண்டு மூன்று முறை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கின்ற காலத்தில் எல்லாம், பேபி அணை மதகுகளை அடைத்து வைத்து நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு ஏன் தமிழக அரசு முன்வரவில்லை என்று தெரியவில்லை.

வேலூர் மாவட்டம், பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, நீர் வளத்தைப் பெருக்க வேண்டும். மேலும், கடந்த ஆண்டுகளில் கர்நாடக அரசும், ஆந்திர அரசும் போட்டி போட்டுக்கொண்டு பாலாற்றிற்கு வரும் நீரைப் பெரிய அணைகள் கட்டியும், தடுப்பு அணைகள் கட்டியும் நம்முடைய உரிமைகளைப் பறித்தன. தற்பொழுதுகூட, ஆந்திர மாநிலத்தில் குப்பம் அருகே புதிய அணை கட்டும் திட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்துத் தடுத்திட வேண்டும். நம்முடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும். பொன்னை ஆற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டும் திட்டத்தை நமது அரசு முற்றிலும் தடுத்து நிறுத்த வேண்டும். மழைக் காலங்களில் ஏற்காடு மலையில் இருந்து வரும் மழை நீர், ஓமலூர் சரபங்கா ஆற்றின் வழியாக எடப்பாடி பேருந்து நிலையம் அருகில் உள்ள பாலம் வழியாக வந்து, சரபங்கா ஆற்றில் கேவூர் வழியாகச் சென்று காவிரி ஆற்றில் கலக்கிறது. இந்த மழை நீர், காவிரி ஆற்றில் கலக்காவண்ணம் ஓமலூர் ஒன்றியம், சக்கரைச்செட்டிப்பட்டி ஊராட்சி, குறுமச்சிக்கரடு முதல் பன்றிக் கரடு வரை இடையே நீரைத் தேக்கி, ஓமலூர், தாரமங்கலம், எடப்பாடி தொகுதி விவசாயப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, தமிழகத்தில் கட்டுமானப் பொருட்களான கம்பி, சிமெண்ட், மணல், செங்கல், ஜல்லி விலைகள் ஏறிவிட்டன. இதனால் கட்டுமானப் பணிகள் முற்றிலும் தடைப்பட்டுவிட்டன. கட்டுமானத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, கட்டுமானப் பணிகள் தடைகள் இல்லாமல் நடக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற மாணவர்கள் வயது முதிர்ந்தும் வேலையில்லாமல் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். எனவே, வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மின் துறையிலும் மேலும் போக்குவரத்துப் பணிமனைகளிலும் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், அரசு நிருவாகத்தின் உண்மைச் செயல்பாடுகளைச் சாதாரணக் குடிமகனும் தெரிந்துகொள்ள

உருவாக்கப்பட்ட உன்னதச் சட்ட வடிவமாகும். இதன் அடிப்படையில்தான், இன்று அரசு ஒப்பந்தப்புள்ளிகளில்கூட ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் நடைபெற்று வருகிறது. இந்த ஆணையத்தில் அதிகாரிகள் இருப்பதால் அரசுக்குச் சாதகமாக இருப்பார்கள் என மக்கள் நினைக்கிறார்கள். தகவல் அறியும் உரிமை ஆணையம் அரசு நிதியை நம்பியிருப்பதால், நிருவாகத்திற்குச் சார்பாக அரசு செயல்பட்டு வருகிறது என்ற ஐயப்பாடு பொது மக்களிடையே உள்ளது. எனவே, ஆட்சியாளர்களுக்கு அப்பாற்பட்டு சுய சார்புடைய தகவல் அறியும் உரிமை ஆணையம் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். அதேநேரத்தில், இந்த ஆணையத்திற்குத் தனியாக நிதியொதுக்கிக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது எடப்பாடி தொகுதியில் சரபங்கா நதி செல்கிறது. இந்த நதி நீண்ட காலமாகத் தூர் வாரப்படவில்லை. எனவே, தூர் வார வேண்டும். கவுண்டம்பட்டிக்கும், வெள்ளாண்டிவலசுக்கும் இடையே பாலம் கட்ட வேண்டும். எடப்பாடி, மக்கள் தொகை அடர்த்தியாக அமைந்துள்ள நகரம். இங்கு பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டும். ஜவுளித் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டும். எடப்பாடியில் வட்டச் சாலை அமைக்க வேண்டும். தீயணைப்புத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். எடப்பாடியில் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டும். சித்தர்கோவிலைச் சுற்றுலாத் தலமாக்க வேண்டும். பூலாம்பட்டிக்கும், நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே, காவிரி ஆற்றில் பாலம் கட்ட வேண்டும். பூலாம்பட்டியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். கொங்கணாபுரத்தில் நூற்பு ஆலை ஒன்று அமைக்க வேண்டும்.

எடப்பாடியில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பயணியர் விடுதி உள்ளது. இது 1932 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பொதுப் பணித் துறைமூலம், முதல் நிலைத் தரம் கொண்ட ஒரு புதிய விடுதி கட்ட வேண்டும். மகுடஞ்சாவடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். எடப்பாடியில் நீதிமன்றம் அமைக்க வேண்டும். எடங்கணசாலை பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும். கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் சாலையில் உள்ள பெரும்பள்ளத்தில் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும். வெள்ளாளபுரம் ஊராட்சி, நத்தக்காடு அருகே பாலம் ஒன்று கட்ட வேண்டும். பொன்னியாற்றில் தூர் வார வேண்டும். வீரப்பம்பாளையம் பகுதியில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு



வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். காந்தி நகர், எர்ணாபுரம் ஊராட்சி, கஸ்பா பட்டி, பாட்டப்பன் நகர், வைகுந்தம் ஊராட்சி, காந்தி நகர் ஆகிய பகுதிகளில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் நீண்ட நாட்களாக வாழும் ஏழை மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். தென் மாவட்டங்களான தூத்துக்குடி வைப்பாறு, திருநெல்வேலி தாமிரபரணி, பாலாறு ஆகிய ஆற்றுப் படுகைகளில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் படிந்துள்ள மணலைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு தனித் துறையை ஒதுக்கி, எப்படி Food Cell துறை என்று ஒன்று இருக்கின்றபோது . . .

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எடப்பாடியிலிருந்து நேராகத் திருநெல்வேலிக்கே போய்விட்டீர்கள்!

**திரு. வை. காவேரி:** இம்மணல் கொள்ளையைத் தடுப்பதற்காக ஒரு தனித் துறையை ஒதுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உறுதியாக அமல்படுத்துவோம் என்று கூறியதோடு, இரு மாநிலங்களின் மக்களிடையே ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள நிலைப்பாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கொள்கை விளக்கக் குறிப்பின் முன்னுரையில், சென்னை இராஜதானி காலத்து அணைக்கட்டுகள், கட்டடங்கள், கால்வாய்கள் போன்றவை பொதுப் பணித் துறையின் சாதனைக்குச் சான்றுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதே பொதுப் பணித் துறையின் இன்றைய சில பணிகள் 10, 15 ஆண்டுகள்கூட தாக்குப் பிடிக்காமல் போயுள்ளன. திருப்பூர் மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனை, கரூர் பாலம், தென்பெண்ணையாற்று ஊத்தங்கரை பாலம் போன்ற பல எடுத்துக்காட்டுகள் கண்முன் வருகின்றன. கட்டுமானப் பிரிவில் உலா வரும் கையூட்டும், கமிஷனும்தான் இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. அரசுக்கு இதன்மூலம் கெட்ட பெயர் ஏற்படுவதைக்

குறித்து நாங்கள் கவலைப்படுகிறோம். கரிகால் சோழனின் கல்லணை, இராஜராஜ சோழனின் பெரிய கோயில் போன்றவை முற்காலக் கட்டடக் கலையின் பெருமைகளை இன்றும் விளம்புகின்றன. அறிவியல் தொழில்நுட்பமும், நவீன இயந்திரக் கருவிகளும் மனிதனுக்குப் பக்கபலமாக இருந்தும், தற்காலக் கட்டுமானங்கள் 10 ஆண்டுகள் கூட தாக்குப் பிடிக்க முடியாமல் போனால், அது காலத்தின் குற்றமல்ல; கோளாறு எங்கே எனக் கண்டறிந்து சரி செய்வது நமது கடமை.

கம்பி விலை கிலோ ரூபாய் 31-லிருந்து ரூபாய் 51 ஆக உயர்ந்துள்ளதால், தமிழகம் முழுவதும் கட்டுமானப் பணிகள் தேக்கமடைந்துள்ளன. ஒப்பந்தக்காரர்கள் நஷ்டம் ஏற்படும் என, நடைபெற்று வரும் வேலைகளைத் தாமதப்படுத்துகின்றனர். குறிப்பாக, குமரி மாவட்டத்தில் நீரோடி, கலிங்காராஜபுரம் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்டு வரும் சுனாமி நிரந்தரக் குடியிருப்புப் பணிகள், கம்பி விலையுயர்வால் முடங்கிப் போயுள்ளன. கம்பியின் rate-ஐ உயர்த்திக் கொடுத்து, இப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது அவசியம்.

அரசாணை எண் 334, பொதுப் பணித் துறை, நாள் 19-10-2007 மூலம் கடந்த ஆண்டு 1,056 ஊழியர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டனர். இதில் விடுபட்ட சுமார் 600 ஊழியர்களின் பணி வரன்முறை தொடர்பான கருத்துருக்கள், முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் தேங்கியுள்ளன. அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டும்.

அதேபோல், 31-3-2008 அன்று 10 வருடங்கள் பணி முடித்த பொதுப் பணித் துறை தினக் கூலிப் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து அரசாணை வெளியிடுவதுடன், பயணியர் விடுதி, ஆய்வக விடுதி போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கு N.M.R. துவக்கப்பட வேண்டும்.

பொதுப் பணித் துறை பணிமனை தொடர்ந்து இயங்கவும், ஊழியர்களின் நலனைப் பாதுகாக்கவும், பணியிலிருக்கும்போது இறக்கும் ஊழியர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்கவும் வேண்டும்.

பொதுப் பணித் துறையில் பல ஆண்டுகளாகக் காலியாகக் கிடக்கும் பணியிடங்களை நிரப்புவது மிக, மிக அவசியம்.



பவானிசாகர் அணையிலிருந்து மழைக் காலங்களில் மீதமாகும் நீரை, திறந்தவெளிக் கால்வாய்மூலம் கொண்டு சென்று, கோவை, ஈரோடு மாவட்டங்களின் குளம், குட்டைகளை நிரப்பத் திட்டம் வகுக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

வைகை அணையின் கொள்ளளவை அதிகப்படுத்தவும், சாத்தியாறு அணையைப் புதுப்பித்துக் கட்டவும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அரூர் தொகுதி கல்லாறு அணைக்கட்டுத் திட்டப் பணியை இவ்வாண்டே துவக்கவும் வேண்டும்.

திருவட்டாறு தொகுதியில், ரூபாய் 1½ கோடிக்கான புத்தன் அணை சீரமைப்புப் பணியையும், முட்டச்சிக்காயல் நீர்த்தேக்கத் திட்டப் பணியையும் உடனே துவக்க வேண்டும்.

சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டு ஏரிகள் திட்டத்தின்கீழ் விளவங்கோடு, திருவட்டாறு தொகுதிகளில் குளங்கள் தேர்வு செய்யப்படவில்லை. 40 எக்டேர் ஆயக்கட்டு கொண்ட குளங்கள் இல்லை எனக் காரணம் காட்டப்பட்டுள்ளது. 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதுபோல் விளவங்கோடு தொகுதியின் நிலை உள்ளது. ஆயக்கட்டு குறைவாக இருந்தாலும், குளங்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

*பிற்பகல் 12-20*

கொள்கை விளக்கக் குறிப்பில், ஒரு யூனிட் மணலுக்கு ரூபாய் 300 தான் விலை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதே ஒரு யூனிட் மணல், எனது தொகுதியில் களியக்காவிளையில் ரூ.3,500/-க்குத்தான் கிடைக்கிறது. என்ன மாயமோ, மந்திரமோ தெரியவில்லை; அரிசியைவிடவும் மணலின் விலை அதிகமாக அங்கே உள்ளது. இதனால் பாதிக்கப்படுவது ஏழை, நடுத்தர மக்கள் மட்டுமல்ல; பொதுப் பணித் துறையின் பணிகள், நெடுஞ்சாலைத் துறையின் பணிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள், இந்திரா நினைவு தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் எல்லாம் பாதிப்புக்குள்ளாகின்றன. தொகுப்பு வீடுகளுக்கு அரசு ஒதுக்கும் தொகையில் பாதி, மணலுக்கே போய்விகிறது. இதனால் தொகுப்பு வீடுகளின் பயனாளிகளும் திணறுகிறார்கள். எனவே, மணல் விலை குறித்து விசாரணை நடத்த வேண்டும். சிமென்ட் விநியோகம் செய்வதுபோல், பொதுப் பணித் துறைமூலம் குழித்துறையில் மணல்

விநியோகம் செய்யவேண்டும். மேலும், பேச்சிப்பாறை அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மணல் குவாரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குமரி மாவட்டத்தில் நல்ல மழை கிடைத்து வருகிறது. ஆனால், இந்த நீர் சில மணி நேரங்களிலேயே கடலில் வீணாய்க் கலக்கிறது. மாவட்டத்திலுள்ள 2,500-க்கும் அதிகமான குளங்களைத் தூர் வாரிச் செப்பனிட்டு மழை நீரைத் தேக்கினால், வறட்சியே இல்லாத மாவட்டமாக குமரி மாவட்டம் மாறும். அதற்கு அரசு கைகொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

விளவங்கோடு தொகுதி, நீரோடி முதல் இரையுமன்துறை வரையுள்ள கடலோரத் தடுப்புச் சுவர்கள் பற்றி கடந்த ஆண்டு, 2007-2008 கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்ட பணிகள்தான் இந்த வருடக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளன. விடுபட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட வேண்டும். தூண்டில் வளைவுகள் அமைப்பது குறித்து உயர்மட்டக் குழு ஆய்வு செய்தது. அந்த அறிக்கையின் இறுதி வடிவம் என்ன என்பதை பதிலுரையில் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட விளாக்குழிச்சிறை என்ற குளத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வாரிச் செப்பனிட வேண்டுவதுடன், குழித்துறை sub-path மற்றும் தடுப்பணையைச் செப்பனிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏ.வி.எம். கால்வாயைத் தூர் வாரிச் சுத்தப்படுத்துவதன்மூலம் படகுப் போக்குவரத்து நடத்தவும், கடலில் வீணாகும் தாமிரபரணி தண்ணீரை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்லவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், உப்பு நீர் ஊற்றுகள் கரைப் பகுதிக்கு வருவதைத் தடுக்கவும் இயலும். மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு வந்து சமீபத்தில் ஆய்வு நடத்தியது. அதற்குச் சாதகமான பதிலை நான் எதிர்பார்க்கிறேன். குழித்துறை ஆற்றில் கடலிலிருந்து உப்பு நீர் கலப்பதைத் தடுக்க ஒரு படுக்கை அணை அமைப்பது குறித்து 2003 ஆம் ஆண்டில் ஓர் ஆய்வு செய்யப்பட்டது. . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் one hour-க்கு மேல் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. அதனால் இன்றைக்குக் கொஞ்சம் Chairperson உடன் ஒத்துழைப்புக் கொடுங்கள், please. இன்னொரு நாளைக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். அடுத்து, திரு. தி. இராமசாமி அவர்கள்.



**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட மக்களுடைய உயிராதாரப் பிரச்சினை, நீர்ப்பாசனம். இன்றைக்குத் தென்னக நதிகள் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசிடம் இருந்தாலும், மாநில அரசு தனக்கே உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் பாய்கிற நதிகளை இணைக்கவேண்டும் என்று முன்முயற்சி எடுத்திருப்பது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால் அதேசமயத்தில், காவிரி, வைகை, தாமிரபாணி இணைப்புபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் விருதுநகர் மாவட்டம், மழை மறைவுப் பிரதேசம். அங்கே ஒரு காலத்தில் வைகை நதி, விருதுநகர் மாவட்டத்தின் வழியாக ஓடிப் பாய்ந்து இருக்கிறது. எனவே, வைகை நதியை அர்ஜுனா நதியோடு இணைத்து, அர்ஜுனா நதிமூலம் குண்டாறு, வைப்பாறு ஆகியவற்றிற்குச் செல்லுகின்ற வகையில், நதிகள் இணைப்பு என்று வரும்போது அது வரவேண்டும். அதுபோல் அப்படி எடுக்கும்போது, வைகையில் காவிரி இணைகின்ற காரணத்தால், அந்த வைகைத் தண்ணீரை அர்ஜுனா நதியோடு இணைப்பதால் பிரச்சினை எதுவும் எழாது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல, நிதிநிலை அறிக்கையிலும் சரி, 48,500 தடுப்பு அணைகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது; நான் வரவேற்கிறேன். ஆனால், அதேசமயத்தில் தமிழ்நாட்டில் நீர்ப்பாசனத்திலே, பொதுப் பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் செயல்படக்கூடிய கண்மாய்கள் என்று இரு பிரிவுகளாக இருக்கின்றன. எங்களுடைய கருத்து, இரண்டையுமே பொதுப் பணித் துறையின்கீழ் கொண்டு வரவேண்டும். அதற்காக ஆயக்கட்டு ஏக்கர் நிலம் மற்றும் விதிமுறைகள் எல்லாவற்றையும் தளர்த்தி, ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இருக்கின்ற அணைகளையும், அதாவது கண்மாய், ஏரி, குளங்களையும் பொதுப் பணித் துறையின்கீழ் கொண்டு வந்து, இப்படித் தடுப்பணைகளுக்காகச் செலவிடப்படுகின்ற தொகைகளைப் போன்று, அந்தச் சிறிய கண்மாய்களுக்கும் செலவிட்டு, ஆழப்படுத்தி, மராமத்துச் செய்து கொண்டு வரவேண்டும். பொதுவாகக் கடந்த காலத்தில் எல்லாம்

கண்மாய்கள், ஏரிகள், குளங்களை வெட்டி, அதன்மூலம் குடிதண்ணீருக்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், இப்போது ஏரி, குளங்கள், கண்மாய்களில் தேக்கப்படுகின்ற தண்ணீர் என்பது பெருமளவு மாசுபட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, சில குறிப்பிட்ட ஏரி, குளங்களைக் குடிநீருக்காகத் தேர்வு செய்து, அந்த ஏரி, குளங்களில் தேக்கப்படுகின்ற தண்ணீரையாவது மாசுபடாமல் பாதுகாத்து, நல்ல தண்ணீரைத் தேக்குவதற்கான ஒரு முயற்சியை இப்போது நாம் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல கடந்த காலத்தில், குடிமராமத்து முறைகள் என்பவை இருந்து வந்திருக்கின்றன, மன்னர் ஆட்சிக் காலத்தில். அப்படிப்பட்ட குடிமராமத்து முறைகள் இப்போது இல்லாவிட்டாலும், ஏரி, குளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற அந்தப் பொதுவான ஒரு உணர்வையாவது நாம் ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஏற்கெனவே, சில நீர்நிலைகளில், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சில ஆக்கிரமிப்புகள் ஒரு பக்கம் இருந்தாலும், மேலும் புதிய ஆக்கிரமிப்புகள் நீர்நிலைப் பகுதிகளில் ஏற்பட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, அரசுக்கு இருக்கிறது. அப்படி அந்த உணர்வை மக்களிடத்திலே நாம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.

இன்றைக்கு நமது தமிழ்நாட்டினுடைய உரிமைகளைக்கூட போராடித்தான் பாதுகாக்க வேண்டிய ஒரு நிலை என்பது இருந்துகொண்டு இருக்கிறது. நமது தமிழ்நாட்டிற்குள் இருக்கின்ற நீரைக்கூட முறையாகப் பயன்படுத்துவதில் நெருக்கடிகளும், சிக்கல்களும் ஏற்பட்டு வருகின்றன. அறிவிக்கப்பட்ட ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்கூட சில சூழ்நிலைகளின் காரணமாக இப்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதைத்தான் நமது பேராசிரியர் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கையை வெளியிடுகின்ற நேரத்தில் இறுதியாகக் குறிப்பிட்டார்கள். உறவுகள் தொடர்ந்தாலும், உணர்ச்சிகள் அடக்கப்பட்டாலும், நீண்ட, நெடிய அனுபவத்தின் அடிப்படையில் அவர்களுடைய இதயத்தில் இருக்கின்ற அந்தக் குமுறல்களை, நிதிநிலை அறிக்கை, பக்கம் 79, பாரா 166-ல் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். உள்ளக் குமுறலை வெளியிடாமல் இருக்க முடியவில்லை. தொடர்ச்சியாக நதி நீர்ப் பற்றாக்குறை மாநிலமாகத் தமிழகம் இருந்தாலும், தமிழகத்தில் இருக்கின்ற நீரை மட்டுமல்ல; தமிழகத்திற்கு இருக்கின்ற உரிமைகளைக்கூட பெறமுடியாத ஒரு நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் மத்திய அரசு



இருந்துவிடக் கூடாது. ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற உரிமைகளைப் பாதுகாக்கின்ற நிலையில் மத்திய அரசினுடைய நடவடிக்கைகள் இப்போது துரிதமாக அமையவேண்டும். எந்த ஒரு பிரச்சினையிலும் காலம் தாழ்த்திய நடவடிக்கை என்பது மிகப் பெரிய பாதிப்புகளையும், பல்வேறு வகையான விபரீதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாகப் போராடிப் போராடி நமது உரிமைகளுக்காக நிற்கவேண்டிய நிலை வந்துகொண்டிருக்கிறது.

அதேபோல்தான், இப்போது பொதுப் பணித் துறையின்கீழ் கட்டடங்கள் பல இடங்களில் பழுதாகி பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன. சில கட்டடங்களை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று சொன்னால், அந்தக் கட்டடத்திற்கான அனுமதி கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஆகிறது. அதேபோல பராமரிக்கப்படாமல் கிடக்கின்ற பல கட்டடங்களை ஆய்வு செய்து, பயன்பாட்டிற்கு இலாயக்கான கட்டடங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கான முறையில் அரசு முன்வர வேண்டும்.

அதேபோல, என்னுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணை இருக்கிறது. அந்த அணையில் இருக்கக்கூடிய கண்மாய்களுக்குத் தண்ணீர் முறையாகச் சென்றடைவதற்கு இரண்டு புறவழிக் கால்வாய்கள் தேவைப்படுகின்றன. வைகை, அர்ஜுனா நதிகளை இணைப்பதன்மூலம் அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது எங்களது நீண்ட காலக் கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் பதிலுரையில் அமைச்சர் சொல்வார். உரையை முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அதேபோல, சிவகங்கை மாவட்டம், பெரியார் பாசனத் திட்டத்தில் கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அந்த ஷீல்டு கால்வாய் பராமரிப்பிற்காக ரூபாய் 5 கோடியே 40 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

பிற்பகல் 12-30

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள், அவர்கள்தம் மானியக் கோரிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தன்னுடைய அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையிலே நினைவுப் பரிசுகளை வழங்குவது மரபாக இருக்கின்றது. இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் தமிழக மக்களுக்குத் தருகின்ற பரிசாக, முல்லைப் பெரியாறு பிரச்சினை, ஒகேனக்கல் பிரச்சினை, பாலாறு, காவிரி ஆறுகளின் பிரச்சினைகளில் நம்முடைய உரிமையை மீட்டு, மக்களுக்குத் தண்ணீரைப் பரிசாகத் தாருங்கள் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், 27-2-2006 ஆம் நாளன்று உச்ச நீதிமன்றம், 136 அடியிலிருந்து 142 அடி வரைக்கும் தண்ணீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்ற தீர்ப்பை நமக்கு வழங்கிய பின்பு, கேரள அரசு கொண்டு வந்த தடைச் சட்டத்தின் காரணமாக நாம் அமல்படுத்த முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக நான் வைப்பது என்னவென்று சொன்னால், இப்பொழுது இருக்கின்ற பிரச்சினைகள் இரண்டுதான்.

ஒன்று, உச்ச நீதிமன்றத்தில் அந்தத் தடையை அகற்ற வேண்டும். ஜல்லிக்கட்டு என்பது ஒரு கலாச்சாரப் பிரச்சினை. அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. அந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரை டெல்லிக்கு அனுப்பி வைத்து, அவசர மனு தந்து, உரிய விவாதம் நடந்து, நிபந்தனைகளைத் தளர்த்தி, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அனுமதியைப் பெற்றுத் தந்தது. அதைப்போல, இருக்கின்ற நிலைமையை நீங்கள் விளக்க வேண்டும். கடந்த 30 ஆண்டு காலமாக 52 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி பாழாகியிருக்கின்றது; 12 ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை இழந்திருக்கின்றோம்; 1 கோடியே 17 இலட்சம் வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டிருக்கின்றன; அதைப்போல, 12,000 குடும்பங்கள் இடம் பெயர்ந்திருக்கின்றன; கால்நடைத் தீவனங்கள் 12,000 டன்னை



இழந்திருக்கின்றோம்; 71 டி.எம்.சி. தண்ணீர் கடலில் கலந்திருக்கின்றது. இந்த நிலைமைகளையெல்லாம் உச்ச நீதிமன்றத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். இன்றைக்கு கேரள அரசு 12 வாய்தாக்களை வாங்கியிருக்கின்றது. மேலும் வாய்தா வாங்காத வகையில் இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையை உடனடியாகத் தீர்வுக்குக் கொண்டு வரவேண்டும்.

இன்னொன்று, மத்திய அரசை நிர்ப்பந்திப்பது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மரியாதைக்குரிய திரு. கோ. இராமசாமி, திரு. வி.பி. சாவந்த் ஆகியோர், இரண்டு மாநிலங்களுக்கிடையே பிரச்சினை ஏற்படுகிறபோது மத்திய அரசு தலையிட்டு, சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே, மத்திய அரசிற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் இரண்டு பிரிவுகளைத் தந்திருக்கின்றது. பிரிவு 262-ன் அடிப்படையில் மத்திய அரசுக்கு, மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குக் கடமையுண்டு; அது அதிகாரம் பெற்றிருக்கின்றது. அந்த வகையிலே மத்திய அரசு இவ்விஷயத்தில் தலையிட வேண்டும். இன்னொன்று, பிரிவு 365-ன்கீழ் மத்திய அரசு கேரள அரசிற்கு ஆணையே பிறப்பிக்கலாம். உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கிய பின்பு அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துவதற்குத் தமிழக அரசு முயன்றுகொண்டிருக்கின்றபொழுது, அதற்குத் தடையாக, இடையூறாக இருக்கக் கூடாது; அது சட்ட விரோதமாகும் என்று ஆணையே பிறப்பிக்கலாம் என்று இந்த நேரத்திலே அதன்மூலமாகவும் நீங்கள் வலியுறுத்தி, எவ்வளவு விரைவில் தண்ணீரைப் பெற்றுத் தர முடியுமோ, அவ்வளவு விரைவில் தண்ணீரைப் பெற்றுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையிலும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு எதிராக புதிய தடுப்பணைகள் கட்டுகிறார்கள்; புதிய பாசனத் திட்டங்களை உருவாக்கியிருக்கின்றார்கள்; தண்ணீரைச் சேமித்து வைப்பதற்குக் குளங்கள் மற்றும் ஏரிகளைச் சீரமைத்து வருகின்றார்கள். இது நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு எதிரானது. அப்படி அவர்கள் அதிகமாகத் தண்ணீரைச் சேர்க்கின்றபொழுது, காவிரித் தண்ணீர் தமிழகத்திற்கு வருகின்ற வாத்து குறைவாகும். மேலும் காவிரி டெல்டா பகுதியிலே வசிக்கின்ற தஞ்சை விவசாயப் பெருமக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.. (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. என்னுடைய கம்பம் தொகுதி, புதுப்பட்டியில் மஞ்சனூத்துக்குக் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட வேண்டும். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்காகக் கொடுக்கப்பட்ட அந்த 2 குளங்கள், தேனி, மதுரை மாவட்டங்களில் இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. நாங்கள் பல முறை சென்று அங்கே செயற்பொறியாளரைச் சந்தித்திருக்கின்றோம். ஆகவே, அந்தப் பணிகளையும் விரைவுபடுத்துவதற்குத் தாங்கள் உரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

*பிற்பகல் 12-35*

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் வாய்ந்த பொதுப் பணித் துறையின் கட்டடங்கள், பாசனம் தொடர்பான மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கட்டடங்கள் கட்டுகின்ற பணியைப் பராமரித்துக் கொண்டிருக்கின்ற பொதுப் பணித் துறையானது, குறிப்பாகப் பள்ளிக் கட்டடங்கள், பழமையான கட்டடங்களை இடித்துவிட்டு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்மூலமாகப் புதிய கட்டடங்களை உருவாக்குவதற்குப் பொதுப் பணித் துறைக்கு அனுமதிபெற விண்ணப்பிக்கும்போது, அதிலே நீண்ட காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினாலே பல இடங்களிலே புதிய வகுப்பறைகளை உருவாக்க வாய்ப்பு இருந்தும், அவற்றை உடனடியாக உருவாக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, வகுப்பறைகள் விஷயத்திலே அதனுடைய முக்கியத்துவம் கருதி, உடனடியாக அனுமதி அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு உத்தரவை இந்தத் துறைக்குப் பிறப்பிக்க வேண்டுமாய் உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, பொதுப் பணித் துறையிலே ஒப்பந்தப் பணிகள் அதிலே பதிவு செய்துகொண்டிருக்கின்ற ஒப்பந்தக்காரர்கள்மூலமாக வழங்கப்படுகின்றன. அந்த ஒப்பந்தக்காரர்கள்--அவர்களுக்கான தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் 5 நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தப் பணிகள் பெறுவதிலே



ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் பெருமளவிலே வாய்ப்பைப் பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் அதிக அளவிலே நம்முடைய பொதுப் பணித் துறையிலே ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாத ஒரு இக்கட்டிலே இருக்கிறார்கள். அப்படிப் பதிவு செய்துகொண்டிருக்கின்ற ஒன்றிரண்டு ஒப்பந்தக்காரர்களும்கூட, அவர்களுக்கு நான்காம் நிலை, ஐந்தாம் நிலைப் பணிகள்தான் வழங்கப்படுகின்றனவேயொழிய, அவர்களுக்கு முதல் நிலை, இரண்டாம் நிலைப் பணிகள் பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை. இந்தப் பணிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்த அதிகாரம் மாவட்ட அளவில் இருக்கின்ற பொறியாளர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவர் கலந்து ஆலோசித்து இதை உறுதி செய்வார் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர்களுடைய விருப்பு, வெறுப்பின் அடிப்படையிலே ஒப்பந்தப் பணிகள் வழங்கப்படுகின்றனவேயன்றி, அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் மெத்த விவரம் தெரிந்தவர். அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். ஒப்பந்தப் புள்ளிகள் போடுவதற்கு first class contract, second class contract என்று இருக்கிறார்கள். அது அவர்கள் செய்கிற வேலை, அவர்கள் போட்டிருக்கிற முதலீடு, இதுவரையிலே செய்திருப்பதை வைத்து அவர்களுக்கு அந்தத் தகுதி அடிப்படை வருகிறது. ஆக, புள்ளிவிவரம்--அதாவது tender போடுகிறபோது எத்தனை percent list என்று யார் போடுகிறாரோ, அதிலே ஒன்றும் communal G.O. பார்ப்பது கிடையாது. ஆகையினாலே இதில் வேலையின் தாம்தான் பார்க்க முடியுமே தவிர, communal தரம் பார்க்க முடியாது. மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள். இதிலே யாரும் ஜாதி, என்ன ஜாதி என்று கேட்பதில்லை; tender என்றுதான் பார்ப்பார்களே தவிர, கேட்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கேட்க விரும்புவது, இத்தகைய ஒப்பந்தப் பணிகளை ஒதுக்கீடு செய்யும்போது, குறிப்பாக மத்தியப் பிரதேச

மாநிலத்திலே ஒரு முறையைக் கடைப்பிடிக்கிறார்கள். இதற்கு முன்னாலே அங்கு முதல்வராக இருந்த மாண்புமிகு திரு. திக்விஜய் சிங் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட அந்த முறையானது, அங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஒப்பந்தப் பணிகளை ஒதுக்கீடு செய்கிற ஒரு முறையாகும். அப்படி ஒரு முறையை நம்முடைய அரசும் பின்பற்றினால், ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த, பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களும் நம்முடைய அரசுப் பணிகளை, ஒப்பந்தங்களை எடுத்துச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்தச் சமுதாயத்திலும் ஒரு சில, சிறு அளவிலேனும் வசதி பெற்றவர்கள், வாய்ப்புப் பெற்றவர்கள் உருவாவதற்கு வாய்ப்பு ஏற்படும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிவோடு இந்த ஆதி திராவிடர் சமூகத்திற்கு ஏராளமான நன்மைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய காலத்திலே இது நடக்கவில்லையென்றால், வேறு எப்போதும் நடக்காது. அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கருணையுள்ளத்தோடு பரிசீலித்து, இப்படி ஒரு சிறு அளவு, குறிப்பிட்ட ஒரு விழுக்காடு, இரண்டு விழுக்காடு என்றுகூட இருக்கலாம்; அவர்கள் 10 விழுக்காடுகூட கேட்கவில்லை; ஒரு குறிப்பிட்ட அளவாவது ஒதுக்கீடு செய்து, இந்தப் பணிகளை மாவட்ட அளவிலே அவர்களுக்கு ஒதுக்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-40*

அடுத்து, நம்முடைய நதி நீர் உரிமைகள். இவற்றைப்பற்றி இங்கே பேசிய, மாமன்றத்திலே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். நாங்களும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே, நம்முடைய நதி நீர் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். குறிப்பாக, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எந்தவிதத்திலாவது நாம் நிறைவேற்றியே தீரவேண்டும். அதிலே எந்தவித விட்டுக் கொடுத்தலும், சமரசமும் செய்துகொண்டு விடக் கூடாது என்ற தமிழக மக்களின் கவலையை நாங்களும் பகிர்ந்துகொண்டு, அதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கின்றோம்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வீராணம் ஏரி, அதனுடைய முழுக் கொள்ளளவிற்குத் தேக்கப்படுகின்ற



காரணத்தினாலே--சென்னைக்குக் குடிநீர் அளிப்பதற்காக முழுக் கொள்ளளவு தேக்கப்படுகின்ற காரணத்தாலே--இன்றைக்கு அதைச் சுற்றியுள்ள, அதிலும் குறிப்பாக மேற்குப் பகுதியைச் சுற்றியுள்ள ஏறத்தாழ 15 கிராமங்கள் இன்றைக்கு நீரிலே மூழ்கியுள்ளன. குறிப்பாக, அங்கே கரும்புப் பயிர்களெல்லாம் வெட்டவே முடியாத அளவிற்கு இன்றைக்கு விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே, இதிலே சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, அந்த வீராணம் ஏரியில் முழுக் கொள்ளளவிற்குத் தண்ணீரைத் தேக்குவதால் ஏற்படுகின்ற இடையூறுகளைக் களைவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக. . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கூற்றை இந்த அரசு ஆய்ந்துதான், (குறுக்கீடு) அந்த மீன்சுருட்டி ரோடில்தானே சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். எனவே, விரைவில் பணியைத் தொடங்க, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு. (குறுக்கீடு) சரி, Please conclude. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அடுத்ததாக, இன்றைக்கு நீர்ப்பாசனத் துறை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக மாறியிருக்கின்ற காரணத்தினாலே, நீர்வள ஆதாரத் துறை என்று புதிதாக ஒரு துறையை உருவாக்கியிருப்பதாக நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதைப்போலவே, நீர்ப் பாசனத்திற்கென்று தனி அமைச்சகத்தை உருவாக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

***திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நதி நீர் இணைப்புத் திட்டத்திற்குப் பல

கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கியிருப்பதற்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம்தான் கண்மாய்கள், கால்வாய்கள், குளங்கள் நிறைந்த இரண்டாவது மாவட்டமாகத் திகழ்கிறது. எங்களது மாவட்டத்தில், பொதுப் பணித் துறைக் கண்மாய்கள் மொத்தம் 517 உள்ளன; Minor கண்மாய்கள் மற்றும் சிறு பாசனக் கண்மாய்கள் சுமார் 1,200-க்கும் மேல் உள்ளன. எங்களது மாவட்டத்திற்குப் பாசன வசதி அளிக்கும் ஆறுகள்—வைகை ஆறு, குண்டாறு, பரளையாறு, சூரியங்கோட்டை ஆறு ஆகிய ஆறுகள்மூலமாகப் பாசன வசதி கிடைக்கிறது. இவற்றில், வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கின்றபோதெல்லாம், நியாயமான முறையிலே கடைமடைப் பகுதியாக இருக்கக்கூடிய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உரிய பங்கு கிடைப்பதில்லை. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியின் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்களுக்குத் தண்ணீர் கிடைத்து வருகிறது. அதற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய வைகை அணையில் ஒவ்வொரு முறையும் தண்ணீர் திறக்கின்றபோது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எந்த அளவிற்குத் தண்ணீர் தேவை என்பதை உணர்ந்து, தற்காலிகமாக ஒரு அரசாணை பிறப்பித்து, அதன்மூலமாகத் தண்ணீர் திறக்கப்படுகிறது. இப்படித் தற்காலிகமாக அரசாணை பிறப்பிக்காமல், நிரந்தரத் தீர்வாக ஒரு அரசாணை பிறப்பித்து, இந்த மாமன்றத்திலே ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்கடுத்து, பாசனத்தில். . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்கே வருகிறார் என்று எனக்குத் தெரிகிறது. Vaigai credit, Periyar credit என்று பிரிப்பதிலே சில சிக்கல்கள் உண்டு. ஒரு border-ஆக வைத்துக்கொண்டு பிரிக்கிறார்கள். ஆனால், அதற்கு இடையில் வருகிற தண்ணீர் வைகை ஆற்றில்தானே கலக்கிறது, சுருளியாற்றில்; அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று வைகை விவசாயிகள் கேட்டிருக்கிறார்கள். ஒரு வகையிலே அப்படிப் பார்த்தால், நியாயமுமிருக்கிறது. ஆனால்,



இன்னொரு வகையிலே பாதிக்கக்கூடாது என்பதிலும் நியாயமிருக்கிறது. ஆனால், இதற்கு ஏதாவது ஒரு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டுமென்று நான் திடமாக நம்பிக்கொண்டிருக்கிறேன். ஆகையினால், விரைவில் இதற்கொரு தனி formula வகுக்கப்படும்.

*பிற்பகல் 12-45*

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு என்னுடைய மாவட்டத்தினுடைய விவசாயிகளுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பாசனத்திற்காக வைகையாற்றிலே தண்ணீர் திறக்கின்றபொழுது, எங்களுடைய பார்த்திபனூர் மதகு அணைக்கு வந்து, பின்பு வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய்களில் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இந்த வலது பிரதானக் கால்வாய்மூலம் எங்களுடைய அருங்குளம் முதல் களறிக் கண்மாய் வரை கிட்டத்தட்ட 154 கண்மாய்கள் பயன்படுகின்றன. அதேபோல இடது பிரதானக் கால்வாய்மூலம் பரமக்குடியிலிருந்து குளத்தூர் கண்மாய் வரை கிட்டத்தட்ட 100 கண்மாய்கள் பயன்பெறுகின்றன. இந்தக் கால்வாய்களில் பாசனத்திற்காக அதிக அளவிலே தண்ணீர் திறந்துவிடப்படுகின்றபோது அதிக வேகத்துடன் தண்ணீர் வருகின்ற அந்த நேரத்தில், அந்தக் கால்வாயில் அதிக அளவிலே மண் மேடுகள் ஏற்பட்டு, அந்தக் கால்வாயிலே கருவேலஞ்செடிகளும், பூவரசஞ் செடிகளும் அதிக அளவில் முளைத்து, அந்தத் தண்ணீரைத் தடுத்து, இரண்டு கரைகளையும் பலவீனப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக, சுமார் 50 கோடி ரூபாயிலே ஒரு concrete lining அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாகக் கடந்த 12-11-2007 அன்று பரமக்குடியில் நடைபெற்ற சிவங்கை-இராமநாதபுரம் மாவட்டங்களின் விவசாயிகளுடைய கலந்தாய்வுக் கூட்டத்தில்கூட எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு குடிசைமாற்றுத் துறையினுடைய அமைச்சர் அவர்கள்மூலமாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே ஒரு மனு கொடுத்திருந்தோம். இதை நிச்சயமாகச் செய்து கொடுப்போம் என்று அவர்கள் எங்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். மிகுந்த நம்பிக்கையோடு அந்த விவசாயிகளெல்லாம் இந்தத் துறையின் அமைச்சருடைய பதிலை

எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த நேரத்திலே நான் அதையும் தெரிவித்துக்கொண்டு. . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரகனூர் regulator-ஓ, பார்த்திபனூர் regulator-ஓ அணையல்ல; regulator. ஆகையினால்தான் தண்ணீர் உங்களுக்கு நேராக வந்துவிடுகிறது. அணையாக இருந்தால்தான் அதற்குப் பிறகு கதவு போட்டு, உங்களுக்கு ஏற்றபடி பண்ணமுடியும். உங்கள் கருத்தை நீர்ப்பாசனக் கருத்தரங்கிலும் சொல்லியிருந்தீர்கள். உங்கள் cut motion-லும் இருந்தது. நான் பார்த்தேன்.

**திரு. இரா. இராம்பிரபு:** இரண்டும் கால்வாய்கள்தான், வலது, இடது. அதேபோல, மேலநாட்டார் கால்வாய், கீழநாட்டார் கால்வாய். இந்த மேலநாட்டார் கால்வாயில் கிட்டத்தட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** இரண்டே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** பெருமாச்சேரி என்னும் கிராமத்திலிருந்து 21 கிலோ மீட்டர் வரை அந்தக் கால்வாய் சென்று ஆர்.எஸ். மங்கலம் கண்மாய்க்குச் செல்கின்றது. அதேபோல், இதிலே 15 கண்மாய்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலும், 9 கண்மாய்கள் சிவகங்கை மாவட்டத்திலும் பயன்பெறுகின்றன. கீழநாட்டார் கால்வாயிலிருந்து அரசடி ஒன்றிய கிராமத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தூரம் சென்று ஆர்.எஸ். மங்கலம் கால்வாய்க்குச் செல்கிறது. அதிலே 15 கண்மாய்கள் பயனடைகின்றன. இந்தக் கண்மாய்களுடைய கரைகளைப் பலப்படுத்துவற்கு இந்தத் துறையின்மூலமாகக் கிட்டத்தட்ட 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இந்தத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் இந்தத் தருணத்திலே செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, IAMWARM என்ற திட்டத்தின்கீழ் உத்தரகோசமங்கை ஆறு sub-basin திட்டத்தில் மாவட்டத்திலுள்ள 150 கண்மாய்களையும்,



எங்கள் பரமக்குடி தொகுதியில் 20 கண்மாய்களையும் தூர் வாரி, மிகச் சிறந்த அளவிலே பணிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு கண்மாய்கள் ஒதுக்கிக் கொடுத்தார்கள். அந்தக் கண்மாய்களைச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பரிந்துரை செய்ததால், அந்த இரண்டு கிராமங்களின் மக்களுக்கும் மிகப் பெரும் உதவியாக இருக்கின்றது. அந்த மக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு அவர்கள் அந்த நன்றிகளைத் தெரிவித்தார்கள். இந்த நிதியாண்டிலும் இந்த இரண்டு கண்மாய்களுக்குப் பதிலாக, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நான்கு கண்மாய்களை ஒதுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

அதற்கு அடுத்து, ஈரோடு மாவட்டம், நொய்யலாறு, ஒரத்துப்பாளையம் அணை. திருப்பூர் சாயக் கழிவு நீரால் விவசாய நிலங்கள் பாதிப்படைந்து, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ரூ.700 கோடி மதிப்பீட்டிலான அந்தத் திட்டத்தை--pipe line மூலம் கழிவு நீர் கடலில் கலக்கக்கூடிய அந்தத் திட்டத்தை--நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எங்களுடைய பரமக்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாயை இங்கே ஒதுக்கீடு செய்து அறிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி; இதற்கு நானும் என்னுடைய வழக்கறிஞர்கள் சங்கங்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாயை நீங்கள் ஒதுக்கினால்தான் இன்று Sub-court கட்ட முடியும். இதிலே மாஜிஸ்ட்ரேட், கிரிமினல் கோர்ட், முனிசிபல் கோர்ட்தான் நீங்கள் கட்ட முடியும். Sub-court . (மணியடிக்கப்பெற்றது)

## 7. உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் முன்னர் விதித்த இடைக்காலத் தடை செல்லாது என, அத்தடையை நீக்கி உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் எழுந்திருக்கும்போது உங்களை அனுமதிக்கமுடியாது.

*பிற்பகல் 12-50*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மார்ச் 30, 2007 அன்று நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களாலே கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தையொட்டி, இன்றைக்கு--மத்திய அரசாலே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஆணையின்படி, உயர் கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்று அறிவித்ததை, உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பின்மூலமாக நிறுத்தி வைத்ததை மாற்றுவதற்கான வழி காண வேண்டுமென்று அன்றைய தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்த அடிப்படையில், இப்பொழுது உச்ச நீதிமன்றத்தினுடைய ஐந்து நீதிபதிகளைக்கொண்ட அமர்வு, இந்த 27 விழுக்காட்டிற்கு விதித்த இடைக்காலத் தடை செல்லாது; அத்தடை நீக்கப்பட்டது என்று அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த அவையில் கலைஞரால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய நோக்கம், உச்ச நீதிமன்றத்தினுடைய ஐந்து பேர் கொண்ட நீதிபதிகளின் தீர்ப்பால் நிறைவேற்றப்பட்டிருப்பதற்காக நான் இந்த அவையில் உள்ள நம் அனைவருடைய மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொள்கிறேன்; அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**
**(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித்துறை)** } தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன். (குறுக்கீடு) இல்லை, அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிட்டேன். (குறுக்கீடு) Time-ஐப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, திரு. இராம்பிரபுவுக்குப் பேசி முடிக்கத் தெரியவில்லை. நான் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறேன். (குறுக்கீடு) திரு. கணேசன், ஒரு அரை செகண்ட் இருங்கள். திரு. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் இட ஒதுக்கீடு சம்பந்தமாக அறிவித்த அந்தத் தீர்ப்பிற்கு எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே சமயத்திலே, 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததுபோக, மீண்டும் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் நீங்கள் ஒதுக்கீடு செய்தால்தான், எங்களுடைய பழமை வாய்ந்த அந்தக் கட்டடப் பணியை நிறைவேற்ற முடியும். இதனை எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு குடிசைமாற்றுத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையாக ஏற்று, எங்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா கண்ட கனவை நனவாக்க, தமிழ்ச் சந்ததியினர் நிம்மதியாக, வளமோடு வாழ, தமிழ் மொழி சிறக்க, தமிழ் மக்களின் வாழ்வு சிறக்க, தமிழ் நாகரிகம், கலாச்சாரம், கலை, பண்பாடு வளரப் பாடுபட்ட, பார் போற்றும் எங்களின் புரட்சித் தலைவர் கண்ட நல்முத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் போற்றி வணங்குகின்றேன். இந்த மாமன்றத்தில் பொதுப் பணித் துறையில் கட்டடங்கள் மற்றும் நீர்ப்பாசனம் குறித்துப் பேச வாய்ப்பளித்த

பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் இயக்கத்தின் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006-2007, 2007-2008, 2008-2009 ஆம் ஆண்டுகளின் மானியக் கோரிக்கைக் கொள்கை விளக்கக் குறிப்புகளில், பொதுப் பணித் துறை கட்டடங்கள் மற்றும் பாசனம் குறித்துப் பல்வேறு திட்டங்களை அறிவிப்புச் செய்துள்ளீர்கள். அவற்றை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள் என்ற தலைப்பில் 2006-2007 கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 55-இல் குறிப்பிட்டுள்ளதை, 2008-2009 கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 44-இல் மீண்டும் குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் கடந்த இரண்டாண்டுகளாக இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவில்லை என்பதனை அறிய விரும்புகிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், வரம்பு மீறி மணல் எடுப்பதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தொடரப்பட்டு, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்--உச்ச நீதிமன்றத் தீர்ப்பையே மதிக்காத மாநில அரசுகளில்--உயர் நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று, சுய நலமில்லாமல், ஆற்றுப் படுகையிலிருந்து தனியாரால் முறைகேடாக ஆற்று மணல் எடுக்கப்படுவதைத் தடுத்து, 2-10-2003 முதல் பொதுப் பணித் துறையினரால் மணல் எடுக்கும் பணியினை ஏற்று, இரண்டு ஆண்டுகளில் 7 மடங்கு கூடுதலாக, 238 கோடி ரூபாய் வருவாயைப் பெருக்கித் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவார்கள்.

அதைப்போல, இப்போது ஆட்சி செய்துகொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் சுமார் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற குறிப்பினை மத்திய அரசுக்கு அனுப்பி, தமிழகத்திற்கு வெறும் 56 கோடி ரூபாயினை வாங்கியிருக்கின்றீர்கள். அதைப்போல, இந்த ஆண்டும் வெள்ளச் சேதார மதிப்பு 1,140 கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்து அனுப்பியிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆக மொத்தம் 2,640 கோடி ரூபாய் மதிப்பு சேதாரம் ஏற்பட்டிருக்கின்றது. அதில் எவ்வளவு நீங்கள் பெற்றுத் தரப் போகிறீர்கள் என்பதை இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில், காவிரியில் உரிய நீரைப் பெறுவதற்கும் அதன்மீதுள்ள உரிமையை நிலைநாட்டவும், தடுப்பணைகள் அமைப்பதற்கும் இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதைப்போல, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே



கணேசபுரத்தில் தடுப்பணை கட்ட முயற்சிப்பதைத் தமிழக மக்களின் நலன் கருதி, தடுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தென்மாவட்ட மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த 27-2-2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பை நமக்குப் பெற்றுத் தந்தவர், தமிழர் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவார்கள். அந்தத் தீர்ப்பினை இந்த அரசு நடைமுறைப்படுத்தத் தவறியதால், தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களின் மக்களிடையே பெரிய அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. தென்தமிழக மக்களிடையே உள்ள அந்த அச்சத்தைப் போக்கிட திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்யப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

தமிழக மக்களின் 40 ஆண்டு காலக் கனவான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் மக்களின் நீண்ட நாள் கனவாக இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல, இந்தத் திட்டம் 40 ஆண்டுகளுக்கு முன்பாகப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் தொடங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் திட்டம் தீட்டப்பட்டது. மீண்டும் 1994 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9-வது திட்டக் காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கடும் முயற்சி எடுக்கப்பட்டது. அதன் பின்பு 1998 ஆம் ஆண்டில், மத்திய நீர்வளத் துறை அமைச்சகச் செயலாளர் அவர்கள் முன்பு, கர்நாடக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால், அன்று ஆண்டு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தப் பணியினைச் செய்யவில்லை. மீண்டும் 2003 ஆம் ஆண்டில் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்து, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி ரூ.1,005 கோடி கோரி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்தைத்தான் இப்போது நீங்கள் பெற்று வந்திருக்கிறீர்கள். அதுவும் இந்தச் சட்டமன்றத்திலே, எப்படியும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கூறிவிட்டு, தற்சமயம், கர்நாடகாவில் தேர்தல் முடியும் வரை இத்திட்டத்தை ஒத்திவைப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் மக்களின் நலன் காக்க, இந்த அரசு அந்தப் பணியினை முடிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், 18 ஆம் கால்வாய்த் திட்டப் பணிகளும், நிலம் எடுப்புப் பணிகளும் முடிவடைந்தன. தற்சமயம் நிதியொதுக்கி, பணி நடைபெறப் போகிறது என்று கூறியுள்ளீர்கள். அப்பணி விரைந்து நடைபெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராமக் கால்வாய்த் திட்டப் பணி 1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்போது, 33 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அது 74 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டது. 2006-2007 நிதிநிலை அறிக்கையில், 31-3-2007-ல் 58 கிராமக் கால்வாய்த் திட்டப் பணிகள் முடிவடையும் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தந்துள்ளார்கள். ஆனால், பணி இன்னும் முடிவடையவில்லை. விரைவில் பணி முடிவடைய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, தேனி மாவட்டத்தில், தமிழகத்தில் உருவாகி, தென்மாவட்ட மக்களுக்குப் பயன் தருகின்ற ஆறு, வரலாற்றுச் சிறப்பு மிக்க வைகை ஆறு ஆகும். இந்த வைகையாற்றில், எப்பொழுதும் குன்னூர் பகுதிகளில் மணல் குவாரி எடுப்பது வழக்கம். தற்சமயம் வைகையாற்றில் அம்பாசமுத்திரம், கோவிந்தநகரம், துரைச்சாமிபுரம், தர்மராஜபுரம் போன்ற பகுதிகளில் மணல் குவாரி எடுக்க அரசு அனுமதித்ததன்பேரில், அந்த வைகை ஆற்றையே நம்பியிருக்கின்ற தேனி மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக, வைகையாற்றில் மணல் அள்ளுவதை நிறுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பின்படி ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளோம். ஆகவே, வைகையாற்றில் மணல் எடுப்பதை நிறுத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அங்கு எடுக்கப்படுகின்ற 90 சதவிகித மணல் பெரும்பாலும் கேரளாவிற்குத்தான் சென்றுகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், தேனி சட்டமன்றத் தொகுதியில், தந்தை பெரியார் வாய்க்கால், பிடிஆர். வாய்க்கால், பாளையம் பாவு வாய்க்கால் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிக்காக ரூ.5 கோடி மதிப்பீட்டில் திட்டம் அறிவிக்கப்பட்டது. தற்போது அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்



அறிவிப்புச் செய்த, வீரப்ப அய்யனார் கோவில் கண்மாய்ப் பணியும் நடைபெறாமல் இருக்கிறது. அது எனது தொகுதி மக்களின் கோரிக்கையாகும். அதைப்போல, சண்முகா நதி திறக்கப்பட்டும், கடைமடைப் பகுதியான ஓடைப்பட்டி பேரூராட்சிப் பகுதிக்குத் தண்ணீர் முறையாகச் செல்லாததைக் கவனத்தில்கொண்டு, அந்தப் பகுதி விவசாய மக்களுக்கும் தண்ணீர் கிடைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மதுரை மாவட்டத்திலிருந்து தேனி மாவட்டத்தைப் பிரித்து, பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரப் பிரிவிற்குத் தனிச் செயற் பொறியாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், திருவள்ளூர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1,798 ஏரிகளைத் தூர் வார, 984.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 இலட்சத்து 24 ஆயிரத்து 73 ஏக்கர் நிலம் பாசன வசதிபெற மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

சென்னை நகா மக்கள் குடிநீர் கிடைக்காமல் காலிக் குடங்களுடன் அலைந்த நிலையை மாற்றி, மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான குடிநீர்த் தட்டுப்பாட்டை நிரந்தரமாகத் தீர்க்க, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-00

அதைப்போல, என்னுடைய தேனி தொகுதியில், தேனி அல்லிநகரம் நகராட்சிப் பகுதி, தேனி மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கி வருகின்றது. கடந்த 2006-2007, 2007-2008 கூட்டத்தில் பேசுகின்றபோது கூறிய அதே கருத்தை மீண்டும் முன்வைக்கின்றேன். தேனி அல்லிநகரம் நகராட்சிப் பகுதி மிகவும் நெரிசலான பகுதி. அங்கிருக்கின்ற பேருந்து நிலையம் மிகவும் குறுகலாக இருக்கின்றது. ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக அதனை நேரில் வந்து பார்வையிட்டிருக்கின்றார்கள். இதுவரை எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை. தேனி அல்லிநகரம் நகராட்சி, சின்னமனூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை விரைந்து முடித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனி சட்டமன்றத் தொகுதியில், முல்லைப் பெரியாற்றில் கிணறு அமைத்து கோட்டூர், தர்மாபுரி, பூமலைக்குண்டு, மல்லையகவுண்டன்பட்டி, காட்டுநாயக்கன்பட்டி வரை ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கருவேலன்குளம், சீப்பாலக்கோட்டை குளம், கோவிந்தநகரம் கண்மாய், பாலகிருஷ்ணாபுரம் கண்மாய் போன்ற கண்மாய்களைத் தூர் வார வேண்டுமாய்க் கேட்டு, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதிலுரையாக, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே நின்று பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த என்னுடைய தலைவர் கலைஞர், முதல்வர் அவர்களுக்கும், எனக்குப் பேச நேரம் ஒதுக்கித் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றப் பொது வாழ்வில், பத்தாவது முறையாகப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசுகின்ற வாய்ப்பை என்னுடைய தலைவர் எனக்கு அளித்திருக்கிறார். தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், காலம் செய்த சதியால் இடைவெளி ஏற்பட்டாலும், பத்தாண்டு காலம் பொதுப் பணித் துறையை நிருவாகம் செய்தவன் துரைமுருகன் என்கிற பெருமையை, புகழை எனக்கு அளித்தவர் என்னுடைய தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெற்ற பெருமையெல்லாம், அவரால் எனக்கு வந்தது. சிறுமை ஏதாவது இருந்தால், அது என்னைச் சார்ந்தது.

இந்த ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை இந்த அவையில் விவாதத்திற்கு வைக்கின்ற நேரத்தில், இந்தப் பொதுப் பணித் துறைக்கு 150-வது ஆண்டு விழா வருகிறது. அன்றைய சென்னை இராஜதானியிலும், இன்றைய தமிழ்நாட்டிலும், ஆற்றிலெல்லாம் அணைக்கட்டுகள், நாட்டிலெல்லாம் வியக்கத்தக்க கட்டடங்கள், காடுகளில்கூட கால்வாய்கள், வெள்ளக் காலங்களிலே தடுப்புப் பணிகள், வறட்சிக் காலங்களிலே துயர் துடைப்புப் பணிகள், எல்லாக்



காலங்களிலும் பராமரிப்புப் பணிகள் என 150 ஆண்டு காலம் பணியாற்றி வருகிற பழம்பெரும் துறை இந்தப் பொதுப் பணித் துறையாகும்.

1785 முதல் 1852 வரை இந்த நாட்டை ஆண்ட கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பித்ததுதான் மராமத்துத் துறை. அதன் பணியை விரிவாக்க, Sir Arthour Cotton அவர்களைச் சிறப்பு அதிகாரியாக நியமித்து, 1852-ல் Sir Arthour Cotton அவர்களைச் சிறப்பு அதிகாரியாக நியமித்து, அவர் தலைமையில் பொதுப் பணித் துறை Commission ஒன்று அமைக்கப்பட்டது. அவர்தான் காவிரியில் முக்கொம்பு என்கின்ற மேலணையையும், அணைக்கரையிலுள்ள கீழணையையும் கட்டியவர். கல்லணையில் மணல்போக்கியை அமைத்தவரும் இவரே. அந்த Commission தான், 1858 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறையை உருவாக்கியது. Sir Arthour Cotton தான் முதல் தலைமைப் பொறியாளர்; P.W.D.வினுடைய செயலாளரும் அவரே. 1887-இல் Penny Cuick என்ற ஆங்கிலேயர் பொதுப் பணித் துறையிலே பணியாற்றியவர், முல்லைப் பெரியாறு அணையைக் கட்டினார். 1817-ல் Colonel Ellis என்கிறவர்தான் மேட்டூர் அணைக்கு வடிவமைத்துக் கொடுத்தார். 1870-ல் Anderson அவர்கள்தான் தாமரைப்பாக்கம் அணையைக் கட்டி, புழல் ஏரிக்குத் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தார். இன்று இருக்கும் பொதுப் பணித் துறை அலுவலகம், மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, டி.ஜி.பி. அலுவலகம், சென்னைப் பல்கலைக்கழகம், பாரிமுனை முதல் அடையாறு வரையில் இருக்கிற இன்றைய காமராஜர் சாலை, உயர் நீதிமன்றக் கட்டடம், சட்டக் கல்லூரி, மாவட்ட அலுவலகங்கள், சென்னைப் பொது மருத்துவமனை, சட்டப் பேரவையினுடைய இந்தக் கட்டடம், இராஜாஜி மண்டபம், அது மட்டுமல்லாமல், கோவையிலே இருக்கிற விவசாயக் கல்லூரி என்று இந்தக் கட்டடங்கள் எல்லாம் பொதுப் பணித் துறையின் காலத்திலே கட்டப்பட்டவைதான்.

பிற்பகல் 1-05

அதே பொதுப் பணித் துறை, சவாலாக ஏற்று, இந்த ஆண்டு 150-வது ஆண்டு விழாவிலே நிற்கிற காரணத்தினால், இந்த மாமன்றத்திற்கு ஒன்று சொல்கிறேன். இந்த ஆண்டு 150-வது ஆண்டு பொதுப் பணித் துறையினுடைய விழாவில், என்னுடைய துறையில் இருக்கிற அதிகாரிகளை நம்பி, இந்த அவையிலே நான் ஒன்று சொல்கிறேன். இப்படிப்பட்ட அரிய, பெரிய காரியங்களைச் செய்த பொதுப் பணித் துறை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்தாரே, புதிய சட்டமன்றப் பேரவை அலுவலகம் ஒன்று கட்டப்படும் என்று; இன்னும், நாம் எல்லோரும்

ஒத்துழைத்தால், வருகிற அடுத்த நிதிநிலை அறிக்கையினை--நிச்சயமாகப் புது சட்டப் பேரவை அலுவலகத்திலே அந்த நிகழ்ச்சி நடைபெறும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்: *(மேசையைத் தட்டும் ஒலி)*

150-வது ஆண்டு விழா--தமிழ்நாட்டில் எந்த விழாக்கள் வந்தாலும், அவற்றைக் கொண்டாடுகிறவர் தலைவர் கலைஞர் அவர்களாகத்தான் இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* வரலாற்று விழாக்கள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்து எடுக்க வேண்டுமென்பது காலத்தின் கட்டாயமோ? *(மேசையைத் தட்டும் ஒலி)* அல்லது, எந்நிலையிலும் தன் நிலையிலிருந்து விழாத் தலைவர் கலைஞர் என்பதால், இவற்றுக்கெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் விழா எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திராவிட இயக்கத்தின் பவள விழா, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொன் விழா, சுதந்திர இந்தியாவின் வெள்ளி விழா, குடியரசு தினப் பொன் விழா, சட்டமன்றத்தின் பொன் விழா, சட்டமன்றத்தில் கலைஞருக்குப் பொன் விழா, பெரியாருக்கு நூற்றாண்டு விழா, இதோ இப்பொழுது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதன்முதலாக அமைச்சர் என்ற தகுதியை, பெருமையைத் தேடித் தந்த பொதுப் பணித் துறைக்கும் 150-வது ஆண்டு விழா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அடுத்து, அடுத்த ஆண்டு, எங்கள் உயிர், எங்கள் ஊன், எங்கள் உணர்வு, எங்களையெல்லாம் ஆளாக்கிய ஏன் தமிழர்களைத் தட்டி எழுப்பிய எங்களுடைய தலைமகன் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நூற்றாண்டு விழா *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆண்டு செப்டம்பரில். இத்தனை விழாக்களை எடுத்த தலைவர் முதல்வரே, நான் இந்த விழாவிலே இல்லாவிட்டாலும் கேட்டுக்கொள்கிறேன், இத்தனை விழாவை எடுத்த தலைவரே, தமிழக முதல்வரே, உன் நூற்றாண்டு விழாவையும் நாடு எடுக்கும்போது, *(மேசையைத் தட்டும் ஒலி)* நீரும் இருக்க வேண்டும்; அதனைக் காண நாங்களும் இருக்க வேண்டும்; *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த விழாவும் இந்த மன்றத்திலேயே நடைபெற வேண்டும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-10*

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பற்பல கருத்துகளைச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் விடையளிப்பதற்கு முன்னால் சில கருத்துகளை—நான் பல விஷயங்களுக்கு வருவதற்கு முன்னால், சில கருத்துகளை--சொல்லிவிடுகிறேன். இன்றைக்குப் பேசிய, அ.தி.மு.க. சார்பில் பேசிய திரு. தாமோதரன், தி.மு. கழகத்தின் சார்பில் பேசிய திரு. சேகரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய திரு. வேல்துரை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பேசிய திரு. காவேரி, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சியின் சார்பில் பேசிய திரு. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசிய திரு. இராமசாமி, ம.தி.மு.க. சார்பில் பேசிய திரு. இராமகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் பேசிய திரு. ரவிக்குமார், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் பேசிய திரு. இராம்பிரபு, அ.தி.மு.க. சார்பில் பேசிய திரு. கணேசன் ஆகியோர் நல்ல கருத்துகளை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துகளையெல்லாம் நானும் நெஞ்சிலே நிறுத்தியிருக்கிறேன். என் அதிகாரிகளும் அதைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் அப்படித் தட்டிப் பார்த்ததைவிட, மற்ற நேரங்களில் எல்லோரும் ஆக்கப்பூர்வமான கருத்துகளைச் சொன்னதற்காக அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்களுடைய மேலான கருத்துகளைக் கவனத்தில்கொண்டு அடுத்தடுத்து வருகிற நடைமுறையில் இவையெல்லாம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் நான் இந்த நோத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை எவ்வளவு முக்கியமானது என்பதை நான் அல்ல; என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களே இதில் ஈடுபாடு கொண்டவர். அவருக்கு ஒரு தீர்க்கதரிசனத் தனம் உண்டு. பாரதி பாடினான், சுதந்திரம் வருவதற்கு முன்னாலே.

> "ஆடுவோமே-பள்ளுப் பாடுவோமே;
> ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று."

ஆனால், அவன் இருக்கிறபோது சுதந்திாம் வரவில்லை. ஆனால், அவனுக்கு அப்போதே தீர்க்கதரிசனம் இருந்திருக்கிறது. அப்படிச் சில நிலைகள்; அப்படித்தான் சிலதெல்லாம். அதேபோல், அவருக்கு ஓர் உந்து சக்தி, ஓர் intuition உருவாகும், கலைஞருக்கு. அவர் எழுதிய 'பராசக்தி'-யில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தூங்கிக்

கொண்டிருப்பார்; அவர்மீது ஒரு போலீஸ்காரர் தண்ணீரைக் கொட்டி எழுப்புவார்; என்னவென்று கேட்பார்; பிளாட்பாரத்திலேகூட படுக்கக்கூடாதா, மனிதன்? என்று கேட்பார். அப்போது சொல்வான், 'நீ மேயராக வருகிறபோது பேசிக்கடா' என்று. அன்றைக்கு அவர் சொன்னார்; அடுத்து, அவரே முதன்மையாக இருந்து, சென்னை மாநகராட்சியிலே திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக மேயரைக் கொண்டு போய், அ.பொ. அரசு அவர்களை உட்கார வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 'மனோகரா' சினிமாவில், ஒரு வசனம் வரும். கடைசியாக. வசந்தன் சொல்வான், 'அண்ணா, நீதான் இந்த நாட்டை ஆள வேண்டும்' என்று சொல்வான். அதுதான் 1967-லே நடந்தது. 'மந்திரி குமாரி'-யிலே ஒரு வசனம் எழுதினார்; எல்லோருக்கும், 'உனக்கு இந்த மந்திரி, அந்த மந்திரி' என்று ராஜா சொல்வான். ஒருத்தன் கேட்டான்: 'நான் போய்ப் போய் வந்து, கொண்டிருக்கிறேனே, எனக்கு என்ன மந்திரி?' என்று கேட்பான். 'நீ போக்குவரத்து மந்திரி' என்று சொன்னார். (சிரிப்பு) ஆனால், கடைசியில் கலைஞரே போக்குவரத்துத் துறை அமைச்சராக 1967-லே வந்தார். அப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் அவருக்கு உண்டு.

போன வாரம் மதுரைக்கு நான் போய் இருந்தேன். அப்போது என்னுடைய நண்பர் சந்திரன் என்கிறவர், என்னிடத்திலே பழைய காலத்து 'முரசொலி' ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். எடுத்தவுடனே படித்தேன்: 'நீர்வளம் பெருக, நிலவளம் காணீர்', 'கல்லணைக் கட்டு, கங்கையை இணைப்பீர்' என்று தலைப்பிட்டிருந்தது. என்னவென்று பார்த்தால், 26-3-1958 ஆம் ஆண்டு. (குறுக்கீடு) ஆமாம்! இப்போது 50 ஆண்டுகள் ஆகின்றன. திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கணக்கைக் கடகடவெனச் சொல்கிறார். 50 ஆண்டுகளுக்கு முன்னால், இந்த மன்றத்தில் இதே பொதுப் பணித் துறை மானியம் நடந்தபோது, அவர் எதிர்க்கட்சியிலே உட்கார்ந்துகொண்டு, மானியத்திலே, கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களின்மீது கலைஞர் பேசுகிறார்; அப்போது பேசுகிறார்: 'சேலம் மாவட்டத்தில், சேர்வராயன் மலையிலுள்ள வட பகுதியில் வாணியாற்றில் அணை கட்டப்படுமானால், அரூர் தாலுகா முழுவதும் பாசன வசதி பெறும் என்று அந்த மக்கள் பல மனுக்களை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள்'. இதை 1958-லே பேசினார். ஆனால், அதே கலைஞர்தான் சென்ற முறை நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, அதே வாணியாற்றில் வரட்டாறு-வள்ளிமதுரை அணையை அவர்தான் கட்டினார். சமீபத்தில்தான் நாங்கள் திறந்து வைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்து, இன்னொன்று சொன்னார்: 'புதுக்கோட்டை பகுதியில் அக்கினியாறு, கோரையாறு, வெள்ளாறு, குண்டாறு போன்ற காட்டாறுகள் ஓடுகின்றன; அப்படி ஓடுகிற காட்டாறுகளை அந்தப் பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் தடுத்து, தேக்கி, சில திட்டங்கள் சொன்னால், அக்கினியாற்றுக்கு அணை கட்டினால், அந்தப் பகுதி நல்ல செழிப்பும், நல்ல வளமும் அடையும் என்று என்னைப் பார்க்கின்றவர்கள் சொல்கிறார்கள்' என்று சொன்னார். அதைத்தான் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த நிதிநிலை அறிக்கையிலே கலைஞர் அவர்கள் அதே திட்டத்தைச் சொல்கிறார்கள். "வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான, காவிரி, அக்கினியாறு, கோரையாறு, பாம்பாறு, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாகக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியிலே கதவணை அமைக்கும் திட்டம் ரூ.165 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" என்கிறார். ஆக, இதை 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொன்னார். அந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிதிநிலை அறிக்கையில் அவற்றைத் திரும்பச் சொல்கின்றார்.

பிற்பகல் 1-15

அதுமட்டுமல்ல; பொதுப் பணித் துறையில் இன்னொன்று. நெல்லை மாவட்டத்திலுள்ள கீரியாறு, பம்பையாறு ஆகிய ஆறுகளுக்கு பல நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அது நியாயம். கீரியாற்றுப் பிரச்சினையில் என்னவென்று இங்கேகூட சிலர் பேசினார்கள். எலுமிச்சையாறு திட்டம்பற்றி நம்முடைய வேல்துரை பேசினார். எலுமிச்சையாறு திட்டத்திலே வனத் துறை பிரச்சினை; கீரியாற்றிலே கேரளப் பிரச்சினை; பம்பையாற்றிலே என்ன? பம்பா-அச்சன்கோவில் திட்டம். நமக்கு 2 ஆயிரம் மெகா வாட்டுக்கு மேலே ஆண்டொன்றுக்கு காற்றிலே திரும்பிப் போகின்றது. ஆனால் திருப்பித் தரமாட்டேன் என்கிறார்கள். பம்பா-அச்சன்கோவிலில் போகின்ற தண்ணீரைத் திருப்பினால் 22 டி.எம்.சி. நமக்கு வந்தால் போதும்; கோவில்பட்டி, சிவகிரி மற்றும் கடையநல்லூர் போன்ற பகுதிகள் பாசன வசதி பெறும். ஆனால், தரமாட்டேன் என்கிறார்கள். ஆனால் கலைஞர் திட்டத்தைச் சொன்னார்கள். அவர் அப்படிச் சொல்கின்றார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் கோதை நதி நீர்த் திட்டம். வடவாறு சீர்திருத்தம் செய்யப்படவில்லை என்று சொன்னார். வடவாறு சீர்திருத்தம் செய்யப்படவில்லை என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த

அவையிலேயே பேசினார். கொள்ளிடத்திலேயிருந்து ஒரு கால்வாய் பிரியும். அதுதான் வடவாறு. 22 கி.மீ. தூரம். அதுதான் வீர நாராயண ஏரிக்கு, வீராணத்திற்குத் தண்ணீரைக் கொண்டு வருவதாகும். அதைச் சீர்படுத்தவில்லை என்று 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பேசினார். அதே கலைஞர்தான் போன முறை வந்தபோது, 23 கோடி ரூபாய்க்கு மேலே செலவிடப்பட்டு, தளம் அமைத்து, கொள்ளிடத்திலேயிருந்து வீராணம் வரையிலே, கால்வாயிலே தன் காரை ஓட்டிக்கொண்டு வருகின்ற அளவுக்கு அதைச் செப்பனிட்டுக் கொடுத்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் சொல்கின்றார், பனமலை ஏரித் திட்டம், தென்னாற்காட்டில் நிறைவேற்றப்படவில்லை என்று. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நந்தன் கால்வாய்த் திட்டம்; அப்போது கக்கன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர்; அப்போது சொல்கின்றார்: "நந்தன் பெயர்பெற்ற அந்த மாவட்டத்திலேயே, நந்தன் பாரம்பரையின் புகழை நிலைநாட்ட வந்த, அந்தப் பரம்பரையிலிருந்தே வந்துள்ள அமைச்சர் அவர்கள், 'இன்னும் நிறைவேற்றப்படவில்லை' என்பதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்கின்றார். ஏற்கெனவே 1970-லே ஆட்சியிலே இருந்தபோது, நந்தன் கால்வாய்த் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றினோம். அதாவது, துரிஞ்சலாற்றிலே கீரனூர் அணைக்கட்டிலேயிருந்து 36 கிலோ மீட்டர் ஓடி, பனமலை ஏரியிலே கலக்கிறது. விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்கள் மற்றும் மேல்மலையனூர் பகுதிகளிலுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுக்கும். எனவே, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார். இடையிலே நிறைவேற்றினோம். ஆனால், தூர்ந்து போய்விட்டது. இப்போது அந்தத் திட்டத்திற்கு உள்நாட்டு ஆறுகளை இணைப்பதில் - Interlinking of rivers - தென்பெண்ணையையும், செய்யாறையும் இணைக்கின்ற திட்டத்தில், ஆலத்தூர் அணைக்கட்டிலிருந்து ஒரு கால்வாய் வெட்டிக் கொண்டு போய், துரிஞ்சலாற்றிலே விட்டு, அங்கிருந்து நந்தன் கால்வாய்க்கு எடுத்துச் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கமண்டலா நதியில் அணை கட்டவேண்டுமென்கின்றார். அதாவது, போளூருக்குப் பக்கத்தில் செண்பகத் தோப்பு அணை. இதைப்பற்றி 50 ஆண்டுகளுக்கு முன்னாலே பேசினார். அவர் வந்துதான் இதைக் கட்டினார். பிறகு சொல்கின்றார்: "குடகனாறு திட்டத்தைப்பற்றி நான் விளக்கமாகப் பல முறை பேசினேன்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால்,



என்னுடைய தொகுதியில்—அப்போது குளித்தலை அவருடைய தொகுதி; குளித்தலை தொகுதியில்--பல பகுதிகள் பாசன வசதி பெறும்; 20 மைல் நீளம் கால்வாய் வெட்டினால், என்னுடைய குளித்தலை தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறும்" என்று சொன்னார். எந்தக் குடகனாறைச் சொன்னாரோ, அதே குடகனாறைக் கலைஞர்தான் கட்டினார். அதைக் கட்டியதற்குப் பிறகு, வெள்ளியணை வரை அந்தக் கால்வாய் வரவேண்டுமென்பதற்காக, ஒரு முறை அவருடன் நாங்களெல்லாம் அங்கே போய் நின்றிருந்தபோது, அந்த இடத்திலே ரெட்டியார் ஒருவர் வந்தார். அவர் என்ன சபதம் செய்திருந்தார் என்றால்--கலைஞர் 1957-இலே நின்றதிலிருந்து-- எப்பொழுது வெள்ளியணை வரையிலே குடகனாறு தண்ணீர் வருகின்றதோ, அப்பொழுதுதான் சட்டை போடுவது, அப்பொழுதுதான் காலிலே செருப்பு அணிவது என்று இருந்துவிட்டார். பிறகு நாங்கள் 2000 ஆம் ஆண்டிலே போய் பார்த்து, அந்தப் பெரியவரையும் அழைத்து அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றச் சொன்னார். அந்த வெள்ளியணை வரையிலே தண்ணீரைக் கொண்டு வந்து கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

**அதேபோல்தான், தஞ்சை மாவட்டத்தில், காவிரிப் பகுதியில் தூர்ந்து போயிருக்கின்ற வாய்க்கால்களையெல்லாம் தூர் வார வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பு பேசியவர்தான், முதன்முதலாகக் காவிரியிலே தூர் வாருகின்ற பணியைத் துவக்கி, இன்றைய வரையிலே நடத்திக்கொண்டிருக்கக்கூடியவர்கள். ஆக இப்போது, 50 ஆண்டுக்கு முன்னாலேயிருந்து இந்தத் துறையில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்து இந்தத் துறையினுடைய மேம்பாட்டிற்கு உழைத்து வருகிறவர் எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**அவரிடத்திலே பயிற்சி பெற்றிருக்கின்ற நாங்கள், அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்ற நாங்கள், அவர் காட்டுகின்ற வழியை நாங்கள் பின்பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன இந்தக் கருத்துகளை எல்லாம் நடைமுறைப்படுத்துவோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய நண்பர்கள் பலர் சொன்னார்கள்: 'போன முறை நீங்கள் என்ன செய்தீர்கள்?' அதாவது, 'போன முறை போட்ட திட்டங்கள் எல்லாம்**

என்ன ஆயிற்று?' என்று கேட்டார்கள். 'போட்ட திட்டங்கள், இதற்கு முன்னால் போட்டீர்களே, அறிவித்தீர்களே, அவையெல்லாம் நிறைவேறிவிட்டனவா?' என்று கேட்டார்கள். (குறுக்கீடு) 2007-2008 ஆம் ஆண்டு நாங்கள் சொன்னது, நதிகளை இணைக்க வேண்டும்; முடியாவிட்டால் உள்நாட்டு நதிகளையாவது இணைக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தை நாங்கள் அறிவிப்போம் என்று சொன்னோம். மற்ற தென்னக நதிகளை இணைக்க வேண்டுமென்று N.D.C. Meeting-லே கலைஞர் அவர்கள் அழுத்திப் பேசினார்கள். பேசியது மட்டுமல்ல; அப்படி இணைப்பதற்கான பணத்தை மத்திய அரசு தரவேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே முடியாவிட்டால், உள்நாட்டிலே இருக்கின்ற ஆறுகளை இணைக்கின்ற அந்தப் பணியை என் அரசு செய்யும்; அதற்கு நீங்கள் உதவவேண்டும் என்று கேட்டபோது, உதவுவ்தாக அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, அதுகுறித்துக் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. ஆக, அதைச் சென்ற ஆண்டு நாங்கள் அறிவித்தோம். இந்த ஆண்டு அதற்காகத்தான் கட்டளையிலே ஒரு barrage கட்ட இருக்கிறோம். காவிரியிலே மிகையான தண்ணீர் வந்தால் கட்டளையிலே வெறும் ஒரு தடுப்புச் சுவர் இருக்கும். தண்ணீர் புரண்டு போய்விடும். தேக்கினால்தான் அங்கிருந்து தண்ணீரை மற்ற கால்வாய்களுக்கு அனுப்ப முடியும். அதற்காகத்தான் முதற்கட்டமாக அக்கினியாறு, கோரையாறு என்று சொன்னேனே, குண்டாறு வரையில் இணைப்பதற்கு, அதற்குக் கட்டளையில் இருக்கின்ற அந்த barrage-க்காக 165 கோடி ரூபாயை இந்த ஆண்டு நாங்கள் ஒதுக்கியிருக்கின்றோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இன்னொரு திட்டம், Intra-State; உள்நாட்டு ஆறுகளை இணைப்பது. தாமிரபரணியையும், நம்பியாற்றையும் இணைக்கின்ற அந்தத் திட்டத்திற்கு இப்போது 369 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார். ஆக, போன முறை சொன்னதை இந்த முறை நாங்கள் செய்திருக்கிறோம். இன்னொரு ஆறு இணைப்பு, பெண்ணையாற்றையும், செய்யாற்றையும் இணைப்பது. That is under D.P.R. ஆய்விலே இருக்கிறது. ஆக, மூன்று திட்டங்கள், நாங்கள் சொன்னபடி இந்த ஆண்டு எடுத்திருக்கிறோம். தமிழகத்திலேயுள்ள ஆறுகளில்--சென்ற ஆண்டு நாங்கள் அறிவித்தது; தமிழகத்திலேயுள்ள ஆறுகளில்--வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீரைக் கணக்கிட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தோம். 20-3-2008 அன்று ஒரு குழு அமைத்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



ஏரிகள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவோம் என்று நாங்கள் சென்ற ஆண்டு அறிவித்தோம். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம். 527 கண்மாய்களில் நில அளவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 327 கண்மாய்களில் எல்லைக் கற்கள் ஊன்றப்பட்டுள்ளன. 191 கண்மாய்களுக்கான வரைபடங்கள், அட்டவணைகள், பாசன நிலங்கள்பற்றிய விவரங்களைத் தயார் செய்திருக்கிறோம். 160 கண்மாய்களில் 1,323 ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து, 1028 ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். 203 ஆக்கிரமிப்புகளை அகற்றியிருக்கிறோம். 2008-2009 ஆம் ஆண்டில் சுமார் ஐந்தாயிரம் கண்மாய்களில் இதுபோன்ற பணிகளை மேற்கொள்வோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்ற ஆண்டு அறிவித்த திட்டங்களில் வேலூர் மாவட்டம், விண்ணமங்கலத்தில், வெள்ளக்கால் கானாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டப்படும் என்று சொன்னோம். சுமார் 16 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு, வனத் துறையினுடைய அனுமதிக்காக நாங்கள் அதை அனுப்பியிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

தருமபுரி மாவட்டம், அங்குத்தி சுனை வழியாக நீர் வழங்கும் கால்வாய் மேம்படுத்தப்படும் என்று நாங்கள் அறிவித்திருந்தோம். அதுவும் 14-8-2007 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 50 சதவிகித வேலைகள் முடிவுற்றிருக்கின்றன. தருமபுரி மாவட்டம், வேதாரம்பட்டி கிராமத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் குளத்தை விரிவாக்குவோம் என்று சொன்னோம். 14-8-2007-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, 80 விழுக்காடு வேலை முடிந்திருக்கிறது.

கரூர் மாவட்டம், நாகம்பள்ளியிலே, குடகனாறு ஆற்றின் குறுக்கேயுள்ள தடுப்பணையின் மேம்பாட்டிற்காக 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கினோம். ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 30 சதவிகிதம் முடிந்திருக்கிறது. திருச்சியிலே ரெட்டியார்பட்டியிலுள்ள கால்வாய்களையும், உத்திராட்சக்கோம்பையிலுள்ள அணைக் கட்டுகளையும் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தோம். 5-12-2007 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆக இப்படி நாங்கள் சொன்னவற்றையெல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம்.

அதேபோல, Part II Scheme-லே வெளியிட்ட திட்டங்களை அறிவித்ததில், 6 திட்டங்கள் முடிவுற்றிருக்கின்றன. 12 திட்டங்களுக்கு

வேலை நடந்து கொண்டிருக்கிறது. 2 திட்டங்கள் தொடங்கப்பட வேண்டும். ஆகவே, சொன்னதைச் செய்யக்கூடிய அரசு கலைஞருடைய அரசு என்பதை நாங்கள் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே சொன்னார்கள், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று. அன்றைக்குக்கூட ஒரு நண்பர் சொன்னார், இன்றைக்கு ஒரு நண்பர் சொன்னார்; நான் ஒன்று கேட்கிறேன். இது என் கையிலே இருப்பது, 2002-2003 ஆம் ஆண்டினுடையது. அவாள் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள். இந்தத் திட்டத்தில் அப்போது சொல்கிறார்கள் அவர்கள். அறிவிப்புகள்; என்ன அறிவிப்பு? நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் அறிவித்ததுதான். (குறுக்கீடு) என்ன? (குறுக்கீடு) உங்களைப் பார்த்தவுடனே எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. (குறுக்கீடு) திருச்சி மாவட்டத்தில், திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகள், அவர்கள் அறிவித்தது: "திருச்சி மாநகரில், வெள்ளப் பெருக்கத்தால் ஏற்படும் பாதிப்பினைத் துடைத்திட, கடந்த கால அரசு - எங்கள் அரசு - 1999-இல் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவித்த திட்டம், ஏட்டளவுத் திட்டமாகவே இருந்துவிட்டது. அரசாணை பிறப்பித்தும் நிதி ஒதுக்க எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு ஏற்ற முக்கியத்துவம் கொடுத்து, திருச்சி மாநகரத்தில் ஓடும் குடமுருட்டியாறு மற்றும் காவிரி ஆறு ஆகியவற்றில் உள்ள மண் மேடுகளை நீக்குதல், அரியாறு, பொறையாறு, குடிகால், வடிகால் மற்றும் உய்யக் கொண்டான் ஆறுகள் ஆகியவற்றை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்துவது ஆகிய பணிகளைச் செயல்படுத்துவதற்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சொன்னார்கள்.

இதில் என்ன சமாச்சாரம் என்று பூர்வத்திலிருந்து பார்த்தீர்கள் என்றால், 1999 ஆம் ஆண்டு ஒரு வெள்ளம் வந்தது. அப்போது நானும், கலைஞர் எல்லாம் போய்ப் பார்த்தோம். 'என்ன செய்வது?' என்றார். அப்போது சொன்னார்கள்: "உய்யக் கொண்டான் வாய்க்காலிலிருந்து குடமுருட்டி பிரிகிறது; புத்தூர் கலிங்கல் இருக்கிறது; அந்தக் கலிங்கலைப் பெரிதாக ஆக்க வேண்டும்; கால்வாயை அகலமாக்க வேண்டும்; திருச்சி வரையிலே உய்யக் கொண்டானைப் பெரிதாக்க வேண்டும்; இதற்கு எவ்வளவு செலவாகும்?" என்று கேட்டார். ரூ.50 கோடி ஆகும் என்றார்கள். "சரி, திட்டத்தை ரூபாய் 50 கோடிக்குப் போடுங்கள்" என்றார். ரூ.50 கோடிக்குப் போட்டோம். அடுத்தது,



1999 முடிந்தது; பிறகு 2000; 2001-இல் எங்கள் மேலே ஒரு பழியைப் போட்டு, யாரோ செய்தார்கள்; வீட்டுக்குப் போய்விட்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்குப் பிறகு என்ன பண்ணினார்கள் என்றால், இந்த 50 கோடி ரூபாய்க்கு நபார்டு என்ன சொல்லியது என்றால், "இது திருச்சி நகரத்திற்குள்ளே இருந்தால், நாங்கள் இதற்குப் பணம் கொடுப்போம்; இதிலே கொஞ்சம் irrigations எல்லாம் வருகிறது—Irrigation என்றால் நிரம்பத் தவறு இல்லையா?--.அதனால், அதற்குச் சேர்த்துக் கொடுக்க மாட்டோம்; உள்ளே வேண்டுமானால் கொடுப்போம்; இதற்குக் கொடுக்கமாட்டோம்" என்று சொல்லிவிட்டது. உடனே அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், "சரி, நீ கொடுக்காவிட்டால் போய்யா! உன்னோட 'கா' என்று சொல்லிவிட்டு, HUDCO-விடம் போனார்கள். HUDCO-விடம் போனவுடன், அவன் என்ன சொன்னான்? "நான் இவ்வளவு கொடுக்க முடியாது; நான் 30 கோடி ரூபாய் வேண்டுமென்றால் கொடுக்கிறேன்" என்றான். இவர்கள் சொன்னார்கள்: "அரசாங்கத்திலே, இந்த ஆக்கிரமிப்பு எடுப்பதற்கே நஷ்ட ஈடே 29 கோடி ரூபாய் ஆகிறது; நீங்கள் 30 கோடி ரூபாய் கொடுத்தால் என்ன பண்ணுவது?" என்று விட்டுவிட்டார்கள். விட்டுவிட்டு, இப்போது மறுபடியும் நாங்கள் வந்து அதற்குத் திட்டம் போட்டு, இன்றைக்கு 250 கோடி ரூபாய்க்கு 26 பணிகளை—31 பணிகளை—நாங்கள் எடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைக்கு 211 கோடி ரூபாய் என்று அவர் அறிவித்தார். ஆனால், மேற்கொண்டு இன்றைக்கு வந்திருக்கிறது. ஆகையினாலே கிட்டத்தட்ட 250 கோடி ரூபாயை இந்த ஆண்டு பட்ஜெட்டிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆனால் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "35 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி—ஒதுக்கி--அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்" என்கிறார்கள். எப்படி ஒதுக்கிவிட்டு, எப்படி இல்லாமல் போகும்?

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆணை வெளியிட்டிருந்தால், allotment money என்று போட்டிருந்தால் இருந்திருக்கும். எங்களைக் கேட்கவில்லை. நானும் இதைச் சொல்லப்படாது என்று இருந்தேன். ஆனால், நீங்கள் குற்றத்தைச் சொல்லுடா, சொல்லுடா என்றால் எப்படி? அதனால் இப்படிப் பல இருக்கின்றன. என்னால் நிறைய

சொல்ல முடியும். 'அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? இந்தத் திட்டம் என்ன ஆயிற்று?' என்றால், நான் சொல்கிறேன். அன்றைக்கு நண்பர் ஒருவர் பேசினார்: "திட்டம் போடுவதற்கு ஓராண்டு, அதைச் செயல்படுத்துவதற்கு ஓராண்டு, கான்ட்ராக்ட் விடுவதற்கு ஓராண்டு என எங்கள் அம்மா சொன்னார்கள்" என்றார். சொல்லட்டும், நமக்கு என்ன என்று பேசாமல் இருந்தேன். ஆனால், நான் சொல்கிறேன்; "வெலிங்டன் ஏரி என்ன ஆயிற்று, போன வருடம் அறிவித்தீர்களே?" என்றார். முதலில் ஒன்றைச் சொல்கிறேன்; அறிவித்தவுடனே அப்படியே பணம் ஒதுக்கினால்கூட, மறு நாளே மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட முடியாது. வெலிங்டன் ஏரி (குறுக்கீடு) என்ன வாதம்? நீங்கள் போட்ட திட்டமெல்லாம் என்ன ஆனது என்று சொல்லட்டுமா இப்போது? சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். ஒரு டெண்டரைத் திறப்பதற்கு இரண்டரை வருடம் ஆகியிருக்கிறது. சொல்ல வேண்டுமா நான் இதையெல்லாம்? வேண்டாம், நீங்கள் நல்ல மாதிரிப் பேசி இருக்கிறீர்கள்; நான் நல்ல மாதிரி விட்டுவிட்டுப் போய்விடுகிறேன்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) வெலிங்டன் ஏரி என்பது பெரிய ஏரி. முதல் உலக யுத்தம் நடந்தபோது அந்த ஏரியைக் கட்டினார்கள். அப்போதெல்லாம் இந்த technique எல்லாம் தெரியாது. மண்ணை வாரிக் கட்டிவிட்டார்கள். எவ்வளவு கஷ்டம் என்று பாருங்கள்! மண்ணை வாரிக் கட்டிவிட்டார்கள்.

(மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மேசைமீது வைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் குவளை கீழே விழுந்தது.)

இது நீர்ப்பாசன மானியம் இல்லையா? அதனால்தான்! (சிரிப்பு)

உலகப் போர் நடந்தபோது வெலிங்டன் ஏரியைக் கட்டினார்கள். எவ்விதமான பொறியியல் தொழில்நுட்பங்களையும் கையாளாமல், பக்கத்தில் இருந்த மண் மேட்டில் இருந்து மண்ணை எடுத்துக் கரையைக் கட்டினார்கள். கரை, பலம் இல்லை; சரிந்து போய்விட்டது. 1923-ல் இருந்தே இந்தப் பிரச்சினை. ஒவ்வோர் முறையும் Dam Safety என்று வருவார்கள். 1933-ல் ஒரு தடவை repair செய்தார்கள். 1994-ல் Dam safety-யில் மிகப் பெரிய நிபுணர், தாண்டன், அவரே வந்து பார்த்து ஒரு யோசனை சொன்னார்; அதன்படி செய்தார்கள்; அப்போதும் சரிந்து போய்விட்டது. 1996-ல் மறுபடியும் மண் சரிந்துவிட்டது. 1998-ல் மறுபடியும் சரிந்து போய்விட்டது, 30 இலட்சம் ரூபாய் செலவு பண்ணியும். அதற்குப் பிறகு, இப்படியே செலவு பண்ணி, இவர்கள் என்ன பண்ணினார்கள் என்றால், ரூ.3 கோடியை ரூ.5 கோடியாக்கிப்



பார்த்தார்கள். அப்போதும் பலனில்லை. எல்லாம் முடிந்த பின்னர், இப்போது கலைஞர் சொன்னார்; ரூ.20 கோடியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள் கேட்டு, உடனே போன முறை announce பண்ணினோம். ஆனால், ஏன் இதில் 10 தடவையும் இவ்வாறு நடக்கிறதே, இந்த ரூ.20 கோடியும் செலவு செய்தால் என்ன ஆகும் என்பதற்காக ஒரு வல்லுநர் குழுவை நாங்கள் போட்டு இருக்கிறோம். அந்த வல்லுநர் குழு--ஏனென்றால், திரு. தாண்டன் கொடுத்த concept-ஏ தவறிப் போய் இருக்கிறது என்றால், இதிலே எங்கேயோ wrong என்று அவர்கள் பயப்படுகிறார்கள்--எனவே 20 கோடி ரூபாயில் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று மிகக் கஷ்டப்பட்டு ஒரு report தயாரித்து வைத்திருக்கிறார்கள். அந்த report இந்த மாதம் இறுதிக்குள்--ஏப்ரல் மாதம் இறுதிக்குள்--கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிடைத்த பிறகுதான், அந்தக் concept-ன்மீது நாங்கள் டெண்டர் கூப்பிட முடியுமே தவிர, எடுத்தவுடன் திடீர், திடீர் என்று கூப்பிட்டுவிட முடியாது. அப்படிக் கூப்பிட்டவுடனே என்ன சொல்வீர்கள்? "போன தடவை என்ன ஆயிற்று? உடைந்துவிட்டது" என்பீர்கள். ஆகையால், நாம் இரண்டு பேரும் பேசிக்கொள்வது என்பது அல்ல; அதனால், விவசாயிகள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள்? இதில் என்ன விஷயம் என்றால், எங்கள் கிராமத்தில் சொல்வார்கள்; ஒருத்தன் போய் கேட்டானாம், 'என்னடி குழம்பு?' என்று. அதற்கு அவள் சொன்னாளாம்: 'புட்டுக்கறதுக்கே காணோம்; தொட்டுக்கறதுக்குக் கேட்கிறாயே?' என்றாளாம். நாங்கள் ரூ.20 கோடி ஒதுக்கிவிட்டு, கமிட்டி போட்டு, இதை எப்படி Dam safety போட்டு, எப்படி strengthen பண்ணுவது என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்; செல்வப் பெருந்தகை, அதிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி, இன்னும் ஓர் ஆயிரம் பேருக்குப் பாசனம் கொடு என்று சொல்கிறார். உங்களுடைய அதிர்ஷ்டம், நல்லபடியாக அது நடந்தால், பார்க்கலாம்.

பிற்பகல் 1-35

அடுத்து, இன்னும் ஒன்று; மற்றது எல்லாம் நிறைய இருக்கிறது; நிறைய கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய பீட்டர் அல்போன்சுக்குத் தெரியும், வக்கீல் மாதிரி கட்டுக்களைக் கொண்டு வந்திருக்கிறேன். வேண்டாம், ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மணல் பிரச்சினையிலே ஏதோ ஒரு பெரிய தவறு நடந்துபோன மாதிரியும், இதைப் பெரிய... (குறுக்கீடு) "நடக்கவில்லையா? நடக்கவில்லையா?" என்று கேட்கிறார்கள். நடந்ததா, நடக்கவில்லையா என்று சொல்கிறேன் நான். (குறுக்கீடு) திரு. விசுவநாதன்; நான்

சொல்லிவிடுகிறேன் உங்களுக்கு. இவர்கள் சொன்னார்கள்; "எங்கள் அம்மா மணல் எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்" என்று இங்கேகூட ஒரு நண்பர், கணேசன் பேசினார். "நாங்கள் எல்லாம் மறியல் பண்ணினோம்" என்றும் சொன்னார். நான் ஒன்று கேட்கிறேன். உங்கள் ஆட்சியிலே ஆற்றில் மண் எடுக்கவில்லையா? ஆற்றில் மண் எடுப்பதற்கு 'அ' 'ஆ' எழுதியதே நீங்கள்தானே? சும்மா சொல்லக்கூடாது, கண்ணாடி வீட்டுக்காரன் கல் எடுக்கக்கூடாது. எடுத்துக்கொள்ளுங்களேன்! இதுபற்றி உடனே அம்மாகூட ஓர் அறிக்கை விட்டார்கள். பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன், அந்த அறிக்கையைப் பற்றி. நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஓர் அறிக்கை விட்டார்கள். "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கடமலை ஒன்றியத்தில் தருமராஜபுரத்தில் மைனாரிட்டி தி.மு.க. அரசு, மணலை அள்ளுகிறது; எனவே, மக்கள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இது மக்கள் நலனுக்கு எதிரான அரசு" என நான்கு பேரைக் கூப்பிட்டு அறிக்கை விட்டார்கள். சரி, நானும் சம்பந்தப்பட்ட அதிகாரியைக் கூப்பிட்டு, "ஏன் ஐயா போய் எடுத்தீர்கள்? ஒரு காலும் தொடாத இடத்தை நீங்கள் தொடலாமா? அதெல்லாம் பண்ணப்படாதுங்க; ஏன் ஐயா எடுத்தீர்கள்?" என்றேன். அதற்கு அவர், "அவர்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள் சார், இது நாங்கள் செய்யவில்லை, அவர்கள் எடுத்த இடம்" (மேசையைத் தட்டும் ஒலி) என அப்போது அவர்கள் சொல்கிறார்கள். 2003 முதல் 2006 வரையில், வைகை அணைக்கு மேலே ஆண்டிப்பட்டி தொகுதியிலே வைகை அணையில் எங்கெங்கே எடுக்கிறார்கள் பாருங்கள். கண்டமனூரில் 9-10-2003 முதல் 10-7-2004 வரையில் மணல் எடுத்திருக்கிறார்கள், 10,351 லோடு எடுத்திருக்கிறார்கள். ஆண்டிப்பட்டி தொகுதி, வைகை, கண்டமனூர், தேனி மாவட்டம். வள்ளல் நதியில், 3-10-2003 முதல் 5-11-2003 வரையில், 27-11-2003 முதல் 13-3-2004 வரையில், 20-10-2004 முதல் 22-2-2005 வரையில் அப்போது எடுத்திருக்கிறார்கள். ஆக மொத்தம் 14,547 லோடு நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். அதே இடத்தை நாங்களாகப் போய் எடுப்பதில்லை. ஆனால், கலெக்டர் சொல்கிறார்; உடனே நாங்கள் அதுபற்றிக் கேட்டுப் போகிறோம்; உடனே அவன் கொடுக்கிறான்; நாங்கள் என்ன சமாச்சாரம் என்று கேட்கிறோம்; நாங்களும் எடுத்துக்கொள்கிறோம்; ஆனால், நீங்கள் எடுத்துக்கொண்டு, நீங்கள் மட்டும் எடுக்காதது மாதிரியும், என்னமோ நாங்கள்தான் எடுத்தது மாதிரியும், மறியல் என்று சொல்கிறீர்கள்.

மூன்றாவது ஒன்று கேட்கிறேன்; நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள்; அப்போது அரசின் வருமானம் என்ன, 2005-லே? நண்பர்



பன்னீர்செல்வம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 2005 ஏப்ரலிலிருந்து 2006 மே வரையில் நீங்கள்தான் இருந்தீர்கள். அப்போது ஒரு லோடு 600 ரூபாய்தான். 600 ரூபாய்க்கு விற்று, மறுநாள் பின்னாலே கோர்ட்டுக்கு எல்லாம் போனதை மறந்துவிடவில்லை நாங்கள். அந்த 2005 ஏப்ரல் முதல் 2006 மே வரையில் ஒரு வருடத்திலே நீங்கள் மணல் விற்ற வகையில் இந்த அரசுக்கு ஈட்டித் தந்த பணம் ரூபாய் 74.64 கோடி; இவ்வளவு பணம்தான். நாங்கள் மே மாதம்தான் ஆட்சிக்கு வந்தோம். அதற்கப்புறம் அந்த 11 மாதத்தில் அதே 600 ரூபாய். ஆனால் நாங்கள் night-லே எடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டோம். இருந்தாலும், 130 கோடி ரூபாயை நாங்கள் ஈட்டித் தந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 74 கோடி எங்கே? 130 கோடி எங்கே? 2007-லிருந்து 2008 வரையில், இப்போது போன மாதம் முடிய அரசுக்குக் கிடைத்திருப்பது 120 கோடி ரூபாய். போன வருடம் 130 கோடி, இந்த வருடம் ஏன் 120 கோடி? ஏனென்று கேட்டீர்கள் என்றால், முதலில் மண் எடுத்திருந்தார்கள். அவர்களிடமிருந்து இவர்கள் எடுத்துக்கொண்டார்கள். எடுத்த உடனே என்ன ஆயிற்று? அவர்கள் எல்லாம் கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள். கோர்ட்டுக்குப் போய் 18 பேர், 20 பேர் சுப்ரீம் கோர்ட்டில் ஆர்டர் வாங்கிக் கொண்டு வந்து, நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். எடுத்ததன் விளைவு, அந்தக் கணக்கிலே நாங்கள் போட்டபோது, அதில் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்குமேல் வருகிறது. ஆகவே, அவன் எங்களுக்குப் பணம் கட்டவில்லை. அவன் நேராக வந்தான். சுப்ரீம் கோர்ட்டிலே ஆர்டர் வாங்கினான். அவன் ரெவின்யூவிலே போய் பேப்பருக்கு ஒரு சீல் போட்டான். இதில் எங்களுக்கும், அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அவன் வாரிக்கொண்டு போய்விட்டான். ஆனால், லோடு கணக்கில் மட்டும் கணக்கு எடுத்துப் பார்த்தால், 12 கோடி ரூபாய் வருகிறது. ஆகையால், இந்த ஆண்டு அந்த ரூ.12 கோடி எங்களுக்கு வந்திருந்தால், 132, 133 கோடி ரூபாய்க்கு நாங்கள் ஈட்டியிருப்போம். அடுத்த ஆண்டு அதையும் சேர்த்துச் செய்வோம். எனவே, மணல் கொள்ளை நடந்துவிட்டது, மணல் கொள்ளை நடந்து விட்டது என்று சொன்னால் எப்படி? எப்படி என்று அதைப்பற்றிச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

பிற்பகல் 1-40

அதே நோத்தில், நம்முடைய ராஜசேகரன் அவர்களும், நிறைய மணல் கொள்ளை நடந்துவிட்டது என்று பேசியிருக்கிறார். ஆனால், நான் விசாரித்துப் பார்த்தேன், மணல் திருட்டைப்பற்றி. என்ன நிலைமை? நல்லது, அவர்கள் சொன்னது கரெக்ட். நீங்கள்

சொன்னதற்கப்புறம் போலீஸ், எங்கள் அதிகாரிகள் அவ்வளவு பேரையும் கூப்பிட்டுக் கேட்டேன், ஒரு பொறுப்புள்ளவர் சொல்லியிருக்கிறார், எம்.எல்.ஏ., என்ன சமாச்சாரம் என்று. விஷயம் என்னவென்றால், இப்போது வந்திருக்கிறது. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். எங்களுடைய இலாகாவுக்கு ஒத்துழைத்ததற்கு நன்றி. திருச்சி மாவட்டத்தில், தொட்டியம் தொகுதியில் ஸ்ரீராமச்சந்திரபுரம், தொட்டியம் மற்றும் மணல்மேடு போன்ற இடங்களில் மாட்டு வண்டிகள்மூலம் மணல் எடுத்துச் செல்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் எல்லோருக்கும் கூடாது என்று சொன்னேன். மாட்டு வண்டிக்காரர்கள்தானே சார் என்று சொன்னார்கள். இப்போது நிரம்பப் பேர் அவர்களைத்தான் பிடித்துவிட்டார்கள். இன்றைக்கு சுமார் 400 முதல் 500 மாட்டு வண்டிக்காரர்கள் இப்படி மணல் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அப்படி எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதிலே ஒருத்தன் இருக்கிறான். அவர்களிடமிருந்து ஒரு மாட்டு வண்டிக்கு 40 ரூபாய்தான் நாங்கள் வசூல் பண்ணுகிறோம். ஆனால், அப்படி எடுத்துக்கொண்டு போகிற மணலையெல்லாம் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு இல்லாமல் அங்கே யாரோ ஒரு பெரிய தாதா, தங்கவேல் என்ற அவனிடம் கொண்டு போய்க் கொட்டிவிடுகிறார்கள். அப்படிக் கொட்டிய எல்லாவற்றையும் வாங்கி வைத்துக்கொண்டு, second sale என்று ஒரு அனுமதி வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறான் அவன். எப்படியோ கோர்ட்டிலேயிருந்து அப்படி ஒன்று வாங்கி வந்துவிடுகிறார்கள். வாங்கி வைத்துக்கொண்டு, அவன் ஒரு லாரி லோடு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று விற்கிறான். ஆக, அந்த 500 மாட்டு வண்டிக்காரர்களையும் பிடிக்க வேண்டியது; அங்கே போய் வாரிக்கொண்டு வாருங்கள் என்று மாட்டு வண்டிக்கு 40 ரூபாய் என்று கொடுப்பதும், இவன் கரையிலேயே கொண்டு வந்து கொட்டிக்கொள்ள வேண்டியது; கொட்டிக்கொண்டு, இவன் 2,000 ரூபாய் என்று விற்க வேண்டியது என இப்படி விற்கிறார்கள். அதே ஆட்கள், சமூக விரோதிகள், வரதராஜபுரம், மணல்மேடு, ஸ்ரீராமச்சந்திரபுரம் போன்ற பகுதிகளில் ஆட்களை வைத்து, மாட்டு வண்டி ஒன்றுக்கு 10 ரூபாய், 20 ரூபாய் என்று இதில் தண்டல் வேறு வசூல் பண்ணுகிறார்கள். எனக்கு யார், யாரென்றெல்லாம் கணக்காக நெம்பரோடு இப்போது வந்துவிட்டது. மாலை 6 மணிக்குமேல் மணல் எடுக்கக் கூடாது. இருந்தாலும், இந்த தாதாக்கள் அவர்களை மணல் எடுக்கச் சொல்கிறார்கள், night-இலேகூட. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் இங்கே சொன்ன குற்றச்சாட்டின்மீது விசாரித்த தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்திருக்கிறேன். ஒன்று மட்டும்



உறுதி. நான் கடுமையான நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். மாட்டு வண்டிமூலமாக மணலைத் திருடிக் கொண்டு வந்து கரையிலே கொட்டி, second sale permit வாங்கி வைத்துக்கொண்டு, அதை லோடாக விற்கிறவர்கள் குண்டர் சட்டத்திலேயே தள்ளப்படுவார்கள் என்று நான் எச்சரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இப்படி ஒத்துழைத்த நண்பர் திரு. மா. ராஜசேகரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, இங்கே நண்பர்கள் எல்லோரும் பேசிய கருத்துகள் எல்லாவற்றையும் ஞாபகத்திலே வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த அரசு எடுக்கிற நடவடிக்கைகளுக்கு நீங்கள் ஒத்துழைத்திருக்கிறீர்கள்.

இறுதியாக, உங்களிடத்திலே நான் சில அறிவிப்புக்களைச்@ செய்யப் போகிறேன்:

### 1. பொதுப் பணித் துறையின் 150-வது ஆண்டு விழா

பழமையும், பெருமையும் பெற்று, அரிய, பெரிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் பொதுப் பணித் துறை, 150 ஆண்டு கால வரலாற்றை இன்று படைத்துக்கொண்டிருக்கிறது.

நீர்வளத்தைப் பாதுகாப்பதும், அந்நீரைக் கொண்டு வயலில் வளத்தை உருவாக்குவதும், இடர்களைக் கடந்து, புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பதும் - பல்வேறு கலாச்சாரப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் கட்டடங்களை அமைத்தும் 150 ஆண்டு காலம் நடைபோட்டு வந்திருக்கும் இந்தத் துறைக்கு இந்த மாமன்றம் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த 150-வது ஆண்டு விழாவைத் தமிழக அரசு, பொதுப் பணித் துறையின் சார்பில் கொண்டாடும் வகையில், ஜூன் 1 ஆம் தேதி முதல் ஜூன் 15 ஆம் தேதி வரை தமிழகத்தில் உள்ள அணைக்கட்டுகளையும், கட்டடங்களையும் வண்ண விளக்குகளால் அலங்கரிப்பது என்றும், அத்தருணத்தில் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன முறை குறித்து ஆங்காங்கே முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பொறியாளர்கள் தலைமையில் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவது என்றும், பொதுப் பணித் துறையின் சாதனைகளை, புத்தகம், துண்டுப் பிரசுரம் மற்றும் நிழல் படங்களின் வாயிலாக விளக்குவது என்றும்,

@ 938 முதல் 950 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நூலகம் மற்றும் அருங்காட்சியகம் அடங்கிய கட்டடம் ஒன்று 150-வது ஆண்டை நினைவுகூரத்தக்க வகையில் கட்டுவது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த விழாவை முன்னிட்டு, மேட்டூர், முக்கொம்பு, கல்லணை, கீழணை (Lower Anaicut), சாத்தனூர், கிருஷ்ணகிரி, மணிமுத்தாறு, மோர்தானா, கீழ்பவானி, வைகை ஆகிய அணைக்கட்டுகளில் உள்ள பூங்காக்களை விரிவுபடுத்தி, அழகுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொதுப் பணித் துறையைச் சார்ந்த பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,000/- வீதம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

## 2. மேட்டூர் அணையின் பவள விழா

தமிழ்நாட்டில் நெற்களஞ்சியத்திற்கு நிரந்தரமான நீர் வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்டதுதான் மேட்டூர் அணை. பொதுப் பணித் துறை ஆற்றிய பணிகளில் இதை ஒரு சிகரம் என்று சொல்லலாம். இதைக் கட்டிய அந்தக் காலக்கட்டத்தில், உலகத்திலேயே ஒரு மைல் நீளத்திற்கு ஒரே நேர்கோட்டில் அமைந்த உயர்ந்த அணை இந்தக் கல்லணை. ஆசியக் கண்டத்திலேயே மேட்டூர் அணைதான் மிகப் பெரிய அணை என்ற கீர்த்தியும் பெற்று இருக்கிறது. அந்த அணைக்கு அடுத்த ஆண்டு பவள விழா வரப் போகிறது. அந்த நேரத்தில், அதைக் கட்டுவதற்குக் கரு தந்தவர்கள், அதை உருவாக்கித் தந்தவர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டவும், மேட்டூர் அணையின் பணிகளைப் படக் காட்சிகள்மூலம் மக்களுக்கு விளக்கவும் மேட்டூர் அணையில் ஒரு பெருவிழா ஏற்பாடு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அணையின் பெருமை கூறத்தக்க வகையில், பவள விழாவை முன்னிட்டு, எகிப்து நாட்டில் அஸ்வான் அணைக்கட்டில் எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம் போன்ற ஒன்றை இந்த அணையின் அருகில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய ஆலோசனை பெற்று நிறுவுவது என்றும் முடிவெடுத்திருக்கிறோம்.



## 3. செயல் திறன் மதிப்பீடு
## (Performance Evaluation Study)

தமிழ்நாட்டில் செயல்படும் பெரிய நீர்ப்பாசன ஆதாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ள செயல் திறனை மதிப்பிடும் பணி:

நம் நாட்டில் நீர்வளம் குறைவு. இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது மட்டுமல்ல; அந்த நீரின் உபயோகத் திறன் எவ்வாறு உள்ளது என்பதையும் கண்காணிக்க வேண்டிய ஒரு காலக்கட்டம் நமக்கு உருவாகி இருக்கிறது. நீர்ப் பயன்பாட்டில் பாசனத்திற்குப் பயன்படுவது கணிசமான பகுதி. உபயோகத் திறனை அமல்படுத்துவதால் நீரை மிச்சப்படுத்த முடியும். இன்றைய பாசனத் திட்டங்களில் பயன்பாட்டுத் திறன் சராசரியாக 40 முதல் 45 சதவீதமாக உள்ளது. இதனை, வளர்ந்துள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, திறமையான கண்காணிப்பாலும் மற்றும் மேலாண்மையாலும் மேம்படுத்த வேண்டியுள்ளது. காவிரி நடுவர் மன்றம், 45-லிருந்து 65 சதவீதமாக இந்த உபயோகத் திறனை உயர்த்த வேண்டும் என்று கூறி இருக்கிறது. இப்பணியை நடைமுறைப்படுத்த, முதலில் காவிரி டெல்டா, வைகை மற்றும் தாமிரபாணி பாசனத் திட்டங்களில் பாசனத் திறனை 60 சதவீதத்திற்கு அதிகரிக்க ஒரு செயல்பாட்டை மதிப்பிடும் பணியை **(Performance Evaluation Study)** 2008-2009 ஆம் ஆண்டு அமைப்பது என அரசு முடிவு செய்திருக்கிறது.

## 4. தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007

மழைக் காலங்களில் பெருகி வரும் வெள்ளத்தைத் தேக்கி வைக்கவில்லை என்ற குறைபாடு ஒரு புறம். அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு நம் முன்னோர்கள் கட்டிய ஏரிகளை ஆக்கிரமிப்பது இன்னொரு புறம்; அந்த ஆக்கிரமிப்புகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கோஷம் போடுவது இன்னொரு புறம் என்று இப்போது ஒரு பெரும் திரிசங்கு சொர்க்கத்தில் இந்தப் பொதுப் பணித் துறை ஏரிகளின் நிலை இருக்கின்றது. இந்த நிலையை மாற்ற வேண்டும். பொதுப் பணித் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ள 10,540 ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதுதான் தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007. அக்டோபர் 2007 முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது. அதன்படி, அனைத்துப் பொதுப்

பணித் துறை ஏரிகளின் எல்லைகள், நில அளவைத் துறையின் ஒத்துழைப்புடன் நிர்ணயம் செய்யப்படும்.

நான் முன்பே சுட்டிக்காட்டினேன். இதிலே நடப்பாண்டின் சட்டத்தைப் பயன்படுத்தி, பொதுப் பணித் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் சற்றேறக்குறைய ஐயாயிரம் ஏரிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏரிகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 5. காவிரி—நவீனப்படுத்தும் திட்டம்

காவிரி டெல்டா இயற்கையாக உருவானது. காவிரி நதி 36 ஆறுகளாகப் பிரிந்து, 10 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பிற்கு மேல் பாசனத்திற்குப் பயன்படுகிறது. இந்த ஆறுகளையும், கால்வாய்களையும் நவீனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அரசு பல முறை முயன்றும், காவிரி வழக்கு நிலுவையில் இருந்ததால், இந்தப் பணியைத் தொடரமுடியவில்லை. இப்போது காவிரி வழக்கு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. முதல் கட்டமாக, காவிரி டெல்டா பகுதியில் உள்ள ஆறுகளையும், வாய்க்கால்களையும் எவ்வாறு நவீனப்படுத்தலாம் என்பது குறித்து ஆய்ந்து அரசுக்கு ஓர் அறிக்கை அளிக்க, இந்தப் பாசனப் பகுதியில் நீண்ட, நெடிய அனுபவம் பெற்று ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருக்கிற பொறியாளர்களைக் கொண்ட ஒரு பணிக் குழு (Task Force) அமைக்கப்பட்டுள்ளது. மூத்த பொறியாளரும், தமிழக அரசின் நீர்வள ஆதாரத் துறையின் ஆலோசகருமான திரு. அ. மோகனகிருஷ்ணன் அவர்கள் இந்தப் பணிக் குழுவின் (Task Force) ஆலோசகராகவும், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர், இந்த பணிக் குழுவின் தலைவராகவும் இருந்து பணியாற்றுவார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

### 6. பதவி உயர்வு மற்றும் பணி நியமனம்

பொதுப் பணித் துறையில் கடந்த ஆட்சியில், (5 ஆண்டுகளில்) அதாவது, அ.தி.மு.க. ஆட்சியில் பதவி உயர்வு அளிக்கப்படவில்லை. போதிய பொறியாளர்களும் நியமிக்கப்படவில்லை. இந்த இரண்டு குறைகளையும் போக்குகின்ற வகையில் எங்கள் அரசு, 44 கண்காணிப்புப் பொறியாளர்களை (SE), தலைமைப்



பொறியாளர்களாகப் (CE) பதவி உயர்த்தி இருக்கிறோம், இந்த இரண்டு ஆண்டு காலத்தில். 103 செயற்பொறியாளர்களைக் கண்காணிப்புப் பொறியாளர்களாக இந்த இரண்டு ஆண்டு காலத்தில் பதவி உயர்த்தி இருக்கிறோம். 137 உதவி செயற்பொறியாளர்களை (AEE) செயற் பொறியாளர்களாகப் (EE) பதவி உயர்த்தித் தந்திருக்கிறோம். 175 உதவிப் பொறியாளர்களை (AE) உதவி செயற்பொறியாளர்களாகப் (AEE) பதவி உயர்த்தித் தந்திருக்கிறோம். பதவி மாறுதல்மூலம் 66 உதவிப் பொறியாளர்கள் நியமனம் செய்திருக்கிறோம். பல்வேறு நிலைகளிலிருந்து 167 பேர் வரைவாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். பல்வேறு நிலைகளிலிருந்து 548 பேர் அமைச்சுப் பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். ஆக மொத்தம் 1,240 நபர்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, 537 பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பணியும் ஆற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; தினக் கூலிப் பணியாளர்கள் 1,056 நபர்களுக்குப் பணி வரன்முறை செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தொடர்ந்து நடப்பாண்டிலும், 10 ஆண்டுகள் பணி முடித்துள்ள தினக் கூலிப் பணியாளர்களைப் பணி வரன்முறைப்படுத்தி நிரந்தரம் செய்ய இந்த அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கருணை அடிப்படையிலும், நேரடி நியமனம் மூலமாகவும் 177 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆக மொத்தம், கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,010 நபர்கள் பதவி உயர்வுமூலமாகவும், நேரடி நியமனம்மூலமாகவும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 2008-2009 ஆம் ஆண்டில் 244 உதவிப் பொறியாளர்கள் (AE) தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள், இந்த ஆண்டு.

கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 63 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களை நிரப்ப ஆணை வழங்கப்படும்.

2006-2007, 2007-2008 ஆகிய ஆண்டுகளில் நிரப்பப்பட வேண்டிய இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆக

மொத்தம் 694 நபர்களை நியமனம் செய்யவும் அரசு ஆணை வழங்கப்படவுள்ளது. ஆக மொத்தம் 1,001 நபர்கள் இந்த ஆண்டில் (2008-2009) பல்வேறு நிலைகளில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

**7. பொதுப் பணித் துறை (கட்டடம்)—சென்னை மற்றும் மதுரை என இரு மண்டலங்களாகப் பிரித்தல்**

பல்வேறு அரசுத் துறைகளில் கட்டடம் கட்ட வேண்டிய பொறுப்பு, பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் பணியாகும்.

ஆண்டுக்காண்டு ஒவ்வொரு துறையின் மூலதன ஒதுக்கீடும் கூடிக்கொண்டு போவதால், பொதுப் பணித் துறையில் உள்ள கட்டடப் பிரிவிற்குப் பணிச் சுமையும் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது.

விரைந்து பணியாற்றுதல்—திறமையோடு பணியாற்றுதல்—என்ற குறிக்கோளோடு கட்டடப் பிரிவின் ஒரே தலைமைப் பொறியாளர் சென்னையில் இருந்துகொண்டு மேற்பார்வையிடுவது கடினம் என்று உணர்ந்த அரசு, பணியை விரைவுப்படுத்தும் நோக்கோடு பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவை, சென்னை மண்டலம், மதுரை மண்டலம் என இரண்டு மண்டலங்களாகப் பிரிப்பதென்று முடிவு செய்திருக்கிறது.

இனிமேல் கட்டடப் பிரிவின் தலைமைப் பொறியாளர் ஒருவர் சென்னையிலும், மற்றொருவர் மதுரையிலும் இருந்து பணியாற்றுவார்கள்.

அவர்களுக்குரிய அதிகார எல்லைகள் அரசாணையின்போது வெளியிடப்படும்.

**8. திறந்தவெளிக் கிணறுகளின்மூலமாக செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் (Recharge)**

திறந்தவெளிக் கிணறுகளின்மூலமாக விவசாயிகளுடைய பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீரைச் செயற்கை முறையில் செறிவூட்டுவதற்கு, Recharge செய்வதற்கு, மத்திய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. தமிழ்நாடு உட்பட 7 மாநிலங்களில் இந்தத் திட்டம் 3 ஆண்டுகளில் செயலாக்கப்பட உள்ளது. இத்திட்டம், தமிழ்நாட்டில் 2008-2009 முதல் மூன்று ஆண்டுகளில் அதி நுகர்வு (Over exploitation), அபாயகரமான (critical) மற்றும் மித அபாயகரமான (Semi-critical)



நிலையில் உள்ள 232 ஒன்றியங்களில் விவசாயிகளின் பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீரைச் செறிவூட்ட ரூ. 509 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின்படி, ஒரு பாசனக் கிணற்றிற்குச் செறிவூட்டும் கட்டுமானப் பணிக்கு ரூ.4,000 தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட கிணறுகள் வைத்திருக்கிற விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிமூலம் மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்வாயிலாக செயற்கை முறையில் . . . (குறுக்கீடு)

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 'செறிவூட்டல்' என்று அமைச்சர் சொல்வது புரியவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதுதான் Recharge என்று சொன்னேனே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Recharge என்றுதான் சொன்னாரே!

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** எனக்கும்தான் தெரியாமல் இருந்தது. அதாவது, அது என்னவென்று சொல்கிறேன். (குறுக்கீடு) அதுதான் 'Recharge' சொல்கிறேன். அதைக் கேட்பீர்கள் என்ற காரணத்தால்தான் 'Recharge' என்று போட்டேன். அது என்னவென்றால், ஒரு விவசாயி கிணறு வைத்துக்கொண்டிருக்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Recharge என்றுதான் சொன்னாரே!

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நம் ஊர்களிலே மழைக் காலத்திலே தண்ணீர் வீணாகப் போய்விடுகிறது. கிணற்றைச் சுற்றி ஒரு கரை மாதிரிக் கட்டுவது; வீணாகிற அந்தத் தண்ணீரை அதிலே தேக்குவது; அந்தக் கிணற்றைச் சுற்றி, வழிந்து போகிற தண்ணீரை. அது பூமியிலே ஊறும். ஊறினால் கிணற்றிலே சுரக்கும்; இதுதான். 4,000 ரூபாய் மானியம், குறு விவசாயி, சிறு விவசாயிகளுக்கு. நீங்கள் பெரிய விவசாயி, பாதிதான் வரும்! (சிரிப்பு)

இந்தத் திட்டத்தின்வாயிலாக, செயற்கை முறையில் 12,50,370 பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் இம்மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'Recharge' என்றால் திரு. ஞானசேகரன் அவர்களுக்குப் பிடிக்கிறது; 'செறிவூட்டல்' என்று சொன்னால் திரு. ஜி.கே. மணிக்குப் பிடிக்கிறது; நான் என்ன செய்வது? (சிரிப்பு)

### 9. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 2008-2009-ல் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள்

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பாசனத் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் அவசியத்தின் அடிப்படையில் சில திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

நபார்டு வங்கி நிதியுதவியுடன் மட்டுமே 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 116.49 கோடி மதிப்பீட்டில் 61 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியாண்டிலும் அப்படிச் சில திட்டங்களையும் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்த அரசு முன்வந்து இருக்கிறது. அந்தத் திட்டங்களைச் சொல்கிறேன்:

மதுரை மாவட்டத்தில், பெரியாறு பிரதானக் கால்வாயின் 10-வது கிளை வாய்க்காலிலிருந்து சுண்ணாம்பூர் வழங்கு வாய்க்காலுக்குப் புற வழி வாய்க்கால் அமைத்தல் மற்றும் அதனைச் சார்ந்த 12 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கு 3 கோடி ரூபாய்.

சேலம் மாவட்டம், பூலாவாரி கிராமத்தில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தனேரி வரையிலான பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்த 0.68 கோடி—68 இலட்சம் ரூபாய்.

சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, கொண்டலாம்பட்டி கிராமத்தில் உள்ள நெய்க்காரப்பட்டி ஏரி வழங்கு வாய்க்காலைப் புனரமைத்து, மேம்படுத்துவதற்காக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய். கோடியிலேயே சொல்லிவிடுகிறேன். குறிப்பில் அதைத்தான் போட்டிருக்கிறார்கள்.



வேலூர் மாவட்டம், கசம் கிராமத்தில் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க 6 கோடி ரூபாய்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், சுங்கம் ஓடையின் கரையைப் பலப்படுத்துதல் மற்றும் இரைப்பையாற்றை மேம்படுத்தி பொய்கை ஆற்றுக்கு நீர் வழங்குவதற்காக 1 கோடியே 53 இலட்சம் ரூபாய்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில், தளி பெரிய ஏரியின் உடைப்பை நிரந்தரமாகச் சீராக்க 1 கோடியே 94 இலட்சம் ரூபாய்.

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களைப் புனரமைப்புச் செய்வதற்காக 15 கோடியே 70 இலட்சம் ரூபாய்.

வேலூர் மாவட்டம், பாண்டியன்மடுவு வாய்க்காலைப் புனரமைத்து, நவீனப்படுத்த 2 கோடியே 25 இலட்சம் ரூபாய்.

திருவள்ளூர் மாவட்டம், ஞாயிறு ஏரிக்கு நீர் வழங்க கொசஸ்தலையாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்காக 18 கோடி ரூபாய்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பெரிய ஏரியை நவீனப்படுத்த 8 கோடியே 2 இலட்சம் ரூபாய். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர், அவருக்குச் சொல்லிவிட்டேன்.

பெரம்பலூர் மாவட்டம், அத்தியூர் கிராமம், அத்தியூர் ஏரியை நவீனப்படுத்த 79 இலட்சம் ரூபாய்.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரபள்ளி கிராமத்தில் செருமக்காநல்லூர் மற்றும் சக்கரபள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க, குடமுருட்டி ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவதற்காக 3 கோடியே 90 இலட்சம் ரூபாய்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் அணைக்கட்டு மாணிக்குப்பம் ஏரியினைப் பாசன மேலாண்மைப் பங்கேற்றுதல்மூலம் நவீனப்படுத்த 88 இலட்சம் ரூபாய்.

தருமபுரி மாவட்டம், வாணியாறு சிறு வடிநிலத்தில், கல்லார் ஆற்றில் உள்ள 16 அணைக்கட்டுகளைப் புனரமைத்து, மேம்படுத்துவதற்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பாளையம் பரவு வாய்க்கால் மற்றும் பிட்டி. ராஜன் வாய்க்கால்களின் நீர் கொண்டு செல்லும் திறனை அதிகப்படுத்துவதற்காக 8 கோடி ரூபாய்.

*பிற்பகல் 2-00*

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஏரிகள், தோவாளை வாய்க்கால் மற்றும் இராதாபுரம் வாய்க்காலைப் புனரமைப்பதற்காக 25 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அத்தியூர் ஏரி மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவதற்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியம் பெரிய வேப்பத்தூர் கிராமத்தில் புதிய பாசன ஏரி அமைக்க ரூ.3 கோடியே 3 இலட்சம் ரூபாய்.

தஞ்சை மாவட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஏரியிலிருந்து நேரடிப் பாசனத்திற்குச் செல்லும் வாய்க்கால்களின் கரைகளைப் பலப்படுத்தி, concrete lining அமைப்பதற்கு 1 கோடி ரூபாய்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய வட்டங்களில், திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து செல்லும் மலட்டாறு வாய்க்கால் எல்.எஸ். 0 மீட்டரிலிருந்து 24,000 மீட்டர் வரையில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக 1 கோடி ரூபாய்.

ஆக, 106 கோடியே 72 இலட்சம் ரூபாய்க்கான திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருங்கள், வருகிறேன்.

மற்றும் இங்கே மாண்புமிகு அமைச்சர்கள் பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துகள் எல்லாம் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. குறிப்பாக, சிறப்பாக இங்கே பேசிய திரு. காவேரி அவர்கள், மேட்டூரிலே மிகையாக வருகிற தண்ணீரைக் கீழே இருக்கிற தொகுதிகளுக்கு, நங்கவல்லியோ அல்லது மேச்சேரியோ அல்லது ஓமலூர் போன்ற பகுதிகளுக்கோ எல்லாம் தண்ணீரைத் தர



வேண்டுமென்று கேட்டார்கள். நான் அன்றைக்குத் திரு. மணி அவர்கள் கேட்டபோதுகூட சொன்னேன். இதிலே தண்ணீர் வித்தியாசம் இருக்கிறது—level—ஆகையினாலே தர முடியாது என்று சொன்னேன். அவர் Pumping Station எல்லாம் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். அந்த Pumping Station-உடைய நிலைமை என்ன என்பதையும் நாங்கள் ஆய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அவர்கள் சொல்கிற இடங்கள் வறண்ட பகுதிகள். அதிலே நீர் வர வேண்டுமென்று கேட்பதில் நியாயம் இருக்கின்ற காரணத்தால், ஒரு முறைக்கு இரு முறை ஆய்வு செய்வோமே தவிர, அதைத் தூக்கிப் போடமாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கோவை மாவட்டத்தில் மிக முக்கியமாக எதிர்பார்க்கப்படுகிற ஒரு திட்டம், அத்திக்கடவு-அவினாசி திட்டமாகும். அந்தத் திட்டத்தின்படி, இப்போது காவிரியினுடைய உப நதியான பவானியிலிருந்து நாம் குறைந்தது இரண்டு, இரண்டரை டி.எம்.சி. தண்ணீரை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதில் இன்னொரு பிரச்சினை இருக்கிறது. போட்டிருக்கிற திட்டப்படி பில்லூர் அணைக்கட்டுக்கு மேலேயிருந்து எடுக்க வேண்டும். அங்கேயிருந்துதான் குடிநீர் கோவைக்கு எடுக்கிறார்கள். இருந்தாலும், அதை எப்படியோ மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு) பவானியிலிருந்துதான், அங்கிருந்துதான்; தெரியும். ஆகையினாலே, இருக்கிற பிரச்சினையில் அந்தத் திட்டம் கைவிடப்படக் கூடாது. காய்ந்த பகுதிக்குக் கேட்கின்ற ஒன்றுதான். எனவே, அதுகுறித்து ஒரு கமிட்டி போட்டு, இந்த அரசு ஆயும், நிச்சயமாக அதை இந்த அரசு பரிவோடு கவனிக்கும் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) தோணிமடுவு, அதேதான். வைத்திருக்கிறேன். தோணிமடுவில் என்ன பிரச்சினை என்று கேட்டால், இன்னும் அது காட்டுப் பகுதியிலே இருக்கிறது. அங்கே போய் அளக்கவே விடமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகையினால் மறுபடியும் சொன்னேன். கோவையிலே, முல்லைப் பெரியாறிலே, அவர்கள் ஊர்க்காரனே, காட்டுக்குள் உள்ளே விடமாட்டேன் என்று சொன்னாலும், அவர்கள் எப்படி உள்ளே போய் நுழைந்து வருகிறார்களோ, அப்படி நீங்களும் நுழைந்து போய் வாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அதுவும், ஆய்வு முடிந்த பிறகு தோணிமடுவைப்பற்றியும் நாம் அடுத்த கட்டத்திலே யோசிக்கலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த ஆண்டு கொடுத்திருக்கிற ஷீல்டு கால்வாய் (குறுக்கீடு) தெரியும். கமிஷன் எழுந்திருக்கிறார். ஷீல்டு கால்வாய் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு, World Bank -க்கு அனுப்பப்பட்டது. விரைவில் திட்டம் வரும்; நிறைவேற்றப்படும். காரணம், பெரியாறு அணையிலே குறுக்கே குறிச்சிகுளத்திற்கு வந்து, அங்கிருந்து நேராகக் கண்மாய்க்குப் போய்ச் சேர வேண்டும். அதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்?

நந்தன் கால்வாய் சேர்த்துவிட்டேன் என்று சொல்லிவிட்டேனே நான்தான்! நந்தன் கால்வாய், சாத்தனூர் அணையிலிருந்து செய்யாற்றில் கொண்டு வந்து கால்வாய் வெட்டுகிறபோது ஆலத்தூர் என்று ஒரு அணைக்கட்டிலிருந்து நேராகக் கொண்டு வந்து அந்தக் கீரனூர் அணைக்கட்டில் விட்டு, நேராகத் தண்ணீர் எடுத்துக்கொண்டு போவதற்கும் பனமலை ஏரி வரை 30 கிலோ மீட்டர் அந்தத் திட்டத்திலே எடுக்கப்படும் என்பதைச் சொல்லிவிட்டேன் உங்களுக்கு அப்போதே. (குறுக்கீடுகள்)

ஒவ்வொரு உறுப்பினரும் என்னென்ன திட்டங்களை நீங்கள் சொல்வீர்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவிக்கிறேன்-- கூடுமானவரையில் நான் அளந்து வைத்திருக்கிறேன். எல்லோருக்கும் ஒரு திட்டம் சொல்ல வேண்டும் என்றுதான் வந்தேன், நாங்கள் செய்ய இருக்கிற திட்டத்தை. ஆனாலும், நேரம் இல்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்துத் தருவீர்களேயானால், அந்த மகிழ்ச்சியில், நீங்கள் என்ன திட்டம் கேட்டாலும், அடுத்த ஆண்டு—அடுத்த ஆண்டு என்று இதை அறிவிப்பதனாலே இல்லை; அறிவிக்காமலேயும் செய்யலாம். அதைச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யும் என்று கூறி, இதனை நிறைவேற்றித் தா வேண்டுகிறேன். நன்றி.

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மணல் விற்பனையைப்பற்றி இங்கே நிரம்ப, நிரம்ப சுவாரஸ்யமாகப் பேசினார்கள். 1996-லேயிருந்து 2001 வரை இந்த மணல் விற்பனை



ஏல முறையிலும், எடுக்கப்படுகின்ற மணலுக்கு, Seigniorage fees-ஆக வசூலிக்கப்பட்டது. அந்த வகையில், ஒரு வருடத்திற்கு அரசுக்கு வந்த வருமானம் 29 கோடி ரூபாய்தான். சிலர், 2 வருடங்கள், 3 வருடங்கள் என்று டெண்டர் எடுப்பார்கள். திரும்பவும் உயர் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்று, அந்த ஆற்றுப் படுகையிலேயிருந்த மணல் எல்லாம் கொள்ளைபோன காரணத்தினால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் தடுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருந்து வந்தது.

2003-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை ஆய்வு செய்தபோது, மிகப் பெரிய வருமானம் தனியாரிடம் மணல் கொள்ளையாகப் போய்க் கொண்டிருக்கின்றது என்பதைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான், அரசே எடுத்து மணல் விற்பனை செய்கின்ற ஒரு கொள்கை முடிவினை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்தார்கள். அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த கொள்கை முடிவின்படி, ஒரு வருடத்திற்கு 27 கோடி ரூபாயிலிருந்து 29 கோடி ரூபாய் வரை வந்த வருவாயினை, ஒரே வருடத்தில் 148 கோடி ரூபாய் வரும் அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மணல் விற்பனையைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் சென்ற ஆண்டு நீங்கள் விவாத்தைத் தந்திருக்கின்றீர்கள். 3-10-2003-லிருந்து இதுவரையில் 446.31 கோடி ரூபாய் வருமானம் வந்தது என்று உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்றது. அதில், 2006-2007-ல் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், 128.11 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் கிடைத்துள்ளது என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். 446.31 கோடி ரூபாயிலிருந்து 128.11 கோடி ரூபாயைக் கழித்தால், 318 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது. அதாவது, தனியார் அனுபவித்துக்கொண்டிருந்ததைத் தடுத்து, இரண்டு வருடங்கள், 5 மாதங்களில் 318 கோடி ரூபாயை இங்கே அரசினுடைய கஜானாவிற்குக் கொண்டு வந்த பெருமை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டு வருடங்களே ஆகவில்லை! (குறுக்கீடுகள்)

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இருங்கள்; நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இது உங்களுக்குச் சம்பந்தமில்லாதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் முடித்துவிடுகிறேன், இருங்கள். (குறுக்கீடு) அவரை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கி. ஆறுமுகம், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, எங்களுடைய ஆட்சிக் காலமான--446 கோடி ரூபாய் இதுவரை கிடைத்தது என்று நீங்கள் சென்ற வருடம் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருக்கிறீர்கள். அதில், 2006-2007-ல் 128 கோடி ரூபாய் வருமானம் வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 446 கோடி ரூபாயில் 128 கோடி ரூபாயைக் கழித்தால், 318 கோடி ரூபாய்தான் வருகிறது. அப்படியானால், 2006-ல், 12 மாதங்கள் கழித்ததுபோக, அதற்கு முன்னாலே இருந்த காலம் 29 மாதங்கள் வருகின்றன. இந்த 29 மாதங்களில் 318 கோடி ரூபாய் வருமானம் வந்ததாக நீங்கள் அளித்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கின்றது. இதிலிருந்து, மணல் கொள்ளை போய்க்கொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்திய ஆட்சி யாருடைய ஆட்சி என்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் தேனி மாவட்டத்தில் உள்ள கேரள எல்லைப் பகுதியிலும்,



திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்ற கேரள எல்லைப் பகுதியிலும், நீங்கள் அனைத்துக் கட்சிகளினுடைய கண்காணிப்புக் குழுவை அனுப்பி அங்கே கண்காணிக்கச் சொல்லுங்கள். அவ்வளவு மணலும் கேரள மாநிலத்திற்குக் கடத்தப்படுகிறது என்பதுதான் இன்றைக்கு உண்மையான நிலை. அதைத்தான் தடுத்து நிறுத்தவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கின்றோம். தேனி மாவட்டத்தில், வைகை ஆற்றில், குன்னூர் பாலத்திற்குப் பக்கத்தில், கிட்டத்தட்ட 20, 30 குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றன. அதற்குக் கீழாக வைகை ஆற்றிற்குப் பக்கத்தில்தான் மணல் அள்ளுவது எப்போதுமே வழக்கம். அந்த மணலை எல்லாம் கேரளாவிற்கு அள்ளிக்கொண்டு போய், இப்போது அங்கு மணலே இல்லாத நிலை ஏற்பட்ட பின்னால்தான் வருசநாடு பகுதியில் போய் அள்ளவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அத்துணை மணலையும் அள்ளி, கேரள மாநிலத்திற்கு மணல் கடத்தியதன் விளைவாகத்தான் அந்தப் பகுதியில் மணல் அள்ளுவதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதனையும் நான் இந்த மன்றத்திற்குத் தெளிவுபடக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய (குறுக்கீடுகள்) இதுவரை இல்லாத (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, பேசாதீர்கள், உட்காருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நான் அறியாத ஒரு செய்தியை மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு லாரி மணல், ஒரு கிலோ மணல்கூட கேரளாவிற்குப் போகவில்லை என்றும், எங்களுடைய காலத்திலேதான் போகிறது என்றும் சொல்லியிருக்கிறார். இதை, பன்னீர்செல்வத்தினுடைய மனசாட்சிக்கே விடுகிறேன். ஏதோ, இவர்கள் ஆட்சியிலே போகாதது மாதிரியும், இப்போது போகிறது மாதிரியும் சொல்கிறார்கள். எடுத்துக்கொண்டு போகிறவன் உங்கள் ஆட்சியிலேயும் எடுத்துக்கொண்டு போகிறான்; எங்களுடைய ஆட்சியிலும் எடுத்துக்கொண்டு போகிறான். அதைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்று பாருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் என்னிடத்திலே அதைத்தான் பேசினார். அதற்கு ஏதாவது ஒரு மாற்று வழி செய்ய முடியுமா 'என்று கேட்டார். காரணம், சில நேரங்களில் அதிகமான மணல் எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று

சொன்னார். நான் அதைக்கூட சொன்னேன். முதல்வர் அவர்களிடத்திலே சொல்லலாம்; பேசலாம்; கேரளாவிற்குக் கொண்டு போவதற்கு special permission ஏதாவது போட்டால், அது இருந்தால்தான் கொண்டு போக முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் என்னிடத்திலே வந்து பேசிவிட்டுத்தான் போயிருக்கிறார். ஆகையினால், ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன். சாதாரணமாக, தனியாரிடம் விட்டிருந்ததை, நீங்கள் அரசாங்கத்தின் மூலமாக மணல் விற்பனையை எடுத்து நடத்தினீர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. நடத்தியதனுடைய விளைவு, அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்கிறது. வரவில்லை என்று சொல்லவில்லை. ஆனால், நீங்கள் இருக்கும்போது நடத்தியதைவிட நாங்கள் கொஞ்சம் வேகமாக நடத்துகிறோம். வருமானம் கூடுதலாகவே வந்திருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். 2005-2006-ல் ரூ. 74 கோடி வந்தது. 2006-2007-லே மே மாதத்திலே நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ரூ. 130 கோடி வந்திருக்கிறது. இந்த வருடம் 120 கோடி ரூபாய் வந்திருக்கிறது. நான் ஒன்று கேட்கிறேன், 2005-2006-ல் ரூ. 74 கோடி வந்தது; இப்போது ரூ. 120 கோடி வருமானம் வந்திருக்கிறதே? அப்படியென்றால் மணல் கொள்ளை நடந்திருக்கிறது என்று அர்த்தமா? இல்லை. மணல் கொள்ளை போனதை நாங்கள் தடுத்து நிறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம் என்றுதான் அர்த்தம்.

எல்லா இடங்களிலும் பார்க்கும்போது, ஏதாவது இரண்டு திருடன் இருப்பான். நான் இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் ஆட்சியிலும் இரண்டு திருடன் இருந்திருப்பான். எங்கள் ஆட்சியிலும் இரண்டு திருடன் இருப்பான். அதைத்தான் பார்க்கிறோமே இப்போது. சில நேரங்களிலே அதிகாரிகளையே விரட்டிவிட்டுப் போய்விடுகிறான்; சில நேரங்களில் கீழே தள்ளிவிட்டுப் போய்விடுகிறான். ஆகையினாலே, அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். குண்டர் சட்டத்திலேகூட போட்டுப் பார்க்கிறோம். பல இடங்களிலே, இராத்திரியிலே எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். இது ஒன்றும் பந்தோபஸ்து பார்ப்பது இல்லை. இராத்திரியில் பார்த்தால், விளக்கை அணைத்துவிட்டு எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். அங்கே load ஏற்றிக்கொண்டு வருகிறான். ஆற்றிலே கொஞ்சம் தூரம் வரவேண்டுமல்லவா? இங்கே வந்து இரண்டு bucket மணலை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஆக, அங்கே 2 load ஏற்றினால், இங்கே 2¼ load ஏற்றி விடுகிறான். அதனால் சில இடங்களில் தவறுகள், இப்படிப்பட்ட சில்லறைத் தவறுகளைத் தவிர, போன ஆட்சியைவிட இந்த ஆட்சியில் அதிகமான வருமானத்தைக் கொடுத்திருக்கிற



காரணத்தினால், இதிலே மணல் கொள்ளை அதிகமாக இல்லை என்றுதான் பொருள். ஆனால், நடக்கவில்லை என்று சொல்லமாட்டேன். மீறி நடப்பவர்களை--நண்பர் ராஜசேகரன் சொன்னதை அடையாளமாக வைத்து நான் துப்பறிந்த வகையிலே—நிச்சயமாக குண்டர் சட்டத்திலே கொண்டு போய் நிறுத்தினாலொழிய, இது சரிப்பட்டு வராது. ஆகையினால், அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம், சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் பொதுப் பணித் துறையிலே பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்கிறார்கள். இப்போது மணல் கொள்ளையைப்பற்றிப் பேசினார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொள்கின்றபோது, ஒரு லாரி மணலினுடைய விலை ரூ. 600/-. அது சென்னையிலே ரூ.2,800/-க்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போதும் அதே 600 ரூபாய்தான் வசூலித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அது 5,000/- ரூபாய் அளவிற்கு விற்கிறது. ஏன் இந்த நிலை என்பதை நீங்கள் உணர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, ஏரியிலே இருக்கின்ற சவுடு மண். அதற்கு 65 ரூபாய் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே permit வாங்குகிறார்கள். ஆனால், அது 800 ரூபாய்க்கு திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலே விற்கப்பட்டு, பின்னர் லாரியிலே கொண்டு வந்து, 600 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த ஒரு லாரி மணல் இன்றைக்கு 2,500 ரூபாய்க்கு விற்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தி ஒரு நியாயமான விலைக்கு விற்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புவதோடு மட்டுமல்லாமல்--கேரளாவிற்கு மணல் கடத்துகிறார்கள் என்பது ஒரு விஷயம். அதேபோன்று, மாலத் தீவுக்கும் மணல் கடத்துகிறார்கள் என்று நீண்ட நாட்களாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். மாலத்தீவுக்குக் கப்பலிலே மணல் கடத்துகிறார்கள். அதற்கு ஏதாவது சிறப்பு ஏற்பாடு செய்து, அந்த மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்த முடியுமா? அல்லது அவர்களுக்கு நம்முடைய மணலை அதிக விலைக்குக் கொடுப்பதற்குச் சிறப்பு அனுமதி ஏதாவது வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-15

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாலத் தீவிற்கு மணல் கடத்தப்படவில்லை. 'மா'வுக்கு 'ம' என்று சொல்லிவிடக்கூடாது. அது அந்த மினரல் மணலாக இருக்கும் பாருங்கள்; இப்போது தகராறு நடக்கிறதே, அந்த மணலாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். கேரளாவிலே ஒரு பொட்டு மணல்கூட எடுக்க அனுமதிப்பதில்லை. அதைப்போல நீங்கள் இரவு நேரங்களிலும், பகல் நேரங்களிலும் நம்முடைய மாநிலத்திலிருந்து வெளிமாநிலத்திற்குப் போகிற சாலைகளைக் கண்காணித்துப் பார்த்தால், தமிழகத்திலிருந்து போகின்ற மணல், நம்முடைய மாநிலத்திலிருந்து மட்டும் வெளியே போய், கேரளாவிலிருந்து மாலத் தீவிற்கும், மணலும், ஜல்லியும் போகிறது என்பதை விவரம் தெரிந்த எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த இயற்கை ஆதாரத்தை வருங்காலச் சந்ததிக்குச் சேமித்து வைக்கக்கூடிய மிகப் பெரிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற நம்முடைய அரசு இதை மிகக் கவனத்தோடு கண்காணித்து, நம்முடைய மாநிலத்தினுடைய இயற்கை வளத்தை அநியாயமாக வெளிமாநிலத்திற்குக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு ஒரு சிறப்பு முயற்சி எடுத்து, அதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லை என்று சொன்னால், 25 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய சந்ததியினர் நம்மைப் பார்த்துக் குறை சொல்லக்கூடிய ஒரு வரலாற்றை நாமே உருவாக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, I have already given the royalty. கொடுத்துவிட்டேன். பீட்டர் அல்போன்ஸ் இந்த suggestion-ஐச் சொல்லியிருக்கிறார் என்று நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார், மணலை ஏரியிலே வந்து எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்றும், ரோட்டில் வந்து business பண்ணுகிறார்கள் என்றும். இதிலே என்னவென்று கேட்டீர்கள் என்றால், 60 ரூபாய் கொடுக்கிறார்கள்; அதுவும்கூட P.W.D., மணல் எடுக்கும் உரிமையைத் தருவது கிடையாது.



அவருக்குத் தெரியும். Mineral என்ற ஒரு department இருக்கிறது. அவர்களிடம் உரிமம் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். அவனைக் கேட்டால், மண் எனக்குச் சொந்தம் என்று சொல்கிறான்—மணல் எனக்குச் சொந்தம் என்று சொல்கிறான். ஆகையினாலே, எங்களுக்குத் தெரியாமலேயே உரிமம் வாங்கிக்கொண்டு வந்து, நாங்கள் பராமரித்து வருகின்ற ஏரியில் மணலை வாரிக்கொண்டு போகிறார்கள். ஆகையினால், கூடுமானவரையில் எங்களுக்குத் தெரிந்தால், நாங்கள் ஏரியிலே அவர்களை அனுமதிப்பதில்லை. அப்படியிருந்தாலும், மற்ற department-களிலே ரோடு போடுவதற்கு என்றும், மற்றவற்றிற்கு என்றும் சொல்லி, மணல் எடுத்துக்கொண்டு போகிறவர்கள் விற்கிறார்கள். மூன்றாவது, மணல் விலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார். இப்போது கட்டுமானப் பொருட்களின் விலையே அதிகமாகத்தான் போய்விட்டது. 52,000 ரூபாய்க்குமேலே இரும்பு விலை ஏறிப் போய் இருக்கிறது. அதே மாதிரி சிமெண்ட் விலை ஏறிப் போய் இருக்கிறது. எல்லா விலைகளும் ஏறிப் போய்விட்டன. இப்போது இரும்புக்கு ஏறியிருக்கிற விலையை, ஸ்டீலுக்கு ஏறியிருக்கிற விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்; இல்லாவிட்டால் கட்டுமானத் தொழில்கள் கெட்டுப் போய்விடும், தொழில் பாதிக்கப்படும் என்று இன்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் பிரச்சினையைப்பற்றி இந்த அவையில் பேசுவதற்கு எங்களுக்கு மிக, மிக வருத்தமளிக்கிறது. காரணம், பல முறை பேசியாகிவிட்டது. பேசிய பிறகும் ஏதாவது தீர்வு ஏற்பட்டிருக்கிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. இங்கேகூட முன்னாள் அமைச்சர் மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், நம்முடைய அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுமே குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் தெரியும் இந்தப் பிரச்சினை பற்றி. கடந்த ஆட்சிக் காலத்தில், சட்டமன்றத்திலே பேசியது. மணல் கடத்தப்படுகிறது; நம்முடைய இயற்கை வளம் வீணாகிக்கொண்டிருக்கிறது; அந்தப் பணமெல்லாம் அரசு கஜானாவிற்கு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்தில் பல முறை தொடர்ந்து எடுத்துச் சொல்லியது, வற்புறுத்திச் சொல்லியது பாட்டாளி மக்கள் கட்சி. அமைச்சரகத்த்

தெரியும். அதற்குப் பிறகுதான் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவிட்டார்கள். இப்பொழுதும் அதிக அளவிலே கடத்தப்படுகிறது. நான் எந்த அரசையும் குறை சொல்லவில்லை. இப்போது நமது காங்கிரஸ் தலைவர் சொன்னது மாதிரி, 600 ரூபாய்க்கு அனுமதிச் சீட்டு—Permit—கொடுக்கிறோம். இடத்திற்குத் தகுந்த மாதிரி 2,000, 3,000, 4,500, 5,000 ரூபாய் வரைக்கும் விற்கிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட, கட்டுமானப் பொருட்களின் விலைகள்கூட உயர்ந்துவிட்டன என்று சொன்னார்கள். மணலுக்கு என்று மூலப்பொருள் எதுவும் இல்லை. இயற்கை வளம் கிடைக்கிறது. இதை எடுப்பதற்கு 5,000 ரூபாய் வரை எதற்குப் போக வேண்டும்? ஆகவே, இதை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதேநேரத்திலே, ஓர் அனுமதிச் சீட்டு-Permit-வாங்கிக்கொண்டு, 10 லோடு அடிக்கிறார்கள். கேரளாவிற்குப் போகிறது, இந்தப் பக்கம் ஆந்திராவிற்குப் போகிறது, கர்நாடகா, பெங்களூருவுக்கும் போகிறது, எல்லா இடங்களுக்கும் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் வருத்தத்தோடு சொல்லுகிறோம், வேதனையோடு சொல்லுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இந்த மணல் பிரச்சினையில் சிறப்புக் கவனம் செலுத்தி, இதை நெறிப்படுத்த வேண்டும். இயற்கை வளங்கள் எதிர்காலத்திலே வீணாகக்கூடாது. அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இதை ஒரு குழுவாக அமைத்தோ அல்லது அரசு கவனம் செலுத்தியோ நெறிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-20

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வெளிமாநிலங்களுக்கு மணல் போவதால்--மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்கூட சொன்னார்கள்--அதனுடைய demand அதிகமாவதால், இங்கே எடுக்கிறார்கள். அதை ஒருக்கால் curtail பண்ணினால், demand அதிகமாகாது, எடுக்கமாட்டார்கள் என்றார். It is a good idea, I will consider என்று சொன்னேனே தவிர, பொதுவாக என்னவோ, மணல் கொள்ளை, மணல் கொள்ளை, மணல் கொள்ளை என்று பேசுவது இருக்கிறதே, இது ஒரு fashion ஆகிவிட்டது. மணல் கொள்ளை



என்று பேசுவதனுடைய பொருள் என்ன என்பது எனக்குத் தெரியும். மணல் கொள்ளை, மணல் கொள்ளை என்று பேசுவதனுடைய பொருள் எனக்குத் தெரியாமலில்லை. ஆகையினால், இந்த அரசைப் பொறுத்தவரையில், போன முறை இருந்ததைவிட double மடங்காக வருமானத்தை ஈட்டிக் கொடுத்திருக்கின்றோம். அதற்கு நீங்கள் எங்களைப் பாராட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 150,65,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 501,26,36,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 735,74,02,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 950,54,42,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-4-2008) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -



## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

35. மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

36. மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

37. பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2008. (தமிழ், ஆங்கிலம்)

38. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) பற்றிய மக்கள் சாசனம், 2008. (தமிழ், ஆங்கிலம்)

39. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை. (2007-2008)

40. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை. (2007-2008)

41. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தெட்டாவது அறிக்கை. (2007-2008)

42. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்பதாவது அறிக்கை. (2007-2008)

43. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. (2007-2008)

44. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்றொன்றாவது அறிக்கை. (2007-2008)

45. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பதாவது அறிக்கை. (2007-2008)

46. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை. (2007-2008)

47. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்திரண்டாவது அறிக்கை. (2007-2008)

48. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2007-2008)

[2008 ஏப்ரல் 10

49. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2007-2008)

50. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கை. (2007-2008)

51. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2007-2008)

52. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2007-2008)



2008 ஏப்ரல் 10]

## இணைப்பு I

*(741 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008—2009

**முன்னுரை**

"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

- ஒரு தலைமைப் பொறியாளர்,
- 20 மாவட்ட பொறியாளர்கள்,
- 3 ஆய்வுப் பொறியாளர்கள்,
- 78 செயற்/உதவிப் பொறியாளர்கள்,
- 204 மூத்த சார்நிலைப் பணியாளர்கள்,
- 714 இளைய சார்நிலைப் பணியாளர்கள்.

என 1858 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தப் பொதுப் பணித் துறைக்கு இன்று வயது 150 ஆண்டுகளாகிறது.

- ஒரு மூத்த தலைமைப் பொறியாளர்,
- 10 தலைமைப் பொறியாளர்கள்,
- 59 கண்காணிப்புப் பொறியாளர்கள்,
- 212 செயற்பொறியாளர்கள்,
- 816 உதவி செயற்பொறியாளர்கள்,
- 2366 உதவி / இளநிலைப் பொறியாளர்கள்,
- 1305 தொழில்நுட்பப் பணியாளர்கள்,
- 14670 நிர்வாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என
- 19,439 பேர்கள் பணியாற்றுகின்ற மிகப் பெரிய இலாகாவாக இந்தத் துறை இன்று திகழ்கிறது.

இந்தத் துறை 150 ஆண்டுகள் பழமையானது மட்டுமல்ல; துறையின் பணிகளும் பெருமைக்குரியது.

இன்றைய தமிழ்நாடு, இன்றுள்ள ஆந்திர மாநிலம், அன்றைய திருவாங்கூர், கொச்சி சமஸ்தானப் பகுதிகள் நீங்கிய இன்றைய

[2008 ஏப்ரல் 10

கேரளத்தின் பகுதிகள், கர்நாடக மாநிலத்தில் ஒரு பகுதி — என பரந்து விரிந்தது அன்றைய சென்னை இராஜதானி.

- அந்தக் காலக் கட்டத்தில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுக்கள்,
- வெட்டப்பட்டுள்ள கால்வாய்கள்,
- உருவாக்கப்பட்டுள்ள பாசனப் பகுதிகள்,
- வியக்கத்தக்க முறையில் நிற்கும் கட்டடங்கள்

என அத்தனையும் பொதுப் பணித் துறையின் சாதனைகள் என்பதை வரலாறு கூறும்.

மொழிவாரி மாநிலங்கள் அமைந்த பின்னர், பொதுப் பணித் துறையின் முழுக் கவனம் தமிழகத்தில் மட்டும் மையம் கொண்டதால் தமிழ்நாட்டின் நீர் ஆதாரம் அதிகரிக்கவும், அரசின் மூலதன சொத்துக்களான கட்டடங்களை கட்டவும் போன்ற பல்வேறு பயன்களைத் தொடர்ந்து யாவரும் பாராட்டத்தக்கவகையில் இந்தத் துறை செய்து வருகிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

### 1.0. துறையின் அமைப்பு

பொதுப் பணித் துறை, பல அரசுத் துறைகளுக்கான கட்டடம் சார்ந்த பணியினை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளுவதற்காக, பின்வரும் மிகப் பரவலான அலுவலக அமைப்பைக் கொண்டுள்ளது:

- ➢ சென்னையில் துறைத் தலைவராக ஒரு தலைமைப் பொறியாளரும், அவருக்குக் கட்டடக் கலை மற்றும் வடிவமைப்பு, தொழில்நுட்ப உதவிக்காக, தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் சிறப்புப் பிரிவுகள்.
- ➢ கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் தலைமையில் 11 வட்டங்கள் மற்றும் 41 கோட்டங்கள்.
- ➢ மின் பணிகளுக்காக கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் சென்னை, சேலம் மற்றும் மதுரையில் 3 வட்டங்கள்; மின் பொறியாளர்கள் தலைமையின்கீழ் 7 கோட்டங்கள்.
- ➢ சென்னையில் ஒரு செயற்பொறியாளரின் தலைமையில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து பகிர்ந்து கொள்வதற்காக ஒரு சிறப்புக் கோட்டம்.



2008 ஏப்ரல் 10]

- ➢ சென்னையில் ஒரு செயற்பொறியாளரின் தலைமையில், மேம்பட்ட தொழில்நுட்ப அறிவினைப் பொறியாளர்கள் பெறுவதற்காகப் பயிற்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி குறித்த செயல்பாடுகளுக்கான கட்டட ஆராய்ச்சி மையம்.

### 2.0. முக்கியச் செயல்பாடுகள்

பொதுப் பணித் துறை, பின்வரும் முக்கிய செயல்பாடுகள் மற்றும் அதன் தொடர்பான செயல்களை நிறைவேற்றி வருகிறது:

- ➢ மாநில அரசின் முதலீட்டு உடைமைகளாக விளங்கும் அரசு கட்டடங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரித்தல்.
- ➢ அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
- ➢ நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.
- ➢ சுனாமி மறு சீரமைப்புப் பணிகள் போன்ற பேரிடர் மறுகட்டுமானப் பணிகளைச் செயல்படுத்துதல்.
- ➢ பாரம்பரிய கட்டடங்களைப் புதுப்பித்து மறு சீரமைத்தல்.
- ➢ மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் கட்டடப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.
- ➢ கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டடப் பணி நடைமுறைகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ➢ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதித் துறை போன்ற துறைகளின் கோரிக்கையின் அடிப்படையில் சொத்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ➢ பொதுக் கட்டடங்களுக்கு உறுதிச் சான்றிதழ்கள், அரசு அலுவலகங்களுக்காக வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்கள் வழங்குதல்.

➢ மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக மிக முக்கியமானவர்கள் வருகையின்போது அவர்கள் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்தல்.

## 3.0. கட்டுமானத்திற்கான மாற்றுப் பொருட்கள் மற்றும் நவீன தொழில்நுட்பம்

குறைந்த செலவில் கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்காக மாற்றுப் பொருட்களைக் கண்டறிவதற்கும், உயர் தொழில்நுட்பத்தைக் கட்டுமானங்களில் பயன்படுத்துவதற்கும் இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது. இது தொடர்பாக பின்வரும் தொடக்க முயற்சிகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக, கற்களை நொறுக்கும்போது கிடைக்கும் கற்றுகள்களைக் கட்டுமானங்களில் பயன்படுத்துவதற்குப் போதிய உறுதி மற்றும் தகுதி உள்ளதா எனப் பரிசோதிக்கப்பட்டு, மணலுக்கு மாற்றுப் பொருளாக கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தரமுள்ள கற்றுகள்களைப் பயன்படுத்துவதால் கட்டுமானச் செலவு குறைவதுடன், பெருமளவு மாசும் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் இயற்கை ஆதாரமான மணலின் பயன்பாடு குறைக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது.

## 4.0. 2008–2009 ஆம் நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கம்

*2008-2009* நிதியாண்டில் கோரிக்கை எண் *39*-ன்கீழ் ரூ. *651.91* கோடியளவில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன:

(ரூ. கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| (i) | முதலீட்டுக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம்சாராப் பணிகள்) | .. | *501.26* |
| (ii) | வருவாய்க் கணக்கு (பராமரிப்பு மற்றும் பணியமைப்பு) | .. | *150.65* |
| | **மொத்தம்** | .. | ***651.91*** |

மேலும், செலுத்துதல் கணக்குத் தலைப்பில், பிற துறை பணிகளும், பொதுப் பணித் துறை மற்றும் பிற துறை கட்டடங்களின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



### துறைவாரியான முதலீடு 2008-2009
### மூலதனக் கணக்கு
### மானியக் கோரிக்கை எண் 39

| வ. எண் | துறையின் பெயர் | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 2008-2009 (ரூ. கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 185.12 | 37% |
| 2. | உள் துறை | 142.47 | 28% |
| 3. | பொதுத் துறை – தலைமைச் செயலகம் | 75.00 | 15% |
| 4. | வருவாய்த் துறை | 54.22 | 11% |
| 5. | பாரம்பரியக் கட்டடங்கள் | 8.96 | 2% |
| 6. | ஆழிப் பேரலை | 7.39 | 1% |
| 7. | பள்ளிக் கல்வித் துறை | 2.81 | 1% |
| 8. | இதர பணிகள் | 25.29 | 5% |
| | **மொத்தம்** | ***501.26*** | ***100%*** |

## .0. துறைவாரியான திட்டங்கள் (2008–2009)

### .1. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை

#### .1.1. மருத்துவக் கல்லூரிப் பணிகள்

*2007-2008* ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் மருத்துவக் கல்லூரிப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் அளித்தல், தொழில்நுட்ப ஒப்புதல் அளித்தல், ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் மற்றும் ஒப்பந்ததாரர்களை முடிவு செய்தல் ஆகிய தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| i | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி | 11.01 |
| ii | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 10.00 |
| iii | தருமபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி | 10.00 |
| iv | சென்னை பல் மருத்துவக் கல்லூரி | 13.66 |
| v | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி | 1.45 |
| vi | கன்னியாகுமரியில் உள்ள மருத்துவக் கல்லூரி பேராசிரியர், உதவிப் பேராசிரியர் மற்றும் வகுப்பு-IV பணியாளர்கள் குடியிருப்புகள் | 2.73 |
| vii | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 150 பட்டப் படிப்பு மாணவர்களுக்கான தங்கும் விடுதி | 3.00 |
| viii | திருச்சிராப்பள்ளி, கி.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவக் கல்லூரியில், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான இரண்டு தங்கும் விடுதிகள் | 2.89 |
| ix | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனை (இந்திய மருத்துவம்) வளாகத்தில் உள்ளுறை பயிற்சி மருத்துவர் குடியிருப்புகள் | 1.89 |
| x | சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வளாகத்தில், 250 பட்டப் படிப்பு மாணவர்களுக்கும், 250 பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் தங்கும் விடுதிகள் | 12.60 |

### 5.1.2. இதர மருத்துவக் கட்டடப் பணிகள்

2007-2008 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, தொடக்கப் பணிகளான, மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் போன்ற பணிகளின் விவரம் பின்வருமாறு:



| வ. எண் | பணி | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| i | சென்னை, குழந்தைகள் நல மையம் மற்றும் மருத்துவமனைக்குப் புதிய மின்தூக்கி அமைத்தல். | 1.04 |
| ii | மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல். | 22.06 |
| iii | சென்னையில் குழந்தைகள் நல மையம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம். | 13.83 |
| iv | இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம். | 9.87 |

### 5.1.3. சுகாதார அமைப்புத் திட்டம் (மானியக் கோரிக்கை எண் 19)

**கட்டம்-I** – 5 மாவட்டங்களில், 35 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.45.62 கோடி மதிப்பில் கட்டடம் கட்டும் பணி, இதில் 19 மருத்துவமனை கட்டடங்கள் முழுமையாக முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. 16 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கட்டம்-II** – 25 மாவட்டங்களில் தற்போதுள்ள 228 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ. 207.14 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடம், விரிவாக்கம், பராமரிப்பு ஆகிய பணிகளில் 7 முன்னேற்றத்தில் உள்ளன. 221 ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

## 5.2. உள் துறை

### 5.2.1. நீதித் துறை

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, அவை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன:

[2008 ஏப்ரல் 10

| வ. எண். | பணி | தொகை (ரூ. கோடியில்) | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | தாம்பரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டும் பணி | 2.82 | முடியும் தறுவாயில் உள்ளன |
| 2 | திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் தனித்தனியாக வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் வழக்கறிஞர்கள் எழுத்தர்கள் சங்கம் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டும் பணி | 0.58 | முடியும் தறுவாயில் உள்ளன. |
| 3 | பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டும் பணி | 8.75 | முன்னேற்றத்தில் உள்ளன |
| 4 | கொடைக்கானலில் (கட்டம்-I) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டுதல் | 2.50 | முன்னேற்றத்தில் உள்ளன. |
| 5 | வேடசந்தூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற கட்டடங்கள், முக்கிய விருந்தினர் தங்கும் விடுதி மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி | 2.25 | முன்னேற்றத்தில் உள்ளன. |



2008 ஏப்ரல் 10]

**நீதிமன்ற அலுவலருக்கான குடியிருப்புகள்**

**(i) குடியிருப்புகள்**

| வ. எண். | பணி | தொகை (ரூ. கோடியில்) | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | சார் நீதிபதிக்கான குடியிருப்பு, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகம், பழனி. | 0.13 | முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | குற்றவியல் நடுவர் நீதிபதிக்கான குடியிருப்பு, ஆற்காடு. | 0.09 | முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | முதன்மை மாவட்ட நீதிபதிக்கான குடியிருப்பு, இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகம் | 0.34 | முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4 | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், காங்கேயம். | 0.24 | மறு ஒப்பந்தப் புள்ளி கோரப் பட்டுள்ளது |

(ii) பின்வரும் பணிகளுக்கு நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, தொடக்கப் பணிகளான, மதிப்பீடுகள் தயாரித்தல் போன்றவை நடைபெற்று வருகின்றன.

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி

| வ. எண் | இடம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | நாமக்கல் | 10.56 |
| 2. | கரூர் | 10.00 |
| 3. | அருப்புக்கோட்டை | 3.83 |
| 4. | சிவகங்கை | 7.98 |
| 5. | ஈரோடு | 5.42 |
| 6. | குடியாத்தம் | 4.40 |

[2008 ஏப்ரல் 10

| வ. எண் | இடம் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 7 | ஆரணி | 3.97 |
| 8 | அறந்தாங்கி | 3.53 |
| 9 | பூவிருந்தவல்லி | 4.02 |
| 10 | பரமக்குடி | 2.40 |
| 11 | தூத்துக்குடி | 8.88 |
| 12 | கடலூர் | 10.02 |
| | **மொத்தம்** | **75.01** |

### 5.2.2. சிறைத் துறை – சிறைகளை நவீனப்படுத்தும் திட்டம்

(i) சார்நிலைச் சிறையை மாவட்டச் சிறையாக மேம்படுத்தும் பணி; பெண்களுக்கான புதிய சிறைச்சாலை கட்டடங்கள்; கோயம்புத்தூர், சேலம், பாளையங்கோட்டை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் வேலூரில் உள்ள மைய சிறைகளில் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள், குடிநீர் மற்றும் துப்புரவு பணிகள் – ரூ.11.23 கோடி – 70 பணிகளில், 59 முடிக்கப்பட்டன, 11 முன்னேற்றத்தில் உள்ளன.

(ii) சிறைக் கட்டடங்களுக்கு ரூ.3.55 கோடி மதிப்பில், பராமரிப்பு, மேம்படுத்துதல், துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகள் – 56 பணிகளில் 25 முடிவுற்றன; 31 முன்னேற்றத்தில் உள்ளன.

(iii) ரூ.5.52 கோடியில் ஆத்தூர், கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் நாகப்பட்டினம் சார்நிலைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக உயர்த்தும் பணி; பாளையங்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி சிறைகளில் பழுது பார்ப்பு மற்றும் புதுப்பிப்பு பணிகள் – 5 பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

### 5.2.3. தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை

தண்டராம்பட்டு, ஓமலூர், ஆரணி, குத்தாலம், கம்பம், திருத்துறைப்பூண்டி, தக்கலை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய 8 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைப்பதற்காக ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.



2008 ஏப்ரல் 10]

### 5.2.4. போக்குவரத்துத் துறை

| வ. எண். | பணி | தொகை (ரூ.கோடியில்) | பணியின் நிலை |
|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம், திருவாரூர், மேட்டுப்பாளையம் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் சோதனை ஓட்ட சாலை அமைத்தல் | 1.08 | மேட்டுப்பாளையம் தவிர மற்றவை முன்னேற்றத்தில் உள்ளன. மேட்டுப் பாளையத்திற்குப் பதிலாக வேலைத்தளம் ஈரோட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. |
| 2 | வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்— ஒவ்வொன்றும் ரூ.1.25 கோடி —திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்செங்கோடு, பெரியகுளம், ஈரோடு, மதுரை வடக்கு, சேலம் மற்றும் திருவாரூர் | 10.00 | முன்னேற்றத்தில் உள்ளன |
| | —திருச்சிராப்பள்ளி | 1.45 | முன்னேற்றத்தில் உள்ளது |

### 5.3. வருவாய்த் துறை

பின்வரும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன:

(i) சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் – ரூ.25.00 கோடி – வரைபடங்கள் தயாரிப்பில் உள்ளது.

(ii) பதினொன்று இடங்களில் ரூ.15.57 கோடியில் வட்டாட்சியர் அலுவலகங்கள் – காரியாபட்டி, இலுப்பூர், வாழப்பா

கங்கவள்ளி, குளித்தலை, தொட்டியம் மற்றும் வீரக்கோளம்புதூர் ஆகிய 7 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. குந்தா, பந்தலூர், கல்குளம், பரமக்குடி ஆகிய 4 இடங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

(iii) திருக்கழுக்குன்றம், கீழ்வேலூர், ஆலங்குளம், ஸ்ரீரங்கம், மண்ணச்சநல்லூர், காட்டுமன்னார்கோயில், திருக்குவளை மற்றும் காட்பாடி ஆகிய 8 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் – ரூ.10.24 கோடி — பணிகள் முடியும்தறுவாயில் உள்ளன.

(iv) மணமேல்குடி வட்டாட்சியர் அலுவலகம் – ரூ.1.15 கோடி – பணி முடியும்தறுவாயில் உள்ளது.

(v) நாகப்பட்டினம், நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் திண்டுக்கல், பழனி, இராமநாதபுரம், லால்குடி, மதுராந்தகம், ஆத்தூர் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலருக்குக் குடியிருப்புகள் கட்டுதல் – ரூ.2.24 கோடி — ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

### 5.4. பள்ளிக் கல்வித் துறை (மானியக் கோரிக்கை எண் 43)

### 5.4.1 நபார்டு திட்டம்

கட்டம்–III – 7 மாவட்டங்கள் – ரூ.83.74 கோடி. 259 பணிகளில், 256 முடிக்கப்பட்டன; 1 முன்னேற்றத்தில் உள்ளது; 2 கைவிடப்பட்டன.

கட்டம்–IV – 27 மாவட்டங்கள் – ரூ.130.11 கோடி – 351 பணிகளில், 316 முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன; 8 முடிக்கப்பட்டன; 24 முன்னேற்றத்தில் உள்ளன; 1 திருத்திய நிருவாக ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது; 2 கைவிடப்பட்டன.

கட்டம்–V – 17 மாவட்டங்கள் – ரூ.102.13 கோடி – 198 பணிகளில், 181 முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன; 2 முடிக்கப்பட்டன; 10 முன்னேற்றத்தில் உள்ளன; 5 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



கட்டம்–VI – 13 மாவட்டங்கள் – ரூ.161.32 கோடி – 234 பணிகளில், 65 முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன; 22 முடிக்கப்பட்டன; 139 முன்னேற்றத்தில் உள்ளன; 6 திருத்திய மதிப்பீடு நிலையிலும்; 1 பணித் தளம் ஒப்படைக்கப்படாமல் உள்ளது; 1 நீக்கப்பட்டது.

கட்டம்–VII – 16 மாவட்டங்கள் – ரூ.131.69 கோடி—195 பணிகளில், 8 முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டன; 8 முடிவுற்றன; 158 முன்னேற்றத்தில் உள்ளன; 16 திருத்திய நிருவாக ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது; 3 திருத்திய மதிப்பீடு நிலை; 2 பணித் தளங்கள் ஒப்படைக்கப்படாமல் உள்ளன.

### 5.4.2. இதர பணிகள்

(i) சென்னையில் மாநில நவீன நூலகம் அமைத்தல் ரூ. 80.00 கோடி – கருத்துரு, வரைபடம் மற்றும் மாதிரிகள் தேர்வு செய்யப்பட்டு கலந்தாய்வு நிறுவனம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

(ii) திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதிகள் – ரூ.1.68 கோடி. திருநெல்வேலி – ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது, திருச்சிராப்பள்ளி – பணித் தளம் தேர்வு செய்யப்படும் நிலையில் உள்ளது.

(iii) கோயம்புத்தூரில் அரசுச் சட்டக் கல்லூரியில் மாணவிகள் தங்கும் விடுதி – ரூ.1.24 கோடி–முன்னேற்றத்தில் உள்ளது.

(iv) திருநெல்வேலி அரசுச் சட்டக் கல்லூரியில் மாணவிகள் தங்கும் விடுதி – ரூ.1.10 கோடி – முடியும்தறுவாயில் உள்ளது.

(v) திருச்சிராப்பள்ளி அரசுச் சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் – ரூ.1.05 கோடி – முடியும்தறுவாயில் உள்ளது.

### 5.5. தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை

சென்னை, தமிழ் வளர்ச்சி வளாகத்தில் ஏற்கனவே உள்ள கட்டடத்தில் இரண்டாவது தளம் கட்டுதல் – ரூ.0.50 கோடி – ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

[2008 ஏப்ரல் 10

**5.6. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகங்கள் – ரூ.11.35 கோடி. 234 பணிகளில் 228 கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுவிட்டன – தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் ராயபுரம் ஆகிய மூன்று இடங்களுக்கு நிலக் குத்தகை தொடர்பான கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன. புரசைவாக்கம், திருவல்லிக்கேணி, மற்றும் எழும்பூர் ஆகிய 3 இடங்களுக்கு பணித் தளம் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

**5.7. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (மானியக் கோரிக்கை எண் 9)**

பின்வரும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன:

(i) 50 பிற்படுத்தப்பட்டோர் விடுதி கட்டடம் கட்டுதல் – ரூ.32.15 கோடி – விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

(ii) 14 இடங்களில் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் – ரூ.0.735 கோடி – 8 முடிவுற்றன; 6 முன்னேற்றத்தில் உள்ளன.

(iii) 345 கள்ளர் விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் – ரூ.7.91 கோடி—345 பணிகளில் 343 முடிவுற்றன – 2 முன்னேற்றத்தில் உள்ளன.

(iv) பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதி கட்டடங்கள் கட்டுதல் (கட்டம்–IV) – ரூ131.04 கோடி – 416 பணிகளில் 240 முடிவுற்றன – 108 முன்னேற்றத்தில் உள்ளன – 2 எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் – 66 திருத்திய நிருவாக ஒப்புதல் பெறுதல் மற்றும் இடத் தேர்வு நிலையில் உள்ளன.

(v) 100 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதி கட்டடங்கள் – ரூ. 31.05 கோடி – 100 பணிகளில், 97 முடிவுற்றன; 3 முடியும்தறுவாயில் உள்ளன.

**5.8. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை (வைப்புப் பணி)**

இந்திய அரசு நிதி உதவியுடன் மாமல்லபுரத்தில் (இரண்டாம் கட்ட பணிகள்) உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் – ரூ.4.32 கோடி – முன்னேற்றத்தில் உள்ளன.



2008 ஏப்ரல் 10]

**5.9. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை (மானியக் கோரிக்கை எண் 6)**

(i) 377 கால்நடை பராமரிப்பு மையங்கள் கட்டுதல் – ரூ.40.17 கோடி – 377 பணிகளில், 296 முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டு விட்டன. 47 முடிவுற்றன; 28 முன்னேற்றத்தில் உள்ளன, 6 பணித் தளம் தேர்வு செய்யப்பட வேண்டும், பின்னர் கட்டம்–II-ல் எடுத்துக் கொள்ளப்படும்.

(ii) 2 இடங்களில் கால்நடை எருது கொட்டகை மற்றும் தரக் கட்டுப்பாடு பரிசோதனைக் கூடம். மேலும் ஒரு இடத்தில் எருது கொட்டகை மட்டும் ரூ.3.05 கோடி – மதிப்பீடு தயாரிக்கும் நிலையில் உள்ளது.

**5.10. நீர்வள நிலவளத் திட்டம் IAMWARM Project (மானியக் கோரிக்கை எண் 40)**

சென்னை நந்தனத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில், பன்முகத் திட்ட அலுவலக (M.D.P.U.) அடுக்குமாடி கட்டும் பணி – ரூ.15 கோடி – திட்ட வரைவு மற்றும் திட்ட மதிப்பீட்டினை இறுதி செய்வதற்காக அயல் கட்டடக் கலை நிறுவனத்தினைத் தேர்வு செய்வதற்கு கலந்தறி நிறுவனங்களிடமிருந்து விருப்பம் தெரிவிப்பிற்கு (Expression of Interest) உலக வங்கி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**5.11. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC)**

பெரம்பலூர், தேனி மற்றும் எ.சங்கம்பாளையம் ஆகிய இடங்களில் கிடங்கு மற்றும் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் – ரூ.4.83 கோடி. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**5.12. வணிக வரி மற்றும் பதிவுத் துறை**

**(i) வணிக வரித் துறை**

- ஓசூரில் வணிக வரித் துறை அலுவலகம் கட்டுதல் – ரூ.1.54 கோடி – பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- சென்னையில் வணிக வரித் துறை ஆணையர் அலுவலகம் கட்டுதல் – ரூ.5.50 கோடி – பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2008 ஏப்ரல் 10

**(ii) பதிவுத் துறை**

- மிமீசல், மன்னார்குடி, அனந்தபுரம், விக்கிரவாண்டி, இடைகால், வீரசிகாமணி, கங்கைகொண்டான், உடையார்பாளையம், ஒட்டன்சத்திரம், வந்தவாசி, ராமகிருஷ்ணராஜுபேட்டை, செங்கல்பட்டு, கலசப்பாக்கம் மற்றும் கே.வி.குப்பம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் பணிகள் – ரூ.2.25 கோடி – 15 பணிகளில், 14 முடிவுற்றன; 1 முன்னேற்றத்தில் உள்ளது.
- ஆரணி, காயல்பட்டினம், கடலூர், சத்தியமங்கலம், வேர்கிளம்பி, செய்யூர், இராமேஸ்வரம், திருப்போரூர், திருவள்ளூர் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் பணி – ரூ.1.50 கோடி – 10 பணிகளில், 9 முடிவுற்றன, 1 முன்னேற்றத்தில் உள்ளது.

**5.13. அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்**

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பொதுப் பணி, வருவாய், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளம் மற்றும் பள்ளிக் கல்வி ஆகிய துறைகளுக்கான கட்டடங்களைப் பராமரித்தல், புதுப்பித்தல், மேம்படுத்தல் ஆகிய பணிகள் – ரூ.36.62 கோடி – 340 பணிகளில், 291 முடிவுற்றன, 42 முன்னேற்றத்தில் உள்ளன, 7 பணித் தளம் முடிவுசெய்யப்படாமல் உள்ளதால் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**5.14. பாரம்பரியக் கட்டடங்கள் – 12–வது நிதிக் குழு மானியம்**

(i) சென்னை அரசு கண் மருத்துவமனை புதுப்பித்தல் பணிக்காக ரூ.0.25 கோடி; சென்னை இராஜாஜி அரங்கம் புதுப்பிக்க ரூ.0.66 கோடி; எழும்பூரில் ஆவணக் காப்பகம் உயர்நிலைப்படுத்துதல் – ரூ.2.16 கோடி; சென்னை அருங்காட்சியகம் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணி (சுற்றுச் சுவர்) – ரூ.0.77 கோடி – முன்னேற்றத்தில் உள்ளன.

(ii) சென்னை உயர் நீதிமன்றக் கட்டட முகப்பு ஒளியூட்டுதல் – ரூ.0.50 கோடி; சென்னை இலக்கியக் கழகக் கட்டடம் சீரமைத்தல்– ரூ.0.40 கோடி ஆகிய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.



2008 ஏப்ரல் 10]

(iii) சென்னை இசைக் கல்லூரி கட்டடம் புதுப்பித்தல் மற்றும் பேணுதல் – ரூ.0.33 கோடி. சேப்பாக்கம் அரண்மனை புனரமைத்தல் – ரூ.3.50 கோடி. திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றக் கட்டடம் மேம்படுத்துதல் – ரூ.0.65 கோடி, சென்னை மாநகரம் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் – ரூ.0.50 கோடி. பொதுப் பணித் துறை அலுவலகக் கட்டட முகப்பு ஒளியூட்டுதல் ரூ.0.30 கோடி; இராஜாஜி சாலையில் உள்ள துணைப் பதிவுத் துறை இயக்குநர் (DIG of Registration) அலுவலகம் புனரமைப்பு செய்தல் ரூ.0.50 கோடி – அனைத்துப் பணிகளும் மதிப்பீடு தயாரிப்பு நிலையில் உள்ளன.

(iv) சென்னை புனித ஜார்ஜ் கோட்டை முகப்பு ஒளியூட்டுதல் – ரூ.0.30 கோடி. சென்னை அருங்காட்சியகம் அமராவதி கூடம் புதுப்பித்தல் – ரூ.0.50 கோடி – ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

**5.15. தொல்பொருள் இயல் துறை**

மதுரை திருமலை நாயக்கர் மகால் மறுசீரமைப்புப் பணி – ரூ.3.00 கோடி – முன்னேற்றத்தில் உள்ளது.

**5.16. பொதுப் பணித் துறை**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 12-05-2007 அன்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி, ரூ.200 கோடி மதிப்பில் உயர்தர வசதிகளுடன் புதிய சட்டமன்ற வளாகக் கட்டடம் கட்டும் பணிக்கான நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, உலகளாவிய தேர்வு முறையில் பங்குபெற்ற 7 நிறுவனங்களில், "ஜி.எம்.பி இன்டர்நேஷனல், ஜெர்மனி" நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்நிறுவனத்திடம் கட்டடக் கலை வரைபடம் தயாரித்தல் மற்றும் திட்ட மேலாண்மை ஆகிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தம் 15-02-2008-ல் கையெழுத்திடப்பட்டது.

தற்போது, வரைபடம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5.17.** தற்போது நடைபெற்று வரும் முக்கியப் பணிகள் மற்றும் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முக்கியப் பணிகள் ஆகியவை முறையே இணைப்பு–I (அ) மற்றும் இணைப்பு–I (ஆ)-ல் தரப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 10

## 6.0. பகுதி – II திட்டங்கள்

## 6.1. பகுதி – II திட்டங்கள் – 2007–2008

ஒப்பளிக்கப்பட்ட 5 பணிகளில், 2 பணிகள் முடிக்கப்பட்டன; மற்றும் பின்வரும் 3 பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

(i) திருவாரூர் சுற்றுலா மாளிகையில் அணுகுச் சாலை, சுற்றுச் சுவர், பள்ளங்களை நிரப்பும் பணி போன்ற இதர வசதிகள் செய்தல் – ரூ.0.15 கோடி – முன்னேற்றத்தில் உள்ளன.

(ii) தஞ்சாவூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுதல் – ரூ.1.00 கோடி – முன்னேற்றத்தில் உள்ளது.

(iii) சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில், அரசு ஊழியர்களுக்கு 2 தொகுதிகளாக "சி" பிரிவு குடியிருப்புகள் (12 எண்ணிக்கை) கட்டும் பணி – ரூ.0.65 கோடி – முன்னேற்றத்தில் உள்ளது.

## 6.2. பகுதி – II திட்டங்கள் – 2008–2009

2008–2009 ஆம் ஆண்டில் பின்வரும் 11 பணிகளுக்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

1. கோயம்புத்தூரில் பொதுப் பணித் துறை, செயற் பொறியாளர், (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகம் – ரூ.0.37 கோடி.

2. கடலூரில் சுற்றுலா மாளிகையில் 4 கூடுதல் அறைகள் – ரூ.0.48 கோடி.

3. தூத்துக்குடி பெருந்திட்ட வளாகத்தில், 5 அறைகளுடன் கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகை – ரூ.0.60 கோடி.

4. குடியாத்தத்தில் இரண்டு அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை – ரூ.0.21 கோடி.

5. தஞ்சாவூர் பொதுப் பணித் துறை வட்ட அலுவலகத்தில் கல்நார் கூரைக்குப் பதிலாகக் கற்காரைத் தளம் அமைக்கும் பணி – ரூ.0.15 கோடி.

6. திருவள்ளூர், பொன்னேரியில் உபகோட்ட அலுவலகம் மற்றும் ஒரு பிரிவு அலுவலகம் – ரூ.0.15 கோடி.



2008 ஏப்ரல் 10]

7. பொதுப் பணித் துறையில் 17 கோட்டங்களுக்குப் புதிய வாகனங்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்தல் – ரூ.0.81 கோடி.

8. பொதுப் பணித் துறையில் உள்ள 2 வட்டங்களுக்குப் புதிய வாகனங்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்தல் – ரூ.0.08 கோடி.

9. அருப்புக்கோட்டையில் ஆய்வு மாளிகை முதல் தளத்தில் 2 கூடுதல் அறைகள் – ரூ.0.15 கோடி.

10. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலக உபயோகத்திற்கு நவீன நகல் எடுக்கும் இயந்திரம் மற்றும் தானியங்கி பிரதான அச்சடிக்கும் இயந்திரம் – ரூ.0.05 கோடி.

11. தருமபுரியில் உள்ள சுற்றுலா மாளிகையில் உள்ள தரைத் தளத்தில் செராமிக் ஓடுகள் பதித்தல், அறைகலன்களை மாற்றுதல் – ரூ.0.19 கோடி.

[2008 ஏப்ரல் 10

## இணைப்பு–I(அ)

### முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நிருவாகப் பிரிவு விரிவுரையாளர் கூடம் மற்றும் நூலகக் கட்டடம் | 5.00 |
| 2 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் | 20.19 |
| 3 | பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம். | 8.75 |
| 4 | காரியாப்பட்டி, குந்தா, பந்தலூர், இலுப்பூர், வாழப்பாடி, கங்கவல்லி, தொட்டியம், வீரசோளம்புதூர், குளித்தலை, பரமக்குடி மற்றும் கல்குளம் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் | 15.57 |
| 5 | நபார்டு பள்ளிப் பணிகள் – கட்டம்–VII – 16 மாவட்டங்கள் – மொத்தம் 195 பள்ளிகள். | 131.69 |
| 6 | நபார்டு பள்ளிப் பணிகள் – கட்டம்–VI – 13 மாவட்டங்கள்–மொத்தம் 234 பள்ளிகள் | 161.32 |
| 7 | தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்–கட்டம்–II – 25 மாவட்டங்களில் 228 அரசு வட்ட / தலைமை இட மருத்துவமனைகளில் கூடுதல் விரிவாக்கம், பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் வலுப்படுத்துதல் | 207.14 |
| 8 | தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்–கட்டம்–I– தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் 35 அரசு வட்ட/ தலைமை இட மருத்துவமனைகளில் கூடுதல், விரிவாக்கம், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 45.62 |



2008 ஏப்ரல் 10]

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 9 | 345 கள்ளர் விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் | 7.91 |
| 10 | 416 பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப் பட்டோர் விடுதிக் கட்டடம் (கட்டம் IV) | 131.04 |
| 11 | 12வது நிதிக் குழு – பாரம்பரிய கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள் | 10.00 |
| 12 | சென்னை கிரீம்ஸ் சாலையில் வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடங்கள் | 5.50 |
| 13 | சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பொதுப் பணித் துறை, வருவாய், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளம், மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் உள்ள கட்டடங்களை மேம்படுத்தல் மற்றும் மறுகட்டுமானப் பணிகள் | 36.62 |
| | **மொத்தம்** | **786.35** |

## இணைப்பு – I(ஆ)

### எடுத்துக் கொள்ளப்படவுள்ள பெரும்பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற வளாகம் கட்டும் பணி | 200.00 |
| 2 | சென்னையில் நவீன மாநில நூலகம் | 80.00 |
| 3 | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 42.77 |
| 4 | தருமபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி | 49.47 |
| 5 | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி | 41.01 |
| 6 | மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை விரிவுபடுத்துதல் | 22.06 |
| 7 | சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் கூடுதல் கட்டடம் | 9.87 |
| 8 | சென்னை, அரசு பல் மருத்துவக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் | 13.66 |
| 9 | சென்னை நந்தனத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில், பன்முகத் திட்ட அலுவலக (M.D.P.U.) அடுக்குமாடி கட்டும் பணி | 15.00 |
| 10 | சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் | 25.00 |
| 11 | 50 பிற்படுத்தப்பட்டோர் மாணவ விடுதிகள் கட்டும் பணி | 32.15 |
| 12 | சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வளாகத்தில், 250 பட்டப் படிப்பு மாணவர்களுக்கும், 250 பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் விடுதிகள் | 12.60 |
| | மொத்தம் | 543.59 |



## இணைப்பு II

(741 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

**முன்னுரை**

- ஒரு தலைமைப் பொறியாளர்,
- 20 மாவட்டப் பொறியாளர்கள்,
- 3 ஆய்வுப் பொறியாளர்கள்,
- 78 செயற் / உதவிப் பொறியாளர்கள்,
- 204 மூத்த சார்நிலைப் பணியாளர்கள்
- 714 இளைய சார்நிலைப் பணியாளர்கள்

என 1858 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தப் பொதுப் பணித் துறைக்கு இன்று வயது 150 ஆண்டுகளாகிறது.

- ஒரு முதன்மைத் தலைமைப் பொறியாளர்,
- 10 தலைமைப் பொறியாளர்கள்,
- 59 கண்காணிப்புப் பொறியாளர்கள்,
- 212 செயற்பொறியாளர்கள்,
- 816 உதவி செயற்பொறியாளர்கள்,
- 2366 உதவி/இளநிலைப் பொறியாளர்கள்,
- 1305 தொழில்நுட்பப் பணியாளர்கள்,
- 14670 நிருவாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என
- 19,439 பேர்கள் பணியாற்றுகின்ற மிகப் பெரிய இலாக்காவாக இந்தத் துறை இன்று திகழ்கிறது.

இந்தத் துறை 150 ஆண்டுகள் பழமையானது மட்டுமல்ல; துறையின் பணிகளும் பெருமைக்குரியது.

[2008 ஏப்ரல் 10

இன்றைய தமிழ்நாடு, இன்றுள்ள ஆந்திர மாநிலம், அன்றைய் திருவாங்கூர், கொச்சி சமஸ்தானப் பகுதிகள் நீங்கிய இன்றைய கேரளத்தின் பகுதிகள், கர்நாடக மாநிலத்தில் ஒரு பகுதி எனப் பரந்து விரிந்தது அன்றைய சென்னை இராஜதானி.

- அந்தக் காலக்கட்டத்தில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுக்கள்,
- வெட்டப்பட்டுள்ள கால்வாய்கள்,
- உருவாக்கப்பட்டுள்ள பாசனப் பகுதிகள்,
- வியக்கத்தக்க முறையில் நிற்கும் கட்டடங்கள்

என அத்தனையும் பொதுப் பணித் துறையின் சாதனைகள் என்பதை வரலாறு கூறும்.

மொழிவாரி மாநிலங்கள் அமைந்த பின்னர் பொதுப் பணித் துறையின் முழுக் கவனம் தமிழகத்தில் மட்டும் மையம் கொண்டதால் தமிழ்நாட்டின் நீர் ஆதாரம் அதிகரிக்கவும், அரசின் மூலதன சொத்துக்களான கட்டடங்களைக் கட்டவும் போன்ற பல்வேறு பயன்களைத் தொடர்ந்து யாவரும் பாராட்டத்தக்கவகையில் இந்தத் துறை செய்வது வருகிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

**1.0. நீர்வள ஆதாரத் துறை (நீ.ஆ.து)**

**1.1. பொது**

பொதுப் பணித் துறையில், நீர்வள ஆதாரத்திற்கு அதிக கவனம் செலுத்தும் நோக்கோடு "நீர்வள ஆதாரத் துறை" என்ற ஒரு துறை இனிமேல் தனித் தன்மையோடு இயங்க அரசு முடிவு செய்துள்ளது.

நீர்வள ஆதாரத் துறை, ஆற்று வடிநிலங்களின் அமைப்பிற்கேற்ப வரையறுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தக் கோட்பாட்டிற்கேற்ப, இம்மாநிலம் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் பொள்ளாச்சி என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் இயங்கி வருகின்றது. மேலும் பாசனப் பணிகளை ஒருங்கிணைத்து,



2008 ஏப்ரல் 10]

திட்டமிட்டு சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, தனித்தனியே தலைமைப் பொறியாளரின் தலைமையில், திட்ட உருவாக்கம்; வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்; இயக்கம் மற்றும் பராமரிப்பு; மாநில மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதார விவரக் குறிப்பு மையம் மற்றும் நீர் ஆய்வு நிறுவனம் என்ற ஐந்து பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்த ஒன்பது தலைமைப் பொறியாளர்களையும் ஒருங்கிணைத்து, அரசின் நிருவாகம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளுக்குத் தலைமையேற்றுத் தேவையான உதவிகளைச் செய்யும் பணியை முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை கவனித்துவருகிறார்.

**1.2. பாசனக் கட்டமைப்பு**

மாநிலத்திலுள்ள பாசன அமைப்புகள் 34 ஆற்றுப் படுகைகளில் அமைந்துள்ளன. இப்படுகைகள் 17 பெரிய ஆற்றுப் படுகைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை நீர்தான் நிர்ணயம் செய்கிறது. தமிழ்நாட்டின் நிலப் பரப்பானது, நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 4 விழுக்காடாகவும், மக்கள் தொகையில் 7 விழுக்காடாகவும் உள்ள நிலையில், கிடைக்கக்கூடிய நீர்வளமோ 3 விழுக்காடாக மட்டுமே உள்ளது. தமிழகத்தின் சராசரி மழையளவு 925 மி.மீ. ஆக இருந்த போதிலும், பல பகுதிகள் மழை மறைவு மண்டலங்களாக இருப்பதால், அவ்விடங்களில் 400 மி.மீ. அல்லது அதற்கும் குறைவான மழையினைப் பெற்று, அவைகள் வறண்ட பகுதிகளாகவே உள்ளன. 2005 ஆம் ஆண்டு ஏற்பட்டது போன்ற எதிர்பாராத வெள்ளப் பெருக்கினால், பெரும் சேதங்கள் ஏற்படுகின்றன. தமிழகத்தின் மொத்த மேற்பரப்பு நீர் இருப்பு 853 டி.எம்.சி ஆகும். இது அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக்கும் 261 டி.எம்.சியையும் உள்ளடக்கியது. நிலத்தடி நீர் இருப்பு 815 டி.எம்.சி என கணக்கிடப்பட்டுள்ளது. பெருகிவரும் மக்கட்தொகை, தொழிற்சாலை மற்றும் வேளாண்மைக்காகத் தேவைப்படும் நீர் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆனால், கிடைக்கக்கூடிய நீர் அதிகரிக்கவில்லை. கிடைக்கப் பெறும் மேற்பரப்பு நீர் முழுவதும் 64 பெரிய நீர்த்தேக்கங்கள், 11 சிறிய நீர்த்தேக்கங்கள் மற்றும் 39,202 ஏரிகள் (10,540 பொதுப் பணித் துறை ஏரிகள் மற்றும் 28,662 ஊராட்சி ஏரிகள்) மற்றும் பிற நீர்நிலைகளில் தேக்கி வைக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 10

**1.3. நிலத்தடி நீர் வளம்**

குடிநீர்த் தேவை மற்றும் வேளாண் முன்னேற்றம் ஆகியவற்றிற்கான தேவையை ஈடுசெய்ய நிலத்தடி நீர்தான் இன்றியமையாத ஒரே ஆதாரம். தமிழ்நாடு, முழு அளவில் மேற்பரப்பு நீரைப் பயன்படுத்திவிட்ட நிலையில், மாற்று ஆதாரமான நிலத்தடி நீரை மேலும் மேம்பாடு செய்ய வேண்டிய நிலைக்கு உந்தப்பட்டுள்ளது. நிலத்தடி நீரானது மீட்சித் திறனுடைய இயற்கை வளமாக இருந்த போதிலும், நிலத்தடி நீரின் நீரோட்டம், பெய்யக்கூடிய மழை, மழைநீர் செல்லும் இடத்தின் புவியியல் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் போன்ற காரணங்களினால் நிலத்தடி நீர்வளம் தமிழகத்தில் சீரான முறையில் இல்லை. ஆகவே, நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், பெருக்கவும், மிக கவனத்துடன் பயன்படுத்தவும் சீரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மொத்த நிலத்தடி நீர்வளத்தில் 85 விழுக்காடு பயன்பாட்டில் உள்ளது. மொத்தமுள்ள 385 ஒன்றியங்களில், 142 அதிநுகர்வு ஒன்றியங்களாகவும், 33 அபாயகரமான ஒன்றியங்களாகவும், 57 மித அபாயகரமான ஒன்றியங்களாகவும், 8 உவர்ப்பு ஒன்றியங்களாகவும், 145 ஒன்றியங்கள் மட்டுமே பாதுகாப்பான பகுதிகளாக உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மேன்மேலும் குறையாமல் இருப்பதை உறுதி செய்ய நிலத்தடி நீர் எடுப்பதைத் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியது முக்கியக் குறிக்கோளாகும்.

**1.4. பாசன நிலை**

தமிழ்நாட்டின் மொத்த பாசனப் பரப்பு, 1950-51-ல் 21.89 இலட்சம் எக்டேராக இருந்து, 1998-99-ல் 36.34 இலட்சம் எக்டேராக உயர்ந்து, 2006-2007-ல் இப்பாசனப் பரப்பு 33.09 இலட்சம் எக்டேராக இருந்தது. நீர் பற்றாக்குறை மாநிலத்தில் நீர்வள ஆதாரத்தைப் பெருக்கி, அதனை நிலைப்படுத்துவதற்காக, மேற்பரப்பு நீரை உரிய முறையில் உபயோகப்படுத்துதல், நிலத்தடி நீரை எச்சரிக்கையுடன் பயன்படுத்துதல் மற்றும் நீரைச் சேகரித்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல் போன்ற வழிமுறைகள் திறம்பட மேற்கொண்டு, கட்டாயமாகச் செயலாக்கப்பட வேண்டும். மாநிலத்தின் நீர்த் தேவை மற்றும் உபயோகத்தை ஒருங்கிணைத்து மேம்பாடு செய்ய ஆற்றுப்படுகை பரப்பின் அடிப்படையில் மேற்கொள்ளத் தகுந்த ஒரு நிருவாக மற்றும் ஒழுங்குமுறை அமைப்பு ஏற்படுத்துவது அவசியமாகிறது.



2008 ஏப்ரல் 10]

**2.0. நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)**

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.2547 கோடி மதிப்பீட்டில் 2007 ஆம் ஆண்டு முதல், ஆறு ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**2.1. திட்டத்தின் நோக்கம்**

தமிழகத்தில் உப வடிநிலக் கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**2.2. இத்திட்டத்தில் அடங்கியுள்ள பணிகள்**

**2.2.1. உப வடிநில அமைப்பு முறையில் பாசன முறைகளை நவீனப்படுத்துதல்:**

6.17 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு அடங்கிய 63 தெரிவு செய்யப்பட்ட உப வடிநிலங்களின் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன்மூலம், பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், நீர் ஆதாரங்களைப் புனரமைத்து சீர்படுத்துதல், ஏரிப்பாசன முறையை நவீனமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

**2.2.2. வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப் பயிரிடுதல்:**

மேம்படுத்தப்பட்ட வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப் பயிர் செய்தல், நுண்பாசனம், கால்நடை வளர்ப்பு, மீன் வளம் போன்ற பணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பெருமளவு நீர்ப் பகிர்ந்தளிப்பு முறையினை மேம்படுத்தவும் இதன்மூலம் செயல்படுத்தப்படும்.

**2.2.3. பாசன வேளாண்மைக்கான அமைப்புகளை நவீனப்படுத்துதல் :**

நீர்வள ஆதாரத் துறை மற்றும் நீரினை உபயோகப்படுத்துவோர் சங்கங்கள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் சமூக நிலைக்கேற்ற நிலையான நீர் பகிர்ந்தளிப்பு சேவையை அளிக்க நிறுவனத் திறமையை உயர்த்த இத்திட்டம் முனைகிறது. மேலும், நீர் பயனீட்டாளர்கள் சங்கங்களின்மூலம் பாசனதாரர்களை ஈடுபடுத்தி நீர்ப் பாசனப் பங்கேற்பு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 10

**2.2.4. நீர்வள ஆதார மேலாண்மை :**

நீர்வள ஆதாரத் துறையில், மாநில நீர்வள ஆதார அதிகார அமைப்பு (State Water Resources Management Authority Viz. SWaRMA) ஏற்படுத்துவதன் வாயிலாக நிறுவன ஏற்பாடுகள் மற்றும் நிலையான நீர்வள ஆதார மேலாண்மை மேம்படுத்தப்படும். இதைத் தவிர, நீர்வள ஆராய்ச்சி நிதியைக் கொண்டு (WRRF) நடைமுறைக்கு உகந்த நீர்வளம் சார்ந்த ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2.3. திட்டச் செயலாக்கம் (2007–2008)**

இத்திட்டம் தமிழகத்தில் மொத்தம் உள்ள 127 உப வடிநிலங்களில், 6.17 இலட்சம் எக்டேர் பாசன நிலப் பரப்பு உள்ளடக்கிய 63 உப வடிநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத் தொடக்க ஆண்டான 2007-08-ல் தெரிவு செய்யப்பட்ட 9 உப வடிநிலங்களில் 2.94 இலட்சம் எக்டேர் பாசன நிலப் பரப்பில் தொடர்புடைய அனைத்துத் துறைகளையும் சேர்த்து ரூ. 714.94 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்ட முதல் ஆண்டிலேயே, அனைத்துத் துறைகளது பணிகளும் வெற்றிகரமாக துவக்கப்பட்டுள்ளன.

**2.3.1. நீர்வள ஆதாரத் துறை :**

நீர்வள ஆதாரத் துறையின்கீழ் முதலாம் ஆண்டில் தொடங்கப்பட்ட 9 உப வடிநிலங்களில் 58 தொகுப்புகளில் (Package) ரூ. 344.64 கோடி மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. 39 தொகுப்புகளில் பணிகள் துவக்கப்பட்டு கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாசனதாரர்கள் பங்கேற்பு மேலாண்மையின்கீழ் சங்கங்கள் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் முடிக்கப்பட்டு, 2008-2009-ல் 1250 நீரினை உபயோகப்படுத்துவோர் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2.3.2. வேளாண்மைத் துறை :**

13,795 எக்டேர் பரப்பில் நெல், பயறு, மக்காச்சோளம், நிலக்கடலை ஆகிய பயிர் சாகுபடிகளுக்குச் செயல்முறை விளக்கம் நடத்தப் பட்டுள்ளன. மக்காச்சோளம் மற்றும் நெல் பயிர் விளைச்சலில் 20 முதல் 40 விழுக்காடு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின்கீழ் 1,21,177 எக்டேர் பரப்பளவு விஸ்தரிப்பின்கீழ் வரும் எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 44,009 எக்டேர்



2008 ஏப்ரல் 10]

பரப்பளவிற்கான முக்கிய இடுபொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதில், தெளிப்பான்கள், களையெடுக்கும் கருவிகள் போன்ற 2,075 வேளாண் கருவிகள் அடங்கும்.

கலப்பின மக்காச்சோளம் பயிர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயல்முறை விளக்கங்களில் பின்வரும் பகுதிகளில் அதிகப்படியான மகசூல் கிடைத்துள்ளது:

- ❖ அர்ஜுனா நதி உப வடிநிலம், அத்திக்குளம் கிராமத்தில் ஒரு எக்டேரில் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மகசூல் 4,986 கிலோவிலிருந்து 8,750 கிலோவாக உயர்ந்துள்ளது.
- ❖ பாலாறு உப வடிநிலம், பொத்திப்பாளையம் கிராமத்தில் ஒரு எக்டேரில் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மகசூல் 5,210 கிலோவிலிருந்து 13,150 கிலோவாக உயர்ந்துள்ளது.

**2.3.3. தோட்டக்கலைத் துறை :**

மாற்றுப் பயிர் செய்தல் மற்றும் மாற்றுத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற தோட்டக்கலைப் பயிர்கள் கூடுதலாக 4,310 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன.

**2.3.4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்:**

1,248 எக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி (SRI) திட்டத்தின்கீழ் செயல்முறை விளக்கம் செயல்படுத்தப்பட்டது. இதனால் 2,595 எக்டேர் பரப்பளவு விஸ்தரிக்கப்பட்டது. 2008-09 ஆம் ஆண்டில் மேலும் 1660 எக்டேரில் செயல்முறை விளக்கம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடி (SRI) என்ற உத்தி கையாளப்படுவதால் தற்போது நடைமுறையிலுள்ள சாகுபடி முறையில் கிடைக்கும் மகசூலைவிட 40 முதல் 80 விழுக்காடு நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறப்பட்டுள்ளது. மிக அதிகப்படியான அளவிற்கு சில இடங்களில், நெல் சாகுபடியில் மகசூல் சாதனை படைத்துள்ளது.

- ❖ மணிமுத்தாறு உப வடிநிலம், மகிபாலன்பட்டி கிராமத்தில், நெல் சாகுபடியில் ஒரு எக்டேரில் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மகசூல் 4,750 கிலோவிலிருந்து 8,750 கிலோவாக உயர்ந்துள்ளது.

[2008 ஏப்ரல் 10

- மேல் வெள்ளாறு உப வடிநிலம், தும்பல் கிராமத்தில், நெல் சாகுபடியில் ஒரு எக்டேரில் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மகசூல் 6,560 கிலோவிலிருந்து 9,750 கிலோவாக உயர்ந்துள்ளது.

**2.3.5. வேளாண் விற்பனை:**

மாற்றுப் பயிர்களான மிளகாய், மக்காச்சோளம், நிலக்கடலை, வாழை போன்றவற்றிற்கு கணிசமான விலை பெறுவதற்கு விவசாயிகளுக்கு உதவ, 250 வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கொண்ட 11 கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவை தவிர, மக்காச்சோளம், மா, மிளகாய் போன்ற பல்வேறு வணிகப்பயிர் வகைகளுக்கு விவசாயிகள் மற்றும் நிறுவனங்களிடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**2.3.6. கால்நடை பராமரிப்புத் துறை:**

மலட்டுத் தன்மையை முழுமையாக நீக்கி, கருவூட்டல் விகிதத்தை உயர்த்தும் வகையில் 578 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவன அளவை உயர்த்தும் வகையில் 697 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பசுந்தீவனம் பயிரிடப்பட்டது.

**2.3.7. மீன் வளத் துறை :**

விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க 36 பண்ணைக் குட்டைகளில் மீன் வளத் துறையால் மீன் வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டு விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வலைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு 20 இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**2.4. திட்டச் செயலாக்கம் (2008–2009)**

2008-09 ஆம் நிதி ஆண்டில் சுமார் 80,000 எக்டேர் ஆயக்கட்டு பரப்பினைக் கொண்ட மேலும் 16 உப வடிநிலங்கள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. நடப்பு ஆண்டில், 25 உப வடிநிலங்களுக்கான அனைத்துத் துறைகளுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.58.5 கோடி ஆகும்.



2008 ஏப்ரல் 10]

**2.4.1. நீர்வள ஆதாரத் துறை :**

இந்த உப வடிநிலங்களில், 1,102 ஏரிகள், 186 அணைக்கட்டுகள் மற்றும் 554 கி.மீ. நீர்வரத்துக் கால்வாய்களில் நீர்வள ஆதாரத் துறையினால் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பயனாளிகளைக் கலந்து ஆலோசித்ததன் அடிப்படையில் 16 புதிய உப வடிநிலங்களுக்கான சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.4.2. வேளாண்மைத் துறை :**

39,097 எக்டேர் பயனடையும் வகையில் 4,558 எக்டேர் பரப்பில் நெல், பயறு, மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் ராகி ஆகிய பயிர்களுக்குச் செயல்முறை விளக்கம் மேற்கொள்ளப்பட உள்ளது.

**2.4.3. தோட்டக்கலைத் துறை :**

மாற்றுப்பயிர் மற்றும் மாற்றுத் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு வழிகள் வாயிலாகக் கூடுதலாக 6,375 எக்டேர் பரப்பில் பழங்கள், காய்கறிகள் மற்றும் ஏனைய பயிர்கள் பயிரிடப்பட திட்டமிடப்பட்டுள்ளன. தோட்டக்கலைப் பயிர்கள் உள்பட 11,500 எக்டேர் நிலப் பரப்பில் நுண்பாசன முறை வேளாண் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.4.4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் :**

16 உப வடிநிலங்களில் 1660 எக்டேர் பரப்பில் செம்மை நெல் சாகுபடித் (SRI) திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. பயறு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், நெல் அறுவடைக்குப் பின்னர், பயறு வகைகளைப் பயிரிட சிறப்பு முனைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. சூரியகாந்தி மற்றும் முள்ளில்லா மூங்கில் போன்றவை பயிரிடப்படவுள்ளன.

**2.4.5. வேளாண்மை விற்பனை :**

8 வேளாண் வணிக மையங்கள், 15 சேகரிப்பு மையங்கள், 19 உலர்தளங்கள் மற்றும் 7 சேமிப்பு கிடங்குகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன. இத்துடன் வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைத்தல், விளக்கப் பயணம் மேற்கொள்ளுதல் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

[2008 ஏப்ரல் 10

**2.4.6. கால்நடை பராமரிப்புத் துறை :**

கால்நடைகள் வளத்தைப் பெருக்குவதற்காக விடுபட்ட இடங்களில் 15 ஒருங்கிணைந்த உப வடிநில கால்நடை அமைப்புகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவன அளவை அதிகரிக்கும் வகையில் 580 எக்டேர் பரப்பில் கூடுதலாகப் பசுந்தீவனம் பயிரிடப்பட உள்ளது. சிறிய கால்நடைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்க குடற்புழு நீக்கும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

**2.4.7. மீன் வளத் துறை :**

விவசாயிகளின் 250 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும். ஒவ்வொருவரது வருமானம் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையில், வண்ண மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும். உள்நாட்டு மீன்களுக்கு நல்ல விலை கிடைக்க 6 இடங்களில் நவீன மீன் விற்பனை மையங்கள் அமைக்கப்பட உள்ளன. உள்நாட்டில் சிறந்த முறையில் மீன் பிடிக்க, மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படும்.

**2.5. திட்டச் செயலாக்கம் (2009–2010)**

நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் மீதமுள்ள 38 உப வடிநிலங்களில் 2.28 லட்சம் எக்டேர் நிலப் பரப்பளவில் திட்டம் செயல்படுத்தப்படும். எனவே, 2009-2010 ஆம் ஆண்டில், 63 உப வடிநிலங்களிலும் அனைத்துப் பணிகளும் துவக்கப்பட்டிருக்கும்.

**3.0. அணை புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

அணையின் வயது, அணை பாதுகாப்புக்கான விதிமுறை மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப சரிவர பராமரிப்பு செய்யப்படாமை போன்ற பொதுவான காரணங்களால் அணையைத் தொடர்ந்து பலப்படுத்தி பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. ஓர் அணை சிறியதா அல்லது பெரியதா என்று பாகுபாடு செய்யாமல் அதன்மீதும் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில், சிறிய அணைகளில்கூட போதுமான அளவில் நீர் தேக்கிவைக்க வாய்ப்பு இருப்பதால், அவை சரிவர பராமரிக்கப்படாமல் இருப்பின், அது



2008 ஏப்ரல் 10]

மக்களின் வாழ்க்கைக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே, அணைகளின் கட்டமைப்புகள் மற்றும் பாசன அமைப்புகள் ஆகியவற்றை உரிய முறையில் பராமரித்து, தொடர்ந்து கண்காணித்து, புனரமைத்து, நவீனப்படுத்துவதை உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

அணை புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டமானது அணைப் பாதுகாப்பு, புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கி அறிமுகப்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். ஒரு சில அணைகளில், பொதுவான கட்டமைப்புப் பணிகளான பூங்காக்கள் அமைத்தல், சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பவை இத்திட்டத்தில் அடங்கும். உலக வங்கி உதவியுடன், மத்திய அரசின் நிதியுதவி மூலம், இத்திட்டம் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புனரமைப்பு மற்றும் மேம்பாடு திட்டத்தின்கீழ், தமிழக அரசு முதற்கட்டமாக 22 அணைகளில் ரூபாய் 94.22 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசை அணுகியுள்ளது. இதற்கிடையில், பிப்ரவரி 2008-ல் உலக வங்கி பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டதன்பேரில், எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அணைகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். மேலும், இத்திட்டத்தின் நோக்கமும் விரிவுபடுத்தப்படும். இதன் அடிப்படையில் திருத்திய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு தெரிவித்துள்ளபடி, இத்திட்டம் 2009-2010-ல் துவங்கும்.

**4.0. நீரியல் திட்டம் II**

உலக வங்கியின் உதவியுடன் 1995லிருந்து 2003 வரை செயல்படுத்தப்பட்ட நீரியல் திட்டம்-I-ன் தொடர் திட்டமே, நீரியல் திட்டம் II ஆகும். இந்த நீரியல் திட்டம்-II ரூ.25.27 கோடியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் மத்திய நீர்வள ஆதார அமைச்சகத்தின் மூலம், தமிழ்நாட்டில் 5-4-2006-ல் தொடங்கப்பட்டுள்ளது. நீரியல் திட்டம் II-ல், பாசனம், குடிநீர் மற்றும் தொழிற் துறை உட்பட்ட அனைத்துப் பிரிவுகளுக்கும் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர்வளம் மற்றும் நீர் ஆதாரங்களை உகந்த முறையில் பயன்படுத்த, நம்பகமான நீரியல்

மற்றும் நீர் வானியல் தகவல்களின் அடிப்படையில், நீரியல் தகவல் அமைப்புடன்கூடிய முடிவு எடுக்க உதவிடும் அமைப்புகள் (Decision Support System) உருவாக்கப்படும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நீர் ஆதார மேலாண்மைக் கோட்பாடுகளின் அடிப்படையில் நீர் ஆதாரத் திட்டத்தின் மூன்று வெவ்வேறு பிரச்சனைகளுக்கான முடிவு எடுக்க உதவிடும் அமைப்புகளை உருவாக்க பின்வரும் முன்னோடி ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்படும்:

- ❖ தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் வைப்பாறு வடிநிலத்தில் வறட்சி நிலவரத்தினைக் கண்காணித்து, மதிப்பீடு மற்றும் மேலாண்மை செய்தல்.
- ❖ திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி வடிநிலத்தில் வெள்ளத்தினை மேலாண்மை செய்தல்.
- ❖ புதுக்கோட்டை மாவட்டத்தில் அக்னியாறு வடிநிலத்தில் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் ஒருங்கிணைந்த பயன்பாட்டினை வடிவமைத்தல்.

தற்சமயம், கண்காணிப்புத் தொடரமைப்புப் பணிகளைப் பலப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நீரியல் திட்டம் I-ன் (HP I) தொடர்ச்சிப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 5.0. காவிரி–நவீனப்படுத்தும் திட்டம்

காவிரி வடிநிலத்தின் மொத்த பாசனப் பரப்பளவு 28 இலட்சம் ஏக்கர் ஆகும். அதில் பெரும்பகுதியில் நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. காவிரி வடிநிலப் பரப்பின்கீழ் காவிரி டெல்டா, கீழ் அணை, சேலம்-திருச்சி கால்வாய்கள், பவானி மற்றும் அமராவதி கால்வாய்கள் ஆகிய பாசன அமைப்புகள் தொன்றுதொட்டு இருந்து வருகின்றன. மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு, இந்தப் பழமையான பாசன அமைப்புகளைத் தவிர, காவிரி-மேட்டூர் திட்டம் 1934 முதலும், பெரிய திட்டங்களான கீழ் பவானி மற்றும் அமராவதி நீர்த் தேக்கங்கள் முதலாவது மற்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. காவிரி டெல்டா, கீழணை போன்ற பெரிய பாசன அமைப்புகளில் அதன் உள்ளமைப்புகளைப்



புனரமைப்பதும் மற்றும் தற்பொழுதுள்ள பாசனக் கட்டுமானங்களை நவீனப்படுத்துவதும் அவசியமாகிறது. காவிரி டெல்டா இயற்கையாக உருவானது. காவிரி நதி 36 ஆறுகளாகப் பிரிந்து 10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு மேல் பாசனத்திற்குப் பயன்படுகிறது. இவை அனைத்தும் இயற்கையாகவும் வடிநீரை எடுத்துச் செல்லக் கூடியதாகவும் அமைந்துள்ளதால் டெல்டாவை நவீனப்படுத்துவது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. வெளி நிதியுதவியோடு, நவீனப்படுத்துவதற்குத் தொழில்நுட்ப ரீதியாக மத்திய அரசு ஏற்றுக்கொண்ட போதிலும், இவ்வாறு மேற்கொண்ட முயற்சிகள், கர்நாடக அரசு, நீர்த் தாவா நிலுவையில் உள்ளது என்ற காரணத்தை தெரிவித்ததால், இத்திட்டத்தை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. இதே காரணத்தினால், காவிரி வடிநிலப் பரப்பில், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் மற்றும் நீர்வள நிலவளத் திட்டம் ஆகியவற்றின்கீழ் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.

காவிரி தாவா முடிவுக்கு வந்துள்ள நிலையில், காவிரி வடிநிலப் பரப்பில் பாசன மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும் என இவ்வரசு கருதியது. இதன்பொருட்டு, ஓர் ஆய்வினை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளித்திட ஒரு பணிக் குழு (Task force) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு ஜூலை 2008-க்கு முன்னர் தனது அறிக்கையை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அக்குழுவின் அறிக்கையினைப் பெற்று, பரிசீலித்து, வெளி நிதியுதவியினைப் பெறுவதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

### 6.0. பாசனத் திட்டங்கள்

#### 6.1.1. நீண்ட காலமாக நிலுவையிலுள்ள திட்டங்கள்–முடிக்க வேண்டியதன் அவசியம் :

1990 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் அதன் பின்னரும் ஒப்புதல் அளிக்கப்பட்ட சில திட்டங்கள், பல்வேறு காரணங்களால் முடிக்க இயலாத நிலையில் இருந்தன. இந்த அரசு, கடந்த இரண்டாண்டுகளில், இத்திட்டப் பணிகளை விரைவில் முடிக்க தனிக் கவனம் செலுத்தியதுடன் திட்டங்களுக்குத் தேவைப்படும் போதுமான நிதியையும் மற்றும் விரைந்து முடிப்பதற்கான வழிமுறைகளையும் அளித்துள்ளது.

நீண்ட காலமாக நிலுவையிலுள்ள 18 பணிகளில், 7 பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. 9 பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றன. மீதமுள்ள இரண்டு பணிகளான பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் மற்றும் புதிய வீராணம் மேம்பாட்டுத் திட்டம் ஆகியன 2009-2010 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | ஒப்பளிக்கப் பட்ட ஆண்டு | பயன்பெறும் ஆயக்கட்டு (எக்டேர்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாவட்டத்தில் நங்காஞ்சியார் நீர்த்தேக்கம் அமைத்தல் | 41.67 | 1990 | 2554 | 2007-08ல் முடிக்கப் பட்டன. |
| 2 | திருவண்ணாமலை மாவட்டத்தில் செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் அமைத்தல் | 34.00 | 1996 | 2709 | |
| 3 | வேலூர் மாவட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 27.38 | 1996 | 810 | |
| 4 | தருமபுரி மாவட்டத்தில் வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 35.95 | 1997 | 1157 | |
| 5 | திண்டுக்கல் மாவட்டத்தில் நாயோடையின் குறுக்கே கண்மாய் அமைத்தல் | 7.20 | 1998 | 148 | |
| 6 | ஈரோடு மாவட்டத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 42.70 | 1998 | 1920 | |
| 7. | திண்டுக்கல் மாவட்டம், இராமக்கால் ஓடை மற்றும் ஆனை விழுந்தான் ஓடையின் குறுக்கே கண்மாய் அமைத்தல் | 5.65 | 1998 | 107 | |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு | பயன்பெறும் ஆயக்கட்டு (எக்டேர்) | தற்போதைய நிலை | பணிமுடிக்கத் திட்டமிட்டுள்ள காலம் |
|---|---|---|---|---|---|---|
| 8. | விருதுநகர் மாவட்டத்தில் வைப்பாற்றின் குறுக்கே இருக்கன்குடி நீர்த்தேக்கம் அமைத்தல் | 74.00 | 1992 | 4214 | 94% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 9. | கடலூர் மாவட்டத்தில் புதிய வீராணம் திட்டம் | 130.00 | 1993 | – | ரூ. 81.91 கோடிக்கு பணிகள் முடிக்கப் பட்டு உள்ளன | 06/2009 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10. | இராமநாதபுரம் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 42.00 | 1994 | 1914 | 65% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 11. | மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் | 74.60 | 1996 | 925 | 78% முடிக்கப் பட்டு உள்ளன | 09/2008 |
| 12. | திருவண்ணாமலை மாவட்டத்தில் குப்பநத்தம் நீர்த்தேக்கம் அமைத்தல் | 43.50 | 1996 | 3108 | 80% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 13. | வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைத்தல் | 29.55 | 1997 | 1125 | 10% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2009 |
| 14. | திண்டுக்கல் மாவட்டம், சிறுமலையாற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் | 8.87 | 1998 | 128 | 75% முடிக்கப் பட்டு உள்ளன | 09/2008 |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் 18ஆம் கால்வாய் அமைத்தல் | 28.60 | 1999 | 534 | 72% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 16. | கன்னியாகுமரி மாவட்டம் மாம்பழத்துறை ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 14.80 | 1999 | 339 | 10% முடிக்கப் பட்டு உள்ளன | 10/2008 |
| 17. | தருமபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் | 14.15 | 2001 | 445 | 80% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 18. | கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் வரை வழங்கு கால்வாய் அமைத்தல் | 13.50 | 2001 | 1149 | 85% முடிக்கப் பட்டு உள்ளன | 05/2008 |

**6.2. மாநில நிதி – திட்டங்கள்**

**6.2.1. சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஏரிகளைப் புனரமைத்தல்**—2007-08 ஆம் ஆண்டில், பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது, இம்மாமன்றத்தில் அறிவித்தவாறு, ரூ.34.81 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின் 365 முறைசாரா ஏரிகளைப்

[2008 ஏப்ரல் 10

புனரமைக்க அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. 190 ஊரக சட்டப் பேரவைத் தொகுதிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்களால், இந்த ஏரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொடக்கத்தில், இப்பணிகள் நபார்டு நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப் பட்டிருந்தபோதிலும், இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதைக் கருத்திற்கொண்டு, நபார்டு வங்கியிடமிருந்து நிதியுதவியை எதிர்நோக்கி, தேவையான நிதியினை அரசு அளித்துள்ளது. சில ஏரிகளில் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பணிகள் 2008-09 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

**6.2.2. இதர பணிகள்—**2007-08 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.10.03 கோடிக்கான பின்வரும் திட்டங்கள் விரைவில் தொடங்கும் :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டத்தில் உள்ள இராஜாத் தோப்பு கானாறு நீர்த்தேக்கத்தில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டத்தின் கால்வாய் மற்றும் கண்மாய் மேம்பாடு செய்தல். | 3.34 |
| 2. | திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் வட்டத்தில், திருப்புடை மருதூர் அருகில் கடானா ஆறு, தாமிரபரணி ஆற்றுடன் சேருமிடத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல். | 0.49 |
| 3. | ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், குருமண்டூர் கிராமத்தில் கீழ்பவானி பிரதான கால்வாயின் 26/5/420 மைலில் பாலத்தின் மறுகட்டுமானப் பணி. | 0.60 |



2008 ஏப்ரல் 10]

| | | |
|---|---|---|
| 4. | வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுதல். | 1.50 |
| 5. | வேளச்சேரி கண்மாயினைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் | 1.10 |
| 6. | பல்லாவரம் கண்மாயினைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் | 1.50 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள புத்தன் அணையினைப் பழுதுபார்த்தல் | 1.50 |

**6.3. நபார்டு வங்கி உதவிபெறும் திட்டங்கள்**

நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (ஆர். ஐ. டி. எப்.) VIII வரை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சிறுபாசன ஏரிகள் உள்ளிட்ட அனைத்து திட்டப்பணிகளும் 2007-08இல் முடிக்கப்பட்டுள்ளன. ஆர். ஐ. டி. எப் IX, X, XI, XII மற்றும் XIII- ன் பின்வரும் திட்டங்கள் மற்றும் சிறுபாசன ஏரிகளில் நிலுவையிலுள்ள பல்வேறு பணிகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

**6.3.1. ஆர். ஐ. டி. எப். IX**

| | திட்டங்கள் | குளங்கள் |
|---|---|---|
| ● மொத்த பணிகளின் எண்ணிக்கை | 23 | 157 |
| ● மொத்த திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | 163.98 | 48.43 |
| ● முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | 17 | 153 |
| ● நடைபெற்றுவரும் பணிகள் | 6 | 2 |
| ● கைவிடப்படவுள்ள பணிகள் | – | 2 |

**முடிக்கப்பட்ட திட்டங்கள்:–**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் மாவட்டம்<br>அ. கல்லணையில் மைல் 17/2-இல் உள்ள காவிரி தலைப்பு மதகினைப் புனரமைத்தல்<br>ஆ. கல்லணையில் மைல் 17/2-இல் வெண்ணாறு தலைப்பு மதகினைப் புனரமைத்தல்<br>இ. கல்லணையில் மைல் 17/2-இல் கல்லணை கால்வாய் தலைப்பு மதகினைப் புனரமைத்தல்<br>ஈ. திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-இல் உள்ள காவேரி மதகினைப் புனரமைத்தல்<br>உ. திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-இல் உள்ள குடமுருட்டி மதகினை புனரமைத்தல் | 17.39 |
| 2. | திருநெல்வேலி மாவட்டத்தில் வண்டல் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | 6.14 |
| 3. | கடலூர் மாவட்டத்தில் பாசிமுத்தான் ஓடையின் மதகு எண். 2 ஐ மறு கட்டுமானம் செய்தல் | 2.65 |
| 4. | திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையார் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | 2.53 |
| 5. | தருமபுரி மாவட்டத்தில் பொதியம் பள்ளம் கிராமத்தில் கால்வாய் அமைத்தல் | 0.86 |





| | | |
|---|---|---|
| 6. | தருமபுரி மாவட்டத்தில் கப்பல்வாடி கிராமத்தில் கால்வாய் அமைத்தல் | 0.85 |
| 7. | தூத்துக்குடி மாவட்டத்தில் சின்னூர் கிராமத்தில் புதிய கண்மாய் அமைத்தல் | 0.71 |
| 8. | தூத்துக்குடி மாவட்டத்தில் அய்யனார்குளம் பட்டி கிராமத்தில் கால்வாய் அமைத்தல் | 0.67 |
| 9. | காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஓங்கூரில் மிகுவெள்ள உயர்தடுப்புக் கரை (Dykes) அமைத்தல் | 0.66 |
| 10. | சிவகங்கை மாவட்டத்தில் வெற்றியாலங்குளம் அருகே அணைக்கட்டு கட்டுதல் | 0.50 |
| 11. | சிவகங்கை மாவட்டத்தில் சருகுணி ஆற்றின் குறுக்கே செக்கடி அருகே அணைக்கட்டு கட்டுதல் | 0.48 |
| 12. | திருநெல்வேலி மாவட்டத்தில் இராஜபதி கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 0.47 |
| 13. | விழுப்புரம் மாவட்டத்தில் சேந்தநாடு அருகே படுகை அணை கட்டுதல் | 0.40 |
| 14. | இராமநாதபுரம் மாவட்டத்தில் சருகுனியாற்றின் குறுக்கே வெள்ளாரேந்தல் அருகே அணைக்கட்டு கட்டுதல் | 0.40 |
| 15. | தூத்துக்குடி மாவட்டத்தில் துறையூர் கிராமம் அருகே புதிய கண்மாய் அமைத்தல் | 0.29 |
| 16. | தேனி மாவட்டத்தில் அகமலை வரட்டார் கிராமத்தின் அருகே அணைக்கட்டு கட்டுதல் | 0.22 |
| 17. | காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாலவரம் பூண்டியில் அணைக்கட்டு கட்டுதல் | 0.56 |

[2008 ஏப்ரல் 10

**நடைபெற்று வரும் திட்டங்கள்:–**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு | தற்போதைய நிலை | பணி முடிக்க திட்டமிட்டுள்ள காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மாவட்டத்தில் மலட்டாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | 42.00 | 1994 | 65% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 2. | திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு ஆற்றின் குறுக்கே குப்பநத்தம் நீர்த்தேக்கம் அமைத்தல் | 43.50 | 1996 | 87% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 3. | தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம் தாலுகாவில் 18ஆம் கால்வாய் அமைத்தல் | 28.60 | 1999 | 72% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 4. | தூத்துக்குடி மாவட்டத் தில் மருதூர் அணைக் கட்டிலிருந்து கல்வாய் கண்மாய் வரை உள்ள மருதூர் மேலக்கால் வாய்க்காலின் கொள்ளளவினை அதிகப்படுத்துதல் | 9.53 | 2004 | 65% முடிக்கப் பட்டு உள்ளன | 06/2008 |
| 5. | திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குறுங்குடி பெரிய குளத்தினை நவீனப்படுத்துதல் | 1.03 | 2004 | 50% முடிக்கப் பட்டு உள்ளன | 04/2008 |
இச்சட்டத்தைப் பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பொது மக்களுக்கும், அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியில் இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏரிகளை அதன் தொன்றுதொட்ட கொள்ளளவுடன் நல்ல முறையில் பராமரிக்கச் சிறு கையேடுகள், சுவரொட்டிகள், பத்திரிகைகள் மற்றும் தண்டோரா அறிவிப்புகள்மூலம் அனைத்து முறைகளிலும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, வருவாய்த் துறை மற்றும் நில அளவைத் துறையினரின் உதவியுடன் ஏரிகளின் எல்லைகளைக் கண்டறிந்து, ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை அகற்றி, மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுத்திட, ஏரிகளின் எல்லைகளில் கற்காரைக் கம்பங்கள் நடுதல் போன்ற தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் கடந்த மூன்று மாதங்களில், 316 ஏரிகளில், ஏரிகளின் எல்லையை நிர்ணயித்தல், ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் எல்லைக் கற்கள் நடுதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எதிர்வரும் 2008-2009 ஆம் ஆண்டில் மேலும் இப்பணிகள் துரிதப்படுத்தப்படும்.

**14.0. மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைத்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 53-வது தேசிய வளர்ச்சி குழுவின் கூட்டத்தின்போது, மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு "விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின்" (AIBP) கீழ் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இதனை ஏற்று, தேசிய வளர்ச்சிக் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதனடிப்படையில் மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க மத்திய அரசு முன்வந்துள்ளது.



இதற்கிடையில், தமிழக அரசு மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த முன்வந்துள்ளது. இத்திட்டம் முக்கியமாக வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கும், நீர் வீணாவதைத் தடுப்பதற்கும், வறட்சிப் பகுதிகளுக்கு வெள்ள நீரை எடுத்துச்செல்லும் வகையிலும் அமையும். இதன் அடிப்படையில், பின்வரும் 3 இணைப்புத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன :

I. காவேரி - அக்னியாறு - தெற்கு வெள்ளாறு - மணிமுத்தாறு - வைகை - குண்டாறு

II. தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு

III. பெண்ணையாறு - செய்யாறு

தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று காவிரி-வைகை-குண்டாறு இணைப்பில் உள்ள முதல்கட்ட இணைப்பிற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்ட இணைப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. பெண்ணையாறு-செய்யாறு இணைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ஜூன் 2008-க்கு முன்னர் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின்கீழ் (AIBP) நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளதையடுத்து இந்தத் திட்டங்கள் மத்திய அரசின் நிதியுதவி பெற அனுப்பப்படவுள்ளன.

20-3-2008 அன்று சட்டமன்றத்தில், 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை உரையில், தமிழ்நாடு அரசு தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு இணைப்புத் திட்டம் மற்றும் காவிரியின் குறுக்கே கட்டளை கதவணை கட்டுதல் ஆகியவற்றை 2008-2009 ஆம் ஆண்டில் முறையே ரூ.369 கோடி மற்றும் ரூ.165 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியை எதிர்நோக்கி, மாநில நிதியிலிருந்து செயல்படுத்தும் என அறிவித்துள்ளது.

**15.0. பன்மாநில நதி நீர்—இனங்கள்**

**15.1. காவிரி நதி நீர்த் தாவா**

ஜூன் 1990-இல் ஏற்படுத்தப்பட்ட காவிரி நடுவர் மன்றம், அதன் இறுதி ஆணையை 5-2-2007 அன்று வழங்கியது.

இதில் காவிரிப் படுகையில், 50 விழுக்காடு நம்பகத் தன்மையின்அடிப்படையில் கீழணையில் (Lower Colleroon Anicut) மொத்தமாகக் கிடைக்கக்கூடிய நீர் 740 டி.எம்.சி. என நடுவர் மன்றம் நிர்ணயம் செய்து தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு நீரை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டின்படி, தமிழ்நாடு பயனுள்ள வகையில் உபயோகப்படுத்திக் கொள்ள, 419 டி.எம்.சி. நீரை ஒதுக்கீடு செய்துள்ளது. இதைத் தவிர, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தவிர்க்க இயலாத வகையில் கடலில் சென்றடையும் நீர் ஆகியவற்றிற்காக 14 டி.எம்.சி. நீரை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இந்த ஆணையில், கர்நாடகம் ஆண்டொன்றிற்கு மாதாந்திர அடிப்படையில் மாநிலங்கள் சந்திக்கக்கூடிய எல்லைப் பகுதியில் பில்லிகுண்டுலு என்ற நீரளவை நிலையத்தில் 192 டி.எம்.சி. நீரினை அளிக்க வேண்டும். இதில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 டி.எம்.சி. நீரும் அடங்கும்.

கேரளாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 30 டி.எம்.சி. நீரில் அம்மாநிலத்தால் உபயோகப்படுத்தப்படாத நீரை அம்மாநிலத்திற்குத் தேவைப்படும் வரை தமிழ்நாடு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மாநிலங்களால் பயன்படுத்தப்படும் நிலத்தடி நீர் காவிரி ஆற்றில் கிடைக்கும் தண்ணீராக எக்காரணம் கொண்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

நடுவர் மன்றம் அதன் ஆணையைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நதி ஒழுங்குமுறை குழு ஆகியவற்றை நிறுவுவதற்கு அதன் ஆணையில் பரிந்துரை செய்துள்ளது.

நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் பிரசுரம் செய்யப்படும் வரையில் நடுவர் மன்றத்தில் 25-6-1991 ஆம் நாளிட்ட இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும்.

கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மற்றும் மத்திய அரசு ஆகியன 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதி நீர்த் தாவா சட்டப் பிரிவு 5(3)-ன்படி நடுவர் மன்றம் பிறப்பித்துள்ள இறுதி ஆணைமீது ஒரு சில இனங்களில் விளக்கம் அல்லது வழிகாட்டுதல் வேண்டி நடுவர் மன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா நடுவர் மன்றத்தின் ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீடுகளைத் தாக்கல்





செய்துள்ளன. அவை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. எனவே இந்த சிவில் மேல் முறையீட்டு மனுக்களின்மீது உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னர்தான் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று ஜூலை 2007-ல் காவிரி நடுவர் மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், கர்நாடக அரசு புதிய பாசனத் திட்டங்கள், ஏரிகளைச் சீரமைத்தல், தடுப்பணை கட்டுதல், நீரேற்று பாசன வசதிகளைப் பெருக்குவது மற்றும் சிறிய நீர் மின்திட்டம் என்ற பெயரில் தடுப்பணைகளைக் கட்டுவது போன்றவற்றை செயல்படுத்த கூடாது என்றும் தடை விதிக்கும்படி கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு கூர்ந்து கவனித்து காவிரிப் படுகையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் நலன்களைப் பாதுகாக்க தேவையான முயற்சிகளை எடுக்கும்.

### 15.2. பாலாறு

ஆந்திரா மாநிலம், சித்தூர் மாவட்டம், குப்பம் வட்டம், கணேசபுரம் என்னுமிடத்தில் பன்மாநில நதியான பாலாறு நதி மற்றும் அதன் எந்த ஒரு உபநதியின்மீதும் ஆந்திர அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுக்க வேண்டும் என்ற உத்தரவினை ஆந்திர அரசுக்குப் பிறப்பிக்கக் கோரி சிவில் வழக்கொன்றினை உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 10-2-2006 அன்று தொடர்ந்துள்ளது. உச்ச நீதிமன்றம் அதன் 7-1-2008 ஆம் நாளிட்ட ஆணையில், மத்திய அரசின்முன் நிலுவையில் உள்ள தமிழ்நாட்டின் கோரிக்கை ஆந்திர அரசுடன் கலந்தாலோசித்துப் பரிசீலனை செய்யப்படலாம் எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இரு மாநிலங்களுக்கு இடையேயுள்ள பிரச்சினைகளைப் பரிசீலித்து, அவற்றை முடிவுக்குக் கொண்டு வரவும் மற்றும் தீர்வு காணும் உரிமை மத்திய அரசுக்கு அளிக்கப்படுகிறது என்றும் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, புது தில்லியில் 11-3-2008 அன்று மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், இரு மாநில அதிகாரிகளின் கூட்டம் ஒன்றை நடத்தினார். அதில், இரு மாநில அதிகாரிகளும் தங்களது கருத்துகளையும், வாதங்களையும் எடுத்துரைத்தனர். விவாதங்களின் முடிவில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரையில் ஆந்திர அரசு இத்திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது

என முடிவு செய்யப்பட்டுள்ளது. இரு அரசுகளும் சில தொழில் நுட்ப விளக்கங்களை ஏப்ரல் 2008-க்கு முன்னர் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்குப் பின்னர் 2008 மே மாத நடுவில் மீண்டும் ஒரு கூட்டம் கூட்டப்படலாம் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாலாறு நதி நீரை நம்பியிருக்கும் மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

### 15.3. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துதல்

முல்லைப் பெரியாறு அணையின் உச்ச நீர்மட்ட அளவு 152 அடியாகும். மத்திய நீர்வளக் குழுமத்தின் பரிந்துரையின் பேரில், அணையைப் பலப்படுத்தும் சில பணிகளை தமிழ்நாடு மேற்கொண்டு, அணை புதிய அணைபோலச் செயல்படுவதற்கு ஏதுவாக அணையின் நீர்மட்டம் தற்காலிகமாக 136 அடிக்குக் குறைக்கப்பட்டுள்ளது. அணையைப் பலப்படுத்திய பின்னரும் அணையின் நீர்மட்டம் எப்பொழுதும் 136 அடியிலேயே இருக்கவேண்டும் என கேரள அரசு கருத்துத் தெரிவித்து வருகிறது.

உச்ச நீதிமன்றத்தின் 27-2-2007 நாளிட்ட தீர்ப்பில், பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடி வரை உயர்த்தலாம் எனவும், பின்னர் எஞ்சியிருக்கும் பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம் எனவும் உத்தரவிட்டுள்ளது. மேலும், மத்திய நீர்வளக் குழுமத்திற்கு மனநிறைவு அளிக்கும் வகையில் பலப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர், அணையின் உச்ச நீர்மட்ட அளவினை 152 அடி வரையில் நீரைத் தேக்கி வைப்பதற்கு முன் அணையின் பாதுகாப்பு குறித்து தனிப்பட்ட வல்லுநர்கள் ஆய்வு செய்வார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் செயல்படுத்த முடியாத வகையில் கேரள அரசு, அதன் "கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்புச் சட்டம், 2003"-க்கான சட்டத்திற்குத் திருத்தங்களை மேற்கொண்டது. அதாவது, "கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்புச் (திருத்த) சட்டம், 2006" என்ற சட்டத்தை இயற்றியது. அதில் முல்லைப் பெரியாறு அணையின் உச்ச நீர்மட்டம் 136 அடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கேரள பாசனம் மற்றும் நீர்ப் பாதுகாப்புச் (திருத்த) சட்டம், 2006, அரசியல் சாசனப்படி செல்லத்தக்கதல்ல எனவும், இந்தத் திருத்தச்





சட்டம் பெரியாறு அணையினைக் கட்டுப்படுத்தாது எனவும் உத்தரவு பிறப்பிக்க தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில், உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்ப, புது தில்லியில் மாண்புமிகு மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் முன்னிலையில் மாண்புமிகு தமிழக மற்றும் கேரள முதலமைச்சர்களிடையே நவம்பர் 2006-ல் பேச்சுவார்த்தையும் அதனைத் தொடர்ந்து, இரு மாநில பாசன அமைச்சர்கள் மட்டத்தில் டிசம்பர் 2006-லும் பேச்சுவார்த்தை நடைபெற்றன. முல்லைப் பெரியாறு அணை பலப்படுத்தப்பட்டு, தற்பொழுது ஒரு புதிய அணையைப் போன்று உள்ளதால், அதற்குப் பதிலாக புதிய அணை ஏதும் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என அக்கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டது. எனினும், நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏதும் காணப்படவில்லை. பேச்சுவார்தைகள் தோல்வியடைந்த விவாத்தை உச்ச நீதிமன்றத்திற்கும், மத்திய அரசிற்கும் தமிழ்நாடு அரசு தெரிவித்தது. உச்ச நீதிமன்றம் இந்த வழக்கு தொடர்பான இனங்களைக் கண்டறிந்து, வாதங்களைக் கேட்கத் தயாரக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரை புது தில்லியில் 18-12-2007 அன்று சந்தித்தபோது, இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு பிரதமர் அவர்கள் விருப்பம் தெரிவித்தார். இதற்கிணங்க, மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சரின் முன்னிலையில் 19-12-2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு கேரள முதலமைச்சர் ஆகியோருக்கிடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது, கேரள அரசு அணையில் நீர்க்கசிவு ஏற்படுவது குறித்து தெரிவித்த கவலைக்கு பதில் அளிக்கும் வகையில், முல்லைப் பெரியாறு அணையில் ஏற்படக் கூடிய நீர்க்கசிவினை கேரளா மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பொறியாளர்களைத் தவிர, பொதுவான அமைப்பான மத்திய நீர்வளக் குழுமத்தின் வாயிலாக, பிற மாநிலத்தில் உள்ள பொறியாளர்களைக் கொண்டு மேற்பார்வையிடப்படலாம் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தினைப் பரிசீலித்து, மத்திய அரசிற்கு பதில் அனுப்புவதாக மாண்புமிகு கேரள முதலமைச்சர் தெரிவித்தார்.

[2008 ஏப்ரல் 10

முல்லைப் பெரியாறு தொடர்பான வழக்கு மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, சாட்சிகளின் விவரம் குறித்த மனுவினை இரு மாநில அரசுகளும் தங்களது பிரமாணப் பத்திரங்கள் வாயிலாகத் தாக்கல் செய்ய வேண்டும் எனத் தெரிவித்து, 2008ஆம் ஆண்டு சூலை மாதத்திற்கு வழக்கினை ஒத்திவைத்துள்ளது.

இப்பிரச்சினையை இவ்வரசு கூர்ந்து கவனித்து வருகிறது. இப்பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ளும்.

### 15.4. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் – ஒப்பந்தம் மறு ஆய்வு

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், . பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கிடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29-5-1970-ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி இந்த ஒப்பந்தம் 9-11-1988-ல் மறு ஆய்வு செய்யப்படவேண்டும். இதன்படி இரு அரசுகளும் 21-9-1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு மாநிலங்களுக்கிடையே பல முறை பேச்சுவார்த்தைகள் . நடைபெற்றன.

சென்னையில் 10-6-2002 அன்று நடந்த இரு மாநில அமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தினை ஆய்வு செய்து, எங்கெல்லாம் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிய இரு மாநிலங்களின் பொறியாளர்கள் அடங்கிய குழுவினை அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே குழு அமைக்கப்பட்டு, அக்குழு அறிக்கையினை அந்தந்த மாநில அரசுக்கு அளித்தன. தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை விவாதிக்கப்பட்டு, மாற்றம் செய்யப்பட வேண்டிய இனங்களில் மாநிலங்களுக்கிடையே கருத்து வேற்றுமைகளின் இடைவெளி பெருமளவில் குறைந்துள்ளது. இருப்பினும், ஒப்பந்த ஆய்வு இதுவரையில் முற்றுப் பெறவில்லை.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தம் குறித்த ஆய்விற்காக மீண்டும் பேச்சுவார்த்தை தொடரலாம் என்றும், முதற்கட்டமாகத் தலைமைச் செயலாளர் நிலையில் கூட்டம் நடத்தப்படலாம் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு கேரள



2008 ஏப்ரல் 10]

முதலமைச்சருக்குத் தெரிவித்துள்ளார். இதற்கான பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்பொருட்டு இரண்டு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் ஏற்புடைய நாளில் இப்பேச்சுவார்த்தையை நடத்துவதற்குக் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழக அரசு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தின் முதல் ஆய்வினை முடிக்க, தொடர்ந்து கேரள அரசை வலியுறுத்தும்.

### 15.5. பாண்டியாறு–புன்னம்புழா திட்டம்

மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மலை உச்சியில் உற்பத்தியாகி, மேற்கு நோக்கிப் பாய்ந்து, சாலியாற்றில் இணைந்து, இறுதியில் அரபிக் கடலில் கலக்கிறது.

தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி, பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளில் தமிழ்நாட்டில் 171.38 சதுர கிலோ மீட்டர் (66.20 சதுர மைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்பிலிருந்து ஆண்டொன்றிற்குக் கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு முதற்கட்டமாக 100 மெகா வாட் (2 X 50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கலாம் எனவும், அடுத்த கட்டமாக 150 மெகா வாட் மின் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டது. மத்திய திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

அதன் பிறகு, கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும் வகையில் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதனைப் பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட முடியும் என்று கண்டறியப்பட்டது. குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது கிழக்கு நோக்கித் திருப்பிவிட தமிழ்நாடு விரும்பியது.

தமிழ்நாடு மின்சார வாரியம் 29-11-2006 அன்று பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டத்திற்கான திருத்திய திட்ட அறிக்கையை கேரள மின்சார வாரியத்தின் இசைவு பெற அனுப்பி வைத்துள்ளது.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு கேரள அரசை தொடர்ந்து வலியுறுத்தும்.

## 15.6. தீபகற்ப நதிகள் இணைப்பு

தேசிய தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் முக்கிய நதிகளை இணைத்து, மிகை நீர் உள்ள படுகைகளிலிருந்து நீர்ப் பற்றாக்குறை உள்ள படுகைகளுக்கு மாற்றவும் மற்றும் நதிகளை இணைக்கவும் தேவையான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்துச் செயல்படுத்தும் பிரதான அமைப்பாக தேசிய நீர் மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. தேசிய நதி நீர் இணைப்பானது, "இமாலய நதிகள் இணைப்பு" மற்றும் "தீபகற்ப நதிகள் இணைப்பு" என இரு திட்டங்களை உள்ளடக்கியது.

தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டம் என்பது மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணாறு - பாலாறு - காவிரி - வைகை மற்றும் குண்டாறு ஆகிய நதிகளை உள்ளடக்கியது. தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தின்கீழ் மகாநதி மற்றும் கோதாவரிமூலம் கிடைக்கக்கூடிய மொத்த மிகை நீரான *925* டி.எம்.சி. நீரை பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகம் போன்ற பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் *3* மில்லியன் எக்டேர் கூடுதலான பாசனம், கணிசமான கூடுதல் மின் உற்பத்தி மற்றும் பல மறைமுகமான பயன்கள் கிடைக்கும் எனவும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் எல்லையில் கிடைக்கக்கூடிய *214* டி.எம்.சி. நீரைக் கொண்டு சுமார் *7.90* லட்சம் எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிக்கலாம் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் *53*-வது மற்றும் *54*-வது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நீர்வள ஆதாரத்தைப் பெருக்க தீபகற்ப நதிகளை இணைப்பது குறித்தும், அதன் அவசரத்தை வலியுறுத்தியும், வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் மற்றும் *11*-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில், தீபகற்ப நதிகள் இணைப்பில் கர்நாடகா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், கேரளா, மகாராஷ்டிரா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படுத்துவதற்காக





பேச்சுவார்த்தை மேற்கொள்ளலாம் என இம்மாநில அரசுகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும், இந்தப் பேச்சுவார்த்தை இதுவரையில் நடைபெறவில்லை.

தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு மத்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

## 15.7. பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு இணைப்பு

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தின் கீழ் கேரளாவில் ஓடும் பம்பா-அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரைத் தமிழ்நாட்டிற்கு திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் *22* டி.எம்.சி. மிகை நீரினைத் திருப்பித் தமிழ்நாட்டில் சங்கரன்கோவில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் *91,400* எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும், சுமார் *500* மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் திருப்பப்படும் *22* டி.எம்.சி. நீரானது பம்பா-அச்சன்கோயில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் *20* விழுக்காடு ஆகும்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு இசைவினை வழங்கியுள்ள நிலையில், கேரள அரசு இத்திட்டத்திற்கு இசைவு அளிக்க விரும்பவில்லை.

பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு திட்டம் இரு மாநில அரசுகளுக்கும் பயனளிக்கக்கூடிய திட்டமானதால் இத்திட்டத்திற்கான இசைவினைக் கேரள அரசு அளிக்கக் கேட்டுக்கொள்ளுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

கேரள அரசின் இசைவினைப் பெற்று இத்திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசின்மூலம் அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 10

**16.0. மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம்**

மாநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்கள் குறைந்த அளவே உள்ளன. ஆனால் நீர்த் தேவை பல மடங்கு பெருகி வருகிறது. மாநிலத்தில் மேற்பரப்பு நீர் வளம் ஏறத்தாழ முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. ஆகையால், தமிழ்நாடு நிலத்தடி நீர் வளத்தில் தன்னிறைவு பெறவும், வளத்தினை நிலைநிறுத்தவும், நிலத்தடி நீரினைப் பாதுகாத்து மேலாண்மை செய்வது இத்தருணத்தின் இன்றியமையாத் தேவையாகும்.

நிலத்தடி நீர் மீளப் பெறக்கூடிய வளமாக இருப்பதால், பல வகைப்பட்ட தொடர் ஆய்வும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பீடு செய்வதும் தேவைப்படுகிறது.

நிலத்தடி நீரின் கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடும், அதனை அதிநுகர்விலிருந்து தடுத்தலும் மற்றும் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் முறையான மேலாண்மையைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதே மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இம்மையம் தற்சமயம் பின்வரும் பணிகளைச் செய்து வருகிறது:

- மாநிலம் முழுவதும் பரவலாக அமையப்பெற்ற கண்காணிப்புக் கிணறுகளின்மூலம் நிலத்தடி நீரின் மட்டத்தையும், தன்மையையும் தொடர்ந்து கண்காணிப்பது.
- நீர் புவியியல் மற்றும் நில பௌதீக ஆய்வுகளை உள்ளடக்கிய நிலத்தடி நீர் ஆய்வினை மேற்கொள்வது.
- மாநிலத்தின் நிலத்தடி நீர் வளத்தினைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மதிப்பீடு செய்வது.
- தமிழகக் கடற்கரையோரமாக அமையப்பெற்ற கண்காணிப்புக் கிணறுகள்மூலம் அவ்விட நன்னீர்ப் படிவங்களில் கடல் நீர் உட்புகுதலைக் கண்காணித்து, நிலத்தடி நீரினைப் பாதுகாத்தல்.

2008-2009 ஆம் ஆண்டின் பகுதி II திட்டங்களின்கீழ் நிலத்தடி நீர் வளங்களை சிறிய நீர்ப் பிரிவு முகடுகளின் அடிப்படையில் கணக்கீடு செய்ய, திருச்சி, மதுரை, ஈரோடு, கரூர், திருநெல்வேலி மற்றும்



2008 ஏப்ரல் 10]

விருதுநகர் மாவட்டங்களில் ரூ.0.82 கோடியில் ஆய்வு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

**17.0. நீர் ஆய்வு நிறுவனம்**

தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்களை அறிவியல் அடிப்படையில் ஒவ்வொரு ஆற்றுப் படுகையிலும் திட்டமிடுதல், கணக்கிடுதல் மற்றும் மேலாண்மை செய்யும்பொருட்டு நீர் ஆய்வு நிறுவனம் 1974-ல் நிறுவப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 34 ஆற்றுப் படுகைகளை ஒருங்கிணைத்து, 17 பெரிய ஆற்றுப் படுகைகளாகவும், 127 துணைப் படுகைகளாகவும் தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு படுகையிலும் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை, இவற்றிற்கான நீர்த் தேவைகள் நுண்ணிய அளவில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. வெவ்வேறு நீர்த் தேவைகளையும் மற்றும் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் வள அளவுகளையும் கணக்கீடு செய்து, ஒவ்வொரு ஆற்றுப் படுகையிலும் உள்ள நீர் இருப்பு கணக்கிடப்படுகிறது. இந்த நுண்ணிய ஆற்றுப் படுகை ஆய்வில் தொலையுணர்வு யுக்தி மற்றும் புவியியல் தகவல் அமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒவ்வொரு ஆற்றுப் படுகையிலும் நிலவியல், புவிமேற்பரப்பியல், நிலப் பயன்பாடு, பாறைப் பிளவு, கற்பாறை ஆழம், நீரின் தன்மை மற்றும் நீர் இருப்பு போன்றவற்றிற்கான வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மொத்தம் உள்ள 17 ஆற்றுப் படுகைகளில் இதுவரை 14 ஆற்றுப் படுகைகளுக்கான ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. அக்னியார் படுகைக்கான ஆய்வு தற்பொழுது நடைபெற்று வருகிறது. மண்டல நீர்வள ஆதாரத் துறையின் பொறியாளர்களுக்கும், நீரினைப் பயன்படுத்தும் துறைகளுக்கும், விவசாயம் மற்றும் நீர் வளத்தினை மேலாண்மை செய்வதற்காக மேற்கொண்டு திட்டமிடுவதற்கும், திட்டங்களைத் தீர்மானிப்பதற்கும் ஆய்வு அறிக்கை விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நீர்வள நிலவளத் திட்டங்களில் எங்கெங்கு தேவையோ, அங்கெல்லாம் மாற்றுப் பயிர் சாகுபடி செய்ய ஆலோசனை வழங்கப்படுகிறது. மழை குறைவாக உள்ள பகுதிகளில், இருக்கும் நீரினைக் கொண்டு, அதிக அளவு நீர் மேலாண்மை செய்யும் தொழில் நுட்பங்களான தெளிப்பான் முறை மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறைகளைக் கையாள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

[2008 ஏப்ரல் 10

ஒவ்வொரு ஆற்றுப் படுகையில் தயாரிக்கப்பட்டுள்ள நோக்கு வரைபடங்கள், தடுப்பணைகள் மற்றும் குட்டைகள் அமைக்கும் திட்டங்களுக்கான இடங்கள் தெரிவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

**இதர முக்கியச் செயல்பாடுகள்:**

* **நீர்வள ஆராய்ச்சி நிதி:**

நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் நீர்வள ஆராய்ச்சி நிதியைப் பயன்படுத்தி பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள்மூலம் பாசனம் மற்றும் நீர் மேலாண்மை, சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு, நிலத்தடி நீர் போன்றவைகளில் 38 ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் முடிவுகள் பாசனத் திட்டங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்பொழுது 2 ஆய்வுப் பணிகள் நீர்வள ஆராய்ச்சி நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* **சிறப்பு ஆய்வுகள்:**

தமிழ்நாடு ஆற்றுப் படுகைகளில் பெருகும் வெள்ளப் பெருக்கைத் தடுத்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல் மற்றும் ஒரு படுகையிலிருந்து நீரை மற்றொரு படுகைக்கு மாற்றம் செய்தல் மூலமாக மேலாண்மை செய்தல். இந்த ஆய்வுப் பணி, வெள்ள நீரினை ஓரளவு பயன்படுத்த உதவியாக இருக்கும்.

1980 ஆம் ஆண்டு செயற்கைக்கோள்மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தகவல்களைப் பயன்படுத்தி 2004 ஆம் ஆண்டு உள்ள பாசனப் பரப்போடு ஒப்பீடு செய்தல்.

* **ஆற்றுப் படுகை மேலாண்மை வாரியம்:**

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளுக்கான ஆற்றுப் படுகை மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியமானது உருவாக்கப்பட்டுள்ளது. நீர் ஆய்வு நிறுவனத்தில் இதற்கான தொழில் நுட்பச் செயலகம் செயல்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 10]

**18.0. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் (IMTI)**

பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் 1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கும், நீர் மேலாண்மை சார்ந்த துறை அலுவலர்களுக்கும், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நவீன முறையில் பாசன மேலாண்மை குறித்த பயிற்சிகள் வழங்கி வருகிறது. மேலும், இந்நிலையத்தில் பாசன மேலாண்மை குறித்த ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மை பொறியியல் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குப் பயிர்களின் பாசன மேலாண்மை குறித்த பல்வேறு பயிற்சிகள், கணினிப் பயிற்சிகள், மனித வள மேம்பாடு மற்றும் பங்கேற்பு பாசன மேலாண்மைப் பயிற்சிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சிகள் பெரும்பாலானவற்றில் நவீன பாசன முறைகள், கள ஆய்வு, பாசன நீர் அளவீடு, பாசனத் திட்டப் பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல், வெள்ளம் மற்றும் வறட்சி மேலாண்மை, பயிர்களின் நீர்த் தேவை, பயிர்களுக்குத் தேவையான நீரினை முறையாக வழங்குதல், துல்லிய பண்ணையம், இயற்கை வழி வேளாண்மை முதலான தலைப்புகள் இடம் பெற்றுள்ளன.

நீர்வள ஆதாரத் துறை, வேளாண் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறையில் உள்ள களப் பணியாளர்களுக்குப் பாசன மேலாண்மை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பிற நிறுவனங்கள் மற்றும் துறையினரின் தேவைக்கேற்ப, குறிப்பிட்ட சிறப்புத் தலைப்புகளின்கீழ் பயிற்சியளிக்க பெறப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007-2008-ல் இத்துறையின் நிதியிலிருந்து 45 பயிற்சிகளும், 72 பாடத் திட்டப் பயிற்சிகளும் நடத்தப்பட்டு, பொறியாளர்கள், களப் பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. 2008-2009-ல், பல்வேறு துறை சார்ந்த 2,000 அலுவலர்களுக்கும் மற்றும் 2,500 விவசாயிகளுக்காக 136 பயிற்சிகளும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 10

## 19.0. கொதிகலன் ஆய்வு இயக்ககம்

கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதற்கும், பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் இழப்பு நேராவண்ணம் பாதுகாப்பதற்கும், மத்திய அரசால், மாநில அரசு செயல்படுத்தும் வகையில் "இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923" இயற்றப்பட்டது. இதன் அடிப்படையில் கொதிகலன்கள் இயக்ககம் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதைத் தவிர, பின்வரும் பொறுப்புகளும் இந்த இயக்ககத்திடம் உள்ளன:

* மாநிலத்தின் கொதிகலன் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தல்.

* 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் விதிகள், '1965 ஆம் ஆண்டு கொதிகல இயக்கப் பொறியாளர் விதிகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கி வரும் கொதிகலன்கள் அனைத்தும், தேர்ச்சி பெற்ற பணியாளர்களாலும், பொறியாளர்களாலும் இயக்கப்பட்டு வருவதை உறுதி செய்தல்.

* தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை தேர்வுகள் மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் தேர்வு ஆகியவற்றை நடத்தி, தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

* கொதிகலன் தயாரிக்கும் தகுதி மற்றும் பிற கொதிகலன் உபயோகிக்கும் நிறுவனங்களில் அதிக அழுத்தத்தில் பற்ற வைக்கும் பணியில் உள்ளவர்களுக்கான தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

* 1950 ஆம் ஆண்டின் இந்திய கொதிகலன் விதிமுறைகளின்படி கொதிகலன் மற்றும் அதற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் நல்ல தரத்துடன் வடிவமைப்பதையும், உற்பத்தி செய்வதையும் உறுதி செய்தல்.



2008 ஏப்ரல் 10]

## 20.0. மணல் குவாரி

அரசு, புவியியல், சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் துறைகளின் வல்லுநர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு அமைத்து, மாநிலத்திலுள்ள ஆறு மற்றும் ஆற்றுப் படுகைகளில் மணல் எடுப்பதன்மூலம் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டது. வல்லுநர்கள் குழு அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதி, 1959-ல், அரசு மற்றும் இரயத்துவாரி நிலங்களில் மணல் எடுக்க வழங்கப்பட்ட அனுமதி / குத்தகை உரிமை 2-10-2003 அன்றுடன் முடிவுற்றதாகவும், அதனை ஒரு துறைமூலமாக, அதாவது, பொதுப் பணித் துறைமூலமாக அரசே மணல் குவாரிகளை நடத்தலாம் என வகை செய்யும்பொருட்டு, புதிதாக 38-A என்ற விதியினைச் சேர்த்து, மேற்படி விதிகளுக்குத் திருத்தம் செய்து, அரசாணை வெளியிடப்பட்டது. இதற்கிணங்க, நீர்வள ஆதாரத் துறை மணல் குவாரிகளை நடத்தி வருகின்றது.

அக்டோபர் 2003-இல் 239 மணல் குவாரிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து, தெரிவு செய்த குவாரிகளிலிருந்து, மணல் லாரி லோடு (2 யூனிட்) ஒன்றிற்கு ரூபாய் 1,000/- வீதம் விற்பனை செய்ய ஆணையிட்டது. பின்னர் ஜூன் 2004 முதல் ஒரு லாரி லோடு மணல் விலையினை ரூ.1,000/- என்பதை ரூ.600/- எனக் குறைத்து விற்பனை செய்ய அரசு ஆணை பிறப்பித்தது.

தற்பொழுது, தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியாளர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சுமார் 130 மணல் குவாரிகள் நீர்வள ஆதாரத் துறையினால் இயக்கப்பட்டு, மணல் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மணல் விற்பனைமூலம் 2007-2008-ல் மார்ச் வரை ரூபாய் 121 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 10

## இணைப்பு III

(811 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### (அ) கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
### (ஆ) கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை)

### அறிவிப்புகள், 2008-2009

### 1. பொதுப் பணித் துறையின் 150–வது ஆண்டு விழா

பழமையும், பெருமையும் பெற்று, அரிய, பெரிய பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கும் பொதுப் பணித் துறை 150 ஆண்டு கால வரலாற்றை இன்று படைத்துக்கொண்டிருக்கிறது.

நீர்வளத்தைப் பாதுகாப்பதும் அந்நீரைக் கொண்டு வயலில் வளத்தை உருவாக்குவதும், இடர்களைக் கடந்து புதிய நீர்த்தேக்கங்களை அமைப்பதும் - பல்வேறு கலாச்சாரப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் கட்டடங்களை அமைத்தும் 150 ஆண்டு காலம் நடைபோட்டு வந்திருக்கும் இந்த துறைக்கு இந்த மாமன்றம் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த 150-வது ஆண்டு விழாவை தமிழக அரசு, பொதுப் பணித் துறையின் சார்பில் கொண்டாடும் வகையில் ஜுன் 1 ஆம் தேதி முதல் ஜுன் 15 ஆம் தேதி வரை தமிழகத்தில் உள்ள அணைக்கட்டுகளையும், கட்டடங்களையும் வண்ண விளக்குகளால் அலங்கரிப்பது என்றும், அத்தருணத்தில் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன முறை குறித்து ஆங்காங்கே முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பொறியாளர்கள் தலைமையில் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவது என்றும், பொதுப் பணித் துறையின் சாதனைகளை, புத்தகம், துண்டுப் பிரசுரம் மற்றும் நிழல் படங்கள் வாயிலாக விளக்குவது என்றும், நூலகம் மற்றும் அருங்காட்சியகம் அடங்கிய கட்டடம் ஒன்று 150-வது ஆண்டை நினைவுகூரத்தக்க வகையில் கட்டுவது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த விழாவை முன்னிட்டு,

மேட்டூர்

முக்கொம்பு

கல்லணை



2008 ஏப்ரல் 10]

கீழணை (Lower Anaicut)

சாத்தனூர்

கிருஷ்ணகிரி

மணிமுத்தாறு

மோர்தானா

கீழ்பவானி

வைகை

ஆகிய அணைக்கட்டுகளில் உள்ள பூங்காக்களை விரிவுபடுத்தி, அழகுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொதுப் பணித் துறையைச் சார்ந்த பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1,000/- வீதம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. மேட்டூர் அணையின் பவள விழா

தமிழ்நாட்டில் நெற்களஞ்சியத்திற்கு நிரந்தரமான நீர் வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்டதுதான் மேட்டூர் அணை.

பொதுப் பணித் துறை ஆற்றிய பணிகளில் இதை ஒரு சிகரம் என்று சொல்லலாம்.

இதைக் கட்டிய அந்தக் காலக் கட்டத்தில், உலகத்திலேயே ஒரு மைல் நீளத்திற்கு ஒரே நேர்கோட்டில் அமைந்த உயர்ந்த அணை இந்தக் கல்லணை.

ஆசியக் கண்டத்திலேயே மேட்டூர் அணைதான் மிகப் பெரிய அணை என்ற கீர்த்தியும் பெற்று இருக்கிறது.

அந்த அணைக்கு அடுத்த ஆண்டு பவள விழா வரப் போகிறது.

அந்த நேரத்தில், அதைக் கட்டுவதற்குக் கரு தந்தவர்கள், அதை உருவாக்கித் தந்தவர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டவும், மேட்டூர்

[2008 ஏப்ரல் 10

அணையின் பணிகளைப் படக் காட்சிகள்மூலம் மக்களுக்கு விளக்கவும் மேட்டூர் அணையில் ஒரு பெருவிழா ஏற்பாடு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அணையின் பெருமை கூறத்தக்க வகையில், பவள விழாவை முன்னிட்டு, எகிப்து நாட்டில் அஸ்வான் அணைக்கட்டில் எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம் போன்ற ஒன்றை இந்த அணையின் அருகில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய ஆலோசனை பெற்று நிறுவுவது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

### 3. செயல் திறன் மதிப்பீடு

### (Performance Evaluation Study)

தமிழ்நாட்டில் செயல்படும் பெரிய நீர்ப்பாசன ஆதாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ள செயல் திறனை மதிப்பிடும் பணி:

நம் நாட்டில் நீர்வளம் குறைவு. இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது மட்டுமல்ல; அந்த நீரின் உபயோகத் திறன் எவ்வாறு உள்ளது என்பதையும் கண்காணிக்க வேண்டிய ஒரு காலக்கட்டம் நமக்கு உருவாகி இருக்கிறது.

நீர்ப் பயன்பாட்டில் பாசனத்திற்குப் பயன்படுவது கணிசமான பகுதி.

உபயோகத் திறனை அமல்படுத்துவதால் நீரை மிச்சப்படுத்த முடியும்.

இன்றைய பாசனத் திட்டங்களில் பயன்பாட்டுத் திறன் சராசரியாக 40 முதல் 45 சதவீதமாக உள்ளது.

இதனை, வளர்ந்துள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, திறமையான கண்காணிப்பாலும் மற்றும் மேலாண்மையாலும் மேம்படுத்த வேண்டி உள்ளது.

காவிரி நடுவர் மன்றம், 45-லிருந்து 65 சதவீதமாக இந்த உபயோகத் திறனை உயர்த்த வேண்டும் என்று கூறி இருக்கிறது.

இப்பணியை நடைமுறைப்படுத்த, முதலில் காவிரி டெல்டா, வைகை மற்றும் தாமிரபரணி பாசனத் திட்டங்களில் பாசனத் திறனை 60 சதவீதத்திற்கு அதிகரிக்க ஒரு செயல்பாட்டை மதிப்பிடும் பணியை



2008 ஏப்ரல் 10]

(Performance Evaluation Study) 2008-2009 ஆம் ஆண்டு அமைப்பது என அரசு முடிவு எடுத்திருக்கிறது.

### 4. தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007

மழைக் காலங்களில் பெருகி வரும் வெள்ளத்தைத் தேக்கி வைக்கவில்லை என்ற குறைபாடு ஒரு புறம், அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு நம் முன்னோர்கள் கட்டிய ஏரிகளை ஆக்கிரமிப்பது மற்றொரு புறம், அந்த ஆக்கிரமிப்புகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கோஷம் போடுவது இன்னொரு புறம், என்று இப்போது ஒரு திரிசங்கு சொர்க்கத்தில் பொதுப் பணித் துறை ஏரிகளின் நிலை உள்ளது.

இந்த நிலையை மாற்ற வேண்டும். பொதுப் பணித் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ள 10,540 ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதுதான் தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007.

அக்டோபர் 2007 முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது.

அதன்படி

* அனைத்துப் பொதுப் பணித் துறை ஏரிகளின் எல்லைகள், நில அளவைத் துறையின் ஒத்துழைப்புடன் நிர்ணயம் செய்யப்படும்.
* நிர்ணயம் செய்யப்படும் எல்லை நெடுகிலும் பொதுப் பணித் துறையின் தற்போதைய முடிவின்படி எல்லைக் கற்கள் நடப்படும்.
* ஆக்கிரமிப்புகள் எந்த அளவிற்கு உள்ளன என்பதைக் கண்டறிந்து, அவற்றை நீக்க முறைப்படி அறிவிக்கை தரப்படும்.
* ஆக்கிரமிப்புகளைத் தாங்களாகவே 21 நாட்களுக்குள் அகற்றாவிடில், காவல் துறைமூலம் அகற்றப்பட்டு, அதற்கான செலவுத் தொகை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 10

* ஆக்கிரமிப்பாளர்கள்மீதும் நீதிமன்றம்மூலம் குற்றம் சுமத்தப்பட்டு, 3 மாத சிறைத் தண்டனை அல்லது ரூ. 5,000/- அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக வழங்க முடியும்.

இச்சட்டத்தின்படி, தமிழகத்தில் அக்டோபர் 2007 முதல் மார்ச் 2008 வரையில்,

* 527 ஏரிகளில் நில அளவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
* 327 ஏரிகளில் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன.
* 197 ஏரிகளுக்கான வரைபடங்கள், அட்டவணைகள், பாசன நிலங்கள் பற்றிய விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
* 160 ஏரிகளில், 1,323 ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து, 1,028 ஆக்கிரமிப்புகளுக்கு நோட்டீஸ் தரப்பட்டு, 203 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

ஏரிகளின் கரைகளில் பனை மரங்களை நடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் (2008-09), இச்சட்டத்தினைப் பயன்படுத்தி, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில், சற்றேறக்குறைய 5,000 ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரிகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசு எடுக்கும் இந்த நல்ல முயற்சிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

## 5. காவிரி—நவீனப்படுத்தும் திட்டம்

காவிரி டெல்டா இயற்கையாக உருவானது.

காவிரி நதி, 36 ஆறுகளாகப் பிரிந்து, 10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குமேல் பாசனத்திற்குப் பயன்படுகிறது.

இந்த ஆறுகளையும், கால்வாய்களையும் நவீனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது.



2008 ஏப்ரல் 10]

அரசு பல முறை முயன்றும், காவிரி வழக்கு நிலுவையில் இருந்ததால், இந்தப் பணியைத் தொடரமுடியவில்லை.

இப்போது காவிரி வழக்கு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

முதல் கட்டமாக, காவிரி டெல்டா பகுதியில் உள்ள ஆறுகளையும், வாய்க்கால்களையும் எவ்வாறு நவீனப்படுத்தலாம் என்பது குறித்து ஆய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கை அளிக்க இந்தப் பாசனப் பகுதியில் நீண்ட, நெடிய அனுபவம் பெற்று ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருக்கிற பொறியாளர்களைக் கொண்டு ஒரு பணிக் குழு (Task Force) அமைக்கப்பட்டுள்ளது.

மூத்த பொறியாளரும், தமிழக அரசின் நீர்வள ஆதாரத் துறையின் ஆலோசகருமான திரு. அ. மோகனகிருஷ்ணன் அவர்கள் இந்தப் பணிக் குழுவின் (Task Force) ஆலோசகராகவும், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர், இந்தப் பணிக் குழுவின் தலைவராகவும் இருந்து பணியாற்றுவார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. பதவி உயர்வு மற்றும் பணி நியமனம்

பொதுப் பணித் துறையில் கடந்த ஆட்சியில், (5 ஆண்டுகளில்) பதவி உயர்வு அளிக்கப்படவில்லை. போதிய பொறியாளர்களும் நியமிக்கப்படவில்லை.

இந்த இரண்டு குறைகளையும் போக்குகின்ற வகையில் எங்கள் அரசு,

* 44 கண்காணிப்பு பொறியாளர்களை (SE), தலைமைப் பொறியாளர்களாகப் (CE) பதவி உயர்த்தி உள்ளது.
* 103 செயற்பொறியாளர்களைக் (EE), கண்காணிப்புப் பொறியாளர்களாகப் (SE) பதவி உயர்த்தி உள்ளது.
* 137 உதவி செயற்பொறியாளர்களை (AEE), செயற் பொறியாளர்களாகப் (EE) பதவி உயர்த்தி உள்ளது.
* 175 உதவிப் பொறியாளர்களை (AE), உதவி செயற் பொறியாளர்களாகப் (AEE) பதவி உயர்த்தி உள்ளது.

[2008 ஏப்ரல் 10

* பதவி மாறுதல்மூலம் 66 உதவிப் பொறியாளர்கள் நியமனம்.

* பல்வேறு நிலைகளிலிருந்து 167 பேர் வரைவாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

* பல்வேறு நிலைகளிலிருந்து 167 பேர் வரைவாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

* பல்வேறு நிலைகளிலிருந்து 548 பேர் அமைச்சுப் பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

* ஆக மொத்தம் 1,240 நபர்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளில் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர,

* 537 பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பணியும் ஆற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

* அதுமட்டுமல்லாமல், தினக் கூலி பணியாளர்கள் 1,056 நபர்களுக்குப் பணி வரன்முறை செய்யப்பட்டு இருக்கிறது.

* இதனைத் தொடர்ந்து நடப்பாண்டிலும், 10 ஆண்டுகள் பணி முடித்துள்ள தினக் கூலிப் பணியாளர்களைப் பணி வரன்முறை படுத்தி நிரந்தரம் செய்ய இந்த அரசு உத்தேசித்துள்ளது.

* கருணை அடிப்படையிலும், நேரடி நியமனம்மூலமாகவும் 177 நபர்கள் பணி நியமனம் பெற்று இருக்கிறார்கள்.

ஆக மொத்தம், கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,010 நபர்கள் பதவி உயர்வுமூலமாகவும், நேரடி நியமனம்மூலமாகவும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், 2008-2009 ஆம் ஆண்டில்

* 244 உதவிப் பொறியாளர்கள் (AE) தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

* கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 63 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களை நிரப்ப ஆணை வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 10]

* 2006-07, 2007-08 ஆகிய ஆண்டுகளில் நிரப்ப வேண்டிய இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தாளர்கள், ஆக மொத்தம் 694 நபர்களை நியமனம் செய்யவும் அரசு ஆணை வழங்கப்படவுள்ளது.

ஆக மொத்தம் 1,001 நபர்கள் இந்த ஆண்டில் (2008-2009) பல்வேறு நிலைகளில் நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

## 7. பொதுப் பணித் துறை (கட்டடம்)—சென்னை மற்றும் மதுரை என இரு மண்டலங்களாகப் பிரித்தல்

பல்வேறு அரசுத் துறைகளில் கட்டடம் கட்ட வேண்டிய பொறுப்பு பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் பணியாகும்.

ஆண்டுக்காண்டு ஒவ்வொரு துறையின் மூலதன ஒதுக்கீடும் கூடிக்கொண்டு போவதால், பொதுப் பணித் துறையில் உள்ள கட்டடப் பிரிவிற்குப் பணிச் சுமையும் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது.

விரைந்து பணியாற்றுதல்—திறமையோடு பணியாற்றுதல்—என்ற குறிக்கோளோடு கட்டடப் பிரிவின் ஒரே தலைமைப் பொறியாளர் சென்னையில் இருந்துகொண்டு மேற்பார்வையிடுவது கடினம் என்று உணர்ந்த அரசு, பணியை விரைவுபடுத்தும் நோக்கத்தோடு பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவை, சென்னை மண்டலம், மதுரை மண்டலம் என இரண்டு மண்டலங்களாகப் பிரிப்பதென்று முடிவு செய்துள்ளது.

இனிமேல் கட்டடப் பிரிவின் தலைமைப் பொறியாளர் ஒருவர் சென்னையிலும், மற்றொருவர் மதுரையிலும் இருந்து பணியாற்றுவார்கள்.

அவர்களுடைய அதிகார எல்லைகள் அரசாணையின்போது வெளியிடப்படும்.

[2008 ஏப்ரல் 10

## 8. திறந்த வெளிக்கிணறுகளின்மூலமாக செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் (Recharge)

திறந்தவெளிக் கிணறுகளின்மூலமாக விவசாயிகளுடைய பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீரை செயற்கை முறையில் செறிவூட்டுவதற்கு, Recharge செய்வதற்கு, மத்திய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழ்நாடு உட்பட 7 மாநிலங்களில், இந்தத் திட்டம் 3 ஆண்டுகளில் செயலாக்கப்பட உள்ளது.

இத்திட்டம், தமிழ்நாட்டில் 2008-2009 முதல் மூன்று ஆண்டுகளில் அதி நுகர்வு (Over exploitation), அபாயகர (Critical) மற்றும் மித அபாயகர (Semi-critical) நிலையில் உள்ள 232 ஒன்றியங்களில் விவசாயிகளின் பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீரைச் செறிவூட்ட ரூ.509 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, ஒரு பாசனக் கிணற்றிற்குச் செறிவூட்டும் கட்டுமானப் பணிக்கு ரூ.4,000 தரப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட கிணறுகள் வைத்திருக்கிற விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிமூலம் மானியத் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தின்வாயிலாக, செயற்கை முறையில் 12,50,370 பாசனக் கிணறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் இம்மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 10]

## 9. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 2008–2009–ல் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள்

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பாசனத் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் அவசியத்தின் அடிப்படையில் சில திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, செயலாற்றிக்கொண்டு இருக்கிறது.

நபார்டு வங்கி நிதியுதவியுடன் மட்டுமே 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 416.49 கோடி மதிப்பீட்டில் 61 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியாண்டிலும் அப்படிச் சில திட்டங்களையும் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்த அரசு முன்வந்து இருக்கிறது.

**அவைகளில் சில....**

| வ. எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மண்டலம் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) (4) |
|---|---|---|---|
| 1. | மதுரை மாவட்டத்தில் பெரியாறு பிரதானக் கால்வாயின் 10-வது கிளை வாய்க்காலிலிருந்து சுண்ணாம்பூர் வழங்கு வாய்க்காலுக்குப் புற வழி வாய்க்கால் அமைத்தல் மற்றும் அதனைச் சார்ந்த 12 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கு | மதுரை | 3.00 |
| 2. | சேலம் மாவட்டம், பூலாவாரி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தனேரி வரையிலான பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்த . | சென்னை | 0.68 |
| 3. | சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, கொண்டலாம்பட்டி கிராமத்தில் உள்ள நெய்க்காரப்பட்டி ஏரி வழங்கு வாய்க்காலை புனரமைத்து, மேம்படுத்த | சென்னை | 2.50 |

[2008 ஏப்ரல் 10

| வ. எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மண்டலம் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) (4) |
|---|---|---|---|
| 4. | வேலூர் மாவட்டம், கசம் கிராமத்தில் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | சென்னை | 6.00 |
| 5. | கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், சுங்கம் ஓடையின் கரையை பாதுகாத்தல் மற்றும் இரைப்பையாற்றை மேம்படுத்தி பொய்கை ஆற்று அணைக்கு நீர் வழங்குதல் | மதுரை | 1.53 |
| 6. | கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில், தளி பெரிய ஏரியின் உடைப்பை நிரந்தரமாகச் சீராக்குதல் | சென்னை | 1.94 |
| 7. | ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களைப் புனரமைத்தல் | பொள்ளாச்சி | 15.70 |
| 8. | வேலூர் மாவட்டம், பாண்டியன் மடுவு வாய்க்காலைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் | சென்னை | 2.25 |
| 9. | திருவள்ளூர் மாவட்டம் ஞாயிறு ஏரிக்கு நீர் வழங்க கொசஸ்தலையாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | சென்னை | 18.00 |
| 10. | இராமநாதபுரம் மாட்டம், இராமநாதபுரம் பெரிய ஏரியை நவீனப்படுத்துதல் | மதுரை | 8.02 |
| 11. | பொம்பலூர் மாவட்டம், அத்தியூர் கிராமம், அத்தியூர் ஏரியை நவீனப்படுத்துகல் | திருச்சி | 0.79 |



2008 ஏப்ரல் 10]

| வ. எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மண்டலம் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) (4) |
|---|---|---|---|
| 12. | தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரபள்ளி கிராமத்தில், செருமக்காநல்லூர் மற்றும் சக்கரபள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க, குடமுருட்டி ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல் | திருச்சி | 3.90 |
| 13. | காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டத்தில் அணைக்கட்டு மாணிக்குப்பம் ஏரியினைப் பாசன மேலாண்மைப் பங்கேற்றுதல்மூலம் நவீனப்படுத்துதல் | சென்னை | 0.88 |
| 14. | தருமபுரி மாவட்டம், வாணியாறு சிறு வடிநிலத்தில் கல்லார் ஆற்றில் உள்ள 16 அணைக்கட்டுகளை புனரமைத்து மேம்படுத்துதல் | சென்னை | 1.75 |
| 15. | தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பாளையம் பரவு வாய்க்கால் மற்றும் பிட்டிராஜன் வாய்க்கால்களின் நீர் கொண்டு செல்லும் திறனை அதிகப்படுத்துதல் | மதுரை | 8.00 |
| 16. | கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஏரிகள், தோவாளை வாய்க்கால் மற்றும் இராதாபுரம் வாய்க்காலைப் புனரமைத்தல் | மதுரை | 25.00 |
| 17. | பொம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அத்தியூர் ஏரி மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல் | திருச்சி | 1.75 |

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மண்டலம் (3) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) (4) |
|---|---|---|---|
| 18. | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியம், பெரிய வேப்பத்தூர் கிராமத்தில் புதிய பாசன ஏரி அமைத்தல் | சென்னை | 3.03 |
| 19. | தஞ்சை மாவட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் முதலை முத்துவாரியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஏரியில் இருந்து நேரடிப் பாசனத்திற்குச் செல்லும் வாய்க்கால்களின் கரைகளை பலப்படுத்தி, Concrete Lining அமைத்தல் | திருச்சி | 1.00 |
| 20. | விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர் பேட்டை வட்டங்களில், திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து செல்லும் மலட்டாறு வாய்க்கால் எல்.எஸ். 0 மீ. முதல் 24,000 மீ. வரை மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | சென்னை | 1.00 |
| | **மொத்தம்** | | **106.72** |

D
V 21/3/08
F.4.6.2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228407.
சென்னை-600 008
நூலகம்